EO _ GUEST
JLC _ 02

# தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

EFEO_GUEST_JLC_02

பொருளதிகாரம்
III

செய்யுளியல் & மரபியல்

பாவலரேறு ச.பாலசுந்தரம்

EFEO_GUEST_JLC_02-001 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

EFEO_GUEST
JLC_02

# தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

EFEO_GUEST_JLC_02

பொருளதிகாரம்
III

செய்யுளியல் & மரபியல்

பாவலரேறு ச.பாலசுந்தரம்

EFEO_GUEST_JLC_02-002 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

EFEO _ GUEST
JLC _ 02

This book belongs
to the personnel
collection of Jean-Luc
CHEVILLARD
and has been
lent to the EFEO
for the purpose
of digitization

EFEO_GUEST_JLC_02-003 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தமிழ் வாழ்க

# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

ஆராய்ச்சிக் காண்டிகையுரை

## செய்யுளியல் & மரபியல்


உரையாசிரியர்

பாவலரேறு, பேராசிரியர்

**ச. பாலசுந்தரம்**



தாமரை வெளியீட்டகம்

367, மேலவீதி, தஞ்சாவூர் - 9.



EFEO_GUEST_JLC_02-004 16/06/2011 © École française d’Extrême-Orient, www.efeo.fr

ஆசிரியன் சொந்த வெளியீடு :

[C] முதற்பதிப்பு ஜூன் —1991

## காணிக்கை

தமிழகத்தின் ஆன்மிக நெறி தழைக்கப் பெருந்தொண்டாற்றி வரும் பேரருளாளர் திருப்பணிச் செல்வர் வாளமர் கோட்டை

**தவத்திரு காத்தையா சுவாமிகள்**

அவர்கட்கு

விலை ரூ. 42/-

இந்நூல் தவத்திரு காத்தையா சுவாமிகள் அருளாசியும், தஞ்சை சால்பக நிறுவனர் திரு உலக. சுப்பிரமணியனுர் ஆதரவும் சென்னை முத்தமிழ் ஆய்வு மன்றத்தலைவர் தமிழ்த் தொண்டர் கோ. முத்துப்பிள்ளை அவர்களின் நல்வாழ்த்தும். தமிழ் வளர்ச்சிக்கான தமிழ்நாடு அரசின் திட்டத்தின் கீழ் நிதியுதவியும் பெற்றது

ஜெமினி அச்சகம் - மேலவீதி, தஞ்சாவூர் - 9.

## வாழ்த்துரை

தவத்திரு காத்தையா சுவாமிகள்
வாளமர்கோட்டை, தஞ்சாவூர்.

அன்பிற்கினிய திரு. பாலசுந்தரம் மிகமுயன்று எழுதியுள்ள தொல்காப்பிய ஆராய்ச்சிக்காண்டிகையுரையின் கடைசிப்பகுதியாகிய பொருளதிகாரம் செய்யுளியல் மரபியல் உரையைப் படிக்கக் கேட்டு மகிழ்ந்தேன், இதனுடன் தொல்காப்பியம் முழுமைக்குமான உரை நிறைவு பெறுகிறது. மற்றைய பகுதிகளைப் போலவே இப்பகுதியும் ஆராய்ச்சி மாணவர்க்குப் பெரிதும் பயன்படும் என்பது என்கருத்து. தெய்வத்திருவருளால் தொல்காப்பியம் முழுமைக்கும் ஒரு புதிய ஆராய்ச்சியுரை வெளிவந்துள்ளமை தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் பெரும்பேறாகும். தமிழ்பயிலும் மாணவரும், ஆய்வு அறிஞர்களும் இவ்வுரையைப் போற்றிப் பயின்று தமிழ் இலக்கண வளத்தினை உலகறியச்செய்யவேண்டுமென்பது என் விருப்பம், உரைப்பெரும்புலவராகிய பாலசுந்தரம் ஸ்ரீசவுந்தரநாயகி சமேத ஸ்ரீசுந்தரேசுவரர் திருவருளால் மேலும் பல்லாண்டுகள் உடல்நலத்தோடும், வளத்தோடும் வாழ்ந்து தமிழ்ப்பணியாற்ற வேண்டுமெனச் செம்பொருளின் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறேன். வாழ்க !

**செ. காத்தையா**

## அணிந்துரை

தஞ்சை சால்பக நிறுவனர்
திரு உலக. சுப்பிரமணியன், இ. ஆ. ப (ஓ)

போற்றுதற்குரிய பாவலரேறு திரு ச. பாலசுந்தரம் அவர்களின் தொல்காப்பிய ஆராய்ச்சிக்காண்டிகையுரை பொருளதிகாரம் செய்யுளியல் மரபியல் உரை நூலினை பார்த்து மகிழ்வுறுகிறேன். யான் அடிக்கடி தூண்டியும் இப்பகுதி சிறிது காலந்தாழ்த்தே வெளிவந்துள்ளது. தொல்காப்பியம் செய்யுளியல் மிகவும் அரிய செய்திகளைக்கொண்ட கடினமானதொரு பகுதியாகும். இதற்கு இளம்பூரணர் பேராசிரியர் நச்சினார்க்கினியர் மூவரும் உரைகண்டுள்ளனர். பின் இருவர் உரைகளும் விளங்கிக் கொள்வதற்கு அரியவை என்பது புலவோர் கருத்து. பெரும்பாலும் செய்யுளியல் பயிலப்படுவதில்லை; இக்காண்டிகை உரையாசிரியர் முன்னைய உரைகளுள் பொருந்தாதவை — தொடர்பில்லாதவை இவை எனக் குறித்துக் காட்டித் தங்கருத்தினைத் தெளிவாக

வரைந்துள்ளார், அடி—தொடை இவற்றின் தொகைகளை விரித்து விளக்கியிருப்பது அரியதொரு முயற்சியாகும் செய்யுள் உறுப்புக்களுக்குத் தரும் விளக்கங்கள் பாராட்டுதற்குரியவை.

பிற்கால யாப்பிலக்கணக் கொள்கைக்கும் தொல்காப்பியச் செய்யுளிலக்கணக் கொள்கைக்கும் பெரிதும் வேறுபாடுண்டு. தொல்காப்பியச் செய்யுளியல் கூறும் யாப்பிலக்கண முறைமை பெரும்பாலும் இப்பொழுது வழக்கிலில்லை. எனினும் தொல்காப்பியர் காலத்து இலக்கியக் கோட்பாடுகளைத் தெரிந்து கொள்ளவும் தமிழின் செம்மாந்த யாப்பிலக்கணக் கோட்பாடுகளைப் புரிந்து கொள்ளவும் இவ்வுரை பெரிதும் பயன்படும். உரை தெளிவாகவும், ஆற்றொழுக்காகவும் அமைந்திருப்பது போற்றத்தக்கது. மற்றைய இயல்களைப் போலவே இதன்பாலும் பல அரிய நுட்பமான செய்திகளைக் காணலாம். தமிழுலகம் இவ்வுரையை ஊன்றிப் பயின்று பயனடையவேண்டும்.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகட்குப்பின் தொல்காப்பியம் முழுமைக்கும் ஒருவரால் ஓர் அரிய உரை வெளிவந்துள்ளமை போற்றுதற்குரியதாகும். இந்நல்லுரையை வரைந்துள்ள பாவலரேறு அவர்கள் இவ்வுரையுள் ஆங்காங்கே தனிக்கட்டுரையில் விளக்கப்பெறும் என்று குறித்துள்ள இலக்கணச் செய்திகளை எல்லாம் வெளிப்படுத்தித் தமிழிலக்கணக் கோட்பாட்டின் சிறப்பை மொழியுலகம் அறியச் செய்தல் வேண்டும். உரைப் பேராசிரியர் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்ப் பணியாற்ற இறைவன் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறேன். வாழ்க!

ப. சுப்பிரமணியன்

## ஆய்வு முன்னுரை

(பண்டித, வித்துவான் திரு வே. கோபாலையர். எம். ஏ.

பெரும்புலவர் பாலசுந்தரனாருடைய தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரை செய்யுளியல் மரபியல் ஆகியவற்றுடன் நிறைவு பெறுகிறது.

செய்யுளியலுக்குப் பண்டைய சான்றோர்களாகிய இளம்பூரணர் பேராசிரியர் நச்சினார்க்கினியர் ஆகிய பேரறிஞர் வரைந்த உரைகள் உள. இளம்பூரணர் உரை மிகச் சுருக்கமானது. பேராசிரியர் உரை ஓரோவழி விரிவானதாகவும் பல



குழப்பங்களை விளைப்பதாகவும் உள்ளது. நச்சினார்க்கினியர் உரை பெரும்பாலும் பேராசிரியத்தை ஒட்டியும் சிறுபான்மை வேறுபட்டும் சற்று சுருக்கமாக அமைந்துள்ளது.

இவற்றையெல்லாம் தொல்காப்பியனார் காலத்து மரபாக நாம் விளங்கிக் கொண்டிருப்பனவற்றொடு ஆராய்ந்து நம் பெரும் புலவருடைய ஆராய்ச்சிகாண்டிகையுரை வரையப்பட்டுள்ளது. இவ்வுரை மிகத்தெளிவாக வரையப்பட்டுள்ளதெனினும் தொல்காப்பியச் செய்யுளியல் பிற்கால யாப்பு நூல்களிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளமையின் இதனை ஊன்றி நோக்கியே உணர்தல்வேண்டும். கொச்சக ஒருபோகிற்கும் கொச்சகக் கலிக்கும் உள்ள இலக்கணங்களைத் தெளிவாக அறிவுறுத்தியும் தொடைகளின் எண்ணிக்கைபற்றி ஒரு தெளிவான முடிவிற்குவந்து விளக்கியும் "ஓரிருவகை" என்பதனை உரைநடைவகையை அடுத்துக்கொள்ளாது குறிப்பு மொழியை அடுத்துக்கொண்டு விளக்கியும் செய்யுள் இருவகை என்பதனைப் பொதுப்பட எல்லாப்பாவிற்கும் கொண்டும், இயைபு, இழைபு ஆகியவனப்புக்களின் இலக்கணங்களை ஆய்ந்து கூறியும் இவர் வரைந்துள்ள பகுதிகள் இச்செய்யுளியலுரையின் மேம்பாட்டை உணர்த்தும் தலையாய எடுத்துக்காட்டுக்களாம்.

இச்செய்யுளியலுரை நாம் அறியுமாறு குறிப்பிடும் நுண்ணிய செய்திகள் சிலவற்றை நோக்குவோம்.

சூ. 313: செய்யுள் உறுப்புக்கள் இருபத்தாறனுள் கருவி பற்றியன இவை செய்கை பற்றியன இவை என வகுத்துக் கூறியுள்ளமை, தளை என்பதோர் இயைபினைத் தொல்காப்பியர் செய்யுளுறுப்பாக்க் கொள்ளாமைக்குக் காரணம். 314. எழுத்தியல் வகையும் அவை செய்யுளுக்கு உறுப்பாமாறும் 315. அசையென்ற காரணக் குறியீட்டின் விளக்கம் 316. குற்றியலுகரம் உயிர் முதன்மொழி முன்னர்க் கெடக்காரணம் 317. குற்றுகரத் தொடுமுற்றுகரத்தையும் ஒருங்குவைத்து வரய்பாடு கூறக் காரணம் 321. முற்றியலுகரத்தை மொழி சிதைத்துக் கொள்ளலாகாது என்பதற்கு எடுத்துக்காட்டுக்கள். 322. உரியசைக்கண் வரும் ஒற்றுக்கள் விதியீருகியே நிற்கும் என்பதும் அதன் விளக்கமும் 323. இசையொடு சேர்த்தி என்பதன் விளக்கம் 324, சீர் என்பதன் விளக்கம் 329. இந்நூற்பா உரை — அள

---

இச் செய்யுளியலுள் 330, 331 எண்கள் விடுபட்டுள்ளன. பின்னர் 332 தொடர்கின்றது. அச்சிடப்பட்டுள்ள தொடர் எண்களே எம்மாற் பின்பற்றப் பட்டுள்ளன. (இக்குறையைப் பொறுத்தருள்க. ச. பா.)

EFEO_GUEST_JLC_02-006 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பெடையை அசை கோடல் பற்றிய விளக்கம். 332. பேரசி வகை ஐகாரம் செய்யுளில் பயன்படல், அளபெடை ஈரசைச் சீர்க்கணன்றி மூவசைக் சீர்க்கண் அசைநிலையாகி வாராதெனல் 333. இயற்சீரிறுதி முன் நேரவண் நிற்பின்-இயற்சீர்-அவண் என்பவற்றின் விளக்கம். 334. அறுபது வஞ்சியுரிச்சீர்கட்கும் 212 வாய்பாடுகள் அமைந்துள்ள செய்தி. 335. 'அடைவின்று' என்பது பற்றிய விளக்கம் 337. இன்பா நேரடி என்பதன் விளக்கம், இன்சீர், இன்பா என்னும் வழக்கம் 339. கலித்தளையடி என்று கூறியதன் நயம், 341 இயலசையும் உரியசையும் சீர்களாக வருவது பற்றிய விளக்கம். 342. அடிகளின் இடையே உரியசைகளே வரும் என்பதன் விளக்கமும் எடுத்துக்காட்டும்

346. அடி என்பது பற்றிய விளக்கம் 348. அடியிகந்து வருதல் என்பதன் விளக்கம், இகத்தல் என்பதன் பொருள் 355. வஞ்சியுரிச்சீர் வரும் அளவடி பற்றிய குறிப்பு. 356. ஆறும் ஆகும் என்ற உம்மையின் விளக்கமும் ஆகும் என்பதன் பொருளும் 357. இந்நூற்பா ஐய மகற்றிய திறம். 358 சீர்பற்றிய அடிகள் (கட்டளையடிகள் என்பது பேராசிரியரின் கற்பனை) பற்றிய ஆய்வு விளக்கம் 364. தளை கொள்ளும் எழுபது வகைமை பற்றிய அமைதி. 625 அடிகளே அமைப்பதன் விரிவான விளக்கம். 365 அங்ஙனம் விரிப்பின் அளவிறந்தனவே என்பதன் விளக்கம். 367. விராய் வரினும் என்பதன் விளக்கம். 370. உறழ்நிலை இலவே என்பதன் விளக்கம். 372. ஒன்றுத் தன்மையான என்ற தொடர்பற்றிய நயவுரை. 371. இயற்சீர் வெள்ளடியும் என்று உம்மையை இணைத்துப் பொருள் கோடல் 378. நேரடி என்பதன் விளக்கம் 384. நிறையவும் நிற்கும் என்று கொள்ளப்பட்டவை 385 செந்தூக்கு என்பதன் விளக்கம். 386. ஆகும் என்பதன் நயம். 390. எழுசீரிறுதி ஆசிரியங்கலியே என்று கூறிய நயம். 392. அசையுள் எழுத்து அடங்காமை. 393. பாட்டு என் பதன் விளக்கம். 395-8. அகவல், செப்பல் துள்ளல்-தூங்கல் என்ற சொற்பொருள் விளக்கம். 399. தூக்கு நான்கே என்ற வரையரைக்கு விளக்கம். 401. இந்நூற்பாவின் தேவை 404. அமைந்தவை தெரியின் என்ற தொடரான் கொள்ளப்பட்டவை. 405. நிரல் நிறையையும் இரட்டையையும் இறுதிக்கண் வைத்த காரணம். செய்யுளுள் தொடைகள் வருதல் பற்றிய விளக்கம்.

406, 7 மோனை எதுகை சொல்லாராய்ச்சி 408. கிளை எழுத்துக்கள் பற்றிய குறிப்பு. 411. அவையே என்ற பன்மைச் சொற்பொருள். 413. சீர்நிலை பற்றி வரும் தொடைகள் பற்றிய செய்தி. 414. செந்தொடை மருட் செந்தொடை பற்றிய விளக்கம்.



415 அடிவகைத் தொடைகள் 16 சீர்வகைத் தொடைகள் 10 என்று கணக்கிட்டுக் கொண்ட திறன். தொடை 13700 என்று கணக்கிட்டு காட்டும் நுண்ணறிவு—ஒன்பது என்பது தொண்டு அன்று தொன்று என்பதே ஒன்பதைக் குறிக்கும் என்னும் தெளிவான ஆய்வுரை. 13700 தொடைகள் இவ்வாறு வரும் எனத் தெளிவாகக் கணக்கிடும் திறம் இவற்றில் காணப்பெறும் உரையாசிரியரின் தெளிவான சிந்தனை.

417. ஆங்கு என மொழிப—என்பதன் விளக்கம். 418. நோக்கு என்பதற்குத் தெளிந்த உரை விளக்கம். 419. அகவல் முதலிய ஓசை ஆசிரியம் முதலியபா என்று விளக்கும் அவற்றின் வேறுபாடு. 423. வாழ்த்தியல் வகை. 424. புறநிலை, வாயுறை 426. வாயுறை 428. செவியுறை. இவை பற்றிய உரை விளக்கம். 429 இந்நூற்பா இங்கு அமைக்கப்பட்டதன் கருத்து. ஒத்தாழிசை, மண்டிலம், குட்டம் என்பவற்றின் உரை. 431. குட்டம் பற்றிய உய்த்துணர்வு. 432. வெண்பாட்டு என்பதன் இலக்கணம் அங்கதச் செய்யுள் என்பதன் விளக்கம் சிந்தியல் வெண்பா பற்றிய குறிப்பு. 434. தொகைநிலை வகை என்பதன்—விளக்கம்.

475. பரிபாடல், கொச்சகம், அராகம், சுரிதகம், எழுத்து—இவை பற்றிய பொருள் விளக்கம். 437. கூன், சொற்சீரடி, வேறுபாடு. 438. அங்கதம் — அரில்தபத்தெரியின்—விளக்கம். 441. நூற்பொருள். 442. புகழொடு புணர்தல் பொருளொடு புணர்தல், செவியுறை — விளக்கம். 443. வசை — நசை— அங்கதச் செய்யுள் வரும் இடம் பற்றிய விளக்கம். 447. அகப்பட்ட மரபின — என்பவற்றின் நயவுரை. 450. போக்கியல் வகை விளக்கம். போக்கு—வைப்பு—சொற்பொருள் விளக்கம். 451. இயற்றமிழ்த் தேவ பாணியின் இலக்கணம். 460. நூற்பா உரையும் சின்னம் என்பதன் விளக்கமும். 462. ஒருபோகு என்பதன் விளக்கம். 463. தரவின்றாகி — சின்னங்குன்றியும்— அடிநிமிர்ந்தொழுகியும் பொருள் வேறுபடுதல். இவற்றின் பதசாரம். 465. செம்பால் வாரம் உரை. 466. கொச்சக உறுப்புப் பற்றிய விளக்கம். 467. ஒரு பொருள், வெள்ளடியியலான், திரிபின்றி, இவற்றின் பதசாரம். 468. பாட்டிடைமிடைந்தும், வெண்பா இயலான், வெளிப்படத் தோன்றும், இவற்றின் பதசாரம். 471. முந்நாலடித்தே உரையும், விளக்கமும் 473. கலிவெண்பாட்டு முதலியவற்றின் சிற்றெல்லை—முடிபொருளல்லா தடியளவிலவே என்ற நூற்பா—பற்றிய செய்தி.

EFEO_GUEST_JLC_02-007 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

478. வாய்மொழியை மந்திரம் என்றும் அங்கதத்தைக் குறிப் பென்றும் ஆசிரியர் கூறியுதன்நயம். 486. உரைநடைவகைக்கு எடுத்துக்காட்டுகள். 489. மந்திரம் என்பது பற்றிய விளக்கம். 491, 92 இந்நூற்பாக்கள் இடம் பெயர்ந்த அமைப்பு, ஆய்வுரை. 493 பண்ணத்தி பற்றிய விளக்கம் 502. அளவியன் மரபு — அளரவியன் மரபு என்னும் விளக்கம், 502. தொன்னெறிமரபு என்பதனை உட்கொண்டு கற்பியலை ஒட்டிக் கூறுவோர்பற்றிய விளக்கம். 506. ஒண்டொடி மாதர், கண்டோர் இவைபற்றிய விளக்கம் 509. முன்னம் பற்றியுவிளக்கம். 521. இன்பம், இடும்பை, புணர்வு, பிரிவு, ஒழுக்கம், பொருள்வகை இவைபற்றிய விளக்கம். 522. பொருள்வகை — துறை இவற்றின் வேறுபாடு. 523. மாட்டு வேறு பொருள்கோள் வேறு என்பது 525. வண்ணம் பற்றிய விளக்கம். 526—46 சீர், தொடை, எழுத்து, ஓசை இவை பற்றி வண்ணங்களை வரையுறுத்தல். 537, 8 அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டுவண்ணம் பற்றிய தெளிவான விளக்கம். 551. பரந்தமொழி, தோல் இவற்றின் விளக்கம். 552. விருந்து பற்றி இவ்வுரையாளர் கருத்து. இயைபு - புலன்—இழைபு பற்றிய புதுவிளக்கங்கள் ஊன்றிக் கருதத்தக்கவை.

இவற்றுள் ஒருசிலவற்றின் விளக்கங்கள் பண்டைய உரை யாசிரியன்மார் சொற்றனவே எனினும் அவர்கூறிய திறத்தைவிட இவர் அவ்விடங்களில் விளக்கியுள்ள திறன் தெளிவும் சுருக்கமும் கொண்டிருத்தலின் அவற்றையும் இணைத்து மேற்குறிக்கப் பெற்றன.

இடைக்கால யாப்பு நூல்கள் பழைய உரைகளிற் காணப்படும். தொல்காப்பியத்திற்கு முரணான செய்திகள். தாம் நுணுகிக் கண்ட ஆய்வு முடிபுகள் பற்றி நம் பெரும்புலவர் தந்துள்ள விளக்கங்களைக் கீழே குறிப்பிட்டுள்ள பக்கங்களில் காணலாம். இவ்அரிய செய்திகள் செய்யுளியலைத் தெளிவாக உணரப்பெரிதும் பயன்படுவனவாகும். பக்கம் 32, 38, 47, 62, 68, 70, 74, 80, 81, 86, 88, 136, 139. 143, 145, 148, 177. விரிவஞ்சி இவற்றின் சிறப்புக்களை எடுத்து மொழிதல் நீக்கப்பட்டது.

இவ்வுரையாளர் பண்டைய உரையாளர் பாடங்களில் ஏற்பன தழுவியும் ஏலாதனவிடுத்தும் நூற்பாக்கிடக்கையை ஓரிடத்து மாற்றியும் உரைவரைந்துள்ளார். சில இடங்களில் பழைய உரை மறுக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் மறுக்காமல் வேற்றுரை வரையப்பட்டுள்ளது தொல்காபபியநெறிக்கும் தமிழ் மரபிற்கும் ஒவ்வா என்று இவர் பண்டை உரையாளர் மூவரொடும் மாறுபடும்



நூற்பா உரைகள் முறையே 329, 335, 365, 405, 415, 441, 442, 443, 471, 491, 492, 537, 538, 553, 555 என்பன. பேராசிரியரொடும், நச்சினார்க்கினியரொடும் மாறுபடும் இடங்கள் 40, 43, 48, 68, 84. 40.9, 60, 65, 67, 68, 81, 87, 88, 90 என்பனவாகும். பேராசிரியர் உரையை ஒவ்வாத இடங்கள் 323.523 முதலியன. நச்சினார்க்கினியர் உரையை ஏலாத இடங்கள் 332'386 முதலியன. இவ்வுரையுள் ஒரு சில இடங்கள் ஐயறவிற்கு உரியனவாய் உள்ளன-அடுத்தபதிப்பில் அவை களையப்படுமென்பது ஒருதலை.

I-பக்கம் 2. காலவகை—பொருள் நிகழ்வினைத் தெரிவிக்கும் மூவகைக் காலமும் பெரும்பொழுதும் சிறுபொழுதுமாகிய முதற் பொருளுக்குரிய கால வகைகளும் என்று செய்யுளுறுப்பாகிய கால வகையில் பெரும்பொழுது சிறுபொழுதுகளைச் சேர்த்துள்ளார். பக்கம் 160 கூற்று நிகழ்த்தும் காலத்தை உணர்த்தாமல் பொருள் நிகழ்வினை உணர்த்தும் காலமே ஈண்டு உறுப்பெனப்பட்டதென் றறிக. மாலை முதலிய சிறுபொழுதும் கார் முதலிய பெரும் பொழுதும் திணை உணர்தலுக்கு உறுப்பாதலன்றிச் செய்யுளுக் குரிய உறுப்பாகா என்றறிக — இதற்கேற்ப 2-ஆம் பக்கத்தில் உள்ள சிறுபொழுதும் பெரும்பொழுதுமாகிய முதற் பொருளுக்குரிய கால வகைகளும் என்ற தொடர் நீக்கப்படலாம்.

II பக். - 40. “களிறு கதவெறியாச் சிவந்துராஅய்” கூனுக வருமாற்றிற்கு எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது. பாட வேறுபாட்டினுள் மாவே எறிபதத்தான் இடங்காட்ட, களிறே கதவெறியாச் சிறந்துராஅய் ...நீயே எனச் சீர்கூனுக வருதலாலே அப்பாடலடி சிறந்து அமைந்திருத்தலின் அவ் எடுத்துக்காட்டினை விட்டு வேறு எடுத்துக்காட்டுத் தந்திருக்கலாம்.

III பக். - 45. தேன்தூங்கிய உயர்சிமைய — மலைநாறிய வியன் ஞாலத்து [மதுரைக்காஞ்சி - 3, 4] பதிப்பில் உள்ளமை போலவே இவ்வடிகளை இரண்டு வஞ்சியடிகளாகவே கொண்டு நெடிலடிக்கு வேறு எடுத்துக்காட்டுத் தந்திருக்கலாம்.

IV பக். - 53. கலிப்பாயாண்டும் நாற்சீரடியானே வருவது இலக்கணமாதலின் நேரடி என்பது கலியடியைக் குறித்து நின்றது அதனுன் நேரடி என்பது கலிப்பாவிற்கு ஒரு பெயராகும் (பக். 92) (பக். 56) நால்வகைப் பாக்களுள் திரிபின்றி நாற்சீரான் முடிவது ஆசிரியம் மட்டுமேயாதலின் செந்தூக்கு ஆசிரியத்திற்கு உரிமையாயிற்று (பக். 78) இன்பா நேரடி ஆசிரியப்பாவின் ஓரடியின்கண் என்பது உரை (பக். 116) நேரடிபற்றிய — நேரடி என்பது இரட்டைப்பட வரும் சமநிலை அடிகளை (பக். 55)

EFEO_GUEST_JLC_02-008 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும் — அம்போதரங்க அடி முச்சீரடியாய் நிறைந்து நிற்கும் என்பது உரை. இவற்றை நோக்கக்கலிப்பாவுக்கு நேரடி என்ற பெயர்ப்பொருத்தம் ஆராயத் தக்கது.

V முச்சீரடி அம்போதரங்கங்களை இருசீரடியாகக்கொள்வார் பேராசிரியர் அதுபொருந்தாமையை அவ்வுறுப்பிலக்கணம் கூறும் வழிக் கூறுதும் என்று குறிப்பிடும் இவர் அதனை ஆண்டுக் குறிப் பிட்டதாகத் தெரியவில்லை.

VI பக். 107. ஆங்க, காயேம் என்பன வழியசை புணர்ந்த சொற் சீரடியாதல் நன்கு விளக்கப்படல் வேண்டும். VII தரவை ஒத்து எட்டடியான் வந்த ஆசிரியச் சுரிதகம் தரவிற் குறைந்து வந்த ஆசிரியச்சுரிதகம் என்று காணப்படுகிறது VIII பட்டினப் பாலையே 'வஞ்சி நெடும் பாட்டு என்று கூறப்படவும் மதுரைக் காஞ்சி வஞ்சிநெடும் பாட்டு என்று கருதப்படும் வகையில் குறிப் பிடப்பட்டுள்ள செய்தி விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

IX பக். 140 முத்தமிழையும் பற்றிய முழுநூலாயின் இயற்றமிழ் முதலியவை படலம் என்று பெயர் பெறுவதல்லது பிண்டம் எனப் படா—இயற்றமிழ் படலமாயின் எழுத்து–சொல் — பொருள் என்பவை ஓத்தாகும். ஒவ்வோரோத்திற்கும் உட்பிரிவு வேண்டுமே அவை எவ்வாறு பெயரிடப்பெறும் என்று புலப்பட வில்லை. எனவே பிண்டம் எனப்படா என்ற கருத்தின் பொருத்தம் ஆய்தற்குரியது.

உரை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. அச்சுப்பிழைகளும் முன்னைய பகுதிகளை நோக்கக்குறைவாகவே உள்ளன. மேலே குறிப்பிட்ட சில செய்திகள் ஐயமறத் தெரிவிக்கப்பட் டிருக்கலாம். தொல்காப்பியச் செய்யுளியலைக் கற்கப்புகுவோர்க்கு இது மிகச் சிறந்த வழி காட்டியுரை என்பதனைக் கல்வி வல்லாரனைவரும் ஒருதலையாகத் துணிந்து கூறுவர் இனி இந் நூலின் நிறைவியலாகிய மரபியலுரையைக் காண்போம்.

இவ்வியலின் 88 ஆம் நூற்பா முதல் இறுதி காறும் உள்ள நூற்பாக்களுக்கு இளம் பூரணர் உரை மிகச் சுருக்கமாக உள்ளது. பேராசிரியர் உரை குழப்பந் தருவதாக உளது. இவற்றிற்கு இவர் வரைந்துள்ள உரை ஐயமும் திரிபும் செவ்விதின் நீக்கித்தேவை யான விளக்கங்களுடன் அமைந்திருத்தல் இவ்வியலின் தனிச் சிறப்பாகும். இவ்வியல் 88, 92, 99 ஆம் நூற்பாக்களின் உரை தொல்காப்பியனார் கருத்தினை உணர்ந்து கொள்ளப்



பெரும்பாலும் உதவுவதனை ஏனைய உரைகளொடு இதனை ஒப்பிட்டுக் காண்க

ஒத்த சூத்திரம் என்பதன் விளக்கம் (98) காண்டிகை என்பதன் விளக்கம் (97, 98, 100) விதித்தல், விலக்கல் என்பதன் விளக்கம் (98) செய்யுளியலில் கூறப்பட்ட நூற்பாவின் இலக்கணம் மரபியலிற் கூறப்பெறும் நூற்பாவின் மரபு என்பன வற்றிடை உள்ள வேற்றுமை அதற்கு அழகான எடுத்துக் காட்டும், விளக்கமும் (99) விட்டகல்வின்றி (101) என்ற காண்டிகை அமைந்து வரும் மரபு, மறுதலைக் கடாஅ (103) என்ற நூற்பரவுரையுள் கூறப்பட்ட வியங்கோள் பற்றிய செய்திகள், பத்து வகைச் சிதைவுகளுக்கு மறுதலையாகிய பத்து வகை அழகு பற்றிய புதிய நூற்பாவும் அதற்கு எடுத்துக்காட்டும் (108) போல்வன இப்பெரும் புலவருடைய நுண்மாண் நுழை புலத்தினையும், ஆசிரியர் கருத்து இன்னது என்று உணர அவர் மேற்கொண்டுள்ள அயரா உழைப்பினையும் இவ்வுரையினை நோக்குவார் என்றென்றும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளன.

வாராததனான் வந்தது முடித்தல், ஒப்பக்கூறல், தன் கோட் கூறல், முறைபிறழாமை, இறந்தது காத்தல், பொருளிடையிடுதல், எதிர் பொருள் உணர்த்தல், ஞாபகங் கூறல், உய்த்துக் கொண்டுணர்தல் என்ற உத்திகளுக்கு 'இவர்தரும் புது விளக்கங் களும், எடுத்துக்காட்டுக்களும் பேராசிரியர் உரையோடு ஒப்பு நோக்கி ஏற்ற பெற்றி ஏற்பதும் தவிர்ப்பதும் அவரவர் விருப்பிற் கேற்ப அமையும்.

வண்டும் தும்பியும் (31) என்ற பாடமே உரையாசிரியரும் நச்சினார்க்குரியரும் கொண்ட பாடமாகலாம் என்பது அவர்கள் உரையைக் கூர்ந்து நோக்கின் புலப்படும். (மா. 31 இளம். பெரும்பாண் 182, உரை சிந்தாமணி 892. உரை.) ஒன்றறிவதுவே (27) என்ற நூற்பா உரையில் ஐயம்பொறிபறிவு மன அறிவு என்பன பற்றி வரையப்பட்டுள்ள விளக்கம் மிகத் தேவையானதொன்றாகும். கோடு வாழ் குரங்கும்.

13 என்பதன் முன்னுள்ள நூற்பா விடுபட்டிருத்தல் வேண்டும் என்பதும், 'ஒரு சார் விலங்கும் உளவெனமொழிப' என்பது ஏடெழுதினோர் மிகைபடவரைந்த படைப்பு என்பதும், புறக் காழனவே (84-87) முதலிய நான்கு நூற்பாக்களும் பிறழ்ந் துள்ளன என்பதும் போல்வன நூற்பாக்களின் துளக்கலாகாத் துணைமையை இவர் உளங்கொண்டு உரை வரைந்துள்ள ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாகும்.

EFEO_GUEST_JLC_02-009 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நுலேகரகம் (69) முதல் அன்னராயினும் (83) என்பது முடிய இவர் வரைந்துள்ள உரை தமிழ் மக்களின் செய்யுட் கோட்பாடுகள் பற்றி இவர் அகத்திணை முதலிய இடங்களில் பலகாலும் வலியுறுத்திய செய்திகளை இடம் நோக்கி வழிமொழிந்து வற்புறுத்தும் திறத்தில் அமைந்துள்ளமை அறிந்து மகிழத்தக்கது. மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல் (96) என்பதற்கு இவர் தந்துள்ள உரை விளக்கம், தான் நாட்டித் தனாது நிறுத்தலுக்கு நேரிய எடுத்துக்காட்டாகும்,

கிளிப்பிள்ளை (4) குஞ்சரம் (19) போத்து (76) உத்தி (109) முதலிய சொல்லாராய்ச்சிகள் சுவைபயப்பன. வைசிகன் என்பது வேசியின் தொடர்புடையவன் என்ற பொருளே தருதலின் அது வாணிக வாழ்க்கை உடையவனைக்குறிக்காது என்பதனை உட்கொண்டு வைசியன் என்பதே நேரிய சொல் என்ற நுட்பமான செய்தி பாராட்டத்தக்கது.

இளமைப்பெயர்களைப் பன்றி முதலியவற்றின் பரியாயப் பெயர்களுக்கும் பொருத்தலாம் என்பதும் (11) ஒட்டகம் பற்றிய குறிப்பும் (18) ஆற்றலொடு புணர்ந்த என்ற சொற்றொடர் விளக்கமும் (49) மாவும் புள்ளும் என்பதே நேரிய பாடம் என்று கொண்டதன் விளக்கமும், ஓரறிவுயிர் முதலியவற்றுள் பேராசிரியர் பிறப்பு என்பதன் விளக்கத்தில் குறிப்பிடும் செய்தி ஒவ்வாது என்ற விளக்கமும் (28) போல்வன இவ்வுரை நயத்தினை வெளிப்படுப்பனவாம். இனி இவ்வுரையுள் உளங்கொள்ள ஏலாத செய்திகள் சில உள அவற்றை நிரலே காண்போம்.

ஆசிரியர் முதல் நூற்பாவில் இளமைப்பெயர் ஒன்பதே என்று குறிப்பிட்டிருக்கவும் இவர் அந்நூற்பா உரையிலும் 26ஆம் நூற்பா உரையிலும் இளமைப்பெயர் பத்து என்று குறிப்பிட்டுள்ளார். அந்தஞ்சான்ற (3) என்ற மிகையால் 59ஆம் நூற்பாவில் ஆவினைக் கொள்ளும் இவர் அதனையும் மூன்றாம் நூற்பாவில் சுட்டப்படாத பிணவல் என்பதனையும் அந்தஞ்சான்ற என்ற மிகையின் பொருளாகக் குறிப்பிடவில்லை. பண்டை உரையாசிரியர் இருவரும் பிணவு என்றே பாடங்கொள்ளவும் ஆசிரியர் பிணையை அடுத்துப் (57) பிணவு என்ற சொல்லையே அமைத்து நூற்பாயாத்திருக்கவும் அதனை அடுத்து வரும் பிணவல் என்ற சொல்லோடு இயைபுடையதாய் இருக்கவும் இவர் மூன்றாம் நூற்பாவில் பிணா என்று பாடங்கொண்டதன் காரணம் விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்.



60ஆம் நூற்பாவில் பிணா என்ற பெயர் ஈறு குறுகி உகரம் பெற்றவழி அஃறிணைக்கு வருதல் மேற்கூறப்பட்டது என்றார். அங்ஙனம் குறிப்பிட்ட இடம் புலப்படவில்லை. அவ்வாறு கொள்ளின் பிணவு தேறு பிணாவேறு என்ற நிலை ஏற்படுதலின் அந்தஞ்சான்ற என்ற மிகையால் ஆ. பிணவு பிணவல் மூன்றும் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

கன்று புகுமாலை நின்றோள் எய்தி (15) என்பது ஆன் கன்றுக்கு எடுத்துக்காட்டு. மான் என்ற சொல்லைக் கொண்ட இவருக்கு இக்காட்டினைத் தருதல் சாலாது. கன்றாற்றுப்படுத்த புன்றலைச்சிறார்அர். கன்று எருமைக் கன்றே என்பதற்கு இவ்வெடுத்துக்காட்டு ஏலாது.

ஆசிரியர் மரபியலில் மான் என்ற பெயரைக்குறிப்பிடாது மானைப்பற்றிக் குறிப்பிட வேண்டுமிடத்தெல்லாம், புல்வாய் உழை, மரை, நவ்வி என்ற சொற்களையே பயன்படுத்தலின் ஆன்என்ற பிரிப்பே ஏற்குமென்பது தோன்றுகின்றது ஆன் என்பது ஆண்பாற்கும் பொதுவாய்ச் சாதிப்பெயரைச் சுட்டுவதாகும் இளமைப்பெயர் ஆண்பெண் இரண்டற்கும் பொதுவாகலின் அத்தகைய சொல்லே இளமைப்பெயர் குறிப்பிடுமிடத்து சுட்டப்படவேண்டியதாம். ஆதலின் பேராசிரியரின் ஆன் என்றபிரிப்பு மாறுகொளக் கூறுவதாகத் தோன்தவில்லை.(15)

பலஇடங்களிலும் இளம்பூரணர் பாடத்தை ஏற்குமிவர் ஆவும் எருமையும் (21) அது சொலப்படுமே என்ற பாடத்தைக் கொண்டிருந்தால் ஆவும் எருமையும் (2) கடமையும் மரையும் என்ற நூற்பாக்களுக்கு முன்னோர் உரைத்த நேரிய உரையை விடுத்துப் புத்துரைவரைந்து அதற்கு விளக்கம் எழுதி இடர்ப்பட வேண்டியிராது. கராம் என்பதற்குச் சிறுமுதலை என்றபொருளின் பொருத்தம் ஆராய்வதற்குரியது (17) போத்து என்ற ஆண்மைப் பெயர் சிறுபான்மை இளமை குறித்து வருமென்று முதல்நூற்பாவிலேயே குறிப்பிட்ட இவர் நாகு என்ற பெண்பாற் பெயரைப் பேராசிரியர் இளமைப்பெயராகக் கொள்வது ஏற்புடைத்தன்று என்று கூறுவது பொருந்துவதாக இல்லை. இளம்பூரணரும் பேராசிரியரும் அட்டையை மூவறிவுயிராகக் கூறியிருப்பவும் இவர் அதனை ஈரறிவுயிராகக் குறிப்பிட்டுள்ளதன் பொருத்தம் புலப்படவில்லை.

காடுமீக்கூறும் கோடேந்தொருத்தல்-ஈண்டு ஒருத்தல்-யானை அது 35ஆம் நூற்பாவிற்கு எடுத்துக்காட்டாகாது. நீர்வாழ் சாதி

யும் அது பெறற்குரிய என்ற இளம்பூரணருடைய பாடத்தை ஏற்று, பேராசிரியர்தாம் கொண்ட அறுபிறப்பு என்றபாடத்திற்கு ஏற்பக்குறிப்பிட்டுள்ள முதலை, இடங்கர்காரம்சுரு வரால் வராளை என்ற ஆறனுள்கராம் ஒன்றனை விடுத்து ஏனையவற்றை உரையுள் குறிப்பிட்டுள்ளதன் பொருத்தும் போதரவில்லை இந் நூற்பாவிற்குப் பேராசிரியர் பாடத்தையே கொண்டிருப்பின் உரைசிறந்திருக்கும்.

பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே (68) இளமைப் பெயருக்கு முன்னரே புறனடை கூறப்பட்டுள்ளது (26) பெண்ணுக்கும் ஆணுக்கும் புறனடை கூறுதல் ஆசிரியர் கருத்தாயின் ''பெண்ணும் ஆணும் அவையலதிலவே'' என்றாற் போல அமைந்து குரங்கின் ஏற்றினை (67) என்ற நூற்பாவின் முன்னர் இடம் பெற்றிருத்தல் வேண்டும். பெண் ஆண்பிள்ளை என வாளா கூறின் அவை உயர்திணையையே சுட்டுதல் முடிய வந்த வழக்கான் அமைந்தது என்ற பேராசிரியர் உரை முடிய வந்த வழக்குப்பற்றிய நூற்பாவை (67) அடுத்து அந்நூற்பா அமைந்திருப்பதனால் போதரவும் அவர் உரையினை இவர் தன்னான் ஒருபொருள் கருதிக்கூறல் என்ற சிதைவாகக் கூறும் செய்தி ஓர்ந்துணர இயலாததாக உளது. படைவகைபெறுஅர் (75) படைக்கலவகையினைச் சுட்டிக் கூறப்பெறார் என்பது வலிந்த உரையாகத் தோன்றுகின்றது எடுத்துக்காட்டுக்கள் யாவும் மன்னருக்கே உரியவாக உள்ளன வைசியநக்கு ஒன்று மில்லை. அந்தணாளனாகிய பரசுராமன் யாண்டும் மழுவாள் நெடியோன் என்று படைக்கல வகையினைச் சு டியே கூறப் படுதலும் உளங்கொளத்தக்கது.

அந்தணாளர் (81) என்ற நூற்பா உரையும் வலிந்துரை யாகவே உள்ளது. அரசன் இளையோனாயின் அவன் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று நடத்தல் அதற்குரிய தகுதியுடைய அரசு அலுவலர் எப்பாலிராயினும் அவருக்கு ஏற்றதேயன்றோ. இழிந்தோர் (83) என்பதற்கு ஒழுக்கத்தில் இழிந்தோர் என்று பொருள் செய்வது தன்னான் ஒருபொருள் கருதிக் கூறலேயாம். வினையின் நீங்கி(93)என்றது இலக்கணவிளக்கத்துள் தானெடுத்து மொழியப்பட்டுள்ளது அதற்குத் தியாகராசதேசிகர் வரைந்துள்ள உரையை நோக்கின் வினையின் நீங்கி என்ற பாடமே நேரிதாதல் பெறப்படும். விளங்கிய அறிவிற்கு வினையின் நீங்கி என்பது காரணம் ஆதலும் புலப்படும். பல்காப்பியம் தொல்காப்பியத்தின் வழியாப்பு ஒன்றனையே கூற எழுந்தநூல் என்பார் பேராசிரியர் அந்நூலுக்குத் தொல்காப்பியம் முதல்நூல் என்று கூறப்படுதல்



ஒன்றுகொண்டே தொல்காப்பியத்தின் தலைமையை நிறுவுதல் ஏற்புடையதாகாது. (94) குன்றக் கூறல் என்ற சிதைவின் மறுதலை நிறைவுறக் கூறலாம். அதனை அகப்படமொழிதலே என்று இவர்தாம் புதிதாக யாத்த நூற்பாவில் குறிப்பிடுதல் ஏற்புடைத்தாகாது அகப்படமொழிதல் என்பது குன்றக்கூறலைக் குறிக்கும் தொடரேயாம். (தொல்-சொல்-35-சேனா) (உ-ஆ குறிப்பு. அகப்பட என்பதற்குயாவும் உள்ளடங்க என்பது பொருள். சேனாவரையர் குறித்தது அஃகப்பட என்ற சொல்லின் மருவிய திரிபு. இரண்டற்கும் உரிச்சொல் மூலம் வேறு வேறு)

இத்தகைய சிற்சில மலைவுகள் ஆங்காங்குக் காணப்படுதல் நம்பெரும் புலவருக்கு இப்பெரும் பணியில் துணை நின்று உதவுவார் ஒருவரும் இல்லாமையான் நிகழ்ந்தனவே. இவை யாவும் பேரொளிப்பிழம்பாகிய கதிரவனிடம் சில கரும்புள்ளிகள் அதன் பேரொளிக்கு இழுக்கு ஏதும் தாராத வகையில் அமைந் திருப்பன போல்வனவே.

பெரும்புலவர் பாலசுந்தரனாரின் தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரை முழுமையாக நிறைவுற்று வெளி வருகிறது. இஃது ஆசறக் கற்ற புலவர் ஒருவரின் வாழ் நாள் முழுமையும் ஈடுபடுத்திய உழைப்பின் பயனாகும். இப்பேருழைப்பில் பண்டு ஈடுபட முயன்ற அரசஞ்சண்முகனார், வேங்கடாராசுலு ரெட்டியார் போன்ற சான்றவர்களுக்கு இதனை முழுமையாக நிறைவேற்றும் வாய்ப்புக் கிட்டவில்லை. இறையருளும் குரு வருளும் இருபாலும் நின்று உதவப் பாலசுந்தரனார் தொல் காப்பியம் முழுதுக்கும் வரைந்துள்ள இவ்வுரையுள் நூற்றுக் கணக்கான இடங்கள் ஏனைய உரைகளில் காணக்கிட்டாத பல அருஞ்செய்திகளை கொண்டு இலங்குகின்றன. மாணாக்க ராவர் யாவரும் பயின்று பயன் பெறல்வேண்டும். அச்சுக்கூலியும் வெள்ளைக்காகித விலையும் வானை முட்டி நிற்றலின் அருஞ் செய்திகளைப் பட்டியலிட்டுக்காட்டி விளக்க விழைந்த எனது வேணவாவினைச் செயற்படுத்த இயலவில்லை.

தமிழ் கூறும் நல்லுலகத்தில் நம்பெரும் புலவர் நிலையான இடத்தைப் பெற்றுள்ளார் அவர் நோய்தபு நோன்றொடையும் மனநலனும் உடையராய் இன்னும் தொல்காப்பியம் தொடர் புடைய தமிழ்ப்பணிகள் பலவற்றையும் முட்டின்றி முடிக்கும் நல்லூழை அவருக்கு இறைவன் அருள்வானாக.

அன்பன்

**ஐயரறன் தீ. வே. கோபாலையன்**

EFEO_GUEST_JLC_02-011 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

## நன்றியுரை

தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரை இப்பகுதியோடு நிறைவுறுகின்றது அறிவியல் நோக்கொடு இன்றைய மொழியியலார் கருத்துக்களையும் உட்கொண்டு திகழும் தொல்காப்பியத் தமிழ் நெறியினை யான் உணர்ந்தவரை மாணுக்கர் உலகிற்குத் தெரிவித்தல் வேண்டும் என்னும் கடப்பாட்டினுன் மிகச்சுருக்கமாக இவ்வுரையை எழுத எண்ணியபோது உரையாசிரியன்மாரான் மிகச்சிக்கலுக்குள்ளான செய்யுளியல் கருத்துக்கள் தெளிவான பின்னரே பிற இயல்களுக்கு வரையவேண்டுமென்று எண்ணிச் செய்யுளியலுக்குரிய உரையைத்தான் முதற்கண் எழுதி அதுமன நிறைவைத் தந்த பின்னரே ஏனையவற்றிற்கும் எழுதி 1982ஆம் ஆண்டில் ஒருவாறு நிறைவு செய்தேன் முதலாவதாக எழுத்தும் சொல்லும் 1988இல் வெளிவந்தன. பின்னர்ப் பொருளதிகாரம் முதல் ஏழு இயல்கள் இரு பகுதியாக 1989, இல் வெளி வந்தன சிறிது காலந்தாழ்த்து இப்பகுதி இப்பொழுது (1991) வெளிவருகிறது.

இவ்வுரையின் வரலாறு, அன்பும் ஆதரவும் புரிந்த பெருமக்கள், யானே அச்சிட நேர்ந்த சூழ்வினை முதலியவை பற்றி விரிவாகப் பின்னர் எழுத உள்ளேனுதலின் இப்பதிப்பிற்குரிய நன்றியுரை மட்டும் ஈண்டுக்கூறுகின்றேன்

தொடக்கமுதல் என்னை ஊக்கி வாழ்த்தியருளும் தவத்திரு காத்தையா சுவாமிகட்கும், சென்னை முத்தமிழ் ஆய்வு மன்றத் தலைவர் தமிழ்த்தொண்டர் திரு. கோ. முத்துப்பிள்ளை அவர்கட்கும் என்னைப் பெரிதும் ஊக்கி எழுத்தையும் சொல்லையும் மிகச் சிறப்பான விழா எடுத்து வெளியிட்டும், அணிந்துரை வழங்கியும் ஆதரவு காட்டிவரும் பெருமகனார் திரு உலக. சுப்பிரமணியனார் அவர்கட்கும், பாயிரம், நூன்மரபு முதல் மரபியல் ஈறுகக் காண்டிகை உரையினை நன்கு நோக்கி நடுவுநிலையோடு ஒப்பற்ற ஆய்வு முன்னுரை வரைந்தருளியுள்ள இலக்கிய இலக்கணப் பரவையுள் ஆழங்காற்பட்ட என் உழுவலன்பர் பேராசிரியர் திரு வே. கோபாலையர் அவர்கட்கும், யான் சோர்வுறுமல் அன்பு காட்டிச் சிறப்பாக அச்சிட்டு உதவிவரும் பேரன்பர் திரு பூ.நா. இராமச்சந்திரன் அவர்கட்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இச்சிறியேனை இப்பெரும்பணியில் ஈடுபடுத்தி நிறைவுறச்செய்த இறைவன் பேரருளை எண்ணி அவன் திருவடிகளை வணங்கி மகிழ்கிறேன். நன்றி வணக்கம். வாழ்க தமிழ் !

அன்பன்,
ச. பாலசுந்தரம்.

தொல்காப்பியம்

# பொருளதிகாரம்

## எட்டாவது-செய்யுளியல்

சூ. 313 : மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ
யாத்த சீரே அடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை எனாஅ
நோக்கே பாவே அளவியல் எனாஅ
திணையே கைகோள் கூற்றுவகை எனாஅ
கேட்போர் களனே காலவகை எனாஅ
பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ
மாட்டே வண்ணமொடு யாப்பியல் வகையின்
ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனாப்
பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதின் கூறி வகுத்துரைத் தனரே. (1)

கருத்து : இது நூன் மரபு முதலாக உவம இயல் ஈறாகக் கூறியவற்றின் காரியமாகவும், பின்வரும் மரபியலை நோக்கிச் செய்யப்படுவது மாகிய செய்யுட்குரிய உறுப்புக்களை நிரல்படத் தொகுத்து அவற்றின் பெயரும் முறையும் வகையும் கூறுகின்றது.

உரை :- மாத்திரை-எழுத்துக்களுக்கு ஓதிய இசையும் ஒலியும் பற்றிய அளவும் எழுத்தியல் வகை-தமிழ் மொழியின்கண் இயலும் எழுத்து வகைகளும். அசைவகை-நால்வகையாக வகுக்கப்பெறும் அசைகளும் அவற்றை வகுத்துக்கொள்ளுமாறும். யாத்தசீர் - அசைகளான் யாக்கப்பெற்ற சீர்களும். அடி - எழுத்தானாகும் அசையானும், சீரானும்வரும் அடிகளும். யாப்பு-எழுத்து முதலாய வற்றைப் பொருள்பெற யாத்தமைக்கும் யாப்பும். தூக்கு-சீர்வகை யானும் அடிவகையானும் பாக்களைத் துணித்துணர்த்தும் ஓசை யறுதியாகிய தூக்கும். தொடை வகை-எழுத்தானும் சொல்லானும் இசையழகும் பொருளழகும் வண்ணங்களும் தோன்றத் தொடுக்கும் தொடைகளும் அவற்றின் வகைகளும். நோக்கு - செய்யுளைக்

கேட்போர் இசை இன்பத்தொடு அதன் பொருள் நுட்பத்தை மீண்டும் மீண்டும் கருதுதற்குக் காரணமாக அமையும் நோக்கும். பா-சீர் முதலியவற்றானன்றி, ஓசையளவானே இஃதின்ன பாவென உணர்தற்குக் கருவியாகும் ஓசையும். அளவியல் - சீரானும் அடியானும் பாக்களை வரையறை செய்யும் அளவு இலக்கணமும். திணை - கைக்கிளை முதலாக மேற்கிளந்த திணைகளும். கைகோள்-களவும் கற்புமாகிய இருவகை ஒழுகலாறுகளும். கூற்று வகை-இதனைக் கூறினோர் இவர் என உணர்த்தும் கூறுவோர் வகையும். கேட்போர்-இதனைக் கேட்போர் இவர் என உணர்த்தும் கேட்போர் பகுதியும். களன்-திணையும் கைகோளும் பற்றி நிகழும் வினை நிகழிடமும். காலவகை - பொருள் நிகழ்வினைத் தெரிவிக்கும் மூவகைக் காலமும், சிறுபொழுதும் பெரும்பொழுதுமாகிய முதற்பொருளுக்குரிய கால வகைகளும். பயன்-செய்யுளான் நிலைபெறத் தோன்றும் பயனும். மெய்ப்பாடு-அகத்திற்கும் புறத்திற்கும் உரியவாக மெய்ப்பாட்டியலுள் விரித்துக் கூறிய மெய்ப்பாடுகளும். எச்சவகை-சொல்லையும் பொருளையும் பற்றி வரும் எச்சங்களும். முன்னம்-ஈண்டு இஃது இப்பொருட்டு என மனத்தான் உணரும் குறிப்பும். பொருள் (வகை)-திணையுணர்தற்குத் துணையாகும் முதற்பொருள் கருப்பொருள்கட்குப் பொதுவாக நிற்கும் உரிப்பொருட் கூறுகளும். துறைவகை - திணை நிகழ்ச்சியைத் தெரிந்துணர நிற்கும் கருப்பொருட் கூறுகளும். மாட்டு - சொற்களையும், சொற்றொடர்களையும் பொருள்பொருந்த முன்னும் பின்னும்கூட்டி உணரத் துணைபுரியும் செயன்மையும். வண்ணம் - ஓசைநடையாகிய வண்ணங்களும்.

என, யாப்பு இயலும் வகையினால் அமைந்த இவ் இருபத்தாறும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து இயைபு, புலன் இழைபு என மேலனவற்றோடு பொருந்தக்கூறிய இவ் எட்டுறுப்புக்களொடும் கூடி முப்பத்துநான்கும், நல்லிசைப் புலவோர் செய்யும் செய்யுள் உறுப்பென உறுதிபெறக் கூறி வகுத்துரைத்தனர் இலக்கண நூலோர்.

ஏகாரமும் எனாவும் ஒடுவும் எண்ணிடைச் சொற்கள். இறுதி ஏகாரம் அசை. ‘செய்யும்’ என்பது அவாய் நிலையான் வந்தது. இவற்றுள், எழுத்து, அசை, சீர், அடி, தூக்கு, தொடை, அளவு, மாட்டு, மரபு ஆகியவை கருவி பற்றிய உறுப்புக்கள், மாத்திரை, நோக்கு, பா, மெய்ப்பாடு, வண்ணம், எச்சம், முன்னம், பொருள் வகை துறை ஆகியவை செய்கை பற்றிய உறுப்புக்கள். திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன் ஆகியவை பொருள் பற்றிய உறுப்புக்கள்.



அம்மை முதலாகிய எட்டும் மேற்கூறிய இருபத்தாறு உறுப்புக்கட்கும் அவற்றாலாகிய செய்யுட்கும், செய்யுட்டொகுதிக்கும் உறுப்பாம். இவை செய்யுட்கண் ஒரோ ஒன்று தனித்தும் சிலவும் பலவுமாய் விரவியும் வருதலின் பிரித்துக் கூறினார்.

மேற்கூறிய இருபத்தாறு உறுப்பும் அகமும் புறமுமாகிய பொருளைப் பற்றி வருங்கால் பொருள்நிலைக்கேற்பச் செய்கை பற்றியும் பொருள் பற்றியும் வரும் உறுப்புக்களுள் ஏற்பன வரும், யாவும் வரல் வேண்டுமென்னும் யாப்புறவில்லை.

ஏழு நிலத்தெழுந்த செய்யுட்களுள் அடி வரையறையில்லாத ஆறும் வரையறை இன்றி இவற்றுள் ஏற்பன பெற்றுவரும்.

இங்ஙனம் பாகுபாடுறுதலின் ‘‘வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே’’ என்றார். செய்யுளும் செய்யுளுறுப்புக்களும் முதலும் சினையும் போலத் தற்கிழமையவாய் நிற்கும் என அறிக.

இனி இடைக்காலத்தார் உறுப்பாகக் கொண்ட ‘தளை’யினைத் தொன்னூலார் உறுப்பாகக் கொள்ளாமைக்குக் காரணம் என்னை எனின்? ‘தளை’ என்பது சொற்புணர்ச்சி போலச் சீரினதுதொழிலே யன்றி வேறொரு உறுப்பினை உண்டாக்குதல் இல்லை ஆகலானும் தளையை உறுப்பாகக் கொள்ளின் சீரான் அடி வகுப்பது பயனில் செயலாமாதலானும் என்க. பிற விளக்கங்கள் அவ்வவ் உறுப்பிலக்கண உரையுள் கூறப்படும்.

**சூ. 314 :** **அவற்றுள்,**
மாத்திரை யளவும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தன்ன என்மனார் புலவர் (2)

**கருத்து :** மாத்திரையும், எழுத்தும் பற்றிய இலக்கணம் ஆமாறு கூலுகின்றது

**உரை :** மேற்கூறிய உறுப்புக்களுள் எழுத்துப் பற்றிய மாத்திரை அளவும் எழுத்துக்களின் இலக்கண வகையும் எழுத்ததிகாரத்துள் கிளந்து ஓதப்பெற்ற இயல்பினனவாகும் எனக் கூறுவர் புலவர்

மேற்கூறிய மாத்திரை அளவுகளாவன : உயிரும் உயிர் மெய்யும் குறிலும் நெடிலுமாகிப் பெறும் மாத்திரைகளும், ஒற்றும் சார்பெழுத்துக்களும் பெறும் மாத்திரைகளும் நீட்டம் வேண்டின்

EFEO_GUEST_JLC_02-013 16/06/2011 © École française d’Extrême-Orient, www.efeo.fr

கூட்டி எழுப்பும் அளபெடை மாத்திரைகளும் அளபிறந்துயிர்த்தலும், ஒற்றிசைநீடலுமாகிய மாத்திரைகளும் அகரத்திம்பர் யகரப்பள்ளி ஐயென் நெடுஞ்சினைபோல அமைந்து பெறும் மாத்திரைகளுமாம்

மாத்திரை செய்யுட்கு உறுப்பாமாறு :- நீட்டம் வேண்டின் (எழுத்-6) எனவும், அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் (எழுத்-33) எனவும் கூறிய விதிகள் செய்யுளை நோக்கியவை ஆதலானும் அவை அசையினும் சீரினும் நின்று அடிக்கண் விரவி நால்வகைப் பாக்களுக்கும் உரிய ஓசையை வரைந்துணர்த்தலானும் உறுப்பாயிற்று. ''அளவும்'' என்றது அளாவுதல் என்னும் நயம் தோன்ற நின்றது.

எழுத்தியலும் வகையாவது :— உயிரும், உயிர்மெய்யும், ஒற்றும், சார்புமாய், உயிரளபெடையும் ஒன்றளபெடையுமாய் ஐகார ஔகாரப் போலியுமாய் இயலுதல்.

எழுத்து, செய்யுளுறுப்பாமாறு :— அசையாயும், அசைக்கு உறுப்பாயும் நிற்றலொடு, தொடைகளையும், வண்ணங்களையும் தோற்றுவித்தலான் உறுப்பாயிற்றென்க.

மாட்டேறு வகையான் மேற்பெறப்பட்டனவற்றைக் கூறுதலான் இவற்றை ஒருங்கு கூறினார்.

**சூ. 315 :** குறிலே நெடிலே குறிவிணை குறினெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசின் பெயரே **(3)**

**கருத்து :** நிறுத்தமுறையானே அசையாமாறு கூறத்தொடங்கி முதற்கண் ஒருசாரசை இலக்கணங் கூறுகின்றது.

**உரை :** குறிலும் நெடிலும் தனித்தும் இரண்டு குறில் இணைந்தும் குறிலொடு நெடிலுமாக இணைந்தும் வருதலொடு அவை ஒற்றொடு வருதலையும் பொருள்பட ஆராய்ந்து முறையே நேரசை நிரையசை என அவற்றிகுப் பெயர் கூறுவர் புலவர்.

வருதலொடும் என்னும் எச்ச உம்மை புணர்ச்சி விகாரத்தாற் கெட்டது. அதனான் ஒற்றின்றி வருதலும் பெறப்பட்டது. ''மெய்ப்பட'' என்றதனான் 'குறினெடில்' என்பவை அம்முறையான் வரப்பெறும் எனக்கொள்க. ''என்றிசினோர்'' என்பது



கடைக்குறைந்து நின்றது. ஏகாரம் எண்ணுப் பொருட்டு. 'பெயரே' என்னும் ஏகாரம் அசை, குறில், நெடில் என்பவை உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொதுவாய் நின்றன.

தனித்த ஓர் எழுத்தே அசையாக நேர்தலின் நேர்அசை என்றும் எழுத்து இரண்டு இணைதலின் நிரையசை என்றும் இவை குணம் காரணமாகப் பெயர் பெற்றன. ஒற்று அலகு பெறாமையின் ஓரெழுத்து இரண்டெழுத்து எனப்பட்டது.

நேர், நிரை என்னும் அப்பெயர்களே அவற்றின் ''வாய்பாடு'' என்பதை உடம்பொடு புணர்த்தலாற் கொள்ளவைத்தார். இவை 'அசை' என்பது ஆறாம் சூத்திரத்தாற் பெறப்படும்.

எ - டு : அ, க, அல், கல், ஆ, கா, ஆல், கால் எனவும்-அணி, அணில், குரா, குரால் எனவும் வரும்.

எழுத்துக்களின் மாத்திரையை முன்னும் பின்னுமாக மயக்கி ஓரோசைத்தாக அசைத்து நிற்றலின் 'அசை' என்பது காரணக் குறியீடாகும்.

**சூ. 316 :** இருவகை உகரமொ டியைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் ஆகும் என்ப **(4)**

**கருத்து :** பிறிதொருசார் அசை இலக்கணங் கூறுகின்றது.

**உரை :** மேற்கூறிய நேரும் நிரையுமாகிய அசைகள் குற்றியலுகரத்தொடும் முற்றியலுகரத்தொடும் இணைந்துவரின் முறையே அவை நேர்புஅசை நிரைபுஅசை எனலாகும் என்று கூவறுர் புலவர்.

இறுதிக்கண் வரும் குற்றியலுகரத்தொடு ஒருங்கு கூறினமையின் இறுதிக்கண் வரும் முற்றியலுகரமே ஈண்டுக் கூறப்பட்டதாகும். அதனானே இவ் உகரங்கள் நேரசை நிரையசைகளின் இறுதிக்கண் வத்து இயையும் என்பது பெறப்படும்,

நேர்பு, நிரைபு என்னும் இக்குறியீடுகளே அவற்றின் வாய்பாடாகவும் நின்றன.

இனி இருவகை உகரமும் எனப் பிரித்தோதி, வாய்பாடு கூறுங்கால் ஒல்வொரு வாய்பாடே கூறினமையின் இருவகை உகரத்திற்கும் இவ்வாய்பாடுகள் பொது என்பது புலனாம்,

EFEO_GUEST_JLC_02-014 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

அதனான் வருமொழிப் புணர்ச்சி நோக்கிக் குற்றியலுகரம் முற்றியலுகரத்தைப் போலவும் ஓசை இயைபு நோக்கி முற்றியலுகரம் குற்றியலுகரத்தைப் போலவும் கொள்ளப்பெறும் என அறிக. இதற்கு மாத்திரை என்னும் உறுப்பேகாரணமாகும்.

"நாகு வேயொடு நக்கு வீங்குதோள்" என்புழிக் குற்றுகரம் ஓசைமிக்கு நிற்குமாறும். மின்னு மின்னுமின்னு மின்னு என்புழி முற்றியலுகரம் ஓசை குறைந்து நிற்குமாறும் உணர்க.

மற்று அலகிடுங்கால் எண்ணப்பெறாத குற்றுகரத்தொடு எண்ணப்பெறும் முற்றுகரத்தையும் ஒருங்குவைத்து வாய்ப்பாடு கூறியதென்னையெனின் ?

சீர்களிடத்து அசைகளை வகுத்துக் காணுங்கால் ஒற்றெழுத்தை ஒப்பதாய குற்றுகரத்தைச் சிதைத்து மேல் வரும் எழுத்தொடு கூட்டி நிரையசையாகக் கொள்ளுதல் சாலாது என அறிந்து குற்றுகரத்தை மொழி சிதைத்துக் கொள்ளக் கூடாதென விதிக்க முற்பட்டவிடத்து

"கனவுநிகழ் பொழுதின் நாணுவர லியையா"

என அந்நெறியான் வரும் முற்றுகரத்தையும் மொழி சிதைத்துக் கொள்ளற்கு இயலாமைகண்டு,

"முற்றியலுகரமும் மொழி சிதைத்துக் கொளா
நிற்ற லின்றே ஈற்றடி மருங்கினும்" (செய்—10)

என விதி கூறுவாராதலின், அவ்வொற்றுமை கருதிக் கூறினார் என்க. அங்ஙனங் கூறாவிடின்

"கனவுநிகழ் பொழுதின் நாணுவர லியையா" என்னும்
ஆசிரிய அடி, கன வுநி கழ் எனவும் நா ணுவ ர

எனவும் பிரிந்து கருவிளங்காய் கூவிளங்காய் என்னும் மூவசைச் சீராகிக் கலித்தளையாய் நின்று அகவலோசை கெடும். அவற்றைக் கனவு நிகழ் எனவும் நாணு வர எனவும் பிரித்து நிரைபு நிரை நேர்பு நிரையாகக் கொள்ளின் ஆசிரிய உரிச் சீராயமைந்து தன்தளையே பெற்று அகவலோசை பிழையாது நிற்குமாறறிந்து கொள்க.

நேரசையும் நிரையசையும் எழுத்துவகையான் நான்கு நான்கு வகை பெறுதலின் அவற்றொடு இவ் இருவகை உகரத்தைச் சேர்க்கப் பதினாறு வகை ஆதல் வேண்டு



மெனினும் தனிக் குற்றெழுத்தைச் சார்ந்து வரும் உகரம் நேர் பசையாகாது எனப் பின்னர் விலக்கப்படுதலான் குற்றுகர ஈற்றசைக்கு ஏழும், முற்றுகர ஈற்றசைக்கு ஏழும் ஆகப் பதினான்கு வகைகளே வரும் என அறிக.

எ—டு: கன்று, காடு, மாண்பு, வரகு, கரும்பு, மலாடு, பனாட்டு எனவும் – மின்னு, நாணு, சோர்வு, உருமு, தளர்வு, குலாவு, உராய்வு எனவும் வரும்.

குறினெடில் இணையசையைச் சார்ந்து முற்றியலுகரம் வரும் பெயர்ச்சொல் அரிதாம். முற்றியலுகரம் பெரும்பான்மையும் நிலைமொழித் தொழில் காரணமாகப் பெற்ற சாரியை உகர ஈறாக வருதலன்றி இயல்பீற்றுச் சொல்லாக வருதல் அரிதாம் என்க. அதனான் அஃது உயிர் முதன் மொழிவந் தியையுங்கால் குன்றி நிற்குமென அறிக. [குன்றுதல்=கெடுதல்]

இனி நேர்பசை, நிரைபசைகளைக் சொல்லாதுவிடின், எழுத்தால் வகுக்கப்பெறும் நாலெழுத்தடியாகிய "வண்டு வண்டு வண்டு வண்டு" என்பதைத் தேமா தேமா தேமா தேமா எனக் கொள்ளல் வேண்டும். ஆண்டுக் குற்றுகரம் எண்ணப் பெறாதென்றமையின் அவை நேரசையாய் நின்று சீராக நிரம்பா. எனவே அவ்விலக்கணமெல்லாம் பிழைபடும். மேலும் குற்றியலுகரம் ஒற்றுப் போல அரைமாத்திரையே பெறுதலானும் உயிரேற இடந் தந்து தனது மாத்திரையை இழத்தலானும் அசையாகக் கோடற்கு இயலாமை அறியலாம். அன்றியும் வெண்பாவின் ஈற்றடி முச்சீராய் இறுதி அசைச் சீராய் நிற்கு மென்னும் இலக்கணம் நிரம்பாது கெடும், மேலும் ஈரசைச்சீர்களுள் இயற்சீர் ஆசிரிய உரிச்சீர் என வகுத்தல் பயனில் கூற்றாய் முடியும். ஆசிரிய உரிச்சீர்கள் மூவசைச் சீராய் மயங்கும். அன்றியும் நாலசைச்சீர் வேறுகொள்வேண்டிவரும் நாலசைச் சீரை இரண்டு ஈரசைச்சீர் எனக்கோடற்கும் ஒக்குமாகலின் அஃது அறிவியலுக்கு முரணாம் என அறிக.

## சூ. 317: குறிலிணை உகரம் அல்வழி யான. (5)

**கருத்து:** மேற்கூறிய நேர்பசைக்கு எய்தியது ஒருமருங்கு விலக்குகின்றது.

**உரை:** நேரசை இருவகை உகரமொடு இணைந்து வருங்கால் நேர்பசையாவது, தனிக்குறிலாய நேரசைக்குப் பின் ருதல் அல்லாத வழியேயாம்,

EFEO_GUEST_JLC_02-015 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தனிக்குறிலின்பின்வரின் அது நிரையசையாதலன்றி நேர்பசையாகாதென்பது. கடு, உசு, மறு, கரு, மழு, உளு என வரின் அவை நிரையசையாம்.

இனி, குறிலைச் சார்ந்து வரின் அது முற்றுகரமே எனினும் ஞாயிறு, போவது, வருவது என வரும் குற்றுகரச் சொற்கள் அசையாதற்கண் இறுதி நிற்பவை யிறு, வது என, நிற்றலின் பொதுவாகக் குறிலிணை உகரம் என்றார். நுந்தை என்பது குற்றியலுகரமாயும் முற்றியலுகரமாயும்நிற்குமாதலின் அது பற்றி ஈண்டு ஆராய்ச்சியில்லை எனத் தெளிக.

## சூ. 318 : இயலசை முதலிரண்டு ஏனைய உரியசை (6)

**கருத்து :** மேற்கூறிய அசை நான்கற்கும் ஆட்சிக்குறியீடு கூறுகின்றது

**உரை :** முதற்கண் கூறப்பெற்ற நேர், நிரை இரண்டும் இயலசை என்றும் ஏனைய நேர்பு நிரைபு இரண்டும் உரியசை என்றும் வழங்கப்பெறும்.

நேர், நிரை என்பவை இயற்கையாக அமைதலின் இயலசை என்றும்-நேர்பு, நிரைபு என்பவை அவ்இயலசையோடு உகரத்தைக் கூட்டிச் செயற்கையாகச் செய்யப்படுவன ஆதலின் உரியசை என்றும் காரணத்தாற் பெயர் பெற்றன.

## சூ. 319 : தனிக்குறில் முதலசை மொழிசிதைத் தாகாது. (7)

**கருத்து :** எதிர்மறை முகத்தான் தனிக்குறில் அசையாகுமிடங் கூறுகின்றது.

**உரை :** ஈரெழுத்தொரு மொழியையும், தொடர் மொழியையும் சிதைத்து அம்மொழி முதற்கண் நிற்கும் தனிக் குறிலை நேரசையாகக் கொள்ளலாகாது.

எனவே, சிதையாது பிரிந்து இறுதிக்கண் நிற்கும் தனிக் குறில் நேரசையாகக் கொள்ளந் தகும் என்றவாறாம். ஒரெழுத் தொருமொழி சிதைத்தற்கு இயலாமையின் மொழி என்றது ஏனைய இரண்டையுமாம். அஃதாவது

கனி, கனா, கனல், வரால் என்பவற்றை நிரையசையாகக் கொள்வதன்றி நேர் நேர் எனச் சிதைத்தல் கூடாதாம். பருதிவராளி என்பவை நிரைநேராதலின்றி அவற்றை நேர்நிரையாகவும் நேர் நேர் நேராகவும் சிதைத்தல் கூடாதாம். பருதி முதலியவற்றை நிரைநேராகக் கொள்ளுமிடத்து இறுதி நின்ற தனிக்குறில் நேரசையாயினவாறு காண்க.



இனிச் சிதையாமல் மொழித்தன்மை பெற்ற தனிக்குறில் சீர்க்கண் நிற்பின் முதற்கண் தனிக்குறில் நேரசையாகும். அவ்வழி அது வீட்டிசைகரும் என்றும் உய்த்துணர்க.

இஃது உய்த்துக்கொண்டுணர்தல் என்னும் உத்தி.

எ - டு : "அஆ இழந்தானென் றெண்ணப் படும்"
"நொ அலையல் நின்னாட்டைநீ"
"அஇ உஅம் மூன்றும் சுட்டு" என வரும்.

## சூ. 320: ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம் (8)

**கருத்து :** அசைகோடற்கண் குற்றியலிகரத்தின் நிலைமை கூறுகின்றது.

**உரை :** குற்றியலிகரம் அசைக்கு உறுப்பாக நிற்குமிடத்து ஒற்றெழுத்தின் இயல்பினதாகியே நிற்கும். ஒற்றெழுத்தியல்பாவது அலகுபெறமை. குற்றியலிகரம் மெய்யினை ஊர்ந்து நிற்பதாயினும் அரைமாத்திரையளவே பெறுதலின் உயிர்ப்பிசையாகாமல் ஒற்றியல்பாயிற்றென அறிக.

எ - டு : "குழலினி தியாழினி தென்ப"
"அருளல்ல தியாதெனின் கொல்லாமை".

இவ்வெண்பா அடிகளில் குற்றியலிகரம் அலகுபெறாமல் ஒற்றியற்றாய் நின்றவாறு காண்க. அலகுபெறின் ஆசிரியத்தளையும் கலித்தளையுமாய்ச் செப்பலோசை பிழைபடும் என்க,

சார்பெழுத்து மூன்றனுள் குற்றுகரம் நேர், நிரையசைகளைச் சார்ந்து உரியசைக்கு உறுப்பாய் நிற்கும் என மேற் கூறப்பட்டது. "ஆய்தப்புள்ளி" என்றதனான் அஃது ஒற்றாய் அடங்குதல் பெறப்பட்டது. ஆதலின் எஞ்சி நின்ற குற்றியலிகரத்தின் இயல்பினை இச்சூத்திரத்தான் விதித்தார் ஆசிரியர் என்க. ஆசிரியர் தேற்றேகாரம் புணர்த்துக் கூறினமையின்

"மற்றியான் என்னுளேன்மன்னோ" எனவும்
"ஈசற்கியான் வைத்த அன்பின் அகன்று"

எனவும் வருதல் இடைக்கால வழக்கு. அதனை வழுவமைதியாகக் கொள்ளல் தகும்.



EFEO_GUEST_JLC_02-016 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**சூ. 321: முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும். (9)**

**கருத்து :** "இருவகை உகரமொடியைந்தவைவரினே" எனக்கூறினமையின் அவை வருமொழியைச் சிதைத்து இணையா என நேர்பசை நிரைபசைகட்காவதோர் மரபு கூறுகின்றது.

**உரை :** முற்றியலுகரமும் (உம்மையான்) குற்றியலுகரமும் வருமொழியைச் சிதைத்து உரியசை கொண்டு நிற்றலில்லை. அவை அடியீற்றின்கண்ணும் மொழியைச் சிதைத்து நிறறலில்லை. ஈற்றடிமருங்கினும் என்னும் உம்மையான் இடையடி மருங்கினும் சிதைத்து நில்லாதென்க.

குற்றியலுகரத்தை உம்மையாற்றழுவிக் கொண்டமையின் 'நிற்றலின்றே' என ஒருமையாற் கூறினார். முற்றியலுகரச் சொற்கள் பெரும்பான்மையும் சாரியை உகர ஈறாக வருதலானும் குற்றியலுகர வீற்று உரியசைகளைச் சிதைத்து நிறுத்துங்கால் அவை தனிக்குறில் எனக் கூறுதற்கு ஏற்புடையவாக நிற்றலானும் முற்றியலுகரமும் என அதனை வீதந்து கூறினார் என்க.

அஃதாவது "நாணுடையரிவை, பரன்முரம்பு, வார்முரச திரும், வற்றுறு செய்தி, நீள்குருந்து" எனவருஞ் சீர்களிடத்து வருமொழியைச் சிதைத்து அவற்றின் முதல் நிற்கும் உகரத்தை வாங்கி, நாணு டையரியவை பரன்மு ரம்பு வார்மு ரசதிரும் வற்று றுசெய்தி நீள்கு ருந்து என உரியசை கொள்ளப்படா என்றவாறு.

இவை (நேர்பசை நிரைபசை) ஈற்றின்கண் வருதல் வெண் பாவினும், கலிவெண்பாவினும், கொச்சக வெண்பாவினும், வெள்ளைச் சுரிதகத்தினுமாதலின் ஆண்டு வருங்கால்

"புன்கண் உடைத்தாற் புணர்வு"
"புனைமலர்த் தாரகலம் புல்லு"
அஞ்சொன் மடவார்க் கருளு
"பகவன் முதற்றே யுலகு"
"தானமிழ்தம் என்றுணரற் பாற்று" என வருதலன்றி
"பண்ணமைதி கண்டுபா, டு"
"தூயவரை நாளுமேத், து"
"வளத்தொடு நாளும்வா, ழு"
"பைந்தமிழ்ச் சொற்பழ, கு"

என இறுதிநிற்கும் ஏத்து, பாடு, நோக்கு, வாழு, பழகு, என்னும் உரியசை அச்சீர்களைச் சிதைத்து, கு, டு, து, ழு; என நில்லா என்றவாறு.



**சூ. 322: குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே. (10)**

**கருத்து :** உரியசைகள் இயலசைகள் போல ஒற்றொடு கூடியும் நிற்கும் என்கின்றது.

**உரை :** உரியசைகளின் இறுதி நிற்கும் இருவகை உகரங் களும் ஒற்றெழுத்துக்களொடும் தோன்றி நிற்கப்பெறும். உம்மையை 'ஒடு' வொடு கூட்டுக.

இயலசைக்கண் நிற்கும் ஒற்று இயல்பீறாயும் விதியீறாயும் நிற்கும். உரியசைக்கண் வரும் ஒற்று விதியீறாகவன்றி இயல் பீறாக நில்லாதென்பது விளங்கத் "தோன்றி நிற்கவும் பெறுமே" எனக் கூறினார். தோன்றுதலாவது புணர்ச்சி விகாரத்தான் தோன்றுதல். ஏகாரம் ஈற்றசை.

எ - டு : 1) "நாணுத் தளையாக வைகி"
2) "கனவுக்கொல் நீகண்டது"
3) "சேற்றுக்கால் நீலம்"
4) "நெருப்புச் சினந்தணிந்த" என வரும்.

இனி, காணும், நோக்கும், புரக்கும், கடவுள், இயவுள் என வரும் இயல்பீறுகள் நேர்நேரும், நிரைநேருமாகிய இயலசை களாம்-என்றறிக.

இனி, ஈண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇ (புறம் 161) வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள் (முருகு) என வருவனவற்றுள் ஈண்டுசெலல் என்பது நேர்பு நிரையாதலன்றி ஈண் டுசெ லல் என மாவருவாயாகவும் வசிந்து வாங்கு என்பது நிரைபு நேர்பாக அல்லது வசித் துவாங் கு எனப் புலிவருவாயாகவும் சிதைந்து நில்லா. பிறவும் அன்ன.

**சூ. 323: அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உரைத்தலும் வல்லோ ராறே (11)**

**கருத்து :** முற்கூறிய அசைகளையும் பிற்கூறும் சீர்களையும் செய்யுளகத்து உணர்ந்துரைக்கும் முறை கூறுகின்றது.

**உரை :** செய்யுட்கண் பயின்று வரும் எழுத்தானாம் அசை களையும் அசையானாம் சீர்களையும் தூக்கும், பாவும், வண்ணமும் ஆகிய உறுப்புகளுக்களுக்கேற்ப ஆசிரியம் வெண்பா முதலிய ஓசைகள் வழுவாமல் அவற்றவற்றிற்குரிய இசையொடு சேர்த்தி

EFEO_GUEST_JLC_02-017 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

அவற்றின் வேறுபாடு தோன்ற வகுத்தலுணர்த்தலும் செய்யுள் இலக்கணம் வல்லார் முறையாகும். உம்மையான் செய்யுள் செய்தலும் அவ்வல்லார்க்கே இயலும் என்று கொள்க.

என்றது ; ஒரு செய்யுட்கண் அதற்குரிய ஓசையின்றி மாறினும், இன்னாஓசையவாயினும் வழுவாம் என்றவாறு.

எ - டு : "வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்த்தார்க்கு யாண்டும் இடுபைஇல". என்னும் வெண்பாவின் கண் வேண்டுதல் வேண்டாமை இலானடி என ஓதின் வழுப்படுதலின்

"வேண்டுதல்வேண் டாமை யிலானடி என அசையை இசையோடு சேர்த்து இசைக்கப் பிழையா தாயிற்று.

"குருத்துக் குறைத்துக் கொணர்ந்து தமது
கருப்புச் செறுப்புப் பரப்பு"
தருக்குப் புணர்ந்து தணந்த தமது
பொருப்புப் புடைத்துப் புடைத்து"

இவற்றுள் வெண்பாவிற் கோதிய அசையும் சீருமே வந்தன வாயினும் இன்னா ஓசைத்தாய்ச் செப்பலோசை வழுவுதலின் இவை இசையொடு சேராவாயின. வகுத்தனர் உரைத்தல்' என்ற ஆசிரியர் கூற்றினை இடைக்காலத்தார் வகையுளி' என்ப.

இனி, "நுதலது இமையா நாட்டம் இகலட்டுக்
கையது கனிச்சியொடு மழுவே" (அகம்—கடவுள் வாழ்த்து)

என்புழி 'இகலட்டு' என்னும் சீர் எழுந்துமுதலா ஈண்டிய அடியிற் "குறித்த பொருளை முடிய நாட்டப்" பின்வந்ததாகலின் யாப் பென்னும் உறுப்பினுள் அடங்காது 'இகலட்டுக் கையது கணிச்சி யொடு' என மேலடியோடு பொருள் கூடுவதும் இசைபொடு சேர்த்தி வகுத்துணர்த்தியதேயாம். என்று கூறி அடியினையும் இசையொடு சேர்த்தி வகுத்துணர்த்தல் வேண்டுமென்பார் பேராசிரியர்.

அதுவும் சீரொடு சேர்த்தியதேயாகும் என்க. இவ்வாற்றான் அசையும் சீரும் இசை நோக்கினவே என்பது புலனாகும்.

சூ. 324 : ஈரசை கொண்டும் மூவசை புணர்த்தும்
சீரியைந் திற்றது சீர்எனப் படுமே. (12)

கருத்து : நிறுத்தமுறையானே சீராமாறு கூறத் தொடங்கி இச்சூத்திரத்தான் அதன் இலக்கணமும் வகையும் கூறுகின்றார்.



உரை : இரண்டு அசைகளை இயல்பாகக் கொண்டும் அவற்றின்மேல் ஒன்று இயைய மூவசைகளாகப் புணர்த்தும் தாள அமைதியொடு இயைந்து அறுதிபெற்றது சீர் எனப்படும்.

சீர் என்னும் பலபொருளொருசொல் ஈண்டுத் தாள அறுதியைக் குறித்து நின்றது. பாணி சீர் தூக்கு என்னும் மூவகைத் தாள நிலைகளுள் சீர் என்பது தாளத்தின் ஒரு கூறு. அசையாலாகிய சீர் ஓரடிக்கண் ஈரசையும் மூவசையுமாக அறுதிபெற்று அடி முடியுமளவும் தொடர்தலின் சீர் எனக் காரணக் குறியீடு பெற்றது. இஃது ஆட்சி பற்றிய குறியீடு.

ஓரசையொடு ஓரசை கூடிய அளவானே ஒரு சீராக நிறை தலின் "ஈரசை கொண்டும்" என்றும், வெள்ளைக்கென்றும் வஞ்சிக்கென்றும் வேறுபடப் பிறிதோர் அசை புணர்ந்து நிற்றலின் "மூவசை புணர்ந்தும்" என்றும் கூறினார். புணர்த்தும் எனப் பாடங்கொள்வார் உரையாசிரியர். அஃது "இற்றது", என்பதனொடு இயையாமை அறிக.

நால்வகை அசைகளும் தம்முள் ஒருகால் உறழப் பதினாறு ஈரசைச் சீர்களும், பின்னும் ஓரசை கூட்டிஉறழ அறுபத்து நான்கு மூவசைச் சீர்களும் வரும் என்பது இதனாற் பெறப்படும்.

சூ. 325 : இயலசை மயக்கம் இயற்சீர், ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர் (13)

கருத்து : ஈரசைச்சீர் ஆமாறும் அவற்றின் வகையும் பெயரும் ஆமாறும் கூறுகின்றது.

உரை : நேரும் நிரையுமாகிய இயலசைகள் தம்முள் ஒத்தும் மாறியும் கூடி வருவன இயற்சீராம். மற்றையவாகிய நேர்பும் நிரைபும் தம்முள் ஒத்தும் மாறியும் கூடி வருவன ஆசிரிய உரிச்சீராம். 'ஆகும்' என்னும் பயனிலை அடுத்த நூற்பாவி னின்றும் தந்துரைக்கப்பட்டது.

இயலசையான் வந்தமையின் இயற்சீர் என்றும். உரியசை யான் வந்தமையானும் அவை ஆசிரியத்திற்கு உரிமையுடைமை யானும் ஆசிரிய உரிச்சீர் என்றும் காரணக் குறியீடுபெற்றன. இனி இயலசையும் உரிசையும் தம்முள் மாறி மயங்கி வரும் எட்டுச் சீர்களை விளக்கி அவற்றின் உரிமை கூறப்பெறும்.

EFEO_GUEST_JLC_02-018 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**இயற்சீர்க்கு எடுத்துக்காட்டும் வாய்பாடும் :**

நேர் நேர் — தேமா— 2 எழுத்து
நிரை நேர் — புளிமா— 3 எழுத்து
நேர் நிரை — பாதிரி— 3 எழுத்து, ஞாயிறு எனக் குற்றுகரத் தொடர்பால் இரண்டெழுத்தாகவும் நிற்கும்
நிரை நிரை — கணவிரி—4 எழுத்து. வலியது என மூன்றெழுத்தாகவும் நிற்கும் (இவை வாய்பாடு)

அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே (குறுந் - 16)

இதனுள் நான்கு இயற்சீரும் வந்துள்ளமை காண்க.
ஆசிரிய உரிச்சீர்க்கு எடுத்துக்காட்டும் வாய்ப்பாடும் :-

நேர்பு நேர்பு, வீடுபேறு, மின்னுபோகு, காடுநாணு, மின்னு நாணு. நிரைநேர்பு - வரகு சோறு, உருமு காடு, குருகுபேணு, அரவு நாணு. நேர்பு நிரைபு - பாறு குருகு, மன்னுகுருகு, நீடுகுரவு, மன்னு புறவு. நிரைபு நிரைபு - கடறுமாறு, தடவு மருது, கடறுவிரவு, அரவு விரவு. இவை வாய்பாடு.

''வெளிற்றுப் பனந்துணியின் வீற்று வீற்றுக் கிடப்ப'' (புறம் 35)
''வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்'' (முருகு 70)
''பூண்டுகிடந்து வளரும் பூங்கட் புதல்வன்''
நறவுண் மண்டை அடக்கலின் இரவுக் கலித்து (அகம் 96)

எனவரும், இவற்றுள் நான்கு ஆசிரிய உரிச்சீரும் வந்துள்ளமை காண்க. இவை குற்றுகர முற்றுகர வேறுபாட்டான் இயற்சீர் இரண்டு எழுத்து முதல் நான்கு எழுத்து வரையும் ஆசிரிய உரிச்சீர் இரண்டெழுத்து முதல் ஆறு எழுத்து வரையும் பெற்றுவரும். எழுத்து எண்ணப்பெறுமிடத்து ஒற்றும் குத்றுகரமும் குற்றிகரமும் ஆய்தமும் எண்ணப்பெறா என்பது பின்னர்க் கூறப்படும்.

**சூ. 326 : முன்னிரை உறினும் அன்ன வாகும். (14)**

கருத்து : உரியசைகளொடு நிரையசை கூடி அமையுமாறு கூறுகின்றது.

உரை : உரியசைகளின் முன்னர் இயலசையாகிய நிரையசை வந்து கூடி நிற்பினும் அவை ஆசிரிய உரிச்சீர்களை ஒப்பனவாகும்.

நிரை உறினும் என்றமையான் நிற்பவை உரியசைகள் என்பதும் அடுத்த நூற்பா ''நேரவண் நிற்பின் இயற்சீர்ப்பால'' என்பதனான் இவை ஆசிரிய உரிச்சீரின் பாற்படும் என்பதும் பெறப்படும்.



ஆசிரியஉரிச்சீராகும் என்னாது ''அன்னவாகும்'' என உவமித்துக் கூறியதனான் இவை தளை கொள்ளுமிடத்து இயற் சீரைப்போலத் தளைகொள்ளும் என அறிக.

எ - டு : நேர்பு நிரை— நீடுகொடி, நாணுத்தளை — பாதிரி போலத் தளைகொள்ளும்
நிரைபு நிரை— உரறு புலி, விரவுபுலி — கணவிரி போலத் தளைகொள்ளும்

ஓங்குமலைப் பெருவிற் பாம்புநாண் கொளீஇ (புறம் 55)

களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பெருந்தலை (புறம் 64) என வரும்-இவை இரண்டும் ஆசிரியத் தளையாயின.

ஈண்டுசெலல் கொண்மூ வேண்டு வயின் குழீஇ (புறம் 161) இது வெண்டளையாயிற்று. இவை மூன்று முதல் ஐந்தெழுத்து வரை பெற்றுவரும்.

**சூ. 327 : நேரவண் நிற்பின் இயற்சீர்ப் பால (15)**

கருத்து : உரியசைகளோடு நேரசை கூடி அமையுமாறு கூறுகின்றது.

உரை : அதிகாரத்தான், நின்ற உரியசைகளின் முன்னர் இயலசையாகிய நேரசை வந்து கூடி நிற்பின் அவை இயற்சீரின் பாலவாகும். 'இயற்சீர்ப்பால' என்றதனான் தளை நிலைக்கு நிரையீற்றியற்சீர் போலவாகும் என அறிக.

எ - டு : நேர்புநேர் — போதுபூ, — மேவுசீர் — இது பாதிரிபோலத் தளை கொள்ளும்
நிரைபுநேர் — விறகு தீ, அரவுநா — இது கணவிரிபோலத் தளை கொள்ளும்

நீத்துநீர்ப் பரப்பின் நிவந்துசெல் மான்றேர். நீத்துநீர்ப் பரப்பின் என வெண்டளை கொண்டது. நிவந்துசெல் மான்றேர் என ஆசிரியத் தளை கொண்டது. இவை இரண்டு முதல் நாலெழுத்து வரை பெற்று வரும்.

**சூ. 328 : இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே
நிரையசை இயல ஆகு மென்ப. (16)**

கருத்து : இயலசைகளின் முன் உரியசைகள் கூடி அமையுமாறு கூறுகின்றது.

உரை: நேரும் நிரையுமாகிய இயலசைகளின் முன்னர் நேர்பும் நிரைபுமாகிய உரியசைகள் வரின் மேல் நிரையசைக்கு ஓதிய இயல்பினவாகும்.

என்றது; நிரையீற் றியற்சீர்களின் பாற்பட்டு அவைபோலத் தளை கொள்ளும் என்றவாறு.

எ - டு: நேர்நேர்பு — போரேறு, நன்னாணு; நேர்நிரைபு — காருருமு, பூ மருது } இவை பாதிரிபோலத் தளை கொள்ளும்

நிரைநேர்பு — கடியாறு, பெருநாணு; நிரைநிரைபு — நரையுருமு, மழகளிறு } இவை கணவிரிபோலத் தளை கொள்ளும்

காமஞ்செப்பாது கண்டது மொழிமோ : ஆசிரியந்தளை
கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய பரிமாவும் ,,
கனவாண்டு மருட்டலும் உண்டே இவடான் ,,
உருமுரறு கருவிய பெருமழை தலைஇ (அகம் 158) ,,
கருங்கோட்டுச் சீறியாழ் பணையமிது கொண்டு (புறம் 316)

இவு வெண்டளை பெற்றது. இவை இரண்டு முதல் ஐந்தெழுத்து வரை பெறும். பிறவும் அன்ன

ஆக ஈரசைச் சீர் பதினாறனுள் இயற்சீர் பத்தாகவும் ஆசிரிய உரிச்சீர் ஆறாகவும் வருமாறு கண்டுகொள்க.

சூ. 329: அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே. (17)

கருத்து: செய்யுட் சீரின்கண் உயிரளபெடை எய்தும் இயல்பு கூறுகின்றது,

உரை: தனிமொழிக்கண் சொல்லின் உறுப்பாகி நிற்கும் அளபெடை உயிர்களும் சொற்பொருளை வேறுபடுத்தும் அளபெடை உயிர்களும், இருமொழிப் புணர்ச்சிக்கண் தோன்றி வரும் அளபெடை உயிர்களும் அல்லாத செய்யுளிசை நிறைதற்கு "நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி எழூஉதல்" என்றதனான் வரும் உயிரளபெடையாகிய செயற்கையளபெடைக் கண் வரும் குற்றுயிர்களின் மாத்திரையிசை சீர்களின்கண் அசைக்கு உறுப்பாய் அலகு நிலை பெறுதலும் உரியதாகும். எதிர்மறை உம்மையான் அசை நிலையாய் அலகு பெறாமையும் உரித்து என்க.



செய்யுட்கண் ஓசை நிறைத்தற்பொருட்டு நெட்டெழுத்தின் விகாரமாய் அளபெடுத்து ஒத்த குற்றெழுத்தாகி நிற்கும் உயிர் ஒவ்வொன்றும் மாத்திரை வகையான் தனித்தனி நேரசையாதற்கு உரித்தாகலின் "ஆகலும் உரித்தே" என்றும், சேய்மை விளிக் கண்ணும், பண்டமாற்றின் கண்ணும் நாவலோசையின் கண்ணும் அளபிறந்து உயிர்த்துவரும் இசைகள் அலகு பெறாமையின் எதிர் மறை உம்மை கொடுத்தும் ஓதினார்.

குரீஇ - ஆடூஉ, முதலாயின நீட்டம் வேண்டிக் கூட்டி எழூப்பப்படாமல் தனிமொழிக்கண் சொல்லுறுப்பாய் நிற்கும் அளபெடைகள்.

நிலைஇ, தழீஇ-விராஅய் முதலியன சொற்பொருளை வேறு படுத்துத் தனிமொழிக்கண் உறுப்பாய் நிற்கும் அளபெடைகள். இவை இரண்டும் அலகுபெற்று அசைநிலையாகியே நிற்கும்.

உவா அப்பதினான்கு, பலா அக்கோடு அதா அன்று முதலியன புணர்ச்சி வேறுபாட்டான் மிக்குவந்த அளபெடை. இஃது ஓரோவழி அலகு பெற்றும் ஓரோவழி அலகு பெறாதும் நிற்கும்.

எ - டு: நற்றாள் தொழாஅர் எனின். "எருது காலுறாஅ திளையர் கொன்ற" இவை தளைநிலை பெற்றுச் செய்யுட்கண் ஓசை நிரப்பவந்த அளபெடைகள் அதலின் அலகுபெற்று அசைநிலையாகியே நிற்கும்.

சேரமாஅஅன் வருக! நம்பீஇஇ செல்க! (சேய்மைவிளி)
உப்போஒஒ என உரைத்து மீள்வாள் (பண்டமாற்று)
கலம்போஒய்ப் போஒய்க் கௌவைதரும் (இசை)
நாவலோஒஒ என்றிசைக்கும் நாளோதை (நாவலோசை)

இவை அசைநிலையாகி அலகுபெறா.

இனி இராஅக்காக்கை, இறாஅ வழுதுணங்காய் எனப் புணர்மொழிக்கண் வரும் அளபெடை ஓரோவழி அலகு பெற்றும் பெறாமையுமாக நிற்கும் ஆதலின் இடனறிந்து கொள்க.

செய்யுட்கண் ஓசை நிரப்பவரும் அளபெடை, சொல்லுக்கு உறுப்பாய்ப் பொருள் வேறுபாடு செய்யாமல் நெட்டெழுத்தின் விகாரமாய்க் கொள்ளப்படுவதாகலின் அது பின்னிற்கும் எழுத்துக் களொடு கூடி நிரையசையாதலில்லை. மூன்று மாத்திரையே யன்றி நான்கு மாத்திரையாக அளப்பெடுப்பினும் அவை தனித் தனி நேரசையாகவே நிற்கும்.



EFEO_GUEST_JLC_02-020 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எ - டு: உறாஅர்க் குறுநோய் உரைப்பாய்க் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

எனப் புலிசெல்வாய் ஆகி நிற்கும். அவ்இரண்டு மாத்திரையையும் கூட்டி ஒரு நெட்டெழுத்தாகவோ குறிலிணையாகக் கொண்டு நிரையசையாகவோ எண்ணப்படா. தனித்தனி நேரசையாகவே எண்ணப்படுமென்க. என்னை? ஒரு நெட்டெழுத்தானது ஒரு மாத்திரை நீண்டவிடத்தும் செய்யுளோசை நிரம்பாமையானன்றே மீண்டும் அளபெடுத்தது அதனான் அவை ஒரு முயற்சியான் வந்த இரண்டு மாத்திரையன அல்லவாகலின் அம் முயற்சி வேறுபாடு புலப்படத் தனித்தனி அலகிடப்பெறுவன ஆயின.

இனி, சொல்லிசையளபெடைகள் சொல்லுக்கு உறுப்பாக நிற்றலின் பின்னுள்ள எழுத்தொடுகூடி நிரையசையாதற்கு ஏற்கும் என அறிக.

எ - டு: உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின் (புறம் 72)
இதனுள் நிலைஇய என்பது கணவிரியாகும்.
"மென்றோள் பெறனசைஇச் சென்ற வென்னெஞ்சே"
"தீங்கனிப் புறவமொடு வேம்பு மனைச் செரீஇ"

என்பவற்றுள் நின்ற பெறனசைஇ என்பது புலி வருவாய் ஆகவும் செரீஇ என்பது புளிமா வாகவும் நின்றன பிறவுமன்ன.

இனி இந்நூற்பாவிற்கும், பொதுவாக அளபெடைக்கும் உரையாசிரியன்மார் கூறும் விளக்கங்கள் தொல்காப்பிய நெறிக்கும் தமிழ் மரபிற்கும் ஒவ்வாமையை விளக்கப்புகின் பெருகுமாதலின் ஈண்டும் பிறாண்டும் உரைத்தனவற்றால் ஓர்ந்து உண்மை உணர்க.

**நூ. 332: ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப (18)**

கருத்து: ஒற்றளபெடை சீரின்கண் நிற்குமாறு கூறுகின்றது.

உரை: ஒற்றெழுத்து அளபெடுத்து நிற்பினும் மேற்கூறிய உயிரளபெடையின் தன்மைத்தே ஆகும்.

அஃதாவது அசைநிலைபெறுதலும் பெறாமையும் ஆம் என்றவாறு.

எ - டு: கண்ண் தண்ண்ணெனக் கண்டும் கேட்டும்
அம்ம் பவள் வரி நெடுங்கண்
விலஃஃகி வீங்கிருள் ஒட்டுமே
அங்ங் கனிந்த அருளுடையார் எனவரும். இவற்றுள்



கண்ண் — அம்ம் - அங்ங் என்பவை தேமாவாகவும் விலஃஃகி என்பது புலிசெல்வாய் ஆகவும் அலகுபெற்று அசை நிலை எய்தின. தண்ண் ணென என்பது இன்னோசைத்தாய் நின்றதன்றி அலகு பெற்றதன்று - அலகிடின் மாசெல்சுரமாய் அகவலோசைபிழைக்குமென்க.

இனிக் குறிப்போசையின்கண் ஒற்றிசை நீண்டு வருபவையும் அலகு பெறா எனக்கொள்க.

எ - டு: கஃ(ஃஃ) றென்னும் கல்லதரத்தம்
விண்(ண்ண்) எனவிசைத்தது
ஒல்(ல்ல்) லென ஒலித்தது. என வரும்.

இனி நூன்மரபின்கண் ஒற்றளபெடை பற்றி யாதொன்றும் கூறாமல் ஆசிரியர் ஈண்டு உடம்பொடு புணர்த்திக் கூறியதனான் ஒற்றளபெடை செய்யுள் வழக்கிற்கன்றிப் பரவை வழக்கினுள் வாராதென்றுகொள்க. இதனான் அளபெடை இருவகைப்படு மென்றும் இவ் இரண்டானும் தொடை கொள்ளப்படும் என்றும் உய்த்துணர்ந்து கொள்க.

இனி நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணியுள் வரும்
அம்பொரைந்து டைய்ய காமனைய்ய னென்ன அந்தணன்
நம்பு நீரர் அல்லர் நன்கு ரங்கு நீர ராயினும்
தங்கு ரவ்வர் தாங்கொடுப்பின் நெஞ்சு தொந்து தாழ்வர்தாம்
பொங்க ரவ்வ வல்குலாரெ னப்பு கன்று சொல்லினான் (சுரம்—3)

என்னும் பாடலைக் காட்டி இதனுள் யகர ஒற்றுஇல் வழி ஓசை அவ் ஒற்றை உண்டாக்கிற்று, அஃது அளபெடுத்தது வந்துழிக்காண்க எனக் கூறியுள்ளார்.

இக்கருத்து ஈண்டைக்கு ஏலாததொன்றாகும். மற்று

"அகரத்திம்பர் யகரப்புள்ளியும்
ஐயென்நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்னும் விதியான் போலி வகையான் வந்த

"அம்பொ ரய்ந்து டய்யகாமனய்யனென்ன" என நின்ற பாடத்தை, ஐகாரப்போலி பயன்படுமாற்றை ஓராமல் "அம்பொரைந்து டைய்ய காமனைய்யனென்ன" எனப்பாடங் கொண்டு யகரஒற்று இல்வழி வந்த ஒற்றென மாறுபடக் கூறியுள்ளார். அது போலி வகையான் வந்த இயல்பான ஒற்றே யாகும். அப்பாடலுள் அய்ந்துடய்ய, தங்குரவ்வர், பொங்கரவ்வ எனவந்த யகரவகர ஒற்றுக்கள் விரித்தல் என்னும் விகார வகையான் வந்தனவாம் என அறிக.

EFEO_GUEST_JLC_02-021 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இவ் அளபெடைகள் அசைநிலையாகி அலகுபெறும் இலக்கணத்தை ஈண்டுக் கூறினார், இவை ஈரசைச் சீர்களினன்றி மூவசைச் சீர்க்கண் வாரா என்பதையும் வரின் அவை இரண்டு ஈரசைச் சீர்களாகப் பிரியும் என்பதையும் உணர்த்துதற்கென அறிக. இனி மூவசைச் சீர்கள் வருமாறு கூறுவார்.

**சூ. 333 :** இயற்சீர் இறுதிமுன் நேரவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப. **(19)**

**கருத்து :** மூவசைச்சீருள் வெண்பாவுரிச்சீர் அமையவருமாறு கூறுகின்றது.

**உரை :** இயலசை மயக்கமாகிய நான்கு இயற்சீகளின் இறுதிக்கண் நேரசை வந்து அவ்விடத்துக் கூடி நிற்பின் அவை வெண்பா உரிச்சீர் ஆகும் எனக் கூறுவர் புலவர்.

'அவண்' என்றதனான் வெண்பாநடைத்தாகிய கலிப் பாவிற்குத் தளைநிலை வகையான் அவை உரிமையாகும் எனக் கொள்க.

இதனான் உரியசை மயங்கிய இயற்சீரின் பின் நேரசை வந்து கூடிய மூவசைச் சீர்கள் வெண்பா உரிச்சீராகா என்பதும் பெறப்பட வைத்தார். வெண்பா உரிச்சீர் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| எ - டு : | நேர் நேர் நேர் | — | மாசெல்வாய் |
| | நிரை நேர் நேர் | -- | புலிசெல்வாய் |
| | நேர் நிரை நேர் | — | மாவருவாய் |
| | நிரைநிரை நேர் | — | புலிவருவாய் |

இவை தளை நிலை எய்துங்கால் "வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே" என்பதனான் நிரையீற் றியற்சீர்போல நின்று வருஞ்சீர் நேரசையொடுகூடி வெண்டளையாகும்—நிரை முதலாகிய வெண்சீர்ர்வரின் கலித்தளையாகும்.

காமன்கா ணென்று கருவூரார் பாராட்டத்
தாமந்தாழ் கோதை வருவானை - யாமும்
இருகுடங்கை யானெதிரே கூப்பித் தொழக்கண்
டொருகுடங்கை யாயின கண்—

இதன்கண் வெண்சீர் நான்கும் வந்தமை காண்க. இவை மூன்று முதல் ஐந்தெழுத்து வரை பெறும்.

**சூ. 334 :** வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை யான **(20)**

**கருத்து :** வஞ்சியுரிச்சீர் அறுபதும் ஆமாறு கூறுகின்றது,



**உரை :** மேற்கூறிய வெண்சீரல்லாத மூவசையான எல்லாம் (அறுபதும்) வஞ்சியுரிச்சீர் என வகுக்கப்பெற்றனவாம்.

"வகை" என்றார் நேர்பும் நிரைபும் ஆகிய அசைகள் முற்றுகரக் குற்றுகர வேறுபாட்டான் வரும் எழுத்தளவை களான் வேறுபடுதலின் அவற்றை வகுத்துணர வேண்டி என்க.

**நேரீற்று வஞ்சியுரிச்சீர் - 12,**

உதாரணம் - 32, இவை 3 - 7 எழுத்து வரை வரும்

| | | | | |
|---|---|---|---|---|
| நேர் நேர்பு நேர் | 2 — | மா போகுவாய் | — 3 | — எழுத்து |
| | | மா மன்னுவாய் | — 4 | ,, |
| நேர் நிரைபு நேர் | 2 — | மா வழங்குவாய் | — 4 | ,, |
| | | மாவுரிஞ்னுவாய் | — 5 | ,, |
| நிரை நேர்பு நேர் | 2 — | புலி போகுவாய் | — 4 | ,, |
| | | புலி பேணுவாய் | — 5 | ,, |
| நிரை நிரைபு நேர் | 2 — | புலி வழங்குவாய் | — 5 | ,, |
| | | புலி உருமூவாய் | — 6 | ,, |
| நேர்பு நேர் நேர் | 2 — | பாம்பு சேர்வாய் | — 3 | — எழுத்து |
| | | மின்னுநேர்வாய் | — 4 | ,, |
| நேர்பு நிரை நேர் | 2 — | பாம்பு வருவாய் | — 4 | ,, |
| | | மின்னு வருவாய் | — 5 | ,, |
| நேர்பு நேர்பு நேர் | 4 — | பாம்பு போகுவாய் | — 3 | ,, |
| | | பாம்பு பேணுவாய் | — 4 | ,, |
| | | மின்னுப்போகுவாய் | — 4 | ,, |
| | | மின்னுப்பேணுவாய் | — 5 | ,, |
| நேர்பு நிரைபு நேர் | 4 — | பாம்பு வழங்குவாய் | — 4 | ,, |
| | | மின்னு உருமுவாய் | — 6 | ,, |
| | | மின்னு வழங்குவாய் | — 5 | ,, |
| | | பாம்பு உருமுவாய் | — 5 | ,, |
| நிரைபு நேர் நேர் | 2 — | களிறு சேர்வாய் | — 4 | ,, |
| | | உருமு சேர்வாய் | — 5 | ,, |
| நிரைபு நிரை நேர் | 2 — | களிறு வருவாய் | — 5 | ,, |
| | | உருமு வருவாய் | — 6 | ,, |
| நிரைபு நேர்பு நேர் | 4 — | களிறு போகுவாய் | — 4 | ,, |
| | | உருமுப்பேணுவாய் | — 6 | ,, |
| | | களிறு பேணுவாய் | — 5 | ,, |
| | | உருமுப் போகுவாய் | — 5 | ,, |

EFEO_GUEST_JLC_02-022 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

| | | | |
|---|---|---|---|
| நிரைபு நிரைபு நேர் | — | களிறு வழங்குவாய் | — 5-எழுத்து |
| | | உருமு குலவு வாய் | — 7 ,, |
| | | களிறு குலவு வாய் | — 6 ,, |
| | | உருமு வழங்குவாய் | — 6 ,, |

எழுத்தெண்ணுங்கால் குற்றுகரம் அலகுபெறுது என்பதைக் கடைப்பிடிக்க.

**நிரையீற்று வஞ்சியுரிச்சீர் - 16,**

**உதாரணம் - 36, இவை 4 - 8 எழுத்து வரைவரும்**

| | | | | |
|---|---|---|---|---|
| நேர் நேர் நிரை | 1 | — | மாசேர் சுரம் | — 4 - எழுத்து |
| நேர் நிரை நிரை | 1 | — | மாவருசுரம் | — 5 ,, |
| நேர் நேர்பு நிரை | 2 | — | மாபோகுசுரம் | — 4 ,, |
| | | | மாபேணுசுரம் | — 5 ,, |
| நேர் நிரைபு நிரை | 2 | — | மா வழங்குசுரம் | — 5 ,, |
| | | | மா உருமு சுரம் | — 6 ,, |
| நிரை நேர் நிரை | 1 | — | புலி சேர் சுரம் | — 5 ,, |
| நிரை நிரை நிரை | 1 | — | புலி வரு சுரம் | — 6 ,, |
| நிரை நேர்பு நிரை | 2 | — | புலி போகு சுரம் | — 5 ,, |
| | | | புலி பேணு சுரம் | — 6 ,, |
| நிரை நிரைபு நிரை | 2 | — | புலிவழங்கு சுரம் | — 6 ,, |
| | | | புலிஉருமு சுரம் | — 7 ,, |
| நேர்பு நேர் நிரை | 2 | — | பாம்பு சேர்சுரம் | — 4 ,, |
| | | | மின்னு சேர்சுரம் | — 5 ,, |
| நேர்பு நிரை நிரை | 2 | — | பாம்பு வருசுரம் | — 5 ,, |
| | | | மின்னு வருசுரம் | — 6 ,, |
| நேர்பு நேர்பு நிரை | 4 | — | பாம்பு போகுசுரம் | — 4 ,, |
| | | | மின்னு மேவுசுரம் | — 6 ,, |
| | | | பாம்பு மேவுசுரம் | — 5 ,, |
| | | | மின்னுப் போகுசுரம் | — 5 ,, |
| நேர்பு நிரைபு நிரை | 4 | — | பாம்பு வழங்குசுரம் | — 5 ,, |
| | | | மின்னுப் பரவு சுரம் | — 7 ,, |
| | | | மின்னு வழங்கு சுரம் | — 6 ,, |
| | | | பாம்பு விரவுசுரம் | — 6 ,, |
| நிரைபு நேர் நிரை | 2 | — | களிறு சேர் சுரம் | — 5 ,, |
| | | | அரவு சேர் சுரம் | — 6 ,, |
| நிரைபு நிரை நிரை | 2 | — | களிறு வருசுரம் | — 6 ,, |
| | | | அரவு வருசுரம் | — 7 ,, |



| | | | | |
|---|---|---|---|---|
| நிரைபு நேர்பு நிரை | 4 | — | களிறு போகுசுரம் | — 5 - எழுந்து |
| | | | அரவு பேணுசுரம் | — 7 ,, |
| | | | களிறு பேணுசுரம் | — 6 ,, |
| | | | அரவு போகுசுரம் | — 6 ,, |
| நிரைபு நிரைபு நிரை | 4 | — | களிறு வழங்குசுரம் | — 6 ,, |
| | | | அரவு குலவுசுரம் | — 8 ,, |
| | | | களிறு குலவுசுரம் | — 7 ,, |
| | | | அரவு வழங்குசுரம் | — 7 ,, |

**நேர்பீற்று வஞ்சியுரிச்சீர்கள் - 16,**

**உதாரணம் — 72, இவை 3 – 8 எழுத்துவரை வரும்**

| | | | | |
|---|---|---|---|---|
| நேர் நேர் நேர்பு | 2 | — | மாசேர் காடு | — 3 - எழுத்து |
| | | | மாசேர் காவு | — 4 ,, |
| நேர் நிரை நேர்பு | 2 | — | மாவருகாடு | — 4 ,, |
| | | | மாவருகாவு | — 5 ,, |
| நேர் நேர்பு நேர்பு | 4 | — | மா போகுகாடு | — 3 ,, |
| | | | மா பேணுகாவு | — 5 ,, |
| | | | மா போகுகாவு | — 4 ,, |
| | | | மா பேணுகாடு | — 4 ,, |
| நேர் நிரைபு நேர்பு | 4 | — | மாவழங்குகாடு | — 4 ,, |
| | | | மா உலவு காவு | — 6 ,, |
| | | | மாவழங்குகாவு | — 5 ,, |
| | | | மாஉலவு காடு | — 5 ,, |
| நிரை நேர் நேர்பு | 2 | — | புலிசேர் காடு | — 4 ,, |
| | | | புலிசேர் காவு | — 5 ,, |
| நிரை நிரை நேர்பு | 2 | — | புலிவருகாடு | — 5 ,, |
| | | | புலிவருகாவு | — 6 ,, |
| நிரை நேர்பு நேர்பு | 4 | — | புலிபோகு காடு | — 4 ,, |
| | | | புலிபேணுகாடு | — 6 ,, |
| | | | புலிபோகுகாவு | — 5 ,, |
| | | | புலிபேணுகாடு | — 5 ,, |
| நிரை நிரைபு நேர்பு | 4 | — | புலிவழங்கு காடு | — 5 ,, |
| | | | புலிஉலவு காவு | — 7 ,, |
| | | | புலிவழங்குகாவு | — 6 ,, |
| | | | புலிஉலவு காடு | — 6 ,, |
| நேர்பு நேர் நேர்பு | 4 | — | பாம்பு சேர்காடு | — 3 ,, |
| | | | மின்னுசேர்காவு | — 5 ,, |
| | | | பாம்புசேர் காவு | — 4 ,, |
| | | | மின்னுசேர்காடு | — 4 ,, |

EFEO_GUEST_JLC_02-023 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

| | | | | |
|---|---|---|---|---|
| நேர்பு நிரை நேர்பு | 4 — | பாம்பு வருகாடு | — 4 | - எழுத்து |
| | | மின்னுவருகாவு | — 6 | ,, |
| | | பாம்பு வருகாவு | — 5 | ,, |
| | | மின்னுவருகாடு | — 5 | ,, |
| நேர்பு நேர்பு நேர்பு | 8 — | பாம்பு போகு காடு | — 3 | ,, |
| | | மின்னு மேவு காவு | — 6 | ,, |
| | | பாம்பு மேவு காடு | — 4 | ,, |
| | | மின்னு மேவு காடு | — 5 | ,, |
| | | பாம்பு போகு காவு | — 4 | ,, |
| | | மின்னு போகு காவு | — 5 | ,, |
| | | பாம்பு மேவு காவு | — 5 | ,, |
| | | மின்னு போகு காடு | — 4 | ,, |
| நேர்பு நிரைபு நேர்பு | 8 — | பாம்பு வழங்கு காடு | — 4 | ,, |
| | | மின்னு விரவு காவு | — 7 | ,, |
| | | பாம்பு வழங்கு காவு | — 5 | ,, |
| | | மின்னு வழங்கு காவு | — 6 | ,, |
| | | பாம்பு விரவு காவு | — 6 | ,, |
| | | மின்னு விரவு காடு | — 6 | ,, |
| | | பாம்பு விரவு காடு | — 5 | ,, |
| | | மின்னு உழங்கு காடு | — 5 | ,, |
| நிரைபு நேர் நேர்பு | 4 — | களிறு சேர் காடு | — 4 | ,, |
| | | அரவுசேர் காவு | — 6 | ,, |
| | | களிறு சேர் காவு | — 5 | ,, |
| | | அரவுசேர் காடு | — 5 | ,, |
| நிரைபு நிரை நேர்பு | 4 — | களிறுவருகாடு | — 5 | ,, |
| | | அரவுவருகாவு | — 7 | ,, |
| | | களிறுவருகாவு | — 6 | ,, |
| | | அரவுவருகாடு | — 6 | ,, |
| நிரைபு நேர்பு நேர்பு | 8 — | களிறு போகுகாடு | — 4 | ,, |
| | | அரவு பேணுகாவு | — 7 | ,, |
| | | களிறு பேணுகாடு | — 5 | ,, |
| | | அரவுபேணுகாடு | — 6 | ,, |
| | | களிறு போகுகாவு | — 5 | ,, |
| | | அரவு போகுகாவு | — 6 | ,, |
| | | களிறு பேணுகாவு | — 6 | ,, |
| | | அரவு போகுகாடு | — 5 | ,, |
| நிரைபு நிரைபு நேர்பு | 8 — | களிறு வழங்குகாடு | — 5 | ,, |
| | | அரவு விரவு காவு | — 8 | ,, |
| | | களிறு விரவு காவு | — 7 | ,, |
| | | அரவு விரவு காடு | — 7 | ,, |
| | | களிறு வழங்குகாவு | — 6 | ,, |
| | | அரவு வழங்கு காவு | — 7 | ,, |
| | | களிறு விரவுகாடு | — 6 | ,, |
| | | அரவு வழங்குகாடு | — 6 | ,, |



**நிரைபீற்றுவஞ்சியுரிச்சீர் - 16.**

**உதாரணம் - 72, இவை 4 - 9 எழுத்து வரை வரும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| நேர் நேர் நிரைபு | 2 — | மாசேர் கடறு | — 4 | எழுத்து |
| | | மாசேர் புறவு | — 5 | ,, |
| நேர் நிரை நிரைபு | 2 — | மாவரு கடறு | — 5 | ,, |
| | | மாவரு புறவு | — 6 | ,, |
| நேர் நேர்பு நிரைபு | 4 — | மாபோகுகடறு | — 4 | ,, |
| | | மாபேணுபுறவு | — 6 | ,, |
| | | மாபேணு கடறு | — 5 | ,, |
| | | மாபோகு புறவு | — 5 | ,, |
| நேர் நிரைபு நிரைபு | 4 — | மாழங்கு கடறு | — 5 | ,, |
| | | மாவிரவு புறவு | — 7 | ,, |
| | | மாவிரவு கடறு | — 6 | ,, |
| | | மாவழங்கு புறவு | — 6 | ,, |
| நிரை நேர் நிரைபு | 2 — | புலிசேர் கடறு | — 5 | ,, |
| | | புலிசேர்புறவு | — 6 | ,, |
| நிரை நிரை நிரைபு | 2 — | புலிவருகடறு | — 6 | ,, |
| | | புலிவருபுறவு | — 7 | ,, |
| நிரை நேர்பு நிரைபு | 4 — | புலிபோகுகடறு | — 5 | ,, |
| | | புலிபேணுபுறவு | — 7 | ,, |
| | | புலிபோகுபுறவு | — 6 | ,, |
| | | புலிபேணுகடறு | — 6 | ,, |
| நிரை நிரைபு நிரைபு | 4 — | புலிவழங்குகடறு | — 6 | ,, |
| | | புலிவிரவு புறவு | — 8 | ,, |
| | | புலிவழங்குபுறவு | — 7 | ,, |
| | | புலிவிரவுகடறு | — 7 | ,, |
| நேர்பு நேர் நிரைபு | 4 — | பாம்புசேர் கடறு | — 4 | ,, |
| | | மின்னுச்சேர் புறவு | — 6 | ,, |
| | | பாம்புசேர் புறவு | — 5 | ,, |
| | | மின்னுச்சேர் கடறு | — 5 | ,, |
| நேர்பு நிரை நிரைபு | 4 — | பாம்புவரு கடறு | — 5 | ,, |
| | | மின்னுவருபுறவு | — 7 | ,, |
| | | மின்னுவருகடறு | — 6 | ,, |
| | | பாம்புவருபுறவு | — 6 | ,, |
| நேர்பு நேர்பு நிரைபு | 8 — | பாம்பு போகுகடறு | — 4 | ,, |
| | | மின்னு நாணுபுறவு | — 7 | ,, |
| | | பாம்பு போகுபுறவு | — 5 | ,, |
| | | மின்னு நாணுகடறு | — 6 | ,, |
| | | பாம்பு நாணுகடறு | — 5 | ,, |
| | | மின்னு போகுகடறு | — 5 | ,, |
| | | பாம்பு நாணுபுறவு | — 6 | ,, |
| | | மின்னு போகுபுறவு | — 6 | ,, |



EFEO_GUEST_JLC_02-024 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

| | | | |
|---|---|---|---|
| நேர்பு நிரைபு நிரைபு 8 — | பாம்பு வழங்குகடறு | — 5 | எழுத்து |
| | மின்னு விரவுபுறவு | — 8 | ,, |
| | பாம்பு வழங்குபுறவு | — 5 | ,, |
| | மின்னு வழங்குகடறு | — 6 | ,, |
| | பாம்பு விரவுபுறவு | — 7 | ,, |
| | மின்னு விரவுகடறு | — 7 | ,, |
| | பாம்பு விரவுகடறு | — 6 | ,, |
| | மின்னு வழங்குபுறவு | — 7 | ,, |
| நிரைபு நேர் நிரைபு 4 — | களிறு சேர்கடறு | — 5 | ,, |
| | அரவு சேர்புறவு | — 7 | ,, |
| | களிறு சேர்புறவு | — 6 | ,, |
| | அரவு சேர்கடறு | — 6 | ,, |
| நிரைபு நிரை நிரைபு 4 — | களிறு வருகடறு | — 6 | ,, |
| | அரவு வருபுறவு | — 8 | ,, |
| | களிறு வருபுறவு | — 7 | ,, |
| | அரவு வருகடறு | — 7 | ,, |
| நிரைபு நேர்பு நிரைபு 8 — | களிறு போகுகடறு | — 5 | ,, |
| | அரவு நாணுபுறவு | — 8 | ,, |
| | களிறு நாணுகடறு | — 6 | ,, |
| | அரவு போகுபுறவு | — 7 | ,, |
| | களிறு நாணுபுறவு | — 7 | ,, |
| | அரவு நாணுகடறு | — 7 | ,, |
| | களிறு போகுபுறவு | — 6 | ,, |
| | அரவு போகு கடறு | — 6 | ,, |
| நிரைபு நிரைபு நிரைபு 8 — | களிறு வழங்குகடறு | — 6 | ,, |
| | அரவு விரவுபுறவு | — 9 | ,, |
| | களிறு விரவுகடறு | — 7 | ,, |
| | அரவு வழங்குபுறவு | — 8 | ,, |
| | களிறு விரவுபுறவு | — 8 | ,, |
| | அரவு விரவுகடறு | — 8 | ,, |
| | களிறு வழங்குபுறவு | — 7 | ,, |
| | அரவு வழங்குகடறு | — 7 | ,, |

வஞ்சியுரிச்சீர் நாலெழுத்து முதல் ஒன்பது எழுத்து வரை வரும். இவற்றுள் எட்டெழுத்து ஒன்பதெழுத்துச்சீர்கள் அருகியன்றிவாரா என அறிக. இவை யாவும் மூன்றுமுதல் ஆறெழுத்துக்களுள் அடங்கும் என அறிக.

## சூ. 335: தன்பா அல்வழித் தானடை வின்றே (21)

**கருத்து :** வஞ்சியுரிச்சீர்கள் பாக்களுள் வரும் நிலைமை கூறுகின்றது.

**உரை :** வஞ்சியுரிச்சீர்கள் வஞ்சிச்சீர்களுக்கு உரிமையுடையதாகிய வஞ்சிப்பா அல்லாத பிற பாக்களுள் ஓரடியுள் ஒன்றன்பின் ஒன்றாக அடைவுபெற்று வருதலின்று. தன் பாவாயின் அடைவு பெற்றுவரும் என்றவாறு.



'தன்பா அவ்வழி' எனப் பொதுப்படக் கூறினார், ஏற்புழிக் கோடலான் தனக்கு முதலாகிய ஆசிரியப்பாவினுள் ஓரோவழி வஞ்சியுரிச்சீர் அடைவுபெற்று வருமெனக் கோடற்கென்க. "அடைவின்றே" எனப் பாடங்கொண்டாராயினும் நச்சினார்க்கினியர் ஏனை உரையாசிரியன்மாரை ஒத்து வஞ்சியுரிச்சீர்கள், ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பாக்களுள் வாரா என்றே உரை கூறினார்.

வஞ்சியுரிச்சீர்களுள் சில சான்றோர் செய்த ஆசிரியப்பாக்களுள் பயின்றுவருதலானும், ஆசிரியர் அந்நிலை மருங்கின் வஞ்சியுரிச்சீர் ஒன்றுதலுடைய ஓரொரு வழியே ( சூத்-30 ) எனக் கூறுதலானும்; சூறளடி முதலா அளவடி காறும் உறழ்நிலையிலவே வஞ்சிக்கென்ப (சூத்-54) என ஓதி நெடிலடி முதலியவற்றுள் உறுமும் எனக் கொள்ளவைத்தமையானும் அவர்தம் கருத்து ஒவ்வு மாறில்லை எனத் தெரிக. ஆசிரியத்துள் வஞ்சியுரிச்சீர் வறுமாறு:–

விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே (குறு 210)
மத்துக்கயி றாடா வைகற்பொழுது நினையூஉ (பதி-8)
முழவிமிழ் மூதூஉர்விழவுக்காணூஉப் பெயரும் (பதிற்-60)
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை ஒருகை (முரு-109)
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு (சிறுபா–125)

## சூ. 336 : வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய (22)

**கருத்து :** வஞ்சிப்பாவினுள் பிறசீர்கள் மயங்கி வருமென்கின்றது.

**உரை :** வஞ்சிப்பாவின்கண் தன்சீர்களொடு எஞ்சிய இயற்சீரும் ஆசிரிய உரிச்சீரும், வெண்சீரும் வருதற்குரியவாகும்.

எ-டு : திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவின்
புட்டேம்பப் புயன்மாறி (பட்டி. 1–4)
களிறு கடைஇய தாள் (புறம் 7)
அரிமயிர்த் திரள்முன்கை
வாலிழை மடங்கையர் (புறம் 11)

என வரும். வரினும் வஞ்சிப்பாசையே நிகழுமாறு இசையொடு சேர்த்தி உணர்த்தல் வேண்டுமென்க.

EFEO_GUEST_JLC_02-025 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சூ. 337: வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்
இன்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே. (23)

கருத்து : ஆசிரியப் பாவின்கண் நிற்கும் சீர்களைப் பற்றியதோ ரியல்பு கூறுகின்றது.

உரை : வெண்பா உரிச்சீரும் ஆசிரிய உரிச்சீரும் ஆசிரியப் பாவின் ஓரடியின்கண் ஒருங்கு நிற்றலில்லை.

எனவே, இயற்சீர்களின் இடையிடையே தனித்தனி நிற்கப் பெறும் என்றவாறாம். நேரடி என்றது பத்து முதல் பதினான் கெழுத்தளவும் உள்ள அடிகளை. நேரடிக்கு ஒருங்கு நிற்றலில்லை என்றதனான் நெடிலடி கழிநெடிலடிக்கண் சிறுபான்மை ஒருங்கு நிற்கப் பெறும் எனக் கொள்க.

இயலசைகளான் வரும் சீர்களை இன்சீர் என்றாற்போல இயற்சீர்களான்வரும் ஆசிரியத்தினை இன்பா என வழங்குதல் தொன்னூலோர் மரபு என்பது தோன்ற ஆசிரியப்பா என்னாது இன்பா என்றார்.

சூ. 338: கலித்தளை மருங்கின் கடியவும் பெறாஅ (24)

கருத்து : கலிப்பா அடிக்கண் வெண்சீரும் ஆசிரிய உரிச்சீரும் வரும்நிலைமை கூறுகின்றது.

உரை : கலித்தளையான்வரும் கலிப்பா அடிகளின்பால், மேற்கூறிய வெண்சீரும் ஆசிரிய வுரிச்சீரும் ஒருங்கு வருதலை நீக்கவும் பெறா.

எ-டு : 'ஓங்குதிரை யடுக்கம்பாய்ந் துயிர்செகுக்குந் துறைவகேள்'
'விளங்குமணிப் பசும்பொன்னின் வியலறைமேல்
விளையாடி' என வரும்.

சூ. 339: கலித்தளை அடிவயின் நேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே (25)

கருத்து : கலியடிக்கள் நேரீற்றியற் சீர்கள் வாரா என்கின்றது

உரை : கலியோசை பெறற்குரிய கலித்தளை யான்வரும் கலியடியின்கண் நேரீயற்றியற்சீர் நிலைபெறுதற்குரித்தாகா தென்பது ஆராய்வார்க்குப் புலனாகும்.



கலிவெண்பாவினுள்ளும் கொச்சகத்துள்ளும் இயற்சீர் பயின்று வருதலின் கலித்தளை அடிவயின் வாரா என்பது ஆராய்வார்க்குப் புலனாகும் என்றார்.

நேரீற்று இயற்சீர் இரண்டாயினும் தொகுதி ஒருமை பற்றி உரித்தன்று என ஒருமையாற் கூறினார் என்க.

சூ. 340: வஞ்சி மருங்கினும் இறுதி நில்லாது. (26)

கருத்து : வஞ்சியடிக்கண் இயற்சீர் வாராத இடங் கூறுகின்றது.

உரை : கலித்தளையடியேயன்றி வஞ்சிப்பாவின் அடிக் கண்ணும்; இயற்சீர்கள் வந்து தூங்கலோசைபட இறுதிக்கண் நில்லாது.

எ-டு : மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும் (புறம்-2)

ஏனும் வஞ்சியடிகளின் இறுதிநிற்கும் இயற்சீர்கள் தூங்காவாயின.

இவற்றை மண்ண்டி ணிந்தநிலனும், நிலனேஎந் தியவீசும்பும் என அசையும் சீரும் இசையொரடு சேர்த்தித் தூங்கலோசைபெற இசைத்துக் கொள்ளல் வேண்டுமென்க.

சூ. 341: இசைநிலை நிறைய நிற்குவ வாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை பெறலே (27)

கருத்து : தனியசைகள் ஒரோவழிச் சீர்நிலை பெறும் என்கின்றது.

உரை : நால்வகை ஓசையான் நிகழும் பாக்களிடத்து அவ்வவ் ஓசை வழாமல் முன்னும் பின்னும் நிற்கும் சீர்களான் நிறைவுற நிற்பனவாயின் நால்வகை அசைகளும் சீராக நிலை பெறுதலை நீக்கார் ஆசிரியர்.

இயலசை இரண்டும் வெண்பாவின் ஈற்றடி இறுதிச் சீராக வரும், சிறுபான்மை கலிப்பாவின் அம்போதரங்க உறுப்பினுள் சீராக வரும். பெரும்பான்மையும் முதலிறுதிக்கண் கூனாக அன்றீ வாரா. உரியசைகள் அடி மூவிடத்தும் ஏற்றபெற்றிவரும்.

எ-டு: கழல்தொழா மன்னவர்தங் கை. தற்றாள் தோழாஅர் எனின். பகவன் முதற்றே யுலகு. தானமிழ்தம் என்றுணரற் பாற்று. என வெண்பா ஈற்றின்கண் வந்தன. முழங்கு முந்நீர் முழுவதும்

வளைஇ கறவை தந்து பகைவர் ஓட்டிய (புறம் 263) வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து (புறம் 260) என உரியசைகள் மூவிடத்தும் வந்தன.

**சூ. 342: இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே**
**தளைவகை சிதையாத் தன்மை யான (28)**

**கருத்து :** அசைச்சீர்கள் தளைநிலை எய்தி ஓசையயக்குமாறு கூறுகின்றது.

**உரை :** மேற்கூறியாங்குத் தனியசைகள் சீர்நிலை பெறுங்கால் ஆசிரியத் தளையும் வெண்டளையும் கொள்ளற்குச் சிதையாத இலக்கணத்தானே அவற்றை இயற்சீரின் பாற்படுத்து அவை தளை கொள்ளுமாறே தளை கொண்டு ஓசைகளை இயற்றிக் கொள்க.

இயலசைகள் இடையே நின்று தளைகொள்ள இயலாவாகலின் ஏற்புழிக் கோடலான் தளை கோடற்கு உரியசைகளே சிறப் புடையன எனக் கொள்க. இயலசைகள் இறுதிநின்று மேல்நின்ற சீரொடு தளை கொள்ளும்,

எ-டு : வாலெயி றூறிய நீர்

தாளை வணங்காத் தலை. இவை வெண்டளையாயின
கால்பார் கோத்து ஞாலத் தியக்கும். ஆசிரியத்தளை
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி. வெண்டளை
யானை எறிந்து களத் தொழிந் தனனே. வெண்டளை
துணையள வறிந்து நல்கினர் விடினே

முன்னர் ஆசிரியத்தளையும் பின்னர் வெண்டளையுமாயின.

இனி, நேர்பசை குற்றுகர ஈறாயின் ஓரெழுத்தாம். முற்றுகர கரமாயின் இரண்டெழுத்தாம். வண்டு-மின்னு என வரும். நிரை பசை குற்றுகரஈறாயின் இரண்டெழுத்து - முற்றுகர ஈறாயின் மூன்றெழுத்து-கடறு, அரவு எனவரும். நுந்தை முற்றுகரமாகவும் வரும் ஆதலின் இடம் நோக்கி எண்ணிக்கொள்க.

**சூ. 343: வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே (29)**

**கருத்து :** அசைச்சீர்கள் இயற்சீர் போலத் தளை கொள்ளும் என நின்ற அதிகாரத்தான் வெண்சீர்தளை கொள்ளுமாறு கூறுகின்றது,



**உரை :** வெண்பா உரிச்சீரின் ஈற்றசையாகிய நேரசை தளை கோடற்கண் நிரையசை இறுதியாகிய பாதிரி-கணவிரி போல நிரை யசை இயல்பிற்றாகும் தளைகொள்ளுமிடத்து.

என்றது, அசை வகையான் நேரசையாயினும் தளை நிலைக்கண் நிரையசை யியல்பிற்றாய், பிறிதாக எதிர்வருஞ்சீர் முதலிசை நேராயின் வெண்டளை எனவும், வருஞ்சீர் வெண்பா உரிச்சீராகவே வந்து முதலசை நேரசையாயின் வெண்சீர் வெண்டளை எனவும் நிரையசையாயின் கலித்தளை எனவும் கொள்ளப்படும். என்னை ?

“சீரியை மருங்கின் ஓரசை ஒப்பின்
ஆசிரியத் தளைஎன் றறைதல் வேண்டும்” (சூ-55)
“அளவும் சிந்தும் வெள்ளைக்குரிய”
“தளைவகை ஒன்றாத் தன்மையான” (சூ-57, 58)
“நிரைமுதல் வெண்சீர் வந்து நிரைதட்பினும்
வரைநிலை யின்றே அவ்வடிக் கென்ப” (சூ-60)

என ஆசிரியர் தளைநிலை பற்றி மேற்கூறுதலான் என்க.

எ-டு : பொறிவாயி + லைந்தவித்தான் + பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் + நீடுவாழ் வார். என வரும்.

**சூ. 344: இன்சீர் இயைய வருகுவ தாயின்**
**வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே. (30)**

**கருத்து :** ஆசிரிய அடிக்கண் வெண்சீர் விரவுமாறு கூறுகின்றது.

**உரை :** இயற்சீரொடு ஓசை இயைய வருமாயின் ஆசிரிய அடிக்கண் வெண்சீர் வருதலை நீக்கார் ஆசிரியர்.

(எ-டு) : தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து (புறம் 19)
நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்(புறம் 163)

என வரும். இவற்றுள் வெண்சீர்கள் நிரையசையியல்பிற்றாய் நின்று ஓசை இயைந்து நிற்குமாறு காண்க.

**சூ 345: அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்**
**ஒன்றுத லுடைய ஓரொரு வழியே. (31)**

**கருத்து :** ஆசிரிய அடியுள் வஞ்சியுரிச்சீர் அருகி வருமாறு கூறுகின்றது,

EFEO_GUEST_JLC_02-027 16/06/2011 © École française d’Extrême-Orient, www.efeo.fr

**உரை :** இன்சீர் இயைய வருவதாயின் ஆசிரிய அடியின்கண் ஓரோவழி வஞ்சியுரிச்சீர் இணைந்து வருதலுடையவாகும்.

எ-டு : "மாரியொடு மலர்ந்த மாத்தாட் கொன்றை"
"அலரிநாறு துவர்வாய் அமர்த்த நோக்கின்"
(மாரியொடு — மாசேர்சுரம்; அலரிநாறு — புலிசேர்காடு)

காடுதேரா உழிதரும் கடுங்கண் யானை. —பாம்பு சேர்வாய்
சந்துசிதைய உழுத செங்குரற் சிறுதினை. —பாம்பு வருவாய்
கடறுகவரா விழிந்து கான்யாறு வழிந்த. —களிறு வருவாய்

முன்னர் (சூ-23) வெண்பா உரிச்சீரும் ஆசிரிய உரிச்சீரும் ஒருங்கு வாரா என்றார். ஈண்டு இயற்சீரொடு வஞ்சியுரிச்சீர் ஓரோவழி ஒன்றி வருமென்பது கூறப்பட்டது.

**சூ. 346: நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே. (32)**

**கருத்து :** நிறுத்த முறையானே அடி இலக்கணங் கூறத் தொடங்குகின்றார். இச்சூத்திரம் அடி என்பது இதுவெனக் கூறுகின்றது.

**உரை :** நான்கு சீர்களைக் கொண்டதொரு தொடரே அடி எனக் கூறப்படும்.

எனவே, நாற்சீரின் மிக்குங் குறைந்தும் வரின் அவை அச்சீர் களின் எண்ணலளவையான் இரு சீரடி, முச்சீரடி, ஐஞ்சீரடி, அறு சீரடி, எழு சீரடி என விதந்து கூறப்படும் என்பது கருத்து.

அடி என்று வாளா கூறின் நாற்சீரடியையே குறிக்குமென உணர்க. அதனான் நாற்சீரடிக்கு நேரடி அளவடி என்ற பெயர் களும் உண்டு. இதனைப் பட்டாங்கமைந்த அடி (சொல் - 407) என மேற்கூறினார்.

இனி, இந் நாற்சீரடிகளை உயிர்ப்புடையவாகிநிற்கும் எழுத் துக்களின் அளவையால் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐவகையாக வகுத்துதோதுவார்.

குறியன் நெடியன் என்புழி உறுப்புக்களின் குறை, நிறை கருதாது அளவை கருதியே கொள்ளப்படுதல்போல அடியினது (ஓசையை) எழுத்தளவுகளைக் கருதியே குறளடி முதலாய பகுப்புக்கள் செய்யப்பெற்றன என அறிக.



இந்நுண்மையை இகந்து இடைக்கால யாப்பிலக்கண நூலார் சீர்களை அளவையாகக்கொண்டு இருசீர் கொண்டது குறளடி முச்சீர் கொண்டது சிந்தடி. நாற்சீர் கொண்டது அளவடி. ஐஞ்சீர் கொண்டது நெடிலடி. அறுசீரும் அதற்கு மேலும் கொண்டவை கழிநெடிலடி எனக் கொண்டனர். கழிநெடிலடிக்கு வரையறை யின்மையால் சீர்களை எண்ணிக்கொள்ளுமாறு அவர்கட்கு நேர்ந்தது.

தொல்காப்பியநெறி பிறழ உரையாசிரியன்மார் இவ்வடியிலக் கணம் பற்றிக் குழம்பிக் கூறியுள்ளனர். ஆசிரியர் யாண்டும் சீர்களை அளவையாகக் கொண்டு அடிகளின் பெயர் கூறவில்லை என்பதை மறவற்க.

**சூ. 347: அடியுள் ளனவே தளையொடு தொடையே (33)**

**கருத்து :** தளையும் தொடையும் காண வேண்டிய இடங் கூறுகின்றது

**உரை:** தளையும் தொடையும் பற்றிக் கூறப்பெறும் இலக்கணம் அளவடியாகிய நாற்சீரடிக்கண் அமைந்தனவேயாம்

எனவே, இருசீர் முச்சீர் ஐஞ்சீர் அறுசீர் எழுசீரடிகளுள் வரும் தளையும் தொடையும் வரையறுத்து ஆராயப்படா என்றவாறு.

**சூ. 348: அடி இகந்து வருதல் இல்லென மொழிப. (34)**

**கருத்து :** அடியின் இலக்கணத்தை வற்புறுத்தி ஆண்டு நிகழ்வதோர் ஐயமகற்றுகின்றது.

**உரை:** நாற்சீர் கொண்டது அடி என ஓதப்பெற்ற இலக்கணத் தினைக் கடந்து அடியானது வருவதில்லை.

அஃதாவது வஞ்சியடியே இருசீர்த்தாகும் (சூ-43) முச்சீரானும் வருமிடனுடைத்தே (சூ-45) என வஞ்சிப்பா இருசீரடியானும் முச் சீரடியானும் வருமென இலக்கணம் கூறி அவற்றை அடி என ஆளுதலானும், முடுகியல் அறுசீரடி எழுசீரடிகளான் நடைபெறும் எனக்கூறி அவற்றையும் அடி என ஆளுதலானும் பாக்களுக்கு ஏற்ப அடியின் அளவு மாறுபட்டு வருங்கொல்? என நின்ற ஐயம் நீங்க "அடியிகந்து வருதல்" இல்லை என்றார். எனவே அவை சீரொடு சார்த்தியே கூறப்படுமென்றவாறு. இகத்தல் = குறைதலும் கூடுதலும்.



EFEO_GUEST_JLC_02-028 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இனி மேல்நின்ற சூத்திரப் பொருளை எதிர்மறை முகத்தான் வலியுறுத்திக் கூறுவதாகப் பொருள் கோடலுமாம்-விதியானும் மறையானும் ஒன்றன் இலக்கணத்தைக் கூறுதல் ஆசிரியர் மரபென்று உணர்க.

“அடியிறந்து வருதல்” எனப்பாடங்கொள்வர் பேராசிரியரும் நச்சரும். அதுகொண்டு அவர்கூறும் பொருள் பெரிதும் செயற்கை யாக உள்ளமையைக் காணலாம்.

சூ. 349: அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே (35)

கருத்து: பாட்டென்பதற்குக் காரணம் கூறுகின்றது.

உரை: எழுநிலத்தெழுந்த செய்யுட்களுள் நாற்சீர் அடிகளான் நடைபெறும் செய்யுளே பாட்டெனச் சிறப்பித்துக் கூறப்படும்.

எனவே அடிவரையின்றி நிகழ்வன செய்யுள் எனவும் பா எனவும் வழங்கப்பெறும் என்றவாறு,

இனிக் “குறுவெண்பாட்டின் அளவெழுசீரே” எனச் சீரை சுட்டிக் கூறியது சூத்திரநயம் நோக்கி என்றறிக. இறுதி முச்சீராக வருதலின் ஈரடியான் வருமெனற் கேலாமையும் அறிக.

இனி, நாற்சீரடிகளை எழுத்தளவை யான் வரையறை செய்து குறியீடு கூறுவார்.

சூ. 350: நாலெழுத் தாதி யாக ஆறெழுத்து
ஏறிய நிலத்தே குறளடி என்ப. (36)

கருத்து: குறளடி யாமாறு கூறுகின்றது.

உரை: நாற்சீர் கொண்டதொரு அடிக்கண் நாலெழுத்துத் தொடக்கமாக ஆறெழுத்துவரை மிக்க மூன்று அடிகளையே குறளடி என்று கூறுவர் ஆசிரியர்.

சீர்கள் நிற்பதற்கு இடமாகலின் அடியை நிலம் என்றார். நிலத்தை என்பது நிலத்தே என நின்றது. இவ்வாறே பொருள்கள் நிற்பதற்கிடமான செய்யுளையும் நிலமென ஆளுவர் தொன்னூலார்.

இங்ஙனம் எழுத்தளவைகளான் அடிகளுக்குப் பெயரிட்டாளு தலே தொல்லாசிரியர் முறைமை என்பது தோன்ற ‘என்ப’ என வழிநூல் வாய்பாடு தோன்றக் கூறினார்.



எ-டு: கண்டு வந்து முந்து நின்று (4 எழுத்து)
வண்டு கண்டு சென்று நீக்கித் (5 எழுத்து)
தொன்று பேசும் நன்கு கொண்டே (6 எழுத்து)

சூ. 351: ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்றம் அல்வழி யான. (37)

கருத்து: சிந்தடி யாமாறு கூறுகின்றது.

உரை: ஏழெழுத்தும், அதன்மேல் ஈரெழுத்தினும் ஏற்றமல்லா தவையான எட்டெழுத்தும் ஒன்பதெழுத்தும் சிந்தடிக்குஅளவெனக் கூறுவர் ஆசிரியர்.

எ-டு: ‘போது சாந்தம் பொற்ப ஏந்தி (7 எழுத்து)
சோதி வானந் துன்னு வாரே’ (8 எழுத்து)
‘கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி’ (9 எழுத்து)

சூ. 352: பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே. (38)

கருத்து: அளவடி யாமாறு கூறுகின்றது.

உரை: பத்தெழுத்தும், அதன்மேல் நாலெழுத்தினும் ஏற்ற மல்லாத பதினொன்றும், பன்னிரண்டும் பதின்மூன்றும் பதினான்கு மாகிய எழுத்தும் நேரடிக்கு ஒத்த அளவெனக் கூறுவர் புலவர்.

எ-டு: “வளம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்” (10 எழுத்து)
“ஆர்கலி நறவின் அதியர் கோமான்” (11 எழுத்து)
“பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி” (12 எழுத்து)
“பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ” (13 எழுத்து)
“களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை” (14 எழுத்து)

சூ. 353: மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப. (39)

கருத்து: நெடிலடியாமாறு கூறுகின்றது.

உரை: பதினைந்து எழுத்து நெடிலடிக்கு அளவாகும் எனக் கூறுவர் புலவர். அதன்மேல் பதினாறும், பதினேழுமாக இரண்டு எழுத்துக்கள் மிக்கு வருதலும் நெடிலடியின் இயல்பெனக் கூறுவர். ‘எழுத்தே’ என்னும் ஏகாரம் அசை.

EFEO_GUEST_JLC_02-029 16/06/2011 © École française d’Extrême-Orient, www.efeo.fr

எ-டு: பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட (15 எழுத்து)
நகைதாழ்பு துயல்வருஉம் வகையமை பொலங்குழை (16 ,,)
அறிவுமடம்படுதலும் அறிவுநன் குடைமையும் (17 ,,)

சூ. 354: மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
ஈரெழுந்து மிகுதலும் இயல்பென மொழிப. (40)

கருத்து : கழிநெடிலடி யாமாறு கூறுகின்றது.

உரை : பதினெட்டெழுத்துக்கள் கழிநெடிலடிக்கு அளவாகும். அதன்மேல் பத்தொன்பதும் இருபதுமாக இரண்டெழுத்து மிக்கு வருவதும் அவ்வடியின் இயல்பெனக் கூறுவர்.

எ-டு: கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரியகலிமாவும் (18)
அருவிநெடு வரைமருவிச் சுனைபடியும் மடநல்லார் (19)
குழலிசையு முழவொலியு நசைமுருக மருவியெழும் (20)

உரைசிரியர் 19, 20 எழுத்தடிகட்கு காட்டிய செய்யுளடிகளுள் புகன் மறவரும் எனவும் அமர்க்கடத்தவர் எனவும் ஆறெழுத்துச் சீர்கள் உள்ளமையின் அவை காட்டாதற் கேலாமையறிக.

சூ. 355: சீர்நிலை தானே ஐந்தெழுத்து இறவாது. (41)

கருத்து : நாற்சீரடி எழுத்தளவைக்குப் புறனடை கூறுகின்றது.

உரை : நாற்சீர் அடிகளில் வரும் சீரின்கண் நிற்கும் எழுத்தளவானது ஐந்தெழுத்தினும் மிகாது. மிகுதியை வரையறுத்தார் குறைவு ஓரெழுந்தானும் வரும் என்பது பற்றி என அறிக.

வஞ்சியுரிச்சீர் ஒன்பது எழுத்தளவும் வருதலின் நாற்சீரடிக்கண் ஐந்தெழுத்தினும் மிக்க சீர் வாராதென வரையறுக்கப்பட்டது. இவ் அளவடிபற்றியே தளையும், தொடையும் அமைதலான் என்க.

சூ. 356: நேர்நிலை வஞ்சிக்கு ஆறும் ஆகும். (42)

கருத்து : வஞ்சியுரிச்சீரின்கண் எழுத்தளவு மிக்கும்வரும் என்கின்றது.

உரை : இரு சீரடிகளான் நிகழும் வஞ்சியடிக்கண் ஒரு சீரின் கண் ஆறெழுத்தும் வரும்.



உம்மையான் ஏழும் எட்டும் வரினும் பொருந்து மாற்றான் அமையுமெனக் கொள்க. நேர்நிலை வஞ்சி என்றது இரு சீரடியான் வரும் வஞ்சிப்பாவினை. நிரையசை முற்றுகரத்தான் வரும் வஞ்சியுரிச்சீர் ஒன்பதெழுத்துக் கொள்ளுமாறறிக. எனினும், ஆறினும் மிக்குப் பயின்று வருதலின்மையின் அவற்றை உம்மையான் தழீஇக் கொண்டார் என்க.

வஞ்சியடிக்கு ஆறும் ஆகும் என்றதனான் ஐந்தெழுத்திறவாது என்றது நாற்சீரடியாகிய அளவடிக்கே என்பது விளங்கும். இதனான் நாற்சீரடி, வஞ்சிப்பாவல்லாத ஏனையவற்றிக்கே உரியதென்பது பெறப்படும். ஆசிரியப்பாவினுள் ஒரோவழி வஞ்சியடி இடைமிடைந்து வருமாதலின் ஆண்டு ஐயம் நிகழாவண்ணம் வஞ்சியடிக்கண் ஆறும் ஆகும் என்றார்.

எ-டு: மான்குறையொடு மதுமறுகவும் (பொருநர் - 217)
மீன்நெய்யொடு நறவுமறுகவும் (பொருநர் - 215)

என ஆறும் ஏழும் வந்தன.

சூ. 357: எழுத்தளவு எஞ்சினும் சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப. (43)

கருத்து : மேற்கூறிய சீர்களைப் பற்றிய தொருபுறனடை கூறுகின்றது. ஐயமகற்றுதலுமாம்.

உரை : சீர்கள் ஓரெழுத்து முதல் ஐந்தும் அதற்கு மேற்பட்டும் அமைந்து வருதலான் இயற்சீர் முதலாகக் கூறப்பெற்ற சீர்நிலைகள் குறுகலும் நீடலும் இல்லை எனக் கூறுவர் புலவோர்.

அஃதாவது எழுத்தளவையான் சீர்கள் குறுஞ்சீர், நெடுஞ்சீர் என வழங்கப்படா என்றவாறு. "ஒளிநிலவு பொலிந்துயிர் வெளவலும் ஓரார்" இந்நேரடிக்கண் அமைந்துள்ள சீர்கள் முறையே ஐந்தும் நான்கும் மூன்றும் இரண்டுமாகிய எழுத்துப் பெற்று வந்தன எனினும் யாவும் இயற்சீர் என்னும் பெயர் நிலையினின்று வேறுபடா என ஐயமகற்றியவாறு.

சூ. 358: உயிரில் எழுத்தும் எண்ணப் படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான (44)

கருத்து : மேல் எழுத்தளவையான் வகுக்கப்பெற்ற நாற்சீரடிகளுள் ஐவகைச் சீர்களின் கண்ணும் எழுத்தெண்ணும் முறைமை கூறுகின்றது.

EFEO_GUEST_JLC_02-030 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**உரை :** உயிர்ப்பிசை அல்லாத பதினெட்டுப் புள்ளி எழுத்தும் ஆய்தப் புள்ளியும் (உம்மையான்) அரை மாத்திரை உயிர்ப்பொலி உடைய குற்றியலிகரமும் குற்றியலுகரமும் அலகாக எண்ணப் பெறா. காரணம் என்னை எனின்? அவை உயிரும் உயிர்மெய்யும் போலத் தனித்தியங்கலும் ஒரு மாத்திரை முதலான உயிர்ப்பு இசை பெறுதலுமாகிய உயிர்த் திறம் இன்மையான் என்க.

உயிர்மெய் என்பது உயிரைத் துணைக்கொண்டு தனித் திசைக்கும் மெய்யெழுத்தின் ஒருநிலை என்பது எழுத்ததிகார உரையுள் விளங்கப்பெற்றது.

எனவே குறளடி முதலாகக் கழிநெடிலடி ஈறாக வரும் நாற்சீரடி களுள் எழுத்தெண்ணுங்கால் உயிரும் உயிர்மெய்யுமே எண்ணப் பெறும், ஏனைப் புள்ளியும் (மெய்) சார்பு எழுத்தும் எண்ணப்பெறா என்பது புலனாம்.

இனி உயிரளபெடையும் ஒற்றளபெடையும் "அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே" என்றதனான் அசைநிலை பெறுங்கால் எண்ணப்பெறுமென்பதும் அல்லாதவிடத்து எண்ணப் பெறா என்பதும் பெறப்படும்.

(நாற்சீரடிகள் யாவும் எழுத்தெண்ணற்குரியவையே என்பதை மறந்து பேராசிரியரும் நச்சரும் வடமொழியை நோக்கிக் கட்டளை என்பதொரு இலக்கணத்தைக் கற்பித்துக் கூறுவர்.) வடமொழியுள் ஓரடிக்கண் ஒன்று முதல் இருபத்தாறு எழுத்து வரைகொண்டு நான் கடிகளையும் ஒரே அளவையாக அமைத்துக் கூறுதல் விருத்தம் என்னும் யாப்பு வகையாகும். சந்தம்-தண்டகம் முதலிய யாப்பின் கண்ணும் எழுத்தெண்ணி அமைத்தலும் உண்டு. தொல்காப்பியம் எந்த ஒரு பாவினையும் நான்கடியாக வரையறை செய்யவில்லை. கொச்சகக் கலி வகையுள் நான்கடி பெற்று வருவனவும் உண்டு. ஆண்டு இசை நயமும் வண்ணமும் கருதிப் புலவோர் ஓரளவை யாகச் செய்தலுமுண்டு எனினும் அவ்வாறே செய்தல் வேண்டு மென்னும் யாப்புறவில்லை. கட்டளை என்பது இசைத் தமிழுக்கு உரியதன்றி இயற்றமிழுக்குரியதன்று.

இருசீர், முச்சீர்களானும் - ஐஞ்சீர் முதலாகப் பல சீர்களானும் அமைவனவற்றை இடைககாலத்தார் அடி எனக் கூறி இலக்கணம் செய்தமையைக் கருதி நாற்சீரடிகளைக் கட்டளையடி எனப் பிறழ உணர்ந்தமையான் தொல்காப்பியம் யாண்டும் கூறுத சீர்வகையடி, கட்டளையடி என்னும் பெயர்களை இட்டு உரைவிளக்கம் செய்தல், தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல் என்னும் குற்றமா மென்க.



**சூ. 359:** வஞ்சி யடியே இருசீர்த் தாகும். (45)

**கருத்து :** 'நேர்நிலை வஞ்சிக்கு ஆறுமாகும்' என அதிகரித்து வைத்த வஞ்சி யடிக்கு இலக்கணம் கூறுகின்றது.

**உரை :** நேர்நிலை வஞ்சிப்பாவிற்குரிய வஞ்சியடி இரு சீர்களை உடையதாகும்.

ஒரு சீரொடு மற்றொரு சீர் நேர்ந்த அளவானே அவ்வடி வஞ்சிப் பாவிற்குரியதாகி நின்றமையின் அதனைக் கொண்டு நடக்கும் வஞ்சிப்பா நேர்நிலை வஞ்சி எனப்பட்டது. நேர்நிலை எனினும் சமநிலை எனினும் ஒக்கும். ஆசிரிய அடி முதலியவற்றைப் பிரித்தலின் ஏகாரம் பிரிநிலை.

எ–டு : மனைமாட்சிய விரைபுரவியொடு

........................... ... .. ......

பெருந்தண்பணை பாழாக (புறம்-16) என வரும்.

**சூ. 360:** தன்சீர் எழுத்தின் சின்மை மூன்றே (46)

**கருத்து :** வஞ்சிச் சீர்க்கு குறைந்த எழுத்தளவு கூறுகின்றது.

**உரை :** வஞ்சிச் சீர்க்கு எழுத்தளவையான் சிற்றெல்லை மூன்றேயாம். பேரெல்லை மேற்கூறப்பட்டது.

எ–டு : "பெருந்தண்பனை பாழாக" (புறம் 16) என வரும். நுந்தைகாடு எனக்காட்டி ஈரெழுத்தானும் வரும் என்றார் பேராசிரியர் ஆண்டு நுந்தை முற்றுகரமாதலன்றிக் குற்றுகரமாகக் கொள்ளலாகா தென்க.

**சூ. 361:** முச்சீ ரானும் வருமிட னுடைத்தே (47)

**கருத்து :** வஞ்சியடிக்கொரு புறனடை கூறுகின்றது.

**உரை :** மேற்கூறிய வஞ்சிப்பாவின் அடி மூன்று சீரானும்வரும் இடனுடைத்தாகும்.

எச்சஉம்மை இழிபுணர்த்தி நின்றது. முச்சீரான் வரும் வஞ்சியை வியனிலை வஞ்சி எனவும் வழங்குப.

எ–டு : "தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோள்மேல்" (யா.வி.ப. 108) என வரும்.

**சூ. 362:** அசைகூன் ஆகும் அவ்வயி னான (48)

**கருத்து :** வஞ்சியடிக்கண் நிகழ்வதோர் சிறப்பு விதி கூறுகின்றது.

EFEO_GUEST_JLC_02-031 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

உரை : மேற்கூறிய இரு வகை வஞ்சியடிக்கண்ணும் கூன்வரின் அசைச்சீரே கூனாகி வரும்.

பொதுப்படக் கூறியதனான் கூன் அடிமுதற்கண்ணும் இறுதிக் கண்ணும் வருமெனக் கொள்க.

எ-டு : "வாள், வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப்போன்றன"
"களிறு, கதவெறியாச் சிறந்துராஅய்"
"தேரோடத் துகள்கெழுமின, தெருவு" என வரும்.

சூ. 363: சீர்கூ னாதல் நேரடிக் குரித்தே (49)

கருத்து : நேரடிக்கண் சீர் கூனாக வருமென்கின்றது

உரை : சீர்கூனாக வருதல் நேரடிக்குரியதாகும்.

எ-டு : அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே. என வரும்.

'உரித்தே' என்றதனான் உரித்தன்றி வஞ்சியடிக்கண் ஒரோவழிச் சீர் கூனாக வரினும் கொள்க.

எ-டு : 'உலகே, முதற்கொடுத்தார் பிற்கொளவும்' என வரும்.

சூ. 364: ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகைமைய வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே (50)

கருத்து : ஐவகை அடிகளும் தளை வழுவின்றி விரியும் தொகையளவு கூறுகின்றது.

உரை : நாலெழுத்தடி முதலாக இருபதெழுத்தடி ஈறாக வகுக்கப்பெற்ற குறளடி முதலாகிய ஐவகை நாற்சீரடிகளையும் விரிக்குங்கால், அங்ஙனம் எழுத்தளவைவானமைந்த பதினேழு வகையடிகளிடத்தும் நின்ற சீர்கள் புணர்ந்து தளை கொள்ளுமிடத்து எழுபது வகைமையால் நேரும் ஓசை வழுக்கள் இலவாய் வருவன அறுநூற்றிருபத்தைந்து அடிகளாகும்.

மெய் என்றது எழுத்தினை நிலம் என்றது அடியினை.



"அடியுள்ளனவே தளையொடு தொடையே" என்பதனாற் பின்னர்ப்பதின்மூவாயிரத்து எழுநூறு தொடை ஆமாறு விரித்தற்கு ஏற்ப ஈண்டு ஓசை வழுவின்றி வருதற்குரிய அடிகள் வரையறை செய்யப் பெற்றன.

வழுநேரும் எழுபது வகைமையாவன :

ஓரெழுத்து முதல் ஒன்பதெழுத்து வரை வரும்; இயலசைச்சீர் 2, உரியசைச் சீர் 2, இயற்சீர் 10, ஆசிரிய உரிச்சீர் 5, வெண்சீர் 4, வஞ்சிச்சீர் 60 ஆகிய 84 சீர்களுள் இயலசைச்சீர் இரண்டும் நாற்சீரடிக்கண் நின்று சீராக நிரம்பாமையின் அவை களையப் பெறும். வெண்சீர் நான்கும் தளை கொள்ளுமிடத்து நிரையசை இயல்பினவாம் ஆதலின் அவை இயற்சீரின் பாற்பட்டு அடங்கும். அசைச் சீர் தளைகொள்ளுமிடத்து இயற்சீர் போலக் கொள்ளப்படு மேனும் அவை முற்றுகரக், குற்றுகரங்களான் வேறுபடுதலின் இயற் சீருள் அடக்காது வேறாகக் கொள்ளப்படும். வஞ்சியுரிச்சீர் அறுபதனுள் ஐந்தெழுத்தின் மிக்குவருவன நிரையீற்றுள் நான்கும் நிரைபீற்றுள் நான்கும் ஆக எட்டாம். ஆகலின் அவை நீக்கப்படும். ஆக எஞ்சியவை எழுபது சீர்களாம்.

இவ்வெழுபது சீர்களும் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா ஆகிய பாக்களுக்கு உரியவையாய், நின்றசீரும் வருஞ்சீருமாய்ப் புணர்ந்து தளைகொள்ளுமிடத்து ஒரு பாவிற்குரிய அடியுள் ஏனைப்பாக்களின் ஓசைபுகின் வழுவாம். அங்ஙனம் எழுபது வகைச் சீர்களான்நேரும் வழு எழுபது வகைமையாகும்.

இனி அவ் எழுபது வகைமையின் வழு நேராவண்ணம் அறு நூற்றிருபத்தைது அடிகள் விரியுமாறு :-

மேற்கூறிய உரியசைச்சீர், இயற்சீர் ஆசிரியஉரிச்சீர், வெண்சீர், வஞ்சியுரிச்சீர் ஆகிய ஐந்து சீர்களையும் நிறுத்தி இரண்டாம் சீரை வேறுபடுத்திப் புணர்த்தி உறழ இருபத்தைந்தாகும் அவற்றொடு மூன்றாஞ்சீரை வேறுபடுத்திப் புணர்த்தி உறழ நூற்றிருபத் தைந்தாகும். அவற்றொடு நான்காம் சீரை வேறுபடுத்திப் புணர்த்தி உறழ அறுநூற்றிருபத்தைந்தடிகளாகும். ஆசிரியத்துள் "தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா" என்றதனான் ஒத்த சீர்கள் வரின் தளை வழுவின்றாம். பிற சீர்கள் வரின் தளை வழுவின்றி அமைதல் வேண்டுமென்க.

அசைச் சீரும், வெண்சீரும் தளை நிலைக்கு இயற்சீரொடு ஒப்பித்ததன்றிச் சீர்நிலைக்கண் வேறாகவே நிற்குமென அறிக.

எ-டு : "பருத்தி வேலிச் சீறூர் மன்னன்" இஃது இயற்சீரான் வந்த ஒன்பது எழுத்துச் சிந்தடியாகிய ஆசிரியவடி. தளை வழுவின்றி வந்தது.



EFEO_GUEST_JLC_02-032 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

"வேட்டம் பொய்யாது வலைவளம் சிறப்பப்
பாட்டம் பொய்யாது பரதவர் பகர" இவை இயற்சீரும் வெண்சீருமாய்ப் பதினோரெழுத்து அளவடியான் வந்த ஆசிரிய அடிகள். தளை வழுவின்றி வந்தன.

"ஆர்கலி யாணர்த் தாயினும் தேர்கெழு" இஃது ஆசிரியத் தளையும் வெண்டளையும் வரவி வழுவியது.

"இரும்பனந் தீம்பிழி உண்டோர் மகிழும்" இஃது இயற்சீரான்வந்த பன்னிரண்டெழுத்து அளவடி வெண்டளை வழுவாது வந்தது.

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்" இது பதினாறெழுத்தான் வந்த நெடிலடி ஆசிரியத் தளை வழுவாது வந்தது.

"களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை"

இஃது ஆசிரிய உரிச்சீரும் இயற்சீருமாய் அளவடியான் வந்த ஆசிரிய அடி. தளை வழுவின்றி வந்தது.

"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு" இஃது பத்தெழுத்தான் இயற்சீரும் வெண்சீருமாய் வந்த வெண்பா அடி. தளை வழுவின்றி வந்தது.

"புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்" இது பதினான்கெழுத்தான் வந்த வெண்சீர் அளவடி. தளை வழுவாது வந்தது.

உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்கு" இது இயற்சீரான் பத்தெழுத்தான் வந்த கலியடி வெண்டளை வழுவாது வந்தது.

"தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவு முரைத்தனரே" இது வெண்சீரான் கழிநெடி லடியான் வந்த கலியடி, கலித்தளை வழுவாது வந்தது.

"அடிதாங்கு மளவின்றி அழலன்ன வெம்மையால்" இது வெண்சீரான் பதினான்கெழுத்தான் வந்த கலியடி, வெண்டளை தட்டு வழுவி வந்தது.

வெண்பாவைத் தவிர ஏனைய பாக்களுள் தளை விரவி வரினும் அவை வழுவாகாதென்பதும் இங்ஙனம் எழுத்தளவை யானாகும் அடிக்கண் தளை வழுவாது வரும் அடிவகை இத்துணைய என்பதே இச்சூத்திரத்தின் பயன் என்பதும் அறிக.



### சூ. 50 ஐந்துசீர்களைவைத்து அறுநூற்றிருபத்தைந்தாகப் பெருக்குமாறு

உ உரியசைச்சீர்
இ இயற்சீர்
ஆ ஆசிரிய உரிச்சீர்
வெ வெண்பா உரிச்சீர்
வ வஞ்சியுரிச்சீர்

ஐந்து சீர்களொடு இரண்டாம் சீரை உறழ 25 உம் அவற்றொடு மூன்றும் சீரை உறழ 125 உம் வந்தவாறு காண்க.

இந்த 125 சீர்களின்பின் தனித்தனி ஐந்து சீர்களையும் வைத்து உறழ 625 அடிகள் வருமாறு கண்டுகொள்க.

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ | உ | உ | உ | உ | உ | இ | உ | உ | உ | ஆ | உ | உ | உ | வெ | உ | உ | உ | வ | உ |
| உ | இ | உ | உ | உ | இ | இ | உ | உ | இ | ஆ | உ | உ | இ | வெ | உ | உ | இ | வ | உ |
| உ | ஆ | உ | உ | உ | ஆ | இ | உ | உ | ஆ | ஆ | உ | உ | ஆ | வெ | உ | உ | ஆ | வ | உ |
| உ | வெ | உ | உ | உ | வெ | இ | உ | உ | வெ | ஆ | உ | உ | வெ | வெ | உ | உ | வெ | வ | உ |
| உ | வ | உ | உ | உ | வ | இ | உ | உ | வ | ஆ | உ | உ | வ | வெ | உ | உ | வ | வ | உ |
| இ | உ | உ | உ | இ | உ | இ | உ | இ | உ | ஆ | உ | இ | உ | வெ | உ | இ | உ | வ | உ |
| இ | இ | உ | உ | இ | இ | இ | உ | இ | இ | ஆ | உ | இ | இ | வெ | உ | இ | இ | வ | உ |
| இ | ஆ | உ | உ | இ | ஆ | இ | உ | இ | ஆ | ஆ | உ | இ | ஆ | வெ | உ | இ | ஆ | வ | உ |
| இ | வெ | உ | உ | இ | வெ | இ | உ | இ | வெ | ஆ | உ | இ | வெ | வெ | உ | இ | வெ | வ | உ |
| இ | வ | உ | உ | இ | வ | இ | உ | இ | வ | இ | உ | இ | வ | வெ | உ | இ | வ | வ | உ |
| ஆ | உ | உ | உ | ஆ | உ | இ | உ | ஆ | உ | ஆ | உ | ஆ | உ | வெ | உ | ஆ | உ | வ | உ |
| ஆ | இ | உ | உ | ஆ | இ | இ | உ | ஆ | இ | ஆ | உ | ஆ | இ | வெ | உ | ஆ | இ | வ | உ |
| ஆ | ஆ | உ | உ | ஆ | ஆ | இ | உ | ஆ | ஆ | ஆ | இ | ஆ | ஆ | வெ | உ | ஆ | ஆ | வ | உ |
| ஆ | வெ | உ | உ | ஆ | வெ | இ | உ | ஆ | வெ | ஆ | உ | ஆ | வெ | வெ | உ | ஆ | வெ | வ | உ |
| ஆ | வ | உ | உ | ஆ | வ | இ | உ | ஆ | வ | ஆ | உ | ஆ | வ | வெ | உ | ஆ | வ | வ | உ |
| வெ | உ | உ | உ | வெ | உ | இ | உ | வெ | உ | ஆ | உ | வெ | உ | வெ | உ | வெ | உ | வ | உ |
| வெ | இ | உ | உ | வெ | இ | இ | உ | வெ | இ | ஆ | உ | வெ | இ | வெ | உ | வெ | இ | வ | உ |
| வெ | ஆ | உ | உ | வெ | ஆ | இ | உ | வெ | ஆ | ஆ | உ | வெ | ஆ | வெ | உ | வெ | ஆ | வ | உ |
| வெ | வெ | உ | உ | வெ | வெ | இ | உ | வெ | வெ | ஆ | உ | வெ | வெ | வெ | உ | வெ | வெ | வ | உ |
| வெ | வ | உ | உ | வெ | வ | இ | உ | வெ | வ | ஆ | உ | வெ | வ | வெ | உ | வெ | வ | வ | உ |
| வ | உ | உ | உ | வ | உ | இ | உ | வ | உ | ஆ | உ | வ | உ | வெ | உ | வ | உ | வ | உ |
| வ | இ | உ | உ | வ | இ | இ | உ | வ | இ | ஆ | உ | வ | இ | வெ | உ | வ | இ | வ | உ |
| வ | ஆ | உ | உ | வ | ஆ | இ | உ | வ | ஆ | ஆ | உ | வ | ஆ | வெ | உ | வ | ஆ | வ | உ |
| வ | வெ | உ | உ | வ | வெ | இ | உ | வ | வெ | ஆ | உ | வ | வெ | வெ | உ | வ | வெ | வ | உ |
| வ | வ | உ | உ | வ | வ | இ | உ | வ | வ | ஆ | உ | வ | வ | வெ | உ | வ | வ | வ | உ |

**சூ. 365** ஆங்கனம் விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை. **(51)**

க-து : மேற்கூறிய அடித்தொகைக்கு ஒரு புறனடை கூறுகின்றது.

உரை : எழுநிலத்தெழுந்த செய்யுட்களைச் செய்யும் பாங்கினை உணர்ந்தோர். பாக்களைப் பண்ணுங்காலை அவற்றைப் பதினேழு நிலத்தும் உள்ள ஐவகை யடிக்கும் சீர்வகையான் அடிஉறழ்ந்தாங்கு, குறளடி முதலாக ஒவ்வோரடிக்கும் எழுத்தளவையான் உறழ்ந்து விரிப்பினும், பதினேழ் நிலங்களையும் மூவகைப் பாக்களுக்கும் உரிமை கூறி யாங்கு வைத்துத் தனித்தனி விரிப்பினும் அவை அளவிறந்தனவாக விரியும்.

அஃதாவது பதினேழு நிலமும் ஆசிரியம்பெறும் என்னும் முறைமையால் எழுத்தளவையான் வைத்துப் பெருக்குங்கால் நாலெழுத்தால் ஒன்றும் ஐந்தெழுத்தால் மூன்றும் ஆறெழுத்தால் நான்கும் ஏழெழுத்தால் பன்னிரண்டும்ஆக இங்ஙனம் அளவின்றிப் பெருகுதலும், ஆசிரியடி பதினேழு, வெண்பா அடி 8, கலியடி 8 ஆகவைத்து அவற்றைச் சீர்களோடு உறழ அளவின்றிப் பெருகுதலும் காண்க.

| | | | |
|---|---|---|---|
| கன்று வந்து நின்று கொண்டு | —4 எழுத்து அடி 1 | | |
| பருந்து வந்து கூர்ந்து பார்த்து | — 5 | ,, | 3 |
| தேவு கொண்டு வந்து நின்று | — 5 | ,, | |
| தேனை உண்டு வண்டு வந்து | — 5 | ,, | |
| களிறு வந்த காடு சென்று | — 6 | ,, | 4 |
| நிலவு கண்டு நீடு நின்று | — 6 | ,, | |
| தேவு கொண்டு பாடி வந்து | — 6 | ,, | |
| நாடு சென்ற போது கூறி | — 6 | ,, | |
| நிலவு கண்டு சென்ற போது | — 7 | ,, | 12 |
| வழுதி நாடு பொருது வென்று | — 7 | ,, | |
| எவ்வழிக் கொண்டு சென்று கண்டாய் | — 7 | ,, | |
| அறநெறி தேர்ந்து கேடு கொன்று | — 7 | ,, | |
| களிறுநீடு கானில் சென்று தேடு | — 7 | ,, | |
| யாறுநெடிது பாய்ந்து சென்ற போது | — 7 | ,, | |
| களிறுபொருது வென்று வந்து பாடு | — 7 | ,, | |
| காடுநிழல் தந்து நின்ற போது | — 7 | ,, | |
| கடிதுவரல் யாறு பாய்ந்து சென்று | — 7 | ,, | |
| பெருகுசீர் கொண்டு நீடு வாழ்க | — 7 | ,, | |
| பால்நிலவு பார்த்து வந்து பாடு | — 7 | ,, | |
| கதிர்பாடு கொண்ட போது சேறு | — 7 | ,, | |

இவை முதற்சீர் வேறுபாட்டான் வந்தவை. சீர்களை மாற்றி மாற்றியமைப்பின் அடிகள் பலவாகப்பெருகுதலைக் காணலாம்.



இங்ஙனம் பதினேழு அடிகளிலும் சீர்களை அமைத்து உறழின் அடிகள் பல்லாயிரமாகப் பெருகும் ஆதலின் "அளவிறந்தனவே" என்றார்.

இச்சூத்திரத்திற்கு விளக்கம் கூறுங்கால் இவ் ஆசிரியர் அடி எனக் கூறாத ஐஞ்சீரடி அறுசீரடிகளை வைத்து அவற்றைப் பெருக்கின் அளவிறந்தனவாகும் என்றனர் உரையாசிரியன்மார். அது மேற்கோள்மலைவாதலை அறிக.

**சூ. 366** ஐவகை அடியும் ஆசிரியக் குரிய **(52)**

க-து : குறளடி முதலாய ஐந்தடிகளும் ஆசிரியப்பாவிற்கு வருமென்கிறது.

உரை : மேல் எழுத்தளவையாற் கூறிய குறளடி முதலாகக் கழிநெடிலடி யீறாக உள்ள ஐவகை அடிகளும் ஆசிரியப் பாவின்கண் வரற்குரியவாகும்.

எ-டு : "தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து"
"ஆறு சூடி நீறு பூசி"
இவை குறளடி
"போது சாந்தம் பொற்ப ஏந்தி"
"கொங்குதேர் வாழ்கை அஞ்சிறைத்தும்பி"—இவை சிந்தடி
"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"
"யாவரும் விழையும் பொலந்தொடிப்புதல்வனை"
இவை நேரடி
"ஏற்றுவல னுயரிய எரிமருள் அவிர்சடை"
"தேன்றூங்கிய உயர்சிமைய மலைஞாறிய வியன்ஞாலம்"
இவை நெடிலடி
"நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகன்மறவரும்"
இது கழிநெடிலடி

ஆசிரியப்பாவிற்கு ஐவகை அடிகளும் உரியவாயினும் குறளடியும், சிந்தடியும், கழிநெடிலடியும் பயின்றுவாரா, அளவடியும் நெடிலடியும் பயின்று வருமெனக் கொள்க. இதனானும் கட்டளையடிப் பாவகை என்று ஒன்றின்மை தெரியலாம்.

**சூ. 367** விராஅய் வரினும் ஒரூஉநிலை இலவே **(53)**

க-து : மேலதற்கொரு புறனடை கூறுகின்றது.

உரை : ஐவகை அடியும் ஆசிரியத்துள் வருங்கால் ஆசிரிய உரிச்சீரும் இயற்சீருமாய் ஆசிரியத்தளையாயே வருதலின்றிப் பிற சீர்களும் தளைகளும் விரவிவரினும் நீக்கும் நிலைமைஇல.

அவற்றை இசையோடு சேர்த்தி அகவலோசையாற் கூறிக் கொள்க

EFEO_GUEST_JLC_02-034 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இனி, குறளடி முதலாக ஐந்தடிகளும் நிரலே வருதலன்றி விரவிவரினும் நீக்கும் நிலைமைஇல எனப் பொருள்கூறின் அஃது வெள்ளுரையாம். இந்நூற்பாவிற்கு மேலதே பொருள் என்பதை வருஞ் சூத்திரத்தானும் உணரலாம்.

**சூ. 368 தன்சீர் வகையினும் தளைநிலை வகையினும்**
**இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய**
**தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா (54)**

**க-து :** மேல் விராய் வருமென்ற ஐவகை அடிகளும் ஓசையான் விரவி வருமாறு கூறுகின்றது.

**உரை :** தன்சீராகிய ஆசிரிய உரிச்சீர் வரும் வகையானும் பிற சீர்கள் ஆசிரியத்தளையொடுவரும் வகையானும் இயற்சீர் வரும் வகையானும் வருபவை ஆசிரியத்துள் ஐவகை அடிகட்கும் உரியவாகும். அவ்வழித் தன்சீராகிய ஆசிரிய உரிச்சீர்களே வருமிடத்துத் தளைவகை காணல் வேண்டா.

எனவே, பிற சீர்கள் வருமிடத்துத் தளைவகையான் ஓசை காணல் வேண்டுமென்பதும் தன்சீருள்வழி அவையே ஓசையைப் பிறப்பித்தலின் தளை காணல் வேண்டா என்பதும் புலப்படும். நேராய் ஒன்றுவதும் நிரையாய் ஒன்றுவதும் என ஆசிரியத் தளை இரு வகைப்படுதலின் ''தளைவகை'' எனப்பட்டது.

இச்சூத்திரத்து இறுதியடியைப் பிரித்துத் தனிச் சூத்திரமாக உரைப்பார் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும். உரையாசிரியர் கொண்ட முறையே நூல்நெறிக் கொத்ததென்க.

**எ-டு :** புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்டுறை (புறம் 39) இவை
இயற்சீரான் பன்னிரண்டும் பதினொன்றுமாகிய
எழுத்தான் அளவடியாய்த்தன்றளை பெற்றுவந்தன.

செங்கண் சின்னீர்ப் பெய்த சீறில் (புறம் 319)
நள்ளி வாழியோ நள்ளி நள்ளென் (புறம் 149) இவை
இயற்சீரான் எட்டும் ஒன்பதுமாகிய எழுத்தான்
சிந்தடி யாய்த்தன்றளை பெற்று வந்தன.

இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்
ஈண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇ (புறம் 161)
நிணந்தின்றுசெருக்கியநெருப்புத்தலைநெடுவேல் (புறம் 200)

இவை பதின்மூறும் பதினொன்றும் பதினான்குமாகிய எழுத்தான் அளவடியாய் இயற்சீரும் ஆசிரிய உரிச்சீரும் விரவித் தன்றளை யான் வந்தன.



''நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை'' (புறம் - 125) இது பதினைந்தெழுத்தான் நெடிலடியாய் இன்சீர் விரவி ''தணிந்த நிணந்தயங்கு'' என வெண்டளை பெற்றுவந்த தாயினும் நெருப்புச்சினம், நிணந்தயங்கு என முன்னும் பின்னும் ஆசிரிய உரிச்சீரான் வந்தமையின் தளைவகை வேண்டாது வந்தது.

இங்ஙனம் பிறவாறு வருவனவற்றையெல்லாம் ''அசையும் சீரும் இசையொடு சேர்த்தி'' என்பதனான் ஆசிரிய ஓசைவழாது கூறிக்கொள்க.

**சூ. 369 சீரியை மருங்கின் ஓரசை ஒப்பின்**
**ஆசிரியத் தளையென் றறியல் வேண்டும் (55)**

**க-து :** ஆசிரியத்தளை காணுமாறும் அதன் இலக்கணமுங் கூறுகின்றது.

**உரை :** நின்றசீரொடு வருஞ்சீர் இயையுமிடத்து நின்றசீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒரே வகை அசையாக ஒத்து நிற்பின் அதனை ஆசிரியத்தளை என்று அறிக.

நேரும் நேருமாய் ஒப்பினும் நிரையும் நிரையுமாய் ஒப்பினும் அவை ஆசிரியத்தளை என்றவாறு.

இனி நேர்பும், நிரைபும் தளை கோடற்கண் பாதிரி கணவிரி என அடங்கி அவ்வாறே தளை கோள்ளும் என்றறிக. ஓரசை ஒவ்வாது மாறிவரின் வெண்டளையாமென (சூத்திரம்-58) மேற்கூறுப.

**எ-டு :** அதுகொல் தோழி காம நோயே (குறுந். 5) இது நேரசை ஒன்றிய ஆசிரியத்தளை

''நாறிதழ்க் குவளையொ டிடையிடுபு விரைஇ''
(குறுந் 62) இது நிரையசை ஒன்றிய ஆசிரியத்தளை ''இடையிடுபு'' என்னும் நிரைநேர்பு இயற்சீர் கணவிரியாய்த் தளை கொண்டது. வண்டுபடத் ததைந்த (குறு - 21) என்னும் நேர்பு நிரை ஆசிரிய உரிச்சீர் பாதிரியாய்த் தளை கொண்டது. எஃகுவிளங்கு தடங்கை (குறுந் 198) நேர்பு நிரையாகிய ஆசிரிய உரிச்சீர் பாதிரியாய் நின்று ஆசிரியத் தளை கொண்டது பிறவும் இவ்வாறே காண்க. மாறிவரின் வெண்டளை யாமாறுங் கண்டு கொள்க.

இடைக்காலத்து யாப்பியல் நூலார் வகுத்த தளை இலக் கணத்திற்கும் தொல்காப்பியம் கூறும் தளையிலக்கணத்திற்கும் உள்ள வேறுபாடு அறிந்து தொல்காப்பியநெறிபற்றித் தளை அமைப்பினை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

EFEO_GUEST_JLC_02-035 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**சூ. 370:** குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை இலவே வஞ்சிக் கென்ப **(56)**

**க-து :** ஆசிரியத்துள் வஞ்சியுரிச்சீர் வாரா அடிகள் இவை என்கின்றது.

**உரை :** பதினேழ் நிலத்திற்கும் உரிய ஆசிரியப்பாவினுள் நாலெழுத்து முதலாகப் பதினான்கெழுத்தளவும் பெறுமென்ற குறளடி சிந்தடி அளவடிகளின்கண் வஞ்சியுரிச்சீர் வந்து உறழுதல் இல என்று கூறுவர் புலவர். எனவே நெடிலடி கழிநெடிலடிகளின் கண் வஞ்சியுரிச்சீர் உறழும் என்பதாயிற்று.

'உறழ்நிலை இலவே' என்றதனான் வஞ்சியுரிச்சீருள் மூன்றெழுத்துச் சீரும் சிறுபான்மை நான்கெழுத்துச் சீரும் அருகி வரினும் இழுக்காகாதெனக் கொள்க.

எ-டு: விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே (குறு-210)
இது பதின்மூன்றெழுத்து அளவடியுள் 'காக்கையது' என மூன்றெழுத்து வஞ்சியுரிச்சீர் வந்தது.

மத்துக்கயி றாடா வைகற்பொழுது நினையூஉ (பதிற்-8)
"வைகற்பொழுது" என நான்கெழுத்து வஞ்சியுரிச்சீர் வந்தது.

"நல்லியக் கோடானை நயந்த கொள்கையொடு" (சிறுபா - 125) பன்னிரண்டெழுத்து அளவடியுள் "கொள்கையொடு" என மூன்றெழுத்து வஞ்சியுரிச்சீர் வந்தது.

பனைமருள் தடக்கையொடு முத்துப்பட முற்றிய(புறம்161)
இப்பதினான்கெழுத்து அளவடியுள் "தடக்கையொடு"என நான்கெழுத்து வஞ்சியுரிச்சீர் வந்தது.

இவை ஆசிரிய ஓசை வழாமல் நின்றவாறும் உணர்க. இவற்றுள் வரும் ஐகாரங்களைப் போலியெழுத்தாக மாற்றின் வழு நேராமையும் உணர்க.

**சூ. 371:** அளவும் சிந்தும் வெள்ளைக்குரிய **(57)**

**க-து :** பதினேழ் நிலத்துள் வெண்பாவிற்குரிய நிலம் இத்துணை எனக் கூறுகின்றது.

**உரை :** எழுத்தளவையான் வரும் பதினேழு நிலத்துள் ஏழு எழுத்து முதல் ஒன்பதெழுத்தளவும்வரும் சிந்தடிகளும் பத்தெழுத்து முதல் பதினான்கெழுத்தளவும் வரும் அளவடிகளும் ஆகிய எட்டு நிலங்கள் வெண்பாவிற்குரியனவாகும்.



எ-டு : "மன்று மருந்து நினைந்து பொருந்து
பிறப்பு விலக்கிடும் பின்" இது ஏழெழுத்தடி.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" இது பதினான்கெழுத்தடி.

இனி, "அளவும் சிந்தும்" எனத் தலை தடுமாற்றமாகக் கூறியதனான்.

"அறினியலான் இல்வாழ்வா னென்பான் பிறனியலான் (குறள் - 147) "படியுடையார்ப் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்" (குறள் - 606)
எனப் பதினைந்தும் பதினாறுமாகிய நெடிலடியான் ஒரோவழி வெள்ளடி வரினும் அமைத்துக் கொள்ளப் பெறுமென்க.

**சூ. 372:** தளைவகை ஒன்றாத் தன்மை யான **(58)**

**க - து :** வெண்பா அடிகளுக்குரிய தளையாமாறு கூறுகின்றது

**உரை :** மேல் அதிகரித்து நின்ற எண்வகை நிலம் பெறும் வெண்பாவடிகட்குரிய தளை வகையாவன, நின்றசீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் அசை ஒன்றாத் தன்மை ஆயின நிலைமையாம்.

அஃதாவது நேரீற்றியற்சீர்முன் நிரையும், நிரையீற்றியற் சீர் முன் நேரும்வந்து மாறுபடுவதும் வெண்பா உரிச்சீர்முன் நேர்வந்து தளைப்பதுமாம்.

வெண்சீர் முன் நேர்வரின் ஒன்றுதலாகாதோ எனின் ? ஆகாது, என்னை தளைநிலை கோடற்கண் வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே (சூ-29) என்பது விதியாகலின் ஒன்றாத் தன்மைத் தேயாகும். அதனானன்றே ஆசிரியர் ஒன்றா என்னாது "ஒன்றாத் தன்மையான" என்று கூறுவாராயினர்.

இனி இயற்சீரான் வந்தன இயற்சீர் வெண்டளை என்றும், வெண்சீரான் வந்தன வெண்சீர் வெண்டளை என்றும் வழங்கும் ஆதலின் தளைவகை என்றார் என்க.

எ-டு : "கற்க கசடறக் கற்பவை கற்றபின்" இவை இயற்சீர் வெண்டளை. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு" இவை வெண்சீர்வெண்டளை.

இவை (57, 58) இரண்டனையும் ஒரு சூத்திரமாக உரைத்தார் உரையாசிரியர். இவற்றுள் விதிக்கப்பெற்றவை வேறுவேறு விதிகளானமையான் இரண்டு சூத்திரமாகக் கோடலே சால்புடைத்தென்க.



EFEO_GUEST_JLC_02-036 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**சூ. 373 : அளவடி மிகுதி உளப்படத் தோன்றி**
**இருநெடி லடியும் கலியிற் குரிய. (59)**

**க - து :** கலிப்பாவிற்குரிய அடிஆமாறு கூறுகின்றது.

**உரை :** பதினேழ் நிலத்தவாகிய அடிகளுள் பதினைந் தெழுத்து முதல் இருபது எழுத்தளவும் உள்ள நெடிலடி, கழி நெடிலடி ஆகிய இருவகை அடிகளும், அளவடிக்கண் மிக்க எழுத்தோடு தோன்றி வரும் அடிகளும், உட்பட அவை கலிப் பாவிற்கு உரியவாகும்.

அளவடியுள் மிக்குத் தோன்றிவரும் அடிகளாவன, பதின் மூன்று எழுத்தடியும் பதினான்கெழுத்தடியுமாம், ஆக எட்டடிகள் கலிப்பாவிற்குரியவாம்.

"அளவடி மிகுதி" எனப் பொதுப்படக் கூறியதனான் வெண் கலிப்பாவுக்கும் ஒருசார் கொச்சகத்துக்கும் பதினோரெழுத்தடியும் பன்னிரண்டெழுத்தடியும் வருதலின், பதினோரெழுத்து முதல் நான்கடிகளும் வருமெனக் கொள்ளினும் இழுக்காது என்க.

எ - டு : மரல்சாய மரம்வெம்ப மந்தி யுயங்க(கலி–12) 13எழுத்தடி
வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட (கலி–16)
14 எழுத்தடி

அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்
(கலி-11) 15 எழுத்தடி

அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
(கலி–11) 16 எழுத்தடி

முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையென
(கலி–56) 17 எழுத்தடி

அறநின்ற விதையொழியான் அவலங்கொண்டதுநினையாள் (யா.வி) 18 எழுத்து. அவலங்கொண்டது நினையாள் உகுபனிகண் உறைப்பவும் நீ (யா.வி) இது பத்தொன்பது எழுத்தான் வந்த கழிநெடிலடி. நிலங்கிளையா, நெடிதுயிரா நிறைதளரா நிறை தொடியாள் (யா.வி) 20 எழுத்து.

இனி, "ஐயிருதலையின் அரக்கர் கோமான்"
"சுற்றமை வில்லர் கரிவளர் பித்தையர்" (கலி-3) எனப் பதினோரெழுத்தும் பன்னிரண்டெழுத்தும் வந்தவாறு காண்க.

**சூ. 374 : நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்பினும்**
**வரைநிலை யின்றே அவ்வடிக் கென்ப (60)**

**க - து :** கலித்தளை வருமாறும் அதனைக் கொள்ளுமாறும் கூறுகின்றது.



**உரை :** நிலைமொழியாக வெண்சீர் நிற்ப நிரை முதலாகிய வெண்சீர் வந்து தளைத்துக் கலித்தளையாவதேயன்றி நிரை முதலாகிய இயற்சீரும் நிரைமுதலாகிய ஆசிரிய உரிச்சீரும் நிரை முதலாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து தட்பினும் கலித்தளையாதலி னின்றும் நீக்குதலில்லை மேற்கூறிய கலியடிக்கு என்று கூறுவர் புலவர்.

இதனான் வெண்சீர் வந்து நிரைமுதலாகத் தளைத்தலே சிறப் புடைய கலித்தளை என்பதும் பிற சீர்கள் நிரைமுதலாக வந்து தளைப்பது சிறப்பில்லாத கலித்தளை என்பதும் புலப்படும்.

"வெண்சீர் ஈற்றசை நிரையசையியற்றே" என்பதனான் வந்து நிரைதட்பினும் என்றார். 'தட்பினும்' என்னும் உம்மை நிரைமுதலாகிய வெண்சீரேயன்றி நிரைமுதலாகிய பிறசீர் வரினும் என நின்றமையின் எச்சஉம்மை.

"கலித்தளை மருங்கின் கடியவும் பெறாஅ" (சூ. 24) எனவும்
கலித்தளை அடிவயின் நேரீற்றியற்சீர்
நிலைக்குரித்தன்றே தெரியுமோர்க்கே (சூ. 25) எனவும் வந்த சூத்திரங்களான் கலியடிக்கண் வெண்பா உரிச்சீரும் ஆசிரிய உரிச்சீரும் ஒருங்கு வருமென்பதும் வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீரொடு தளைத்தல் தளையாகும் என்பதும் பெறப்பட்டமை யான் ஈண்டு நிரைமுதல் வெண்சீர் வந்து தளைப்பினும் வரை நிலை இன்றே எனக் கூறினார்.

எ - டு : "தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும் உரைத் தனரே (கலி. 11) தாழிசைகள் யாவும் நிரைமுதல் வெண் சீரொடு தளைத்துக் கலித்தளையாயின. அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்" இதனுள் முதற்சீர் நிரைமுதல் வெண்சீரொடும் இரண்டாம்சீர் நிரை முதல் இயற்சீரொடும் தட்டுக் கலித்தளையாயின.

"முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று" இதனுள் மூன்றாம் சீர் உரியசை மயங்கிய இயற்சீரொடு தளைத்துக் கலித்தளையாயிற்று.

"வரைவின்றிச் செறும் பொழுது" (கலி–8) வெண்சீர் உரியசை மயங்கிய இயற்சீரொடு நிரைமுதலாகத் தளைத்துக் கலித்தளையாயிற்று. பிறவும் சான்றோர் இலக்கியங்களுட் கண்டு கொள்க.

**சூ. 375 : விராஅய தளையும் ஒரூஉநிலை இலவே (61)**

**க - து :** கலிவகை அடிக்கண் தளைவிரவி வருமென்கின்றது.

உரை : கலியடிக்கண் கலித்தளையேயன்றி வெண்டளையும் ஆசிரியத்தளையும் நீக்கும் நிலையிலவாம்.

ஒருசார் கொச்சகக்கலிகளும் வெண்கலியும் கலியுறுப்புள் சிலவும் தளை விரவி வருமாறு கலித்தொகையுள்ளும் பிற கலிப் பாவினுள்ளும் கண்டு கொள்க.

சூ. 376 : இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்பவும் உளவே (62)

க - து : நால்வகைப் பாக்களுள் ஒன்றன்அடி பிறிதொன்றன் கண் விரவு மாறு கூறத் தொடங்குகின்றார். இச்சூத்திரம் ஆசிரியப்பாவின் கண் வெண்பா அடி விரவுமாறு கூறுகின்றது.

உரை : ஆசிரியப்பாவின்கண் இயற்சீர் தளைத்த வெண்பா அடி நிற்றற்குரிய முறைமையான் வந்து நிற்பனவும் உளவாகும்.

நிற்றற்குரியமரபாவது ஏனைய அடிகளின் அகவலோசை சிதையாமல் அவற்றொடு கலந்து நிற்றலாம்.

'உள' என்றதனான் ஒன்றற்கு மேலும் வருமெனக்கொள்க. உம்மையை இயற்சீர் வெள்ளடி என்பதனோடு கூட்டி எச்சமாக்கி வெண்சீர் விரவிய வெள்ளடியும் அருகி வருமெனக் கொள்க.

எ - டு : "எறும்பி அளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல்லன்ன பாறை ஏறி" (குறுந் 12)

இதனுள் முதலடி இயற்சீர் வெண்டளையான் வந்தது காண்க.

அழல்பொழி யானையின் ஐயெனத் தோன்றும்
நிழலில் ஓமை நீரில் நீளிடை (அகம் 223)

இதனுள் முதலடி வெண்சீர் விரவிய வெண்டளையான் வந்தது

சூ. 377 : வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞசீ ரடியும் உளவென மொழிப (63)

க - து : ஆசிரியத்துள் ஐஞ்சீரடியும் வருமென்கின்றது.

உரை : ஆசிரியப்பாவினுள் நிலைக்குரி மரபினான் வெண்டளை விரவியும் ஆசிரியத்தளை விரவியும் ஐஞ்சீரடிகள் வருவன உள என்று கூறுவர் புலவர்.

ஐஞ்சீரடியாகலின் ஆசிரியம் விரவியும் என்றார் "வெண்பா நடைத்தே கலி" (சூ. 108) என்பதனான் கலித்தளை விரவி வருமென்பதும் கொள்க.

"இனி ஆகும் என்றதனான் நாற்சீரடியாய் மண்டலித்து வருதலும் கொள்க. இடையே மூச்சீரான் வருதலும் கொள்க."



எ - டு : சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
அம்பொடு வேனிற்கும் வழியெலாம் தானிற்கு மன்னே
இவற்றுள் மூவகைத் தளையும் விரவி வந்தமை காண்க.

"நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே" என்றமையான் நாற்சீரின் மிக்க அடிகள் வாராவோ என நிகழும் ஐயம் நீங்க எழுசீரடி வரை பாக்களுள் வருமென உணர்த்துவாராய் இச் சூத்திரத்தான் ஐஞ்சீரடியும் அதுவருமிடனும் கூறினார். அறுசீரும் எழுசீரும் மேற்கூறுப.

சூ. 378 : அறுசீ ரடியே ஆசிரியத் தளையொடும்
நெறிபெற்று வருஉம் நேரடி முன்னே (64)

க - து : அறுசீரடி வருமிடங் கூறுகின்றது.

உரை : ஆறுசீர் கொண்ட அடி கலிப்பாவின்கண் ஆசிரியத் தளையொடு நெறி பெற்றுவரும் எனக் கூறுவர் புலவர் 'என்ப' என்றது அதிகாரத்தான் வந்தது.

நெறி பெறுதலாவது ஆசிரியத்தளையொடு வரினும் துள்ள லோசைக்கியைய வருதலாம்.

ஆசிரியத்தளையொடும் என்னும் உம்மையான் வெண்டளை விரவி வருதலுங் கொள்க.

ஒருசா ராசிரியப்பாவிலும் வெண்பாவிலும் முறையே இருசீரடியும் முச்சீரடியும் இடையும் இறுதியுமாக வரும். கலிப்பா யாண்டும் நாறசீரடியானே வருமென்பது இலக்கணமாதலின் நேரடி என்றது கலியடியைக் குறித்து நின்றது. அதனான் நேரடி என்பது கலிப் பாவிற்கு ஒரு பெயராகும் என்பதும் உய்த்துணரப்படும். இதற்கு இதுவே பொருளென்பது வரும் சூத்திரத்தானும் உணரலாம்.

அவருள் ; மலர்மலி புகலெழ அலர்மலி மணிபுரை நிமிர்தோள் பிணைஇ (கலி 102) என அறுசீரடி முடுகிவந்தது.

சூ. 379 : எழுசீ ரடியே முடுகியல் நடக்கும் 65)

க - து : கலியினுள் எழுசீ ரடி வருமாறு கூறுகின்றது.

உரை : மேற்கூறிய நேரடி முன் எழுசீரடி முடுகியவாய் நடக்கும். எனவே கலியினுள் எழுசீரடி வருமென்பதாயிற்று. அது முடுகியவாய் நடக்கும் எனவே அறுசீரடி முடுகின்றியும் வருமென்பதும் பெறப்பட்டது.

எ - டு : தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
தழனெ விரிவன பொழில்.

EFEO_GUEST_JLC_02-038 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நேரடிமுன் என விதவாமற் பொதுப்படக் கூறியதனான் அராக உறுப்பினுள் வருதலும் கொள்ளப்படும்.

**சூ. 380 : முடுகியல் வரையார் முதலீ ரடிக்கும் (66)**

க - து : ஐஞ்சீரடிக்கும் அறுசீரடிக்கும் எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : எழுசீரடிக்கு முற்படக் கூறப்பெற்ற ஐஞ்சீரடிக்கும் அறுசீரடிக்கும் முடுகியல் நிலை நீக்கார் ஆசிரியர்.

எ - டு : "வெல்புகழ் உயர்நிலைத் தொல்லியல் துதைபுதை துளங்கிமில்" (கலி-105) ஐஞ்சீரடி முடுகி வந்தது.

"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா அறிவனை முந்துறீஇ" (கலி-குறி-3) அறுசீரடி முடுகி வந்தது.

**சூ. 381 : ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்**
**மூவகை அடியும் முன்னுதல் இலவே (67)**

க - து : மேற்கூறிய மூவகை முடுகியலடிகளும் வாராத பாக்கள் இவை என்கின்றது.

உரை : ஆசிரியப்பாவின்கண்ணும் வெண்பாவின்கண்ணும், மேற்கூறிய மூவகை முடுகியலடிகளும் வருதலில்லை. எனவே நாற்சீரடியே ஒரோவழி முடுகி வருமென்பது பொருட்பேற்றான் கொள்க.

எ - டு : "திருமழை தலைஇய இருள்நிற விசும்பின் (மலைபடு-1) என முடுகி வந்தவாறு காண்க.

**சூ. 382 : ஈற்றய லடியே ஆசிரிய மருங்கின்**
**தோற்றம் முச்சீர்த் தாகு மென்ப (68)**

க - து : முச்சீரடி ஆசிரியத்துள் வருமென்கின்றது.

உரை : ஆசிரியப்பாவினிடத்து ஈற்றயலடியின் தோற்றம் முச்சீருடையதாகுமென்று கூறுவர் புலவர்.

எ - டு : நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே (குறுந்-3)

'தோற்றம்' என்றதனான் எல்லா அடிகளும் நாற்சீரடியானும் வருமென்பதும் பெறப்படும்.



அதனை நிலைமண்டில ஆசிரியமென்றும் முன்னதனை நேரிசை யாசிரியமென்றும் இடைக்கால யாப்பிலக்கண நூலார் பெயரிட்டுக் கூறுவர்.

**சூ. 383 : இடையும் வரையார் தொடையுணர் வோரே (69)**

க - து : ஆசிரியப்பாவின் இடையேயும் முச்சீரடி வருமென்கிறது.

உரை : ஆசிரியப்பாவின்கண் ஈற்றயலேயன்றி இடையிடை முச்சீரடி வருதலையும் பாவினைத் தொடுக்கும் இயல்புணர்ந்தோர் நீக்கார்.

'இடையும்' என்னும் உம்மையை இழிவு சிறப்பாக்கி அதனாலே இடையே இரு சீரடி வரினும் ஆம் எனக் கொள்க.

எ - டு : "சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே" (235)
என்னுப்புறப்பாட்டினுள்
"நரந்தம் நாறுந் தன்கையால்"
"இரப்போர் கையுளும் போகி" என முச்சீரடிகளும்
"பெரியகட் பெறினே" என இருசீரடியும்
வந்தவாறு காண்க.

இதனை இணைக்குறளாசிரியம் என்ப. இதனான் இறுதிநாற் சீரடியாயே முடியும் என்பது பெறப்படும்.

**சூ. 384 : முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும் (70)**

க - து : கலியினுள்ளும் முச்சீரடி வருமென்கிறது.

உரை : கலிப்பா வகையுள் முச்சீரடி பலவாகவும் நிலை பெறும். உம்மையாள் சிலவாக நிற்றலே சிறப்புடைத்தாதல் பெறுதும்.

எ - டு : 'அரிபரி பறுப்பன சுற்றி'
எரிதிகழ்கனிச்சியோன் சூடிய பிறைக்கண்
'உருவ மாலை போலக்'
குறுதிக்கோட்டொடு குடர்வலத்தன (முல்லைக் கலி-3)

எனவரும். பலவும் என்னாது நிறையவும் நிற்குமென்றதனான் கலி யுறுப்பினுன் அம்போதரங்க உறுப்பு முச்சீரடியாய் நிறைந்து நிற்கு மென்பதும் கொச்சகத்துள் ஒருசாரன முச்சீரடியாய் நிறைந்து வருமென்பதும் கொள்க.

---

எ - டு : பானிற வண்ணன் நீ பனிமதிக் கடவுள் நீ
நீல்நிற உருவும் நீ நிறமிகு கனலி நீ
அறுமுக ஒருவன் நீ ஆனிழற் கடவுள் நீ
பெறுதிரு உருவும் நீ பெட்பன பிறவும் நீ

EFEO_GUEST_JLC_02-039 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இவ் எட்டும் முச்சீரடி அம்போதரங்கம். இவற்றை இருசீரடியாகக் கொள்வார் பேராசிரியர். அது பொருந்தாமையை அவ்வுறுப்பிலக்கணங் கூறும் வழிக் கூறுதும்.

"மையணி கண்டனை வானோர்
ஐயனை ஆயிரம் பேழ்வாய்ப்
பையர வம்பல பூணும்
மெய்யனை மேயது வீடே" என்பது யாப்பினுள்

வறுபட்டு வந்த கொச்சக ஒருபோகு. இதனை இடைக்காலத்தார் வஞ்சிவிருத்தம் என்ப.

சூ. 385 : வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே (71)

க - து : வஞ்சிப்பாவின் முடிவு ஆமாறு கூறுகின்றது.

உரை : இருசீரடியானும் முச்சீரடியானும் வருமென்ற வஞ்சிப் பாக்கள் முடியுங்கால் ஆசிரியப்பாவினது இயல்பான் முடியும்.

தூக்கு என்பது சீர்களான் நிறைந்து ஓசையறுதியாக முடியும் அடிகளின் முடிபாகும். "நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே" என்றதனான் நாற்சீரடியினைச் 'செந்தூக்கு, என்பார் இயல் நூலார். நால்வகைப் பாக்களுள் நாற்சீரான் நடைபெறுவன ஆசிரியம் வெண்பா. கலி ஆகிய மூன்றுமேயாம். அவற்றுள் திரிபின்றி நாற்சீரடியான் முடிவது ஆசிரிய மட்டுமேயாதலின் செந்தூக்கு என்பது ஆசிரியத்திற்குரிமையாய் ஆசிரியத்தூக்கு எனவும் பெயர் பெற்று நிற்கும்.

வஞ்சிப்பா தனக்குரிய அடியான் முடிந்து நில்லாமல் ஆசிரியப் பாவிற்குரிய அடியான் அம்முறைமையான் முடியும். அஃதாவது ஈற்றடி நாற்சீராய் ஈற்றயலடி முச்சீராய் முடியும். அதனான் "செந்தூக்கியற்றே" என்றார் எனத் தெளிக.

எ - டு : வாள், வலந்தர மறுப்பட்டன (புறம்-3)
என்னும் வஞ்கி பாட்டின் இறுதி.
"தாயில் தூவாக் குழவிபோல
ஓயாது கூம்நின் உடற்றியோர் நாடே"
என முடிந்தமை காண்க. பிறவும் அன்ன.

சூ. 386 : வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும் (72)

க - து : வெண்பாவிற்கு முடிபாமாறு கூறுகின்றது.

உரை : வெண்பாவின் ஈற்றடி முச்சீர் கொண்ட அடியாகும். எடுத்துக்காட்டுப் பின்னர்க் காண்க.



"இனி 'ஆகும்' என்றதனான் நாற்சீரடியாய் மண்டலித்து வருதலும் கொள்க. இடையே மூச்சீரான் வருதலும் கொள்க." என்பார் நச்சினார்க்கினியர். அவ்வாறு வருவன கலியுறுப்பாகி வரும் கொச்சக வெண்பாவும், வெண்பா நடைத்தாகிய முதுமொழியும் ஆதலன்றிச் செப்பலிசையினவாகிய வெண்பா ஆகா என்க.

சூ. 387 : அசைச்சீர்த் தாகும் அவ்வயி னான. (73)

க - து : இதுவும் அது

உரை : மேற்கூறிய வெண்பாட்டீற்றடியின் இறுதிச்சீர் அசைச்சீராய் முடியும்; ஈற்றுச்சீர் என்பது அதிகாரத்தான் வந்தது.

சூ. 388 : நேரீற் றியற்சீர் நிரையும் நிரைபும்
சீரேற் றியலும் இயற்கைய என்ப. (74)

க - து : இறுதி அசைச்சீர்களுக்குமேல் நிற்கும் சீர்கள் இவை என்கின்றது.

உரை : நிரையும் நிரைபுமாகிய அசைச்சீர்கள் நேரீற் றியற்சீர் இரண்டனையும் ஏற்றுத் தளைபெற்று இயலும் இலக்கணத்தன, என்று கூறுவர் புலவர்.

எ - டு : நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவல மிலர்

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு

எனத் தேமாவும் புளிமாவுமாகிய இயற்சீரோடு இறுதிச்சீர் தளைத்து முடிந்தவாறறிக.

சூ. 389 : நிரையவண் நிற்பின் நேரும் நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர் (75)

க - து : இதுவுமது

உரை : நேரும், நேர்புமாகிய அசைச்சீர்கள் தமக்குமேல் நிரையீற்றுச் சீர்கள் நிற்பின் அவற்றை ஏற்று இயலுதல் வரைவின்று எனக் கூறுவர் மெய்ம்மொழிப் புலவர்.



EFEO_GUEST_JLC_02-040 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எ - டு : பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்
படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசருள் ஏறு. எனவரும்.

மேல் நேரீற்றியற்சீர் எனவும் சீரேற்றியலும் எனவும் விதந்து கூறியாங்குக் கூறாமல் "நிரையவண் நிற்பின்" என்று கூறியதன் கருத்தாவது :

"வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே" எனக் கூறியதனான் நேரீற்றவாகிய வெண்பாஉரிச்சீர்கள் நான்கும் நிரையீறு போல நிற்க அவற்றொடு நேரும் நேர்பும் தளைத்து முடியும் என்பதனை நினைவுறுத்தலாம்.

எ - டு : பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.
இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. எனவரும்.

சூ. 390 : எழுசீ ரிறுதி ஆசிரியம், கலியே (76)

க - து : கலிப்பாவின் இறுதி முடியுமாறு கூறுகின்றது

உரை : கலிப்பாவினிறுதி (மூன்றும் நான்குமாகிய) ஏழு சீர்களைக் கொண்ட ஆசிரிய அடிகளாலாகும்.

கலி எனப் பொதுப்படக் கூறினும் சுரிதக உறுப்புப் பெற்றுவரும் கலிப்பாவிற்கே இம்முடிபு என்பதும் ஏழுசீர் எனப் பொதுப்படக் கூறினும் முச்சீரடியும் நாற்சீரடியுமாகிய ஏழுசீர் என்பதும் ஏற்புழிக் கோடல் என்பதனான் கொள்ளப்பெறும். வஞ்சிப்பாவிற்குக் கூறியாங்குச் செந்தூக்கான் முடியுமெனக் கூறாது 'எழுசீரிறுதி ஆசிரியம்' எனவிதந்து கூறினார். வஞ்சிப்பா மண்டில ஆசிரிய அடியானும் முடியும் கலிப்பா நேரிசையாசிரிய அடிகளானன்றி மண்டில ஆசிரிய அடிகளான் முடியாதென்பது உணர்த்தற் பொருட்டென அறிக.

சூ. 391 : வெண்பா இயலினும் பண்புற முடியும் (77)

க - து : இதுவுமது.

உரை : கலிப்பாவின் இறுதி நேரிசையாசிரியடிகளான் முடிதலேயன்றி வெண்பா முடியும் இயல்பானும் பண்புற முடியும்.



சீரும் தளையும் ஓசையும் வழுவாது வரல் வேண்டுமென்பார் பண்புற முடியும் என்றார். இம்முடிபு நால்வகைக் கலிப்பாவிற்கும் ஒக்கும். எடுத்துக்காட்டு கலிப்பா இலக்கண உரை கூறுநீ வழிகாட்டுதும்.

சூ. 392 : எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர். (78)

க - து : நிறுத்த முறையானே 'யாப்பு' என்னும் உறுப்பினது இலக்கணம் கூறுகின்றது.

உரை : அறம் முதலாய பொருள்களுள் தாம் உணர்த்தக் கருதியவற்றைச் செய்யுளாக யாத்து உணர்த்தும் யாப்பறி புலவோர், எழுத்தும் அசையும் சீரும் உறுப்பாக ஓசையொடு நிறைந்த அடியின்கண் ஏழு திணைபற்றி வரும் அகமும் புறமுமாகிய பொருளைத் தெற்றெனத் தோன்றுமாறு அதன்கண் முழுமையாக நாட்டுதலை 'யாப்பு' என்னும் உறுப்பென்று கூறுவர்.

"அசையும் சீரும் இசையொடு சேர்த்தி" என்றதனான் 'மாத்திரை' அவற்றுளடங்குதலின் விதந்து கூறாராயினார்.

ஆயின் 'அசை' யெனவே எழுத்து அதனுள் அடங்காதோ? எனின் "உயிரில் எழுத்தும் எண்ணப்படா" என்றதனான் ஐயம் தோன்றுமாதலின் அடங்காது. பொருளுணர்ச்சிக்கு எல்லா எழுத்தும் காரணமாதலின் எழுத்திணை விதந்து கூறினார் என்க. எ - டு. பாட்டும் தொகையுமாக அமைந்தவையாவும் கொள்க.

சூ. 393 : பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலொ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது எனமனார் புலவர். (79)

க - து : ஏழுவகை இலக்கியத்திலும் வழங்கும் வழக்கு மேற்கூறிய யாப்பின் வழியது என்கின்றது.

உரை : பாட்டும் உரையும் நூலும் வாய்மொழியும், பிசியும், அங்கதமும் முதுசொல்லும் ஆகிய அவ் ஏழு வகை இலக்கியத்தின் கண்ணும் வண்மையாற் புகழ் சான்ற வேந்தர் மூவரின், தண்ணிய உலகத்தினிடத்து வடக்கே வேங்கட மலையும் தெற்கே குமரி

EFEO_GUEST_JLC_02-041 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

யாறும் கிழக்கும் மேற்கும் கடலுமாகிய நான்கு பெரிய எல்லைக்குள் வாழும் தமிழ்ச் சான்றோர்கள் வழங்கும் செய்யுள் வழக்கு மேற் கூறிய யாப்பின் வழியதாகும் என்று கூறுவர் புலவர்.

புலனெறி வழக்கம் சான்ற தமிழ் மக்கள் வழங்கும் செய்யுள் வழக்கெல்லாம் யாப்பின் வழிப்பட்டு ஏழு வகையாக வழங்குவனவே யாம் என்பது கருத்து. இது செய்யுள் இலக்கணம் கூறும் இயலா கலின் வழக்கென்றது செய்யுள் வழக்கென்பது போதரும்.

பாட்டென்பதனுள் பாவும் அடங்கும், பாட்டாவது அறமுத லாகிய மும்முதற்பொருளைப் பயனாகக் கொண்டு அகமும் புறமு மாகிய பொருளைத் தழுவி மாத்திரை முதலாய செய்யுளுறுப்புக் களுள் வேண்டுவன பெற்று நிகழும் ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி, மருட்பா, பரிபாடல் என்னும் அறுவகையினதாகும். உரை முதலாகிய ஆறும் அவற்றிற்குரிய இலக்கணம் கூறும் வழி விளக்கப் பெறும்.

மூவராவார்=சேர சோழ பாண்டியர். இதனைப் ''போந்தை வேம்பே ஆரெனவரூஉம் மாவருந்தானையர் மலைந்த பூவும்'' என்பதனான் அறிக. இவர்கள் உலகின் தொல்பெருங் குடியின ராதலின் உலகம் அவர்க்கு உரியதாயிற்று.

பொழில்=நிலஉலகம், அஃதாவது ஞாலம். தான் சுழன்று பொழுதினை உண்டாக்குவதால் அப்பெயர்த்தாயிற்று. பொழு தினைச்செய்வது பொழில். கடலாற் சூழப்பட்டிருத்தலின் தண்மை இயற்கை அடையாயிற்று.

வரைப்பு—வரைந்து கொள்ளப்பட்ட நிலம். திசை நான் காதலின் எல்லையும் நான்காயிற்று. வழக்கென்பது அவாய் நிலையான் வந்தது. வழங்கும் வழக்கு எனக் கூட்டி உரை கொள்க.

தமிழ் மொழியின் செம்மையும் தமிழ் மக்களின் சால்பும் தமிழ் வேந்தரின் தொன்மையும் தன்மையும் புலப்பட ''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின் நாற்பேரெல்லை யகத்தவர்'' எனத் தன் பெருமிதம் தோன்றக் கூறினார். இதனான் தமிழக வரலாறும் தொல்காப்பியத்தின் தொன்மையும் உய்த்துணரப்படும்.

**சூ. 394 :** மரபே தானும்
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று. **(80)**

**க - து :** நிறுத்தமுறையானே 'மரபு' என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறு கின்றது.



**உரை :** செய்யுட்கே உரிய உறுப்பாகிய 'மரபு' என்பதுதான் இயற்சொல் முதலாகிய நால்வகைச் சொற்கள் இயங்கும் இயல்பான் மேற்கூறிய யாப்பின்கண் தோன்றுவதாகும்.

எழுவகைச் செய்யுளும் சொற்களைக் கருவியாகக் கொண்டு நிகழ்தலின், '' நாற் சொல்லியலான் '' என்றார். எனவே நால் வகைச் சொற்களையும் வழுவின்றி அமைக்கும் முறைமை மரபென்னும் செய்யுள் உறுப்பாயிற்று என்க. இதனை

''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுளீட்டச் சொல்லே'' என்பதனானும்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும் (மரபியியல்-91)

என்பதனானும் அறிக. தான் என்பது சிறப்புணர்த்தி நின்றது.

பெயர்வினை இடையுரி என்பவை இயற்சொல் முதலிய நான் கினது இலக்கணப் பாகுபாடாதலின் அவை வேறாகா. வடசொல் என்பது தமிழின் ஒருகூற்றுச்சொல். பிற விளக்கங்கள் சொல் லதிகார உரையுள் கூறப்பெற்றன,

மரபு நாற்சொல்லியலான் யாப்பு வழிப்படுமாறு :-

''பூத்த கரும்பின் காய்த்த நெல்லின், கழனியூரன்'' (ஐங் 4)
கயலார் நாரை போர்விற் சேக்கும் (ஐங் - 9)
வெல்போர்ச் சோழர் ஆமூ ரன்னஇவள்
நலம்பெறு சுடர்நுதல் தேம்ப'' (ஐங் - 55)
உருமிசைப் புணரி உடைதரும் துறைவற்கு (ஐங் - 351)
வெள்வசீப்படிஇயர் மொய்த்த வள்பழீஇக்
கோள் நாய்க் கொண்ட கொள்ளை'' (நற் - 83)
புள்ளொலி மணிசெத் தார்ப்ப
விளிந்தன்று மாதவர்த் தெளிந்த வென்நெஞ்சே (நற் - 178)
ஓவுக்கண்டன்ன இல்வரை யிழைத்த
நாறுகொள் பிரசம் ஊன்றும் நாடற்கு (நற் - 268)
சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய
கல்போல் பிரியலம் (அகம் - 1)
யாமே எமியமாக ஒழியச் சூழ்ந்தனையாயின் (அகம் - 32)
நுதலும் தோளும் திதலையல்குலும்
வண்ணமும் வனப்பும் வரியும் வாட. (அகம் - 119)
தேமி யுய்த்த நேள நெஞ்சின்
தவிரா ஈகைக் கவுரியர் மருக (புறம் - 3)
இறைஞ்சுக பெரும நின் சென்னி (புறம் - 6)
நிலைக்கொராஅ இலக்கம் போன்றன (,, - 4)

EFEO_GUEST_JLC_02-042 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

யூபம் நட்ட வியன்களம் பலகொல் (,, -15)
நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கி ,,
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரைய
பாசிலை முல்லை முகைக்கும் (புறம் - 17)
ஆனினங் கலித்த அதர்பல கடந்து ( ,, - 138)
உறைப்புழி ஓலைபோல
மறைக்குவன் பெருமநிற் குறித்து வருவேலே (புறம்²296)
எல்லா இஃதொத்தன் என்பெறான் கேட்டைக்காண் (கலி 61)
நின்னொடுஉசாவுவன் நின்றீத்தை (கலி 94)
எல்லிற்றுப் போதாயின் ஈதோளிக் கண்டேனால் (கலி 117)
ஒருங்குருண்டு பிளந்து நெரிந்துருள்பு,
சிதறுபு அளறு சொரிபு நிலஞ்சேர (பரிபாடல்-2)
புகை பூ அழல் ஆராதனை அழல்பல ஏந்தி ,, 6)
அரிவையர் அமிர்த பானம் ,, )
உரிமைமாக்கள் உவகை அமிர்துய்ப்ப ,, 8)

என நால்வகைச் சொற்களும் செய்யுள் மரபாய் யாப்பின் வழிப் பட்டு வந்துள்ளமையும் அது மரபாமாறும் கண்டு கொள்க.

அஃதாவது நெல் விளைந்தது முற்றியது என்பது வழக்காக இருப்பவும் 'காய்த்தது' எனக்கூறி உணர்த்திய நிலை, புலமைப் பாங்குடையதாகலின் அங்ஙனம் கூறுதல் மரபாக அமைந்து செய் யுளுறுப்பாயிற்றென அறிக. ஏனையவும் அவ்வாறே அமைந்து விளங்குமாற்றைக் கண்டு கொள்க.

மரபு காலந்தோறும் திரியும்பான்மைத் தாகலின் சங்கப்பாக் களுள் விரவி வந்த சொற்களும் உவமைகளும் தொடைகளும் இடைக்காலத்து இலக்கியங்களுள் சிறிது மாறியும் இக்காலத்திற் பெரிதும் வேறுபட்டும் வழங்குமாற்றை இலக்கியங்களை ஒப்பிட்டு நோக்கி யாவும் யாப்புவழிப்பட்டு நிற்பதையறிக. பிறவும் அன்ன.

**சூ. 395 : அகவ லென்ப தாசிரி யம்மே (81)**

க - து : நிறுத்த முறையானே தூக்கென்னும் செய்யுளுறுப்பு உணர்த்தத் தொடங்கி ஆசிரியத்தூக்கு ஆமாறு கூறுகின்றது. 'தூக்கு' என்பதன் சொற்பொருள் மேல் உரைக்கப் பெற்றது. (சூ.1)

உரை : அகவல் என வழங்கப்பெறும் ஓசை ஆசிரியப் பாவினது தூக்கோசையாம். அகவுதல்=அழைத்தல்; வலித்தும் மெலித்தும் நெகிழ்த்தும் கூறப்பெறும் ஓசையை அகவல் என்ப.



எ - டு : நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே

இதனை இசைத்து அடிதொறும் ஆசிரியத்தூக்கு நிகழுமாறு காண்க. ஆசிரிய அடியினைச் செந்தூக்கு என வழங்குவர் என்பது மேலே விளக்கப்பட்டது.

**சூ. 396 : அதாஅன் றென்ப வெண்பா யாப்பே. (82)**

க - து : வெள்ளைத் தூக்கு ஆமாறு கூறுகின்றது.

உரை : அகவிக்கூறும் ஓசை அன்று வெண்பா யாப்பிற்குரிய தூக்கோசை எனக்கூறுவர் புலவர்.

எனவே அகவுதற்கு மறுதலைப்பட்ட ஓசையாகிய செப் லோசை வெண்பாவிற்குரிய தூக்கோசை என்பதாயிற்று' செப்பல்—விடுத்தல் ஆதலின் அழைத்தலுக்கு மறுதலையாயிற்று. செப்பலாகிய விடை, வினாவை உள்ளடக்கியதாகலின் இவ் வோசை வினாவும் செப்பும் போல எடுத்தலும் படுத்தலுமாக வருமெனக் கொள்க.

எ-டு : முயங்காக்காற் பாயும் பசலைமற் றூடி
உயங்காக்கால் உப்பின்றாம் காமம்—வயங்கோதம்
நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப!
புல்லாப் புலப்பதோ ராறு (நாலடி—40—1)

யாகாவா ராயினும் நாகாக்க, காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (குறள்-127) எனவரும்

'வெண்பாயாப்பே'' என்றது வெண்பா யாத்தற்குரிய தூக்கோசை, என்றவாறு :

**சூ. 397 : துள்ள லோசை கலியென மொழிப (83)**

க - து : கலிப்பாவிற்குரிய தூக்கோசை ஆமாறு கூறுகின்றது.

உரை : துள்ளி நிகழும் ஓசையைக் கலிக்குரிய தூக்கோசை எனக் கூறுவர் புலவர்.

துள்ளுதலாவது தாவுதல், மூரன்றுவரும்'ஓசை ஈண்டுத் துள்ளல் எனப்பட்டது. துள்ளுதல் எனினும் கலித்தல் எனினும் ஒக்கும். இதனானே மேலே ''அகவல்'' என்றதும் ''அதான்று'' என்றதும் ஓசையையே என்பது புலனாகும்.

EFEO_GUEST_JLC_02-043 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கலிப்பா வெண்பாவின் கிளையாதலானும் ஒருசார் கலிப் பாக்கள் செந்தூக்கானிறுதலானும் கொச்சகத்துள் ஒருசாரான வெண்பா ஒப்ப நடை பெறுதலானும், ஓசை பல்வேறுபட்ட உறுப்புகளை உடையது ஆதலானும் ''கலியாகும்மே'' என்னாது '' கலியென மொழிப '' என்றார்.

எனவே தரவும் இடைநிலைப்பாட்டுமாகிய உறுப்புக்கள் துள்ளலோசையான் நடத்தப்பெறும் என்பதும், உரிமை வகை யான் அது கலிப்பாவிற்கு உரியதென்பதும், கலித்தல் என்பது 'தூக்கு' என்னும் உறுப்பென்பதும் புலனாகும்.

எ-டு: மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடும் அன்னந்தன்
அணிமிகு சேவலை அகலடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலங்கியம் மடப்பெடை
மதிநிழல் நீருட்கண் டதுவென உவந்தோடித்
துன்னத்தன் னெதிர் வரூஉம் துணைகண்டு மிகநாணிப்
பன்மலரிடைப்புகூஉம் பழனஞ்சேர் ஊரகேள்! (கலி-70)

இத் தரவுஉறுப்புத் துள்ளலோசையான் வந்தமை காண்க.

சூ. 398 : தூங்க லோசை வஞ்சி யாகும். (84)

க - து : வஞ்சிப்பாவிற்குரிய தூக்கோசை கூறுகின்றது.

உரை : தூங்கலென்னும் ஓசை வஞ்சிப்பாவிற்குரிய தூக்கோசையாகும் எனக் கூறுவர் புலவர்.

தூங்கல்=நெகிழ்ந்து நிற்றல். இஃதிக்காலத்துத் ''தொங்குதல்'' என வழங்குகிறது. ''தூங்குக தூங்கிச் செயற்பால'' என்பதனான் இதன் பொருளை அறிக.

வஞ்சிப்பா ஆசிரியத்தின் கிளையாதலின் அகவலோசை சிறிது நீண்டு நெகிழின் அஃது வஞ்சிக்குரிய தூங்கோசையாகின்றமை புனலாகும். இவ்வாறு ஓசை நீளுதலான் நாற்சீரின் குறைந்து இரு சீரடியாயும் முச்சீரடியாயும் வஞ்சியடிகள் நிற்கின்றன என்று அறிக. அதனான் சீர் குறைந்து ஓசை நிறையும் தூக்கினை வஞ்சித்தூக் கென்றனர் யாப்பறி புலவர் என்று தெளியலாம்.

எ - டு : அரிமயிர்த் திரள் முன்கை
வாலிழை மடமங்கையர்
வரிமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து
தண்பொருநைப் புனல் பாயும்



விண்பொரு புகழ் விறல் வஞ்சி
பாடல் சான்ற விறல்வேந்த னும்மே
வெப்புடைய அரண் கடந்து
துப்புறுவர் புறம்பெற் றிசினே
புறம்பெற்ற வயவேந்தன்
மறம்பாடிய பாடினியும்மே
ஏருடைய விழுக்கழஞ்சின்
சீருடைய இழைபெற்றிசினே
இழை பெற்ற பாடினிக்கும்
குரல் புணர்சீர்க் கொளைவல் பாண்மகனும்மே
எனவாங்கு
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே'' (புறம்-11)

இவ்வஞ்சிப்பாவினுள் ஏழாவது அடியும் பதினைந்தாவது அடியும் செந்தூக்கு இறுதி இரண்டடிகளும் ஆசிரியச் சுரிதகம் ஏனைய அடிகள் வஞ்சித்தூக்கு ஆமாறு இசைத்துக் காண்க.

சூ. 399: மருட்பா ஏனை இருசா ரல்லது
தானிது வென்னும் தனிநிலை இன்றே (85)

க-து: மருட்பாவிற்குத் தூக்குறுப்பு இன்மை பற்றியதொரு விளக்கம் கூறு கின்றது.

உரை : மருட்பாவாவது அகவலும் செப்பலுமாகிய இருசார் தூக்குறுப்பான் வருவதல்லது தான் இத்தூக்கோசைக்கு உரியது என்னும் தனிநிலையுடையதின்று.

ஏனை இருசாராவது அகவலும் செப்பலுமாம்; என்னை? பாவிரி மருங்கினைப் பண்புற விரிப்பின் ஆசிரியப்பா வெண்பா என்றாங்கு ஆயிருபாவினுள் அடங்குமென்ப (சூ-108) எனவும் ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை வெண்பாநடைத்தே கலியென மொழிப (சூ-107) எனவும் பின்னர் இரண்டாக அடக்கிக் கூறப் படுதலின் என்க. இக்கருத்தான் ஏனை இரண்டென்னாது, 'இருசார்' என ஓதினார் ஆசிரியர், அதனான் செப்பல் முன்னும் அகவல் பின்னும் வருதலும் கொள்க. பாட்டு வகையான் மருட்பா வேறாயினும் ஓசை பற்றிய தூக்கு வகையான் வேறாகா தென்பது கருத்து. எனவே தூக்கோசை நான்கு வகைப்படு மென்பது பெறப்பட்டது.



EFEO_GUEST_JLC_02-044 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**சூ. 400 : அவ்விய லல்லது பாட்டாங்குக் கிளவார் (86)**

**க-து :** தூக்குறுப்பான் பாட்டினை வரையறை செய்கின்றது.

**உரை :** எழுவகை நிலத்துள், மேற்கூறிய நால்வகைத் தூக் கோசையாகிய இலக்கணத்தானல்லது பாட்டினைக் கிளத்தல் செய்யார் நல்லிசைப் புலவர்.

பண்ணொடு வரும் பரிபாடலும் பண்ணத்தியும் இந்நால் வகைத் தூக்கினுள் அடங்குதலின் அவ்வியல் அல்லது பாட்டுக் கிளவார் என வரையறை செய்தார்.

**சூ. 401 : தூக்கியல் வகையே ஆங்கென மொழிப (87)**

**க-து :** தூக்குறுப்பின் தொகையை வலியுறுத்தி ஐயமகற்றுகின்றது.

**உரை :** தூக்கென்னும் செய்யுளுறுப்பு இயலும் வகையாவது, மேற்கூறிய அவ்வளவினவே எனக் கூறுவர் புலவர். ஆங்கென்றது, அந்நான்கு என்றவாறு.

அராகமும் முடுகியலும் எண்ணும், வண்ணமுமாகியவற்றான் தூக்குப் பலவாக வருங்கொல்? என நின்ற ஐயம் நீங்க "வகையே ஆங்கென மொழிப" என்றார். வகை ஆங்கே என ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டிக் கொள்க. இத்தொகைச் சூத்திரத்தைப் பின்னது நிறுத்தல் என்னும் உத்தியாற் பிற்கூறினார். இவ்வாறு கூறுதல் இவ்வாசிரியர் இயல்பென்பதனைத் தொடை அளவு பற்றிய இலக் கணங் கூறுமிடங்களான் அறியலாம்.

**சூ. 402: மோனை எதுகை முரணே இயைபென**
**நால்நெறி மரபின தொடைவகை என்ப (88)**

**க – து :** நிறுத்த முறையானே தொடை என்னும் செய்யுளுறுப்புக் கூறத் தொடங்கி அதன் வகையாமாறு கூறுகின்றது.

**உரை :** மோனை எதுகை முரண் இயைபு எனத் தொடை வகைகள் நான்கு நெறியினையுடைய மரபினவாகும் எனக் கூறுவர் புலவர்.

மரபு பற்றி வரும் சிறப்பில்லாத் தொடைகளும் உளவாதலின் நான்கென்னாது 'நால்நெறி' என்றும்; அவை அடியும் சீரும் பற்றி விரிதலின் தொடை என்னாது "தொடை வகை" என்றும் கூறினார். அவற்றைப் பின்னர் விதந்து கூறுவார்.



**சூ. 403: அளபெடை தலைப்பெய ஐந்து மாகும் (89)**

**க – து :** அளபெடையும் தொடை வகையாக வரும் என்கின்றது.

**உரை :** மேற்கூறியவற்றொடு அளபெடையையும் கூட்டத் தொடை வகை ஐந்தும் ஆகும். செய்யுளிசை அளபெடை செயற்கை ஆதலின் பிரித்துக் கூறினார் என உணர்க.

**சூ. 404: பொழிப்பும் ஒரூஉவும் செந்தொடை மரபும்**
**அமைந்தவை தெரியின் அவையுமார் உளவே (90)**

**க – து :** பிறிதொருசார் தொடை வகை கூறுகின்றது

**உரை :** பொழிப்புத்தொடையும், ஒரூஉத்தொடையும், செந் தொடையுமாக அமைந்துள்ளவற்றை ஆராயின் அவையும் உள வாகும். இவை சீர்களை நோக்கி ஓரடிக்கண் கொள்ளப் பெறுவன ஆதலின் பிரித்து இழிவு சிறப்புமை கொடுத்துக் கூறினார் என்க. மோனை முதலாயின இன்றிச் செஞ்சொல்லாய் அடிநிரம்புவனவும் தொடையாகக் கொள்ளப்படுதலின் செந்தொடை என்னாது 'செந்தொடை மரபு' என்றார்.

"அமைந்தவை தெரியின்" என்றதனான் பொழிப்பும் ஒரூஉவும் போல, சீரின்கண் அமைந்து வருவன பிறவும் உள வெனக் கொள்க. அவையாவன இணையும் கூழையும் முற்றுமாம்.

**சூ. 405: நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்**
**மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப (91)**

**க – து :** மற்றொருசார் தொடைவகை கூறுகின்றது.

**உரை:** பெயரொடு பெயரையும் பெயரொடு வினையையும் நிரலே நிறுத்தமைத்தலும், ஒரு சொல்லே (சீரே) இரட்டிவர யாத் தலும் மேற்கூறிய இலக்கண முறைமையான் தொடையாக நிறை வுற்று வரும் எனக் கூறுவர் புலவர்.

இவை சிறப்பிலவாயினும் தொடையாகக் கொள்க என்பது கருத்து. நிரனிறை ஓரடியினின்று மற்றொரு அடிக்கண்ணும் விரவுதலானும் இரட்டைத் தொடையானது மோனை-எதுகை-இயைபென்றற்கும் ஏற்ப நிற்றலானும் இவற்றின் சிறப்பின்மை தோன்ற இறுதிக்கண் கூறினார். நூலோர் மேற்கொண்டுள்ளமை யின் "என்ப" என்றார்.

EFEO_GUEST_JLC_02-045 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நிரல் நிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல் வேறுநிலைஇப் பொருள் வேறு நிலையல் (சொல்-406)

என அதன் இலக்கணம் சொல்லதிகாரத்து ஓதப்பட்டமையின் ஈண்டு " நிரல்நிறுத்தமைத்தலும் " என வாளாகூறினார். சொன் முடிபாகிய பொருள்கோள் இலக்கணம் பற்றி ஆண்டுக் கூறினார் : ஈண்டுத் தொடை இலக்கணம் பற்றிக் கூறினார் என அறிக.

இரட்டை யாப்பு என்பது சொல்லின் முடியும் இலக்கணத்ததாய் நின்றது. ' நிரனிறை, இரட்டை ' என வாளா கூறாமல் அவற்றின் இலக்கணம் புலப்பட நிரல் நிறுத்து அமைத்தலும், என்றும் இரட்டை யாப்பும் என்றும் கூறினார். எனவே நிரனிறைத் தொடை இரு வகைப்படுமென்றும் இரட்டைத் தொடை ஒன்றே என்பதும் புலப்படும். ஏனையவை பற்றிய இலக்கணங்களை மேற் கிளந்து கூறுவர்.

எ-டு : கொடிகுவளை கொட்டை நுகப்புண்கண்மேனி
மதிபவளம் முத்தம் முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடை நோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சிமகள்

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயு மற்று — இவை

பெயரொடு பெயரை நிரலே நிறுத்த நிரனிறைத்தொடை

அடல்வேல் அமர் நோக்கி நின்முகங்கண்டே
உடலும் இரிந்தோடும் ஊழ்மலரும் பார்க்கும்
கடலும் கனையிருளும் ஆம்பலும் பாம்பும்
தடமதியம் ஆமென்று தாம் — இது

வினையொடு பெயரை நிரலே நிறுத்த நிரனிறைத் தொடை.

இனி எதிர்நிரனிறை முறைநிரனிறை, மயக்க நிரனிறை எனப் பிறவாறும் விரித்துக் கூறுவார் பிறர். அவையாவும் பெயரும் வினையுமாகிய இவ் இரண்டின்கண் அடங்குமாறறிக.

இனி இரட்டைத் தொடை வருமாறு :

பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவீற்றிருந்த புலவர்காள்
எனவும்,

ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினிற் சீரெரி ஒக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்.
எனவும் வரும்.



உரையாசிரியன்மார் இவற்றை வேறாக எண்ணிக்கொள்ளாமல் முற்கூறியவற்றுள் அடங்கும் எனக் கூறி விடுத்தனர்.

" ஆசிரியர் மொழிந்தவற்றியலான் முற்றும் " என்றதனான் இவையும் தொடை வகை என்பதே அவர்தம் கருத்தாகும். உரையாளர் இவற்றை மோனை எதுகையுள் அடங்குமெனக் கூறி விடுத்தமை பொருந்தாமை உணர்க.

ஒரு செய்யுட்கண் தொடை ஒன்றே வரல் வேண்டுமென்பது யாப்புறவில்லை. ஒன்றும் பலவும் வரலாம். எழுத்து வகையான் மோனை எதுகை அளபெடை எனவும், எழுத்தும் அசையும் சீரும் பற்றிய வகையான் இயைபெனவும் சொல் வகையான் முரண் எனவும் செந்தொடை எனவும் தொடை வேறுபாடு கோடல் இலக்கணமாம். அம்முறையாற் சொல் பற்றி வரும் நிரனிறையும் சீர் பற்றி வரும் இரட்டையும் கொள்ளல் வேண்டுமென்பதே ஆசிரியர் கருத்தென்பதை "மொழிந்தவற்றியலான் முற்றும்" என்பதனான் அறியலாம்.

நிரனிறையையும் முரணையும் இடைக்காலத்தார் அணி வகையாகவும் கூறுவர். நிரனிறையைப் பொருள் கோள்வகையிலும் கூறுவர். இவ்ஆசிரியர் இவற்றைத் தொடைவகையுள் கூறினார். இவற்றின் சிறப்பின்மை தோன்ற செந்தொடையொடு இயைபுபட இறுதிக்கண் கூறினார் என்க.

இரட்டைத் தொடையானது, மோனை, எதுகை, இயையு என்னும் மூன்றற்கும் ஒத்தலின் ஒன்றன்பால் அடக்குதற்கு ஏலாமையின் அதனை வேறுபடுத்திக் கூறினார் என அறிக.

## சூ. 406: அடிதொறும் தலையெழுத் தொப்பது மோனை(92)

க - து : மோனைத் தொடைக்கு இலக்கணங் கூறுகின்றது.

உரை : ஒரு செய்யுளுள் அடிதொறும் முதல் எழுத்து ஒத்து வருதல் மோனைத் தொடையாகும்.

முன்னை என்னும் இயற்சொல் மோனை எனத் திரிந்து இலக்கணக் குறியீட்டுச் சொல்லாயிற்று. 'அடிதொறும்'என்பதனை மேல் வருவனவற்றொடும் கூட்டிக் கொள்க. "ஆயிருதொடைக்கும் கிளைஎழுத்துரிய " என்பதனான் அடிமோனைத் தொடை இரு வகைப்படும் என்க.

எ-டு : கேள்கே டூன்றவும் கிளைஞராரவும்
கேளல் கேளிர் கெழீஇயின ஒழுகவும். (அகம். 39)

EFEO_GUEST_JLC_02-046 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இல்லதென் இல்லவள் மாண்பானால், உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. (குறள்-53) என வரும்.

## சூ. 407: அஃதொழித் தொன்றின் எதுகை யாகும் (93)

க – து : எதுகைத் தொடைக்கு இலக்கணங் கூறுகின்றது.

உரை : மேற்கூறிய தலையெழுத்தை விட்டு அதற்கு அடுத்த எழுத்து அடிதோறும் ஒத்துவரின் அஃது எதுகைத் தொடையாகும். எதிர்கை என்னும் இயற்சொல் திரிக்கப்பெற்று எதுகை என இலக்கணக் குறியீடாக நின்றது.

எ-டு : விளங்குபகல் உதவிய பல்கதிர் ஞாயிறு
வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலின். அகம். 91
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (குறள்-1) என வரும்.

அஃதொழித்தொப்பது என்னாது ஒன்றின் என்றமையான் முதலெழுத்து அளவான் (மாத்திரை) ஒன்றுதல் வேண்டுமெனக் கொள்க. கிளை எழுத்து வகையான் அடி எதுகையும் இரு வகைப்படும் என்க.

## சூ. 408: ஆயிரு தொடைக்கும் கிளையெழுத் துரிய. (94)

க - து : மோனை, எதுகை எழுத்துப் பற்றியதொரு புறனடை கூறுகின்றது

உரை : மேற்கூறிய மோனைத் தொடைக்கும் எதுகைத் தொடைக்கும் ஒத்த எழுத்துக்கள் வருதலேயன்றி அவ்வவற்றிற் குரிய கிளை எழுத்துக்கள் வந்தும் அவ்வத்தொடையாதற்கு உரியனவாகும்.

கிளையெழுத்துக்கள் இவை என ஆசிரியர் எடுத்துக் கூறிற் றிலர். ஒருகால் கூறப்பெற்ற சூத்திரங்கள் விடப்பெற்றிருத்தலும் கூடும். ஆயினும் ஆசிரியர் இந்நூலுள் அமைத்துள்ள சூத்திரங் களிற் காணப்பெறுவனவற்றை நோக்கிக் கிளை எழுத்துக்களை ஓராற்றான் உய்த்துணரலாம். அம்முறையில் கொள்ளப்பெறுவன வருமாறு :

உயிர், உயிர்மெய் எழுத்துக்களுள் அ, ஆ, ஐ, ஔ-வும், இ, ஈ, எ, ஏ-வும், உ, ஊ, ஒ, ஓ-வும், இவை ஊர்ந்த உயிர்மெய்களும் கிளையாம்.

பிறப்பியலுள் ஐகார ஔகாரங்களை முறையே இகர உகரங் களொடு சேர்த்துக் கூறியுள்ளனரே எனின், ஆண்டு உயிர்ப் பிசையின் முடிபு நிலை நோக்கிக் கூறப்பட்டது. ஈண்டு உயிர்ப் பிசையின் தொடக்க நிலை நோக்கிக் கிளையாகக் கொள்ளப்பட்ட தென்றறிக. இதனை,



அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் எனவும்
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் எனவும்
காப்பின் கடுமை கையற வரினும் எனவும்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும் எனவும்
வருந்தொழிற் கருமை வாயில் கூறினும் எனவும்
பொழுதும் ஆறும் புரைவ தன்மையின் எனவும்

வரும் சூத்திரங்களானும் பிறவற்றானும் அறியலாம்.

இனி மெய்யுள் வல்லெழுத்தாறும் தம்முள் கிளையாகும், மெல் லெழுத்திற்கும் இடையெழுத்திற்கும் இஃதொக்கும். மேலும் இவற்றுள் ய, ஞ - த, ச - ம, வ தம்முட்கிளையாக வரும். இவை பிறப்பிட ஒற்றுமையாற் கிளையாயின.

கிளையெழுத்துக்கள் பெரும்பான்மையும் சீரின்கண் காணும் தொடைகள் மாட்டுச் சிறப்பாக வரும் என அறிக.

எ-டு : கண்டற் கானல் குருகினம் ஒலிப்ப—இணைமோனை
உவவுமதி யுருவின் ஓங்கல் வெண்குடை-கூழைமோனை
கல்லாதான் ஒட்பங் கழிய நன்றாயினும்
கொள்ளார் அறிவுடையார்.

வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்
சீருடை நன்மொழி நீரொடுசிதறி
தக்கார் தகவிலர் என்பதவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

இவை கிளை எழுத்து அடியெதுகை.

## சூ. 409: மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே (95

க - து : முரண் தொடையிலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை : சொல்நிலையானும், பொருள் நிலையானும் தம்முள் மாறுபட வருதல் முரண் தொடையாம்.

இத்தொடை இரண்டிரண்டடிகளிற் காணல் வேண்டும். அங்ஙனம் அடிதொறும் மாறுபட்டு வரும் முரண்தொடை மூவகைப் படும். அவையாவன, சொல்லொடு சொல் முரணுதல், சொல்லொடு பொருள் முரணுதல், பொருளொடு பொருள் முரணுதலாம்.

EFEO_GUEST_JLC_02-047 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எ-டு : நெடுநீர்ப் பரப்பின் குறுநர் தந்த
செவ்வி வாய்ந்த செம்பாட் டீரத்து
வெள்ளை வெண்மறி மேய்புலத் தொழிய
செந்தொடைப் பகழி வாங்கிச் சினஞ்சிறந்து
கருங்கைக் கானவன் களிற்று நிறத்தழுத்தலின்

இவை சொல்லளவில் முரணாயின.

செவ்வரை நிவந்த சேணிடை யருவி
வெண்மறி கறித்த முல்லை
நீரோரன்ன சாயல்
தீயோ ரன்ன வென் உரனவித்தன்றே

இவை சொல்லானும் பொருளானும் முரணாயின.

"தேரும் யானையும் குதிரையும் பிறவும்"
"கண்ணும் தோளும் முலையும் பிறவும்"
"கண்ணும் தோளும் தண்ணறுங் கதுப்பும்"

இவை பொருளான் முரணாயின.

இதனை ஐந்தாக விரிப்பார் பேராசிரியர். விரிப்பினும் அவை இம் மூன்றினுள் அடங்குமாறறிக. மற்று அவர்தம் எடுத்துக்காட்டுக் களுள், கூறப்படும் இலக்கணத்திற் பொருந்தாதனவும் உள.

**சூ. 410: இறுவாய் ஒன்றல் இயைபின் யாப்பே. (96)**

க - து : இயைபுத் தொடை இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை : அடிதொறும் இறுதிநிலை ஒத்துவருதல் இயைபுத் தொடையாம். யாத்தல் தொடுத்தலாகலின் யாப்பு என்றார்.

'இறுவாய்' எனப் பொதுப்படக் கூறினமையான் எழுத்தியை யும், அசைஇயைபும், சீரியையும் கொள்ளப்படும். அவ்வாற்றான் இயைபுத்தொடை மூவகைப்படுமெனக் கொள்க.

எ-டு : அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை இருத்த தோகை — இவை

அடியெழுத்தியைபுத் தொடை - அசையியைபெனினும் ஒக்கும்.

மன்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும் (குறு-31)

இஃது அசையியைபுத் தொடை.

மலையிடை யிட்ட நாட்டரு மல்லர்
மரன்தலை தோன்றா ஊரரு மல்லர் (குறு-203)

இது சீரியைபுத் தொடை. பிறவும் இவ்வாறே வரும்.



**சூ. 411. அளபெழின் அவையே அளபெடைத் தொடையே (97)**

க - து : அளபெடைத் தொடையின் இலக்கணங் கூறுகின்றது.

உரை : செய்யுளிசை நிறைத்தல் வேண்டி அடிதொறும் அள பெழுந்து நிற்பின் அவையே அளபெடைத் தொடையாகும்.

ஒற்றளபெடையையும் கருதி "அவையே" என்றார். தனி மொழிக்கண் இயற்கையளபெடையைத் தொடையாகக் கொள்ளு தலை நீக்கி இசைநிறை அளபெடையையே தொடையாகக் கொள்ளுதல் வேண்டுதலின் "அளபெழின்" அவையே என்றார். ஏகாரம் பிரிநிலை. இறுதி ஏகாரம் ஈற்றசை.

எ-டு : ஓஒ இனிதே எமக்கின்னா செய்தகண்
தாஅம் இடர்ப்பட் டன

உறாஅர்க் குறுநோய் உரைப்பாய்க் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு

இவை உயிரளபு – அடியளபெடைத்தொடை

வண்ண்டு வீழும் மலர்நெடுங் கூந்தலாள்
பண்ண்டை நீர்மை யிலள்

எஃஃஃ கிலங்கிய கையராய் இன்னுயிர்
வேஃஃஃகு வார்க்கில்லை வீடு.

இவை ஒற்றளபு ; அடியளபெடைத் தொடை

உயிரளபெடையும் ஒற்றளபெடையும் அடிதொறும் வரும் தொடைக்கண் விரவிவாரா, சீர்தொறும் வரும் தொடைக்கண் விரவி வரும் எனக் கொள்க. இடைக்காலத்தார் ஈரிடத்தும் விரவி வருதலைக் கொள்வர்.

**சூ. 412: ஒருசீ ரிடையிட் டெதுகை யாயின்
பொழிப்பென மொழிதல் புலவோ ராறே (98)**

க - து : இதுகாறும் அடிதொறும் படும் தொடை கூறி. இது முதல் இரண்டு சூத்திரத்தான் சீர்தொறும் படும் தொடை கூறுவாராய். இச்சூத்திரத் தான் பொழிப்புத் தொடை ஆமாறு கூறுகின்றார்.

உரை : நாற்சீரடியுள் ஒருசீர் இடையிட்டு எதுகை அமைந்து நிற்பின் அதனை பொழிப்புத்தொடை எனக் கூறுதல் இலக்கண நூலோர் நெறியாம்.



EFEO_GUEST_JLC_02-048 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இதனான் சீர்தொறும் வருதலே சிறப்பென்பது புலனாம். எதுகை சிறப்புடைத்தாதலின் விதந்து கூறினார். ஏனைய மோனை, முரண் இயைபு அளபெடை நிரனிறைத் தொடைகட்கும் உரையிற் கோடல் என்னும் உத்தியால் இவ்விலக்கணம் கொள்ளப்படும். எடுத்துக்காட்டுப் பின்னர்க் காட்டப் பெறும்.

**சூ. 413: இருசீ ரிடையிடின் ஒரூஉ என மொழிப (99)**

க - து : ஒரூஉத் தொடையினிலக்கணங் கூறுகிறது.

உரை : நாற்சீரடிக்கண் இடையிரு சீர்களில் இன்றி எதுகை முதலாயினவரின் அவை ஒரூஉத் தொடை ஆம் எனக் கூறுவர்.

இங்ஙனம் இடையிட்டு வருதலை எடுத்துக் கூறி மொழியாத தனை முட்டின்றி முடித்தல் என்னும் உத்தியான் இணைந்து வருந் தொடைகளைக் கொள்ள வைத்தார் என அறிக. அவையாவன, முதலிரு சீர்க்கண் வருவன இணை என்றும் முதல் மூன்று சீர்க்கண் வருவன கூழை என்றும் நான்கு சீரினும் வருவன முற்று என்றும் மரபு நோக்கிக் கொள்ளப் பெறுவன.

ஆக, சீர்நிலை பற்றி வரும் தொடைகளுள் இவ் ஐந்தும் சிறப் புடையனவாம்.

இனி, இரண்டாம் சீரினின்றி ஏனையவற்றின்கண்ணும் மூன்றாம் சீரினின்றி ஏனையவற்றின்கண்ணும் பின் இரண்டு சீரின் கண்ணும், மூன்று சீரின்கண்ணும், நடு இரு சீரின்கண்ணும், இரண்டாம் சீரினும் இன்றி ஏனைய சீர்க்கண்ணும் வருவனவற்றை யெல்லாம் ஆராய்ந்து கொள்ளப்புகின் அவை வரம்பிலவாம் ஆதலின் அவை சிறப்பில்லாதனவாகும். இதனைத் தொகைச் சூத்திரத்தை ஆசிரியர் அமைத்துக் கூறுமாற்றான் உய்த்துணர்க. இவற்றிற்கு எடுத்துக்காட்டு :

மோனை : உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு (முருகு-1)
இணைமோனை
செருநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை (முருகு-1)
பொழிப்பு மோனை
உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை (புறம்-3)
கூழை மோனை
வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும் (புறம்-6)
ஒரூஉ மோனை
கற்க கசடற கற்பவை கற்றபின் முற்றுமோனை



எதுகை: மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின் : இணை எதுகை
பொன்நேர் மேனி நன்னிறம் சிதைத்தோர் பொழிப்பு ,,
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து கூழை எதுகை
உள்ளார் கொல்லோ தோழி கிள்ளை (குறு-67) ஒரூஉ ,,
இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
—முற்று எதுகை.

முரண் : நிலவும் இருளும் போல்வ நீள்வரை இணை முரண்
வருதும் எனமொழிந்தார் வாரார்கொல் கானம்
பொழிப்பு முரண்
தேரும் யானையும் குதிரையும் பிறவும் கூழை முரண்
இன்சொற் குழியுள் இனிதெழும் வன்சொல் ஒரூஉ ,,
நிலனும் நீரும் தீயும் விசும்பும் முற்று முரண்

இயைபு: இயைபுத் தொடைகாணுங்கால் இறுதிச் சீரினை முதற் சீராகக் கொண்டு காணுதல் இலக்கண மரபென அறிக.
ஓங்கிய சுரத்தை நீங்கி ஏகி இணை இயைபு
விரிந்தானா மலராயின் விளிந்தாலுங் குயிலாயின்
—பொழிப்பு இயைபு
பொருசமத் தெழுவனர் ஒருவினர் விரைவனர்-கூழை ,,
கரவெழும் கன்னற் குழியுள் இரவெழும் —ஒரூஉவியைபு
இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்
—முற்று இயைபு

அளபெடை: பேஎய்க் கொளீஇயள் இவளெனப்படுதல் :
—இணை அளபெடை
சுறாஅக் கொட்கும் அறாஅ இருங்கழி: பொழிப்பு ,,
விடாஅ விடாஅ வெரீஇப் பெயரும்: கூழை ,,
வுழாஅ நெஞ்சிற் றெய்வமும் தொழாஅ: ஒரூஉ ,,
தொழாஅள் எழாஅள் விடாஅள் தொழாஅ: முற்று ,,

நிரனிறை: கருவிளை கார்முல்லை கண்ண் கூரெயிறு
இணை நிரனிறை
கரும்பு கவினும் சொல்லாம் சன்னிக்கு: பொழிப்பு ,,
கணைபிணைகண் கொவ்வையிதழ்
காரளகம் பாவையள்: கூழை ,,
முத்துக்கோத் தன்ன முகஞ்செய் முறுவல்: ஒரூஉ ,,
முறிமேனி முந்தம் முறுவல் வெறிநாற்றம்: முற்றுநிரனிறை

EFEO_GUEST_JLC_02-049 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இனிச் சீர்தொறும் காணும் தொடைகள் விரவியும் வரும், அவ்வழிச் சிறந்து வருவனவற்றால் தொடை கூறி ஏனையவற்றைத் தழுவிக் கொள்க.

சூ.414: சொல்லிய தொடையொடு வேறுபட் டியலின்
சொல்லியற் புலவரது செந்தொடை என்ப. (100)

க - து : செந்தொடையின் இலக்கணம் ஆமாறு கூறுகின்றது

உரை : பொழிப்பு முதலாகக் கூறப்பெற்ற சீர்நிலைத் தொடைகளும் மோனை முதலாய அடிநிலைத் தொடைகளும் ஆகியவற்றுள் ஒன்றும் பெறாமல் அவற்றொடு வேறுபட்டு நடப்பின், செய்யுட்கண் தொடைப்பட்டு நிற்கும் சொல்லமைப்பினைத் தெரிந்த இலக்கண நூலார் அதனைச் செந்தொடை என்று கூறுவர்.

செம்மையாவது திரிபுபடாததாகலின் மோனை முதலாய செயற்கைத் திரிபின்றி இயற்கையாக நின்ற செஞ் சொற்றொடை செந்தொடை எனப்பட்டது.

எ-டு : “நெடுவேள் மார்பின் ஆரம் போல” எனவும்
“பூத்த வேங்கை வியன்சினை ஏறி” எனவும் வரும்.

செய்யுள் முழுதும் செந்தொடையாயேவரின் அதனைச் செந் தொடைச் செய்யுள் என்ப.

கிளை எழுத்து முதலாக ஏதெனும் ஒரு சார்பு தோன்றி நிற்குமாயின் அதனை மருட்செந்தொடை என வழங்குவர் இடைக்கால யாப்பிலக்கண நூலார்.

சூ. 415: மெய்பெறு மரபின் தொடை வகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொன்று தலையிட்ட பத்துக்குறை எழுநூற்
றொன்றும் என்ப உணர்ந்திசி னோரே (101)

க - து : மேற்கூறிய பதினேழ் நிலத்தும் விரிந்த அறுநூற்றிருபத்தைத்து அடிகளின்கண் மேற்கூறிய தொடைகள் மரபுவகையான் அமைந்து வருமாறும் அவற்றின் தொகையும் கூறுகின்றது.

உரை : எழுத்துக்களாலும் சொற்களாலும் உருப்பெறும் மரபினை உடைய தொடை வகைகள் தாம். பதின்மூவாயிரத்து எழுநூறு என்று கூறுவர் தொடையிலக்கண முணர்ந்த புலவர்.

ஒரு பாவின்கண் அடிதொறும் வரும் தொடைகளையும் சீர்தொறும் வரும் தொடைகளையும் முன்னர்ப் பிரித்தோதினாராகலின் அம்முறையானே அவற்றின் தொகையினையும்



உணர்த்தல் வேண்டி, ஐயீராயிரத்தென்றும், ஆறைஞ்ஞூற்றொடு தொன்றுதலையிட்ட பத்துக் குறை எழுநூற்றொன்று என்றும் கூறுனார்.

ஆறைஞ்ஞூற்றொடு எழுநூறு - பத்துக்குறை தொன்று தலையிட்ட ஒன்றும் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

எனவே அடிவகைத் தொடை பதினாயிரம் என்பதும் சீர்வகைத்தொடை மூவாயிரத்து எழுநூறு என்பதும் பெறப்படும். தொன்று = ஒன்பது. தொன்றுதலையிட்ட என்றது ஒன்பது கூடிய என்றவாறு பத்துக்குறை என்றது பத்துக் குறைந்த என்றவாறு. எனவே ஒன்பது கூடிய பத்துக் குறைந்த எழுநூற்றொன்று என்றது எழுநூறு என்னும் தொகையினையாம். “ஆறைஞ்ஞூற்றொடு” என்னும் எண்ணின்கண் வந்த ஒடு “எழுநூற்றொன்றும்” என்னும் எண்ணும்மையொடு இயைந்தது.

“ஐயீராயிரம்” என்றது போல மூவாயிரத்தெழுநூறு எனச் செவ்வனம் கூறாமல் இவ்வாறு கூட்டியும் குறைத்தும் ஓதியது என்னையெனின் ? சூத்திரயாப்பு முறைமையுள் இவ்வாறமைப்பது ஒரு நயம் என்பதைப் புலப்படுத்தற்கும் தொடை பற்றிய தொகையினை உய்த்துணர வைத்தற்குமாம்.

உய்த்துணருமாறு :- எழுநூறு என்னும் தொகை பெறுதற்கு எழுநூற்றொன்றொடு ஒன்பதினைக் கூட்டிப் பின் பத்தினைக் குறைத்துக் கொள்ளக் கூறியதுபோலச் சீர்வகை பற்றி எடுத்தோதிய தொடைகளொடு எடுத்தோதானவாய் மரபு பற்றி வருவனவற்றை கட்டிக் கொள்ளுதலும், அடி வகைக்கு ஓதிய தொடைகளுள் சீர் வகைக்கு ஏலாதவற்றையும் சிறவாதவற்றையும் நீக்கிக் கொள்ளுதலுமாகும்.

அங்ஙனம் கொள்ளுமாறு: ஓதப்பெற்ற அடிவகைத்தொடைகள் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, நிரனிறை, இரட்டை, செந்தொடை என்பவையாகும். இவற்றுள் மோனையும் எதுகையும் கிளை எழுத்துப் பெறும் என்றும் முரண் சொல்லினும் பொருளினும் முரணும் என்றும் விதந்து கூறி அம்முறைமையாற் சொல்லும் பொருளுமாக முரணுதலைக் கொள்ள வைத்தார்.

அங்ஙனம் கூறிய முறைமையான் விதந்தோதாத இயைபு. அளபெடை, நிரனிறைத் தொடைகளின் வகைகளையும் கொள்ளுதல் வேண்டும். இவற்றின் வகையாவன : இயைபுத் தொடை எழுத்தியைபேயன்றி, அசை இயைபும் சீரியைபுமாக

வருதலும். அளபெடை உயிரளபெடை ஒற்றளபெடையாக வருதலும் நிரனிறை பெயரும் பெயருமாகவும் பெயரும் வினையு மாகவும் வருதலும் ஆகும்.

எனவே அடிவகைத் தொடைகள் பதினாறாக வரும்.

அவையாவன :

1. ஒத்த எழுத்தால் வரும் மோனைத் தொடை
2. கிளை எழுத்தால் வரும் ,,
3. ஒத்த எழுத்தால் வரும் எதுகைத் தொடை
4. கிளையெழுத்தால் வரும் ,,
5. சொல்லொடு சொல் முரணும் முரண் தொடை
6. பொருளொடு பொருள் முரணும் ,,
7. சொல்லொடு பொருள் முரணும் ,,
8. எழுத்திலையபுத் தொடை
9. அசையியையபுத் தொடை
10. சீரியையபுத் தொடை
11. உயரளபெடைத் தொடை
12. ஒற்றளபெடைத்தொடை
13. பெயரொடு பெயர் நிரனிறைத் தொடை
14. பெயரொடு வினை நிரனிறைத் தொடை
15. இரட்டைத்தொடை
16. செந்தொடை என்பனவாம்.

இங்ஙனம் வரும் பதினாறு தொடைகளும் வழுவிலவாயமைந்த அறுநூற்றிருபத்தைந்து அடிகளில் வரும். இவற்றை உறழ ($625 \times 16 = 10,000$) ப் பதினாயிரம் தொடைகள் வருமாறு காண்க. இவை அடிவகை பற்றி வரும் தொடைகள்.

இனிச் சீர்வகைத் தொடைகளாக ஆசிரியரால் விதந்தோதப் பெற்றவை பொழிப்பும் ஒருஉவுமாகிய இரண்டே, அவற்றையும் எதுகைக்கே விதந்து கூறினார்.

கூறுங்கால் "புலவோராறே" என்று கூறினார். பின்னர் "தெரிந்தனர் விரிப்பின் வரம்பிலவாகும்" என்றும் கூறுவார். அதனான் வரம்பிற்குள் விரித்துக் கொள்ள வேண்டுமென்பது அவர் கருத்தாதல் புலனாகும். அங்ஙனம் வரம்பிற்குள் விரிக்குங்கால் சிலவற்றைக் கூட்டியும் சிலவற்றை விலக்கியும் தொகை கோடல் ஆசிரியரின் கருத்தென்பது மேல் விளக்கப்பெற்றது.

அம்முறைமையான் சீர்வகைத் தொடைகளை அமைத்துக் கொள்ளுமாறு: பொழிப்பு, ஒருஉ ஆயவற்றொடு இணை, கூழை, முற்று என்னும் வகைகளைக் கூட்டிக் கொள்ளுதலாம்.



இவற்றை மோனை முதலாயவற்றொடு உறழுங்கால் ஓரடிக்குள் வரும் சொல்லொடு பொருள் முரணும் முரண், சீர் வகையுள் நின்று சிறுவாமையின் அதனையும், அடிமுழுதும் வரும் இரட்டைத் தொடையுள் சீரியையபுத் தொடை அடங்குமாதலான் அதனையும், வேறுபட்டு வரும் செந்தொடையையும் களைந்தும், அளபெடை களையும், நிரனிறைகளையும் ஒவ்வொன்றாகக் கொண்டும் அமைத்துக் கொள்ளல் ஆகும்.

அங்ஙனம் அமையுங்கால் தலைமையாய தொடை பத்தாகும்.

அவையாவன :

1. ஒத்த எழுத்து மோனை
2. கிளை எழுத்து மோனை
3. ஒத்த எழுத்தெதுகை
4. கிளையெழுத்தெதுகை
5. சொல்முரண் தொடை
6. பொருள் முரண் தொடை
7. எழுத்தியையபுத் தொடை
8. அசையியையபுத் தொடை
9. அளபெடைத் தொடை
10. நிரனிறைத் தொடை என்பவையாகும்.

இவற்றை இணை, பொழிப்பு, கூழை, ஒருஉ, முற்று என்னும் ஐந்தொடும் உறழ ($10 \times 5 = 50$) ஐம்பது சீர்வகைத் தொடைகள் வரும்.

இவற்றைப் பதினேழ் நிலத்தவாய் வழுவின்றி வரும் அடிகளின் பயின்று வருதற்குரிய எழுபத்து நான்கு சீர்களொடும் உறழ ($50 \times 74 = 3700$) மூவாயிரத்தெழுநூறு தொடைகளாகும்.

இனிப் பதினேழ் நிலத்தும் பயின்று வரும் 74 சீர்களாவன :

| | |
|---|---|
| உரியசைச்சீர் | 2 |
| இயற்சீர் | 10 |
| ஆசிரிய உரிச்சீர் | 6 |
| வெண்சீர் | 4 |
| வஞ்சியுரிச்சீர் | 52 ஆக எழுபத்துநான்கு சீர்களாம். |

"சீர்நிலைதானே ஐந்தெழுத்திறவாது" எனச் சீர்கள் வரை யறை செய்யப் பெற்றமையின் ஐந்தெழுத்தினும் இறந்துவரும் எண் வகை வஞ்சியுரிச்சீர்கள் விலக்கப் பெற்றன. இயலசைச் சீர்

இரண்டும் எழுத்தளவையடிக்கண் சீராக நிலைபெறாவாகலின் நீக்கப்பெற்றன. ஆதலின் சீர் வகையால் தொடை பெறுவன எழுபத்து நான்கு சீர்களேயாம். அவையாவன :

| | | |
|---|---|---|
| நேர்பு, நிரைபு | — | அசைச்சீர் |
| தேமா, புளிமா<br>பாதிரி, கணவிரி<br>போதுபூ, விறகுதீ<br>பூமருது, காருருமு<br>கடியாறு, மழகளிறு | | இயற்சீர் 10 |
| வீடுபேறு, பாறுகுருகு<br>தடவுமருது, வருகுசோறு<br>நீடுகொடி, விரவுகொடி | | ஆசிரியஉரிச்சீர் 6 |
| மாசேர்வாய், புலிசேர்வாய்<br>மாவருவாய், புலிவருவாய் | | வெண்சீர் 4 |

அறுபது வஞ்சியுரிச் சீர்களுள் ஐந்தெழுத்தைக் கடந்து வரும்

| | | |
|---|---|---|
| நிரைநிரைநிரை | நிரைநிரைநிரைபு | ஆகிய எட்டும் அல்லாத வஞ்சி யுரிச்சீர் 52. ஆகக் கூடுதல் 74 சீர்கள். |
| நிரைநிரைபுநிரை | நிரைநிரைபு நிரைபு | |
| நிரைபுநிரைநிரை | நிரைபுநிரை நிரைபு | |
| நிரைபுநிரைபுநிரை | நிரைபுநிரைபுநிரைபு | |

இங்ஙனம் அடிவகைத் தொடை பதினாயிரமும், சீர்வகைத் தொடை மூவாயிரத்தெழுநூறும் கூட்டப் பதின்மூவாயிரத்து எழுநூறு தொடைகள் ஆமாறு காண்க.

இத்தொகைச் சூத்திரத்திற்கு உரையாசிரியன்மார் மூவரும் வேறு வேறாக விளக்கங் கூறியுள்ளனர். அளவிலும் மாறு பட்டுள்ளனர் அவர்தம் உரையும் விளக்கமும் பொருந்தாமையை விரிக்கின் பெருகும் ஆதலின் நல்லிலக்கணந்தேர் மாணாக்கர் மெய்ம்மையை ஆய்ந்து கொள்வார்களாக.

இனித்'தொன்று' என்னும் பாடந்தை யாவரும் 'தொண்டு' என்றே வைத்து அதற்கு ஒன்பது எனப் பொருள் கூறியுள்ளனர். தொண்டு என்பதற்கு உரிச்சொற் பகுதி 'தொள்' என்பதாகும். இதனடியாகத் தொளை, தொள்ளை, தொளி, தொடு, தொண்டு, தோண்டு என்னும் பெயரும் வினையுமாகிய சொற்களே பிறக்கும்.



அவ்வழித் 'தொண்டு' என்பது வளைவு, சுளிவு, நெளிவு, தொய்வு, குனிவு, தளர்வு என்னும் பொருள் தருதலன்றித் தொன்மை, முன்மை, பழமை என்னும் பொருள் பயத்தலில்லை.

பத்தென்னும் எண்ணிற்குத் தொன்மையாயது என்பதைக் குறிக்க ஆசிரியர் 'தொன்று' எனக்கூறியுள்ளார். இதன் உரிச் சொற் பகுதி "தொல்" என்பதாகும். இதன்வழித் தொல், தொல்லை, தொலை, தொன்மை தொன்று என்னும் பெயர்கள் பிறக்கும். எனவே தொண்டு என்னும் சொற்குத் தொன்மை என்பது பொருளாகாமை தெரியலாம்.

இனி, மலைபடுகடாத்தில் வரும் "தொடித்திரிவன்ன தொண்டுபடுதிவவு" என்பதற்குப் பொருள், இறுக்கவும் தளர்க்க வும் ஏற்பச் சுற்றி வளைத்துக் கட்டப்பெற்ற திவவு என்பதாகும். திவவு வார்க்கட்டு. 'தொடித்திரிவன்ன' என்ற உவமத்தானும் அஃது உணரப்படும்.

இனிப் பரிபாடல் 3 இல் வரும் "ஆறென ஏழென எட்டெனத் தொண்டென நால்வகை ஊழிஎண்" என்னும் அடியில் வரும் தொண்டு ஏடெழுதுவோரால் நிகழ்ந்த பிழையாகும். அஃது "ஏழென எட்டெனத் தொன்றென" என்றே இருத்தல் வேண்டும்.

தொன்றுதொட்டு என்பது தொண்டுதொட்டு எனப் பேச்சு வழக்கில் திரிந்த பிழை வழக்கை ஆராயாமல் நோக்கித் தொண் டென்பதற்குப் பழையது முந்தியது எனத்தவறாகப் பொருள் கொண்டனர் போலும். அன்றித் தொன்றென்பதன் அடியாகப் பிறந்து திரிந்த தொண்ணூறு தொள்ளாயிரம் என்பவற்றுள் தொண்-தொள் என்பவை முதனிலையாக நிற்றலைநோக்கி அதுவே உண்மை எனவும் கருதியிருக்கலாம். அவை தொல்நூறு தொல் லாயிரம் என்பவற்றைத் திரித்து அமைத்துக் கொண்டவையே என்பதை எனது எழுத்ததிகார உரையுள் கண்டுகொள்க.

**சூ.416: தெரிந்தனர் விரிப்பின் வரம்பில வாகும் (102)**

க - து : தொடைவகை பற்றிய அளவைக்குப் புறனடை கூறுகின்றது.

உரை : மேற்கூறிய தொடை வகைகளை மேலும் ஆராய்ந் தனராய் விரிக்கப்புகின் அவை வரம்பிலவாய்ச் செல்லும். எனவே ஒரு வரம்பிற்குள் முடித்துக் கொள்க என்றவாறு. அஃதாவது; மோனை எதுகைகளை இடையிட்ட மோனை - எதுகை, விட்டிசை மோனை-எதுகை, மூன்றாம் எழுத்தொன்று எதுகை, தலையாகு மோனை-எதுகை, இடையாகுமோனை- எதுகை கடையாகு



EFEO_GUEST_JLC_02-052 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

மோனை-எதுகை முதலியவாகவும், சீர்வகைத் தொடைகளை கீழ்க் கதுவாய், மேற்கதுவாய் கடையிணை, பின், கூழை, பிற்பொழிப்பு, இடைஇணை முதலியவாகவும், நிரனிறையை எழுத்து நிரல்நிறை, முறை நிரனிறை எதிர் நிரனிறை முதலியவாகவும் பிறவாறாகவும் விரிக்கப்புகின் அவை வரம்பிலாவாமாறு அறிக.

**சூ.417: தொடைநிலை வகையே ஆங்கென மொழிப (103)**

**க - து :** தொடை இலக்கணத்தை முடித்துப் புறனடை கூறுகின்றது.

**உரை :** பாட்டின்கண் பயிலும் தொடைநிலை வகைகள் மேற் கூறியவாறு அமையுமெனக் கூறுவர் புலவர்.

என்றது; ஏதேனும் ஒருவாற்றான் வரையறை செய்து கொள்க விரிப்பின் வரம்பில என்றவாது.

தொடைநிலை வகைகளைக் கூட்டினும் குறைப்பினும் அவைபற்றிச் செய்யுட்கண் தோன்றுவதோர் வழுவின்மை யானும் வண்ணமும் அழகும் பயத்தலன்றித் தூக்கும் பாவும் வழுவு தலின் மையானும் "ஆங்கென மொழிப" என்றார். "தொடை வகைதாமே" எனத் தொடங்காமல் இதனைப் பிற் கூறினார் பின்னது நிறுத்தல் என்னும் உத்தி வகை பற்றி என்க.

**சூ.418: மாத்திரை முதலா அடிநிலை காறும்**
**நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே. (104)**

**க - து :** நிறுத்த முறையானே 'நோக்கு' என்னும் செய்யுளுறுப்பாமாறு அதன் இலக்கணங் கூறுகின்றது.

**உரை :** குறித்த பொருளை முடிய நாட்டும் யாப்பமைந்த செய்யுளின்கண் அமையும் ஓசையளவும் ஓசையைப் பயக்கும் எழுத்தும் அவற்றாலாம் அசையும் இசையறுதி செய்யும் சீரும், அடியும் ஆகிய கருவி உறுப்புக்கள் யாவும் அச்செய்யுளைக் கேட் போர், செவியின்பமுறுதலொடு அதன் பொருளையும் பயனையும் மீண்டும் மீண்டும் கருதி இன்புறுதற்குரியதாகச் செய்யும் காரணம் 'நோக்கு' எனச் செய்யுள் நடை அறிந்தோராற் கொள்ளப்படும்.

கருதக் கருத ஒருகாலைக் கொருகாற் பொருள் நுணுகிச் செல் வதற் கேற்றவாறு அவ்வுறுப்புக்கள் அமையும் அடிப்படையைக் காரணம் என்றார்.

மாத்திரை முதலியன அடியுள் அடங்குமேனும் அவை ஒவ்வொன்றும் நோக்குதற்குக் காரணமாக அமைதல் வேண்டு



மென்பதனை வலியுறுத்த "மாத்திரை முதலா" என எடுத்துக் கூறினார் என அறிக. "அடிநிலைகாறும்" என்றமையின் செய்யுள் முழுதும் இந்நோக்குறுப்பு அமைந்து நிற்றல் வேண்டு மென்க.

எ - டு : ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ
வெம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே [குறுந்.63]

கண்ணழிவு :- ஈதலும், துய்த்தலும், இல்லோர்க்கு இல் என, செவ்வினை கைம்மிக எண்ணுதி - அவ் வினைக்கு அம் மா அரிவையும் வருமோ ? எம்மை உய்த்தியோ ? உரைத்திசின் நெஞ்சே.

நோக்குரை :- 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதிய மில்லை உயிர்க்கு' என்பதையும், அதுவே இம்மைப் பயனாகிய இல்வாழ்க்கை அறம் என்பதையும் உணர்ந்தானாய்ப் பொருளில் லார்க்கு "ஈதலும் இல்" எனவும் பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதையும் அது பொய்யா விளக்கம் என்பதையும் உண்ணலும் உடுத்தலும் பூணலும் காணலும் களித்தலும் திளைத் தலும் பொருளில்லார்க்கு மெய்த்தலின்மையான "துய்த்தலும் இல்" எனவும்,

வினையே ஆடவர்க்கு உயிராய்ப், பிறந்த ஞான்று தொட்டுத் தொடர்ந்து நிகழ்தலையும் தான் அதனை முன்பு ஆற்றியுள்ள லமையும் தோன்ற "செய்வினை" என்றும் அதன் இன்றியமை யாமையும் சிறப்புந் தோன்ற "அவ்வினைக்கு" என்றும், இன்மை யதிளிவும்; உடைமையது உயர்ச்சியும் கருதுதலான் அக்கருத்து ஒருகாலைக் கொருகால் மிகுதல் தோன்றக் "கைம்மிக எண்ணுதி" எனவும்,

நாளது சின்மையும் இளமையதருமையும் உணர்ந்தானாய்க் கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனால் துய்த்தற்குரிய இன்பம் ஒண்டொடிகண்ணே உள என்பதைக் கருதுவானாய் "அம் மா அரிவை" எனவும்,

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோலத் தன் முயக்கற்றம் பார்க்கும் பசப்பு ஆதலின் அவ்வினைக்கு அரிவையும் வருமோ எனவும் பொருள் நுணுகி நோக்குப்பட அமைந்தவாறும்,

வினை ஒன்றையே மேற்கொண்டமை தோன்ற "நெஞ்சே" என ஒருமையானும், அன்பும் அருளும் அறிவும் செறிவுமாகிய பண்

EFEO_GUEST_JLC_02-053 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பெல்லாம் தன்னோடு நிறைந்து நிற்குமாறு தோன்ற ''எம்மை'' என்றும், அந்நெஞ்சம் தன்னொடு உடன் வராது என்பது தோன்ற ''உய்த்தியோ'' என்றும் சொற்கள் நோக்குப்பட அமைந்தவாறும்.

ஈதலும் துய்த்தலுத் என்னும் சார்பானும் உடையார் இல்லார் என்னும் வழக்கானும் 'பொருள்' என்னும் செயப்படு பொருள் தோன்றி நின்றவாறும், தலைவன் கட்புலனால் துய்க்குந் தன் காதலுணர்வுதோன்ற 'அம் மா அரிவை' என்றும் அவள் தான் இல்லறக்கிழமை பூண்டமை தோன்றப் பேதை முதலிய பருவங் களைச் சுட்டாது 'அரிவை' என்றும் தாம் இருதலைப் புள்ளின் ஒருயிராய் இணைந்துள்ளமை தோன்ற 'அம் மா அரிவையும் வருமோ' என்றும், தலைவியின் தலைமைப்பாடுதோன்ற உய்த்தியோ என்னாது 'வருமோ' என்றும், ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை என்பதை உணராமல் அளவு கடந்தாய் என்பான் ''கைம்மிக எண்ணுதி'' என்றும் தன் தலைமைப்பாடு தோன்ற நெஞ்சே! என்றும் தலைவன் கூறிய சொற்கள் குறிப்புப் பொருள் விளக்கும் நோக்குப்பட அமைந்தவாறும் காண்க.

புணர்ச்சியை மட்டுமே கருதாமல் பொருள்வயின் ஊக்கும் தலைவனது நெஞ்சத்தின் நடுவுநிலை பயனாகிய நோக்குப்பட நின்றவாறும் அதுதான் புலவனுடைய குறிக்கோளாமாறும் காண்க.

இனி இப்பாட்டானது அன்பினது அகலமும் அகற்சியது அருமையும் ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய நெஞ்சிற்குத் தலை மகன் கூறும் கூற்றாய், நாற்சொல்லியலான் கற்பென்னும் கைகோள் பொருளாகப் பாலைத்திணையின் பாற்பட்டு ஞாயிறு திங்கள் (செய்-192) என்னும் சூத்திரத்தான் நெஞ்சு கேட்பதாக அமைந்து யாப்பின் வழியதாய் நிற்பதையும்,

அசையும் சீரும் இசையொடுமேவிச் செந்தூக்காம் ஆசிரியப்'பா' வென்னும் ஓசையான் நிறைந்து ஒழுகுவண்ணமும் அகைப்புவண்ணமும் பெற்றுச் செய்யுள் மொழியாற் சீர்புனைந்து யாத்த அழகென்னும் வனப்பிற்றாய் செவிக்கினியதாய்ச் சொற் பொருள் நோக்குப்பட நுணுகி அன்பும் அறனும் உடையதே இல் வாழ்க்கை என்னும் பயன் தோன்ற நிற்குமாறும் காண்க.

மேலும் இதன் நயங்களை விரித்துணர்தற்கு ஏற்றவாறு அமைந்துள்ளமையும் காண்க. விரிக்கின் பெரும்.



சூ.419: ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே (105)

க - து : நிறுத்தமுறையானே 'பா' என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது

உரை: செய்யுளுறுப்புள் ஒன்றாகிய 'பா' என்னும் உறுப்பு வகையின் விரி ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி என்னும் நான்கு இயல்பிற்று என்று கூறுவர் புலவர்.

ஆசிரியம் முதலிய நான்கு சொற்களும் பாட்டு முழுதும் நிறைந்து பரந்துநிற்கும் ஓசையை உணர்த்தின. அகவல்முதலாகிய தூக்கோசை வேறு. ஆசிரியம் முதலாய பாவோசை வேறு.

தூக்கோசை அவ்வப்பாக்களுக்குரிய சீரின்கண் அமைந்து அடிகளைத் துணித்து நிறுத்துவதாகும். பாவோசை அத்தூக் கோசை பிறத்தற்குக் காரணமாய் அதனைத் தனக்குள் அடக்கிப் பாட்டு முழுதும் பரவி நிற்பதாகும்.

கருவி வேற்றுமையாகிய மூன்றாம் வேற்றுமைக்கண் கருவிப் பொருள் பற்றிவரும் ஒடுவும், ஏதுப் பொருள் பற்றிவரும் இன்னும் ஆனும் போல ஓசை பற்றி வரும் தூக்கும் பாவும் வேறுபாடுடையன வாகும்.

'பா' என்னும் உறுப்பும் அவ் உறுப்பானமைந்த உறுப்பியாகிய பாட்டும் மக்கட் சுட்டும்-மக்களும் போல நிற்றலின் 'பா' என்னும் உறுப்பின் பெயரானே அப்பாட்டும் பெயர் பெறும் என அறிக.

அஃதாவது ஆசிரியம் என்னும் உறுப்பமைந்த பாட்டு ஆசிரியப்பா என்றும் வஞ்சி என்னும் உறுப்பமைந்த பாட்டு வஞ்சிப்பா என்றும் கலி என்னும் உறுப்பமைந்த பாட்டு கலிப்பா என்றும் வழங்குதல் தொல்லோர் மரபு.

பா என்னும் பலபொரு ளொருசொல் ஓசையினையும் ஆகு பெயராற் பாட்டினையும் குறித்து வருமென்க.

எனவே, அகவலோசை தூங்கலோசை, செப்பலோசை, துள்ள லோசை என்பவை தூக்கு என்னும் உறுப்பையும், ஆசிரிய ஓசை, வஞ்சியோசை, வெள்ளோசை, கலியோசை என்பவை 'பா' என்னும் உறுப்பையும் சுட்டுமென அறிக. பின்னர்ப் பாக்களைப் பற்றிக் கூறுமிடத்து, ஆசிரியர்.

பாவிரிமருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரியப்பா வெண்பா என்றாங்கு
ஆயிரு பாவினுள் அடங்கு மென்ப. (செய்-107) என்றும்,

ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப (செய்-108)

என்றும் கூறுவாராதலின், நடைவகையான் இரண்டாக நிற்கும் பாக்கள் ஈண்டுக் கூறிய 'பா' என்னும் உறுப்புக் காரணமாக நான்காக விரிவனவாயின. அங்ஙனம் நான்காக வேறுபடுத்தி நிற்கும் இவ்வுறுப்பினையே "நாலியற்று என்ப" எனக் கூறினார் என உணர்க.

தூக்குறுப்பு வரிவடிவானும் புலப்பட நிற்கும். பாவுறுப்பு ஒலி வடிவானன்றி வரிவடிவாற் புலப்படா, இவை இவற்றின் வேறுபாடாம். (எ-டு) அவ்வப்பா இலக்கணம் கூறும்வழிக் காட்டுதும்.

**சூ.420:** அங்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப (106)

**க - து:** மேற்கூறப்பெற்ற நால்வகைப் பாக்கட்கும் பொருள் வகை உரிமை கூறுகின்றது.

**உரை:** மேற்சூத்திரத்தான் உறுப்புக் காரணமாக நான்மையாய் விரிந்து நிற்கும் அந்நிலைமைக்கண் அப்பாக்கள் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று அடிப்படைப் பொருள்கட்கும் உரியனவாகும் எனக் கூறுவர் புலவர்.

தமிழக மெய்யறிவியலார் வகுத்த முதற்பொருள் மூன்றேயாதலின் உம்மை முற்றும்மை.

களவியலுள் இன்பமும் பொருளும் அறனும் என முறைப்படுத்தியது அஃது அன்பொடு புணர்ந்த ஐந்திணையாகிய இன்பப் பொருள் பற்றியதாகலின் தலைமை கருதி இன்பம் முற்கூறப்பட்டது ஈண்டு மெய்யறிவியலார் முறை பற்றி அறம் முற்கூறப்பட்டது. இதுவே முறை என்பதைச் சுட்ட அற முதலாகிய மும்முதற் பொருள் என்றார். இம்முறைமை பற்றியே திருவள்ளுவரும் அறமுதலாக முப்பால் நூல் செய்தமையும் காண்க.

இனி ஆரிய நூலார் கூறும் 'மோட்சம்' என்பது பொருளினுள் அடங்கும். இதனைப் புறத்திணையுள் ஆசிரியர் ஓதியவாற்றான் அறியலாம்.

இம் மும்முதற் பொருளை மறையாக வகுக்குங்கால் அறத்தின் ஒரு கூற்றினையும் பொருளின் ஒரு கூற்றினையும் இணைத்து 'வீடு' என்னும் பெயர் தந்து நான்காக வகுத்துக் கொண்டமை 'நான் மறை முற்றிய அதங்கோட்டாசான்" எனப் பனம்பாரனார் பாயிரத்துள் கூறியமையான் அறியலாகும். எனவே, பொருள் மூன்று மறை நான்கு என்பது தமிழ் மரபாகும் என அறிக.



இனி இம்மூவகையன்றி உலகத்துப் பொருள் வேறின்மையின் இது வேண்டா கூறலாகாதோ எனின்? ஆகாது. என்னை? பாட்டென்னும் செய்யுள் வகையினை இயற்றும் புலவோர் இம்மூன்றனுள் ஒன்று சிறந்து தோன்றுமாறும் அதனாற் பயன் கொள்ளுமாறும் இயற்றுதல் வேண்டும் என வலியுறுத்தற் பொருட்டு "அந்நிலை மருங்கின்... உரிய என்ப" என வழி நூல் வாய்பாடு தந்து கூறினார் என்க. பாக்கள் என்பது அவாய் நிலையாற் கூட்டப்பட்டது.

**சூ.421:** பாவிரி மருங்கின் பண்புறத் தொகுப்பின்
ஆசிரி யப்பா வெண்பா என்றாங்கு
ஆயிரு பாவினுள் அடங்கு மென்ப (107)

**க - து:** மேற்கூறிய பாக்கள் வகைப்படுமாறு கூறுகின்றது

**உரை:** பா என்னும் உறுப்பான் நாலியற்றாக விரிந்து நின்ற பாக்களை நடை முதலாய பண்புபடத் தொகுப்பின் அவை ஆசிரியப்பா, வெண்பா என அவ் இருவகையுள் அடங்கு மென்று கூறுவர் புலவர்.

மேல் "பா வகை-விரியே" என்றதனை இதனான் வகுத்துக் கூறியவாறு, இதன் பயன், பாக்கள் தோன்றி விரிந்த முறைமையறிதலும், பாவோசைகள் யாவும் இவ் இரண்டன் விரிகளே என அறிதலுமாம்.

**சூ.422:** ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப (108)

**க - து:** பாக்கள் இரு வகையுள் அடங்குமென்றதற்குக் காரணம் கூறுகின்றது.

**உரை:** சீர்நிலை வகையானும் தளைநிலை வகையானும் தூக்குநிலை வகையானும் ஆசிரியத்தை ஒத்த நடையினதே வஞ்சிப்பா. ஏனை வெண்பாவினை ஒத்த நடையினதே கலிப்பா எனக் கூறுவர் புலவர். நடையாவது ஒழுகிச் செல்லும் பண்பு.

சொல்லெனப் படுவ பெயரே வினையென்
றாயிரன் டென்ப அறிந்திசி னோரே என்றும்

இடைச்சொற் கிளவியும் உரிசொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப. என்றும்

சொற்களை வகுத்து விரித்தாங்குப் பாக்களையும் வகுத்து விரித்தோதிய நுட்பமெல்லாம் ஓர்ந்துணர்க.

EFEO_GUEST_JLC_02-055 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சூ. 423: வாழ்த்தியல் வகையே நாற்பாக்கு முரித்தே (109)

க-து : நால்வகைப் பாக்களும் வாழ்த்தியலுக்கு வரும் என்கின்றது.

உரை : பாடாண்டிணையின் பகுதியாகக் கூறப்பெற்ற வாழ்த்தியல் வகை மேற்கூறிய நான்கு பாக்களுக்கும் உரியதாகும்.

பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினுல் கடவுள் வாழ்த்து முதலாக ஓம்படையீறாகக் கூறப்பெற்றவை யாவும் வாழ்த்தினது பாகுபாடுகளேயாதலின் "வாழ்த்தியல் வகை" என்று கூறினார். இது பொது விதி, ஏகாரம் இரண்டும் அசை. சிறப்பு விதிகள் மேற்கூறுவார். எ-டு: பாடாண்டிணையுள் கண்டு கொள்க.

சூ. 424: வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ. (110)

க – து : புறநிலை வாழ்த்துக் கூறற்கேலாத பாக்கள் இவை என்கின்றது.

உரை : குல உரிமையாக நீ வழிபடும் தெய்வம் நின்னைப் புறஞ் சூழ்ந்து காத்து நிற்கப் பழிதீர்ந்த செல்வத்தொடு (நீயும்) நின்மக்களும் அவர்தம் வழிமரபும் சிறந்து புகழாற் பொலிமின் என வரும் (பாடாண்டிணையிற் கூறப்பெற்ற) புற நிலை வாழ்த்தினைக் கலிப்பாக்களும் வஞ்சிப்பாக்களும் பெற்று நடவா.

எனவே, ஆசிரியப்பாவும் வெண்பாவுமே பெறும் என்றவாறு, செய்யுளியல் அதிகாரமாதலின் இச்சூத்திரத்துப் "புறநிலை வாழ்த்து" எழுவாயாதற்கேலாமையறிக. வழிவழி சிறந்து நீவிர் பொலிமின் என்பது கருத்தாகலின் நிற்புறங் காப்பப்...... பொலிமின் என்பது வழாநிலை என்பது புலப்படும். எ-டு : பாடாண்டிணையுரையுள் கண்டு கொள்க.

சூ. 425: வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி வுறூஉவென் றவையு மன்ன. (111)

க - து : வாயுறை வாழ்த்து, முதலியவற்றையும் கலியும் வஞ்சியும் பெறா என்கின்றது.

உரை: வாயுறை வாழ்த்து, அவையடக்கியல் செவியறிவுறூஉ ஒன்றவையும் மேற்சொன்ன இயல்பினவாம்.



அஃதாவது வாயுறை வாழ்த்து முதலிய மூன்றையும் கலிப்பாவும் வஞ்சிப்பாவும் ஏற்று நடவா. ஆசிரியப்பாவும் வெண்பாவுமே ஏற்று நடக்கும் என்றவாறு.

மருட்பா வெண்பாவும் ஆசிரியமுமாகி நடத்தலின் அந்நான்கையும் மருட்பா ஏற்று வரும் என்பது பெறப்படும்.

சூ. 426: வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே (112)

க - து : மேற்கூறிய மூன்றனுள் வாயுறை வாழ்த்தாமாறு கூறுகின்றது.

உரை : வாயுறை வாழ்த்தினது இயல்பினை விளங்க ஆராயின், வேம்பினையும் கடுவினையும் போல வெம்மையுடைய சொற்கள் இவை எனக் கருதித் தவிர்தலின்றி வழிவழி நன்மை மிகுதி பயக்குமென எண்ணிக் காவற் கிழமையுடைய அச்சொற்களான் மெய்ம்மைப் பொருளை வலியுறுத்துவதாகும்.

வாயுறை = மெய்ப்பொருள் நிறைவு. வேம்பும் கடுவும் சுவையாற் கைப்பும் துவர்ப்பும் உடையவாயினும் பயனால் நோய் நீக்குதலும் வளமுறுத்தலும் செய்வனவாதலின், அவைபோல உருவாற் செவிவெதுப்பும் சொற்களாயினும் அவை பயனால் வழிவழி நன்மை தருபவையாகும் என்பது கருத்து.

சொற்கள் கடுமையவாயினும் உள்ளத் தூய்மை தோன்ற வாழ்த்தொடு வரவேண்டுமென்பார் "ஓம்படைக்கிளவியின் வாயுறுத்தற்றே" என்றார். உறுத்தல் என்னும் தொழிற்பெயர் 'உறூஉ' எனத் திரிந்து நின்றது.

(எ-டு) : இருங்கடலுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவணது இடைபிறர்க் கின்றித்
தாமே ஆண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே, சுடுபிணக்
காடுபதி யாகப் போகித், தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால ; நீயும் கேண்மதி அத்தை, வீயாது
உடம்பொடு நின்ற உயிரும் இல்லை
மடங்கல் உண்மை யோ மாயமோ அன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு

வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்
உப்பிலாஅ அவிப்புழுக்கற்
கைக்கொண்டு பிறக்கு நோக்காது
இழிப்பிறப்பினோன் ஈயப்பெற்று
நிலங்கல னாக இலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே (புறம்-363)

இஃது இடையே வஞ்சியடி விரவிய ஆசிரியப்பாட்டு.

சூ. 427: அவையடக் கியலே அரில்தபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்று
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந்தன்றே (113)

க - து : முறையானே அவையடக்கியல் ஆமாறு கூறுகின்றது.

உரை : அவையடக்கியலாவது குறைவற ஆராயின், யான் வலிமையல்லாத முறையாற் கூறினும் நீவிர் வகை செய்து கொள்ளுமின் என யாவர்க்கும் பணிவுற மொழிதலாகும்.

வல்லா (வலிவல்லாமல்) எதிர்மறை, வகுத்தனர் கொள்மின் எனவே யான் வகை செய்து கூறினேன் அல்லேன் என்றவாறு. அது பணிவுடைய மொழியாகும்.

பணிந்த மொழியான் அவையோரைத்தன் நோக்கிற்குள் அடக்குதலின் அவை அடக்கியலாயிற்று. அடக்கியல் = அடக்கும் இயல்பு என விரியும்.

(எ-டு) : உண்ண முடியாத ஓதநீர் வான்வாய்ப்பட்
டெண்ண அமுதான தில்லையோ-மண்ணின்மேல்
நல்லாரைச் சேர்தலான் நான்சொன்ன புன்சொல்லும்
எல்லாருங் கைக்கொள்வர் ஈங்கு.

இது நேமிநாதத்து அவையடக்கச் செய்யுள். ஆசிரியர் காலத்து வழங்கிய இலக்கியங்கள் காணாமையின் ஏற்புடையன எடுத்துக் காட்டலரிதாயிற்று. இடைக்காலத்தார் எல்லாப்பாவகையானும் அவையடக்கம் கூறியுள்ளனர்.

சூ. 428: செவியுறைதானே,
பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே (114)



க - து : செவியுறுஉவின் இலக்கணம் ஆமாறு கூறுகின்றது. செவியுறாஉ என்பது செவியுறை என ஐகாரச்சாரியை பெற்று நின்றது.

உரை : செவியுறாஉவாவது உயர்ந்தோர் நடுவண் தன்னை வியந்து காட்டுதலின்றி அடங்கி ஒழுகுதல் நல்லோர் கடப்பாடெனச் செவிகொளக் கூறியதாகும்.

கேட்போன் உளங்கொள்ளுமாறு கூறுதலின் செவியுறையாயிற்று. பொங்குதல் - தன்னைவியத்தல் – வெகுளுதலுமாம். செவியுறு என்பது செவ்வி உறுதல் என்பதன் இடைக்குறை எனக் கொள்ளலுமாம். ‘ தான் ’ என்றது சிறப்புணர்த்தி நின்றது. ஏகாரம் பிரிநிலை.

“பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து” என்புழி வியத்தல் தருக்குதல் என்னும் பொருள்படுமாறும் அது பொங்குதல் கருத்தாமாறும் காண்க.

எ - டு : எருமையன்ன கருங்கல் இடைதோ
றானிற் பரக்கும் யானைய, முன்பின்
கானக நாடனை நீயோ பெரும!
நீஓர் ஆகலின் நின்னொன்று மொழிவல்
அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயங் கொள்பவரோ டொன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானேஅது பெறலருங் குரைத்தே (புறம்-5)

எனவரும். இதுகாறும் ஆசிரியப் பாவும் வெண்பாவும் பெறும் பொருள் வகை கூறினார். இனிக் கலியும் வஞ்சியும் பற்றிய இலக்கண மரபு கூறுவார்.

சூ. 429 : ஒத்தா ழிசையும் மண்டில யாப்பும்
குட்டமும நேரடிக்கு ஒட்டின என்ப (115)

க - து : புறநிலை வாழ்த்து முதலாய நாற்பொருளையும் பற்றிவாரா, என விலக்கப்பெற்ற கலியும வஞ்சியும் அதிகாரப்பட்டு நிற்றலின் அவற் றிற்குரிய இலக்கணம் கூறத் தொடங்கி முதற்கண் கலிப்பாவிற்குரிய தோரிலக்கணங் கூறுகின்றது

இதனைக் கலிப்பா இலக்கணம் கூறுமிடத்துவையாமல் ஈண்டு வைத்துக் கூறுவதன் நோக்கம், மேல்வரும் ஆசிரியப்பா மண்டில யாப்பிற்றாய் வருதலும், ஆசிரியமும் வெண்பாவும் குட்டம் பெற்று வருதலும் உடன் கூறிப்பெறப்பட வைத்தலாம்.

EFEO_GUEST_JLC_02-057 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**உரை :** ஒத்து மூன்றடுக்கி வரும் தாழிசையும், எல்லா அடிகளும் ஓசையானும் சீரானும் ஒத்துவரும் மண்டிலயாப்பும், ஒன்றொருசீர் குறைந்து வரும் குட்டமும் கலிப்பாவிற்குரியவாக வருதற்கு ஒத்தன எனக் கூறுவர் புலவர்.

தாழிசையாவது : முடுகுதலும் விட்டிசைத்தலுமின்றிச் சீரொடு சீர் தழுவிச் செல்லும் இசை. தழுவுஇசை - தாழிசையாயிற்று. அஃது ஈண்டுக் கலியுறுப்பாகிய செய்யுட் பகுதியைக் குறித்து நின்றது. அது ஒருபொருள் பற்றி அடுக்கி மூன்றாக வரின் ஒத்தாழிசை எனப்படும். ஒத்ததாழிசை ஒத்தாழிசையாயிற்று.

மண்டிலம் என்பது வட்டம். விருத்தம் என்பது இதற்கொத்த வடசொல்லாகும். அஃது எல்லா அடிகளும் சீரானும் அளவானும் ஒத்து வரும் கலியுறுப்பாகிய செய்யுட் பகுதியைக் குறித்து நின்றது. மண்டிலம் நான்கு அடிகளாக வருவது சிறப்புடைத்து. மிக்கு வரினும் இழுக்காகாது.

குட்டம் - குறுக்கம். அளவாற் குறுகியது என்பது பொருள். அஃதாவது "நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே" என்றதனான் அதனிற் குறைந்து வரும் முச்சீரடி இருசீரடிகள் குட்டமெனப்பட்டன. நேரடி என்றது கலிப்பாவை. கலி எனினும் முரற்கை எனினும் நேரடி எனினும் ஒக்கும். எ - டு: கலிப்பா இலக்கணம் கூறும் வழிக்காட்டப் பெறும்.

சூ. 430 : குட்டம் எருத்தடி உடைத்து மாகும். **(116)**

**க - து :** குட்டத்திற்குரியதொரு மரபு கூறுகின்றது.

**உரை :** தரவு என்னும் கலிப்பாவின் முதலுறுப்பு குட்டமாகிய அடியை உடையதும் ஆகும்.

உம்மையால் உடைத்தின்றி வருதலே பெரும்பான்மை எனக் கொள்க. எருத்தடி என்றது தரவு என்னும் உறுப்பினை, "இதனை எருத்தே கொச்சகம்" (செய்யு-153) என்பதனான் அறிக. எருத்தடி குட்டமுடைத்தும் ஆகும் என மாற்றிக் கூட்டுக.

சூ. 431: மண்டிலம் குட்டம் என்றிவை இரண்டும்
செந்தூக் கியல என்மனார் புலவர் **(117)**

**க - து :** மண்டியையாப்பும் குட்டமும் தூக்கோசை பெறுமாறு கூறுகின்றது.

**உரை :** ஒத்தாழிசை, மண்டிலயாப்பு, குட்டம் என்னும் மூன்றனுள் மண்டிலமும், குட்டமும் ஆசிரியத் தூக்காகிய செந் தூக்கின் இயல்பினவாகும் எனக் கூறுவர் புலவர். எனவே தாழிசை கலியோசை பெற்றுவரும் என்பது பெறப்படும்.



குட்டம் தனியாயும் எருத்தினுள்ளும் வருதலேயன்றி அம்போ தரங்க உறுப்பாய் வரினும் செந்தூக்கியல்பிற்றாய் நிற்குமென உய்த்துணர்க.

(எ-டு) : கலிப்பா இலக்கணம் கூறும் வழிக்காட்டுதும்

சூ. 432: நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளொடு
ஒத்தவையெல்லாம் வெண்பா யாப்பின. **(118)**

**க - து :** ஓசை வகையான் நால்வகைப்பட்டு நின்ற பாக்களுள் அதிகாரப் பட்டு நின்ற கலிப்பாவிற்குரிய ஒருசார் உறுப்புக்களின் இயல் புணர்த்தித் தொடர்ந்து வெண்பாயாப்பினவாய் வருவன பற்றிக் கூறுகின்றார்.

இச்சூத்திரம் வெண்பாயாப்பினவாய் வருவனவற்றைத் தொகுத்துணர்த்துகின்றது.

**உரை :** ஐந்து அடி முதல் ஏழடியளவும் வரும் நெடுவெண் பாவும், ஏழு சீர்கள் கொண்ட இரண்டடியான் வரும் குறள் வெண்பாவும் கைக்கிளைப் பொருள் பற்றி வரும் செய்யுளும் பரி பாடலும் அங்கதச் செய்யுளும் இவற்றிற்கு ஒத்த பிற செய்யுட் களுமாகியவை எல்லாம் வெண்பா யாப்பினவாகும்.

அஃதாவது ஏழெழுத்து முதல் பதினான்கெழுத்தளவும் பெற்று வரும் சிந்தடியும் அளவடியுமாகிய நாற்சீரடிகளான் நடந்துவெண் ளோசை பெற்று ஈற்றடி முச்சீராய் இறுதிச்சீர் அசைச்சீராய் வரும் என்றவாறு.

நெடுவெண்பாட்டினை இடைக்காலத்தார் பஃறொடை வெண்பா என்பர் அப்பெயர்(குறியீடு)பொருந்தாமையை ஓர்ந்தறிக,

அடிவரையின்றிக் குறிப்பு மொழியாலாகிவரும் அங்கதமும் உளதாதலின் அங்கதச் செய்யுள் என்றார், செய்யுள் என்பதனை கைக்கிளையோடும் கூட்டுக. இவற்றிற்கு அடிவரையறை பிற்கூறுவார்.

பரிபாட்டு "ஏனைவெண்பா நடைத்தே கலியென மொழிப" என்றதனான் கலித்தளை பெற்று வருதலை உரையிற்கோடல் என்னும் உத்தி வகையாற் கொள்க.

மூன்றடியாய் வருவதனைச் "சிந்தியல் வெண்பா" என இடைக் காலத்தார் கொள்வர். அஃது கலியுறுப்பாக வருதலே பண்டை வழக்காதலின் ஆசிரியர் மூன்றடி வெண்பா கூறிற்றிலர் என்க.

அது சான்றோர் செய்யுளாய்த் தனித்துவரின் குறுவெண் பாட்டினுள் அடக்கிக் கொள்க.

(எ-டு) : நானாற் றிசையும் பிணம்பிறங்க யானை
அடுக்குபு பெற்றிக் கிடந்த இடித்துராறி
அங்கண் விசும்பின் உருமெறிந் தெங்கும்
பெருமழை தூவ எறிந்தற்றே அருமணிப்பூண்
ஏந்தெழில் மார் பின் இயல்திண்டேர்ச் செம்பியன்
வேந்தரை அட்ட களத்து (களவழி-6

இஃது ஆறடியான் வந்த நெடுவெண்பாட்டு

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னார் உடைத்து

இது குறுவெண்பாட்டு. ஏனையவற்றிகு எடுத்துக்காட்டு அவற்றின் சிறப்பிலக்கணம் கூறும் வழிக்காட்டுதும்.

சூ. 433 : கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய வியலான் முடியவும் பெறுமே (119)

க - து : கைக்கிளைச் செய்யுட்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது

உரை : கைக்கிளைச் செய்யுள் வெண்பா யாப்பிற்றாய் முடிதலேயன்றி வெண்பா யாப்பாகத் தொடங்கி ஆசிரியப்பா இயலான் முடியவும்பெறும். உம்மை இறந்ததுதழீஇய எச்ச உம்மை. ஏகாரம் ஈற்றசை. எனவே கைக்கிளைச் செய்யுள் மருட்பாவானும் வரும் என்பது கருத்து.

(எ-டு): திருநுதல் வேர்வரும்பும் தேங்கோதைவாடும்
இருநிலம் சேவடியும் தோயும்-அரிபரந்த
போகித முண்கணும் இமைக்கும்
ஆகும் மற்றிவள் அகலிடத் தணங்கே (பு. வெ. மா)

சூ. 434: பரிபா டல்லே தொகைநிலை வகையின்
இதுபா என்னும் இயல்நெறி யின்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப. (120)

க - து : பரிபாடற்குச் சிறப்பு விதி கூறுகின்றது

உரை: வெண்பா யாப்பிற்குரித்தென ஓதிய பரிபாடல், தூக்குப் படத் தொகுத்துக் காணும் பாவகையின்கண் இன்னபாவின் உறுப்பு இஃது என்று கூறுமாறு இயலும் நெறியின்றிப் பொதுவாய் நிற்றற்கும் உரியது எனக் கூறுவர் புலவர்.



எதிர்மறையும்மையான் இன்னபாவின் உறுப்பு இஃது எனக் கூறற்கியலும் நெறியுற்றுச் சிறப்பாய் நிற்றலே பெரும்பான்மை என்பது பெறப்படும்.

எ - டு : ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை
தீயுமிழ் திறலொடு முடிமிசை அணவர
மாவுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனி
சேயுயர் பணைமிசை எழில்வேழ மேந்திய
வாய்வாங்கும் வளைநாஞ்சில் ஒருகுழை ஒருவனை
எரிமலர் சினைஇய கண்ணை, பூவை
விரிமலர்புரையும் மேனியை, மேனித்
திருஞெமிர்ந் தமர்ந்த மார்பினை, மார்பில்
தெரிமணி பிறங்கும் பூணினை, மால் வரை
எரிதிரித்தன்ன பொன்புனை உடுக்கையை,
சேவலங் கொடியோய்நின் வலவயின் நிறுத்தும்
ஏவல் உழந்தமை கூறும்
நாவலந்தணர் அருமறைப் பொருளே!
இணைபிரி அணிதுணி பணியெரி புரைய
விடரிடு சுடர்படர் பொலம்புனை வினைமலர்
நெரிகிடர் எரிபுரை தனமிகுதன முரண்மிகு
கடல்தரு மணியொடும் முத்தியாத்த நேரணி
நெறிசெறி வெறியுறு முரல்விறல் வணங்குஅணங்குவில்
தாரணி துணிமணி வெயிலுறழ் எழில்புகழ் அலர்மார்பின்
எரிவயிர நுதிஎறிபடை எருத்து மலை இவர் நவையினிற்
றுணிபடல் இலமணி வெயிலுறழ் எழில் நக்கு
இமை இருள் அகல முறு கிறுகு புரி ஒரு புரி நாள்மலர்
மலர் இலகின வளர் பரிதியின் ஒளிமணி மார்பு அணி
மணம் மிக நாறு உருவின விரை வளி மிகு கடு விசை
உடுவுறு தலை நிரை இதழ் அணி வயிறிரிய அமரரைப்
பொரெழுந்து உடன்று இரைத்து உரைஇய தானவர்
சிரம் உமிழ் புனல் பொழிபு இழிந்து உரம்
உதிர்பு அதிர்பு அலம் தொடா அமர் வென்ற கணை,
'பொருவேம்' என்றவர் மதம்தபக் கடந்து,
செரு மேம்பட்ட செயிர்தீர் அண்ணல்!
இருவர் தாதை! இலங்குபூண் மாஅல்!
தெருளநின் வரவு அறிதல்
மருள்அறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே :
அன்ன மரபின் அனையோய் நின்னை
இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் எளிது'
அருமை நற்கு அறியினும், ஆர்வம் நின்வயின்

பெருமையின் வல்லா யாம்இவண் மொழிபவை
மெல்லிய எனாஅ வெறாஅது, அல்லி அம்
திருமறு மார்ப! நீ அருளல் வேண்டும்.

விறல்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்
அறனும், ஆர்வலர்க்கு அருளும், நீ;
திறன் இலோர்த் திருத்திய தீதுதீர் கொள்கை
மறனும், மாற்றலர்க்கு அணங்கும், நீ;

அம்கண் வானத்து அணிநிலாத் திகழ்தரும்
திங்களும், தெறுகதிர்க் கனலியும், நீ;
ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை ஒருவனும், மடங்கலும், நீ;
நலம்முழுது அளைஇய புகர் அறு காட்சிப்
புலமும், பூவனும், நாற்றமும், நீ;
வலன்உயர் எழிலியும், மாக விசும்பும்,
நிலனும், நீடிய இமயமும், நீ.
அதனால்,
'இன்னோர் அனையை; இனையையால்' என,
அன்னோர் யாம்இவண் காணாமையின்,
பொன்அணி நேமி வலம்கொண்டு ஏந்திய
மன்னிய முதல்வனை ஆதலின்,
நின்னோர் அனையை, நின் புகழொடும் பொலிந்தே!

நின்ஒக்கும் புகழ் நிழலவை;
பொன் ஒக்கும் புகழ் நிழலவை;
புள்ளின் கொடியவை; புரி வளையினவை;
எள்ளுநர்க் கடந்துஅட்ட இகல் நேமியவை;
மண்ணுறு மணிபாய் உருவினவை;
எண் இறந்தபுகழவை; எழிப மார்பினவை.
ஆங்கு,
காமரு சுற்றமொடு ஒருங்குதின் அடியுறை
யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக! என,
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்—
வாய்மொழி புலவ! நின் தாள் நிழல்தொழுதே; [பரி-1]

இப்பரிபாடல் இதுபா என்னும் இயல்நெறியின்றி அமைந்துள்ளமை காண்க.



ஐந்து இருள் அற நீக்கி, நான்கினுள் துடைத்து, தம்
ஒன்று ஆற்றுப்படுத்த நின் ஆர்வலர் தொழுது ஏத்தி,
நின் புகழ விரித்தனர் : கிளக்குங்கால், அவை நினக்கு
இறும்பூது அன்மை நற்கு அறிந்தேம் ஆயினும்,
நகுதலும் தகுதி, ஈங்கு ஊங்கு நிற் கிளப்ப :
திருமணி, திரைபாடு அவிந்த முந்நீர்,
வரு மழை இருஞ் சூல்—மூன்றும் புரையும் மா மெய் ;
மா அ மெய்யொடு முரணிய உடுக்கையை ;
நோனார் உயிரோடு முரணிய நேமியை :

செயிர் தீர் செங் கட் செல்வ! நிற்புகழ
புகைந்த நெஞ்சின், புலர்ந்த சாந்தின் —
பிருங்கலாதன் பலபல பிணி பட
வலந்துழி, மலர்ந்த நோய் கூர் கூம்பிய நடுக்கத்து
அலர்ந்த புகழோன், தாதை ஆகலின்
இகழ்வோன், இகழா நெஞ்சினனாக, நீ இகழா
நன்றா நட்ட அவன் நன் மார்பு முயங்கி,
ஒன்றா நட்டவன் உறு வரை மார்பின் —
படிமதம் சாம்ப ஒதுங்கி,
இன்னல் இன்னரொடு இடி முரசு இயம்ப,
வெடி படா ஒடி தூண் தடியொடு,
தடி தடி பல பட — வகிர் வாய்த்த உகிரினை ;

புருவத்துத் கரு வல் கந்தரத்தால்
தாங்கி, இவ் உலகம் தந்து அடிப்படுத்ததை நடுவண்
ஓங்கிய பலர் புகழ் குன்றினோடு ஒக்கும் :

நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்று உள ;
நின் தண்மையும் சாயலும் திங்கள் உள ;
நின் சுரத்தலும் வண்மையும் மாரி உள ;
நின் புரத்தலும் நோன்மையும் ஞாலத்து உள ;
நின் நாற்றமும் ஒண்மையும் பூவை உள ;
நின் தோற்றமும் அகலமும் நீரின் உள ;
நின் உருவமும் ஒலியும் ஆகாயத்து உள ;
நின் வருதலும் ஒடுக்கமும் மருத்தின் உள ;
அதனால், இவ்வும், உவ்வும், அவ்வும், பிறவும்,
ஏமம் ஆர்ந்த நிற் பிரிந்து,
மேவல் சான்றன, எல்லாம்.
சேவல் ஓங்கு உயர் கொடியோயே !
சேவல் ஓங்கு உயர் கொடி
நின் ஒன்று உயர் கொடி பனை ;



EFEO_GUEST_JLC_02-060 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நின் ஒன்று உயர் கொடி நாஞ்சில் ;
நின் ஒன்று உயர் கொடி யானை ;
நின் ஒன்ரு உயர் கொடி ஒன்று இன்று :
விடமுடை அரவின் உடல் உயிர் உருங்கு உவணம் ;
அவன் மடிமேல் வலந்தது பாம்பு ;
பாம்பு தொடி ; பாம்பு முடிமேலன ;
பாம்பு பூண் ; பாம்பு தலைமேலது ;
பாம்பு சிறை தலையன :
பாம்பு படி மதம் சாய்த்தோய் ! பசும் பூணவை
கொடிமேல் இருந்தவன் தாக்கு இரையது பாம்பு :

கடு நவை அணங்கும் கடுப்பும், நல்கலும்,
கொடுமையும் செம்மையும், வெம்மையும் தண்மையும்
உள்வழி உடையை ; இல்வழி இலையே :
போற்றார் உயிரினும், போற்றுநர் உயிரினும,
மாற்று ஏமாற்றல் இலையே : ‘ நினக்கு
மாற்றோரும் இலர் ; கேளிரும் இலர் ’ எனும்
வேற்றுமை இன்று, அது போற்றுநர்ப் பெறினே :

மனக்கோள் நினக்கு என வடிவு வேறு இலையே ;
கோள் இருள் இருக்கை ஆய் மணி மேனி,
நக்கு அலர் துழாஅய் நாறு இணர்க் கண்ணியை :
பொன்னின் தோன்றிய புனை மறு மார்ப !
நின்னில் தோன்றிய நிரை இதழ்த் தாமரை
அன்ன நாட்டத்து அளப்பரியவை ;
நின்னின் சிறந்த நின் தாள் இணையவை ;
நின்னில் சிறந்த நிறை கடவுளவை ;
அன்னோர் அல்லா வேறும் உள ; அவை
நின்ஓர் அன்ஓர் அந்தணர் அரு மறை.

அழல் புரை குழை கொழு நிழல் தரும் பல சினை
ஆலமும், கடம்பும், நல் யாற்று நடுவும்,
கால் வழக்கு அறு நிலைக் குன்றமும், பிறவும்,
அவ்வவை மேவிய வேறு வேறு பெயரோய் !
எவ் வயினோயும் நீயே ; நின் ஆர்வலர்
தொழுத கை அமைதியின் அமர்ந்தோயும் நீயே ;
அவரவர் ஏவலாளனும் நீயே ;
அவரவர் செய்பொருட்கு அரணமும் நீயே.

(பரி-4)

இதுவும் இதுபா என்னும் இயல் நெறியின்றி அராக உறுப்புப் பிறழ்ந்த்மையு மண்டில ஆசிரியச் சுரிதகத்தான் வந்தது.



மா நிலம் தோன்றாமை மலி பெயல் தலைஇ,
ஏம நீர் எழில் வானம் இகுத்தரும் பொழுதினான்,
நாக நீள் மணி வரை நறு மலர் பல விரைஇ,
காமரு வையை கடுகின்றே, கூடல்.

‘ நீர் அணி கொண்டன்று வையை ’ என விரும்பி,
தார் அணி கொண்ட உவகை தலைக்கூடி,
ஊர் அணி கோலம் ஒருவர் ஒருவரின்
சேர் அணி கொண்டு, நிறம் ஒன்று வெவ்வேறு
நீர் அணி கொண்ட நிறை அணி அங்காடி’
ஏர் அணி கொண்டார், இயல்.

கை புனை தாரினர், கண்ணியர்,
ஐ எனும் ஆவியர், ஆடையர்,
நெய் அணி கூந்தலர், பித்தையர்,
மெய் அணி யானை மிசையராய், ஒய்யெனத்
தங்காச் சிறப்பின் தளிர் இயலார் செல்ல ;
பொங்கு புரவிப்படைப் போவோரும், பொங்கு சீர்
வையமும் தேரும் அமைப்போரும்; எவ் வாயும்
பொய்யாம் போய் என்னாப் புடை கூட்டிப் போவநர்
மெய்யாப்பு மெய் ஆர மூடுவார்; வையகத்துக்கு
ஊடுவார்; ஊடல் ஒழிப்பார்; உணர்குவார் :
ஆடுவார், பாடுவார்; ஆர்ப்பார், நகுவார்; நக்கு
ஓடுவார்; ஓடித் தளர்வார்; போய், உற்றவரைத்
தேடுவார்; ஊர்க்குத் திரிவார் இலராகி—
கற்றாரும், கல்லாதவரும், கயவரும்,
பெற்றாரும், பெற்றாற் பிழையாத பெண்டிரும்,
பொற்றோரான் தானும், பொலம் புரிசைக் கூடலும்,
முற்றின்று—வையைத் துறை.

துறை ஆடும் காதலர் தோள் புணையாக,
மறை ஆடுவாரை அறியார் மயங்கி,
பிறை ஏர் நுதலியர் எல்லாரும் தம் முன்
நிகழும் நிகழ்ச்சி எம்பால் என்று, ஆங்கே
இகல் பல செல்வம் விளைத்தவட் கண்டு, இப்பால்,
அகல் அல்கும் வையைத் துறை.
காதலான் மார்பின் கமழ் தார், புனல் வாங்கி,
ஏதிலாள் கூந்தலிடைக் கண்டு, ‘ மற்று அது
தா தா ’ என்றாளுக்கு, ‘ தானே புறன் தந்து
வேய்தந்தது ’ ‘ என்னை? விளைந்தமை மற்று அது

EFEO_GUEST_JLC_02-061 16/06/2011 © École française d’Extrême-Orient, www.efeo.fr

நோதலே செய்யேன், நுணங்கு இழையாய்! இச் செவ்வி
போதல் உண்டாம்கொல்? அறிந்து புனல் புணர்த்தது!
ஓஒ! பெரிதும் வியப்பு.

கயத் தக்க பூப் பெய்த காமக் கிழமை
நயத் தகு நல்லாளைக் கூடுமா கூடும்
முயக்குக்கு, செவ்வி முலையும் முயக்கத்து
நீரும் அவட்குத் துணை; கண்ணின் நீர் விட்டோய்!
நீயும் அவட்குத் துணை.

பணிவு இல் உயர் சிறப்பின் பஞ்சவன் கூடல்,
மணி எழில், மா மேனி, முத்த முறுவல்,
அணி பவளச் செவ்வாய், அறம் காவற் பெண்டிர்
மணி அணிந்த தம் உரிமை மைந்தரோடு ஆடித்
தணிவின்று, வையைப் புனல்.

'புனலூடு போவது ஓர் பூ மாலை கொண்டை,
எனலூழ் வகை எய்திற்று' என்று ஏற்றுக்கொண்ட
புனலூடு நாடு அறியப் பூ மாலை அப்பி,
நினைவாரை நெஞ்சு இடுக்கண் செய்யும் கனல்புடன்,
கூடாமுன், ஊடல் கொடிய திறம் கூடுஞல்,
ஊடாளோ? ஊர்த்து அலர் வந்து ஊர்ந்து.
என ஆங்கு—

'ஈப் பாய் அடு நறுக் கொண்டது, இவ் யாறு' எனப்
பார்ப்பார் ஒழிந்தார், படிவு.
'மைந்தர் மண விரை தூவிற்று' என்று,
அந்தணர் தோயலர், ஆறு.
'வையை தேம் மேவ வழுவழுப்பு உற்றென'
ஐயர், வாய்பூசுறுர், ஆறு.

விரைபு இரை விரை நுரை கரை அழிபு இழிபு வர
ஊர்தரும் புனல்,
கரையொடு கடலிடை வரையொடு கடலிடை நிரைதிரை
நீர் தரு நுரை,
நுரையுடன் மதகுதொறு இழிதரு புனல் கரை புரளிய
செலும்மறி கடல்,
புகும் அளவுஅளவு இயல் இசை சிறை தணிவின்று,
வெள்ள மிகை.



வரை பல புரை உயர் கயிறு அணி பயில் தொழில்
மணி அணி யானைமிசை, மைந்தரும் மடவாரும்,
நிரைநிரை குழீஇயினர் உடன் சென்று,
குரு மணி யானை இயல் தேர்ப் பொருநன்
திருமருத முன்துறை முற்றம் குறுகி,
தெரி மருதம் பாடுப, பிணி கொள் யாழ்ப் பாணர்.
பாடிப் பாடி, பாய்புனல்
ஆடி ஆடி, அருளியவர்
ஊடி ஊடி, உணர்த்தப் புகன்று
கூடிக் கூடி, மகிழ்பு மகிழ்பு,
தேடித் தேடி, சிதைபு சிதைபு,
சூடிச் சூடி, தொழுது தொழுது,
மழுபொடு நின்ற மலி புனல் வையை
விழு தகை நல்லாரும் மைந்தரும் ஆடி,
இமிழ்வது போன்றது, இந் நீர்—குணக்குச் சான்றீர்!
முழுவதும் மிச்சிலா உண்டு.

சாந்தும், கமழ் தாரும், கோதையும், சுண்ணமும்,
கூந்தலும் பித்தையும் சோர்ந்தன
பூவினும், அல்லால், சிறிதானும் நீர் நிறம்
தான் தோன்றாது—இவ் வையை ஆறு.
மழை நீர் அறு குளத்து வாய்பூசி ஆடும்
கழு நீர மஞ்சனக் குங்குமக் கலங்கல்
வழி நீர்; விழு நீர அன்று - வையை

வெரு வரு கொல் யானை வீங்கு தோள் மாறன்,
உரு கெழு கூடலவரோடு, வையை
வரு புனல் ஆடிய தன்மை பொருவுங்கால்—
இரு முந்நீர் வையம் படித்து என்னை? யான் ஊர்க்கு
ஒரு நிலையும் ஆற்ற இயையா! அரு மரபின்,
அந்தர வான் யாற்று ஆயிரம் கண்ணினான்
இந்திரன் ஆடும் தகைத்து. (பரி-தி-2)

இது காமங்கண்ணிய நிலைத்தாய் கொச்சகவெண்பாக்கள் விரவ முடுகியலொடும் கலித்தளை வந்த வெண்பாச் சுரிகதகத் தொடும் வந்தது.

இரு நிலம் துளங்காமை வடவயின் நிவந்து ஓங்கி,
அரு நிலை உயர் தெய்வத்து அணங்குசால் தலை காக்கும்,'
உருமுச் சூழ் சேண் சிமை—உயர்ந்தவர் உடம்பட—
ஏரி மலர்த் தாமரை இறை வீழ்த்த பெரு வாரி

EFEO_GUEST_JLC_02-062 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

விரி சடைப் பொறை ஊழ்த்து, விழு நிகர் மலர் ஏய்ப்ப,
தணிவுறத் தாங்கிய தனி நிலைச் சலதாரி
மணி மிடற்று அண்ணற்கு, மதி ஆரல் பிறந்தோய்! நீ.
மை இரு நூற்று இமை உண்கண் மான் மறி தோள் மணந்தோன்று
ஐ-இருநூற்று மெய்ந் நயனத்தவன் மகள் மலர் உண்கண்,
மணி மழை தலைஇயென, மா வேனில் கார் ஏற்று,
தணி மழை தலையின்று, தண் பரங்குன்று.

நான்மறை விரிந்து, நல் இசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர்! கேண்மின், சிறந்தது :
காதற் காமம், காமத்துச் சிறந்தது ;
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி :
புலத்தலின் சிறந்தது, கற்பே ; அது தான்
இரத்தலும் ஈதலும் இவை உள்ளீடாப்
பரத்தை உள்ளதுவே : பண்புறு கழறல்,
தோள் புதிது உண்ட பரத்தை இல் சிவப்புற
நாள் அணிந்து, உவக்கும் சுணங்கறையதுவே ;
கேள் அணங்குற மனைக் கிளந்துள, சுணங்கறை ;
சுணங்கறைப் பயனும் ஊடல் உள்ளதுவே.
அதனால் அகறல் அறியா அணி இழை நல்லார்
இகல் தலைக்கொண்டு துனிக்கும் தவறு இலர் ; இத்
தள்ளாப் பொருள் இயல்பின் தண் தமிழ் ஆய்வந்திலார்
கொள்ளார், இக் குன்று பயன்.

ஊழ் ஆரத்து ஓய் கரை நூக்கி, புனல் தந்த
காழ் ஆரத்து அம் புகை சுற்றிய தார் மார்பின்,
கேழ் ஆரம் பொறப்ப வருவானைத் தொழாஅ,
'வாழிய, மாயா! நின் தவறு இலை; எம் போலும்
கேழ் இலார்—மாண் நலம் உண்கோ, திரு உடையார்
மென் தோள்மேல் அல்கி நல்கலும் இன்று?—
வை எயிற்று எய்யா மகளிர் திறம் இளிப்
பெய்ய உழக்கும், மழைக் கா; மற்று ஐய!'
கரையா வெந் நோக்கத்தான் கை கட்டி, பெண்டின்
இகலின் இகந்தாளை, அவ் வேள் தலைக் கண்ணி
திருத்து அடி தோயத் திறை கொடுப்பானை,
'வருந்தல்' என, அவற்கு மார்பு அளிப்பாளை,
'குறுகல்' என்று ஒள்ளிழை கோதை கோலாக
இறுகிறுக யாத்துப் புடைப்ப ;
ஒருவர் மயில் ஒருவர் ஒண் மயிலோடு ஏல,
இருவர் வான் கிளி ஏற்பில் மழலை,



செறி கொண்டைமேல் வண்டு சென்று பாய்ந்தன்றே,
வெறி கொண்டான் குன்றத்து வண்டு

தார் தார் பிணக்குவார் ; கண்ணி ஓச்சித் தடுமாறுவார் :
மார்பு அணி கொங்கை வார் மத்திகையாப் புடைப்பார் ;
கோதை வரிப் பந்து கொண்டு எறிவார்—
பேதை மட நோக்கம் பிறிதாக, ஊத
நுடங்கு நொசி நுசுப்பார்—நூழில் தலைக்கொள்ள ;
கயம்படு கமழ் சென்னிக் களிற்று இயல் கைம்மாறுவார் ;
வயம்படு பரிப் புரவி மார்க்கம் வருவார் ;
தேர் அணி அணி கயிறு தெரிபு வருவார் ;
வரி சிலை வளைய மார்பு உற வாங்குவார் ;
வாளி வாளிகள் நிலைபெற மறலுவார் ;
தோள் வளை ஆழி சுழற்றுவார்—
மென் சீர் மயில் இயலவர்.
வாள் மிகு வய மொய்ம்பின்
வரை அகலத்தவனை—வானவன் மகள்
மாண் எழில் மலர் உண்கண்
மட மொழியவர்—உடன் சுற்றி,
கடி சுனையுள் குளித்து ஆடுநரும்,
அறை அணிந்த அருஞ் சுனையான்
நற உண் வண்டாய் நரம்பு உளர்நரும்,
சிகை மயிலாய்த் தோகை விரித்து ஆடுநரும் ;
கோகுலமாய்க் கூவுநரும்,
ஆகுலம் ஆகுநரும்—
குறிஞ்சிக் குன்றவர் மறம் கெழு வள்ளி தமர்
வித்தகத் தும்பை விளைத்தலான், வென் வேலாற்கு
ஒத்தன்று, தண் பரங்குன்று.

கடுஞ் சூர் மா முதல் தடிந்து அறுத்த வேல்
அடும் போராள! நின் குன்றின்மிசை
ஆடல் நவின்றோர் அவர் போர் செறுப்பவும்,
பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்,
வல்லாரை வல்லார் செறுப்பவும்,
அல்லாரை அல்லார் செறுப்பவும், ஓர் சொல்லாய்
செம்மைப் புதுப் புனற்
தடாகம் ஏற்ற தண் சுனைப் பாங்கர்,
படாகை நின்றன்று ;
மேன எஃகினவை ;
வென்று உயர்த்த கொடி விறல் சான்றவை ;

கற்பு இணை நெறியூடு அற்பு இணைக் கிழமை
நயத் தகு மரபின் வியத் தகு குமர !
வாழ்த்தினேம் பரவுதும், தாழ்த்துத் தலை, நினை யாம்—
நயத்தலின் சிறந்த எம் அடியுறை,
பயத்தலின் சிறக்க, நாள்தொறும் பொலிந்தே. (பரி - 9)

இது கலியடிமிக்குச் சொற்சீரடி விரவ ஆசிரியச் சுரிதகத்தால் வந்தது

இனி,
" கீழோர் வயல் பரக்கும் வார்வெள்ளருவி பரந்து
ஆனாதரோ
மேலோர் இயங்குதலால் வீழ்மணி நீலம்
செறுஉழக்குமரோ
தெய்வ விழவும் திருந்து விருந்தயர்வும்
அவ்வெள்ளருவி அணிபரங்குன்றிற்கும்
தொய்யா விழுச்சீர் வளங்கெழுவையைக்கும்
கொய்யுளை மான்றேர் கொடித்தேரான் கூடற்கும்
கையூழ்தடுமாற்றம் நன்று " (பரி-17)

எனச்சீர் மிக்கும் குறைந்தும் இதுபா என்னும் இயல் நெறியின்றி வருவனவும்.

ஒரு சார்
அணிமலர் வேங்கை மராஅ மகிழம்
பிணிநெகிழ்பிண்டி நிவந்து சோர்பு ஓங்கி
மணி நிறங்கொண்டமலை

ஒரு சார்,
தண்ணறுந் தாமரைப் பூவின் இடையிடை
வண்ண வரிஇதழ்ப் போதின் வாய்வண்டார்ப்ப
விண் வீற்றிருக்கும் கயமீன் விரிதகையின்
கண் வீற்றிருக்கும் கயம்

ஒருசார்
சாறுகொள் ஓதத்து இசையொடு மாறுற்று
உழவின் ஓதைபயின்று அறிவிழந்து
திரிநரும் ஆர்த்து நடுநரும் ஈண்டி
திருநயத் தக்க வயல் (பரி-தி-1)
எனக் கொச்சக வெண்பா விரவியும் வருவன கொள்க



சூ. 435 : கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும். (121)

க - து : பரிபாடற்குரிய சிறப்புறுப்புக்கள் ஆமாறு கூறுகின்றது.

உரை : மேலே இதுபா என்னும் இயல்நெறியின்றி நிற்றற்கும் உரித்தெனப்பட்ட பரிபாடல் கொச்சகம், அராகம், சுரிதகம் எருத்து எனக் கூறப்பட்ட நான்கு உறுப்பும் தனக்குரிய உறுப்பாக, எழுவகை அகத்திணை பற்றிய காமப் பொருளையும் பாடாண்டிணை பற்றிய காமப் பொருளையும் குறிக்கொண்ட நிலைமைத்தாய் வரும்.

பரிபாட்டு = பரிந்தியலும் இசையினையுடையதென்பதிதன் பொருள். பரிதல் = தாவிச் செல்லுதல். அஃதாவது செப்பலும் துள்ளலுமின்றி அவற்றிற்கிடை நிகர்த்ததாய்த் தாவியும் தத்தியும் செல்லும் ஓசையாகும். இது பெரும்பான்மையும் பண்ணொடு பொருந்துமாறு யாக்கப்படுதலின் பரிபா என்னாது பரிபாட்டு எனப்பட்டது. நால்வகை நடையுடைய குதிரையை 'பரி' என்பதும் இக்கருத்தானே என்றறிக.

கொச்சக -கொய்சகம் என்பதன் மரூஉ. பின்னும் முன்னுமாக ஆடையை மடித்து அமைக்கும் செயலினைக் கொய்சகம் என்பது வழக்கு. ஈண்டு அது சீர்களின் தொழில்மேலாய் இலக்கணக் குறியீடாக நின்றது.

அராகம் - அ + ராகம் இசையின்றித் தாளம் பட நடக்கும் நடை. இது வடசொல். முடுகியல் வண்ணகம் அடுக்கியல் என்பவை இதற்கொத்த தமிழ்க் குறியீட்டுச் சொற்களாகும்.

நான்கு சீர்களான் முடுகி வருவனவற்றை அராகம் என்றும் ஐந்து முதல் ஏழு சீரளவும் வருவனவற்றை முடுகியல் என்றும் வழங்குதல் மரபு.

சுரிதகம்-சுருங்கிமுடிதல் என்னும் பொருளையுடையது. அதனான் இஃது இறுதி உறுப்பாகக் கொள்ளப்படுகின்றது. இதனை, வாரம் வைப்பு, போக்கியல் எனவும் வழங்குப.

எருத்து பிடர். முன்னுறுப்பென்பது கருத்து. இது பிற உறுப்புக்களைத் தருதற்கு முதலாகி நிற்றலின் தரவு எனவும் வழங்கப்படும்.



EFEO_GUEST_JLC_02-064 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இவற்றை முறையிற் கூறாது பிறழக் கூறினார் இதனுள் இவை நியதியின்றி முறைமாறியும் வருமென்பதை அறிவித்தற்கு என்க. ஆயிரம் விரித்த (பரி-1) என்னும் பாடலில் கொச்சகமும் அராகமும் சுரிதகமும் வந்துள்ளமை கண்டு கொள்க.

**சூ. 436 :** சொற்சீ ரடியும் முடுகிய லடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும் (122)

**க - து :** பரிபாடற்கு இவையும் உறுப்பாக வருமென்கின்றது.

**உரை :** மேற்கூறிய உறுப்புக்களேயன்றிப் பரிபாடலின் பொருள் நிலைமைக் கேற்பச் சொற்சீரடியும் முடுகியலடியும் அதன் கண் வருதற்குரியவாகும்

எ - டு : பரிபாடல் 1இல் கண்டுகொள்க

**சூ. 437 :** கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்தும்
முட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்
மொழியசை யாகியும் வழியசை புணர்ந்தும்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே (123)

**க - து :** சொற்சீரடியின் பொது இலக்கணமாமாறு கூறுகின்றது.

**உரை :** பாட்டுயாப்பின்றிக் கட்டுரையின் கூறாகி எண்ணுப் பெயராய் அப்பொருளொடு புணர்ந்தும், தூக்குப்பெற முற்றிய அடியின்றி ஒன்றொரு சீர்க்குறைவுடைய அடியாகியும், இயலசை உரியசையளவாய் நின்றும், சீராகி நிறையாமல் மேல்வரும் அசை யொடு புணர்ந்து நின்றும் சொல்லளவானே சீர்த்தன்மையுற்று முடிந்து நிற்றல் சொற்சீர்க்கு இலக்கணமாகும்.

சொற்சீரடி நால்வகை பாக்களுக்கும் உரித்தாகலின் இவ் வகைப்பட்ட கூறுபாடுகளான் வருமெனப் பட்டவற்றுள் ஏற்பவை அவ்வப்பாக்களின் கண்வருமெனக் கொள்க.

எ - டு : ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்கிழங்குவீழ்க்கும்மே
(புறம் 109)

அஇஉ
எஒ என்னும் அப்பா லைந்தும் (தொல் - எழுத் 3)
இவை கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து வந்தன.
ஒருதிறம், பாணர்யாழின் தீங்குரல் எழ
ஒருதிறம் யாணர் வண்டின் இமிரிசை எழ (பரிபா - 17)
என வருவனவும் எண்ணொடு புணர்ந்ததன் பாற்படும்.



அம்போதரங்கத்திற்குச் சொற்சீரடிஎன்பதொரு பெயராகலின் அம்போதரங்கமென்னும் உறுப்புச் சொற்சீர்களானாகும் என அறிக.

ஆங்கு (கலி. - 103) என (கலி. - 105) என்னும் இவை உரியசையும் இயலசையுமாய் நின்ற சொற்சீரடிகள். 'அதனால்', 'கேட்டீ', 'ஆங்க', 'எனவிவள்', 'எனநின்', 'காயேம்' என்னும் இவை வழியிசைபுணர்ந்த சொற்சீரடிகள்.

அன்னையோ இஃதொன்று (கலி-84) இனித்தேற்றேம்யாம் (கலி-88) அன்னதேல் ஆற்றல்காண் (கலி-9) மறைநின்று தாமன்ற வந்தீத்தனர் (கலி-86) இவை முட்டடியின்றிக் குறைவு சீர்த்தாய் வந்த சொற்சீரடிகள்.

'சொற்சீர்த் திறுதல்' என்றதனான் சொல்லே ஈறாகிஇறுதலும் சொற்சீரடியாம். அஃது அன்னையோ (கலி.-110) தொழுவத்து (கலி.-107) எனவரும். இங்ஙனம் பிறவாறும் வருவனவற்றை ஓர்ந்தறிக.

வழியசை புணர்ந்த சொற்கள் கூனாய் நிற்குமிடமும், சொற் சீரடியாய் நிற்குமிடமும் பொருள் நோக்கி யறிந்து கொள்க. கூன் பொருளியைபு விட்டிசைக்கும் சொற்சீரடி விட்டிசையாது பொருள் தொடர்புற்று நிற்கும்.

**சூ. 438 :** அங்கதந் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்தது எனவிரு வகைத்தே (124

**க - து :** வெண்பாயாப்பின என்றவற்றுள் இறுதி நின்ற அங்கதத்தின் வகையும் அவற்றின் பெயரும் கூறுகின்றது.

**உரை :** அங்கதச் செய்யுளின் இயல்பினைக் குறைவற ஆராயின் அவை செம்பொருளங்கதம் பழிகரப்பங்கதம் என இரு வகைத்தாகும்.

அங்கதமாவது எள்ளலொடு கூறும் வசை. புகழ்தலைப் போலக் குறிப்பான் எள்ளவும் படுமாகலின் அதனை ஓர்ந்துணர வேண்டுதலின் 'அரில்தபத்தெரியின்' என்றார்.

**சூ. 439 :** செம்பொரு ளாயின் வசையெனப் படுமே (125)

**க - து :** செம்பொருளங்கதம் ஆமாறு கூறுகின்றது.

**உரை :** அங்கதப் பொருள் கரவாது வெளிப்படச் செம் பொருளாற் கூறின் அது வசை எனப்படும். எனவே மறைத்துக் கூறலே சிறப்பென்பது கருத்து.

EFEO_GUEST_JLC_02-065 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எ - டு : இருள்தீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயும் அன்றுநின் கொற்றம் — மருடோயும்
பாட்டும் உரையும் பயிலா தனவிரண்டு
ஓட்டைச் செவியு முள.

ஏழிலார் கோவை வெளிப்படைச் செஞ்சொற்களான் பழித்தமையின் அங்கதம் வசையாயினமை காண்க.

**சூ. 440 : மொழிகரந்து மொழியினது பழிகரப் பாகும் (126)**

**க - து :** பழிகரப்பங்கதம் ஆமாறு கூறுகின்றது.

**உரை :** வசையினை வெளிப்பட மொழியாமல் சொற்களுள் மறைத்து மொழியின் அது பழிகரப்பங்கதமாகும்.

எ - டு : நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவல மிலர்.

அறநெறி கவலா நெஞ்சுடைய கயவரைத் திருவுடையார் என மறைத்துக்கூறிப் பழித்தவாறு காண்க.

**சூ. 441 : செய்யுள் தாமே இரண்டென மொழிப (127)**

**க - து :** பாட்டு முதலாய எழுவகைச் செய்யுட்கள் பொருளுணர்த்தும் வகையால் இரு கூறுபடுமென்கின்றது.

**உரை ;** ஓசையானும் அளவானும் உறுப்பானும் மேற் பகுத்துக் கூறப்பெற்ற எழுவகை நிலத்தவாய செய்யுட்கள் பொருளுணர்த்தும் முறைமையால் இரண்டு பாகுபாடு படும்.

மேல் அங்கதச் செய்யுள் செம்பொருளாகவும் பழிகரந்துங் கூறப்படுமென விதித்த அதிகாரத்தான் - ஏனைப்பொருள் பற்றி வரும் செய்யுட்களும் வெளிப்படையாயும் மொழிகரந்தும் வருமாறு நோக்கி அவற்றைப் பாகுபாடு செய்தார் என அறிக. அவை இரு பகுதியன ஆமாறு மேற்கூறுப.

சொற்கள் தெரிபு வேறு நிலையிலும் குறிட பிற்றோன்றலுமாக நிகழ்தலின் அவற்றாலாகும் தொடர்மொழியாகிய செய்யுளும் இருவகைப்படுவனவாயின.

**சூ. 442 : புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்
செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர் (128)**

**க - து :** மேல் இரண்டென்றவற்றுள் ஒரு கூறு பற்றிய இலக்கணம் கூறுகின்றது.



**உரை :** யாப்பின் வழி நிகழும் எழுநிலத் தெழுந்து வரும் செய்யுட்கள் புகழொடும் செம்பொருளொடும் புணர்ந்து வருமாயின் அவ்வகையினைச் செவியுறைச் செய்யுள் என்று கூறுவர் புலவர்.

புகழொடு புணர்தலாவது :- கைக்கிளைப் பகுதியாயும் பாடாண் பகுதியாயும் வருவனவற்றைப் பரவலும் புகழ்ச்சியும் தோன்றயாப்பது. பொருளொடு புணர்தலாவது :- குறிஞ்சி முதலாய ஏழும் அவற்றின் புறனாகிய ஏழுமாக வருவனவற்றை அறமுதலாய மும்முதற்பொருள் தோன்ற யாப்பது.

கேட்போருக்கு உவகையும் உறுதியும் பயந்து நிற்றலின் "செவியுறை" ஆயிற்று. செவியறிவுறுஉ என்னும் வாழ்த்தியல் வகை வேறு இது வேறு. செவியறிவுறூஉ வாழ்த்துதற்கண் மட்டும் தனக்கோதிய இலக்கணத்தின்படி வெண்பாவாயும் ஆசிரியமாயும் வரும். செவியுறைச் செய்யுள் எல்லாப்பாவானும் எல்லாப் பொருளையும் பற்றி ஈண்டு ஓதிய இயல்பிற்றாய் வருமென அவற்றின் வேறுபாடறிக. செவியுறை = பயன்தரும் கேள்விச் செல்வம் என்பது பொருள்.

எ - டு : ஆய்தூவி அனமென அணிமயிற் பெடையென
தூதுணம் புறவெனத் துதைந்தநின் எழில்நலம்
மாதர்கொள் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉம் என்பதை அறிதியோ அறியாயோ (கலி-55)

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாட னொடு நட்பே (குறுந்—2)

வினையே ஆடவர்க்குயிரே வாள்நுதல்
மனையுறை மகளிர்க் காடவர் உயிரென
நமக்குரைத் தோரும் தாமே
அழாஅல் தோழி அழுங்குவர் செலவே (குறுந் — 135)

மெல்லியல் அரிவைநின் நல்லகம்புலம்ப
நிற்றுறந் தமைகுவெ னாயின் ஏற்றுறந்து
இரவலர் வாராவைகல்
பலவாகுக யான் செலவுறு தகவே (குறுந் — 137

பாரிபாரி என்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப்புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டீண்டு உலகுபுரப்பதுவே (புறம்—107)

EFEO_GUEST_JLC_02-066 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர்
பண்ணார் நடைப்புரவி பண்விடுமின் - எண்ணாதீர்
தேர்வேந்தன் தென்னன் திருவுத்திராடநாட்
போர்வேந்தன் பூசலிலன். (முத்தொள்ளாயிரம்)

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமாற்றாமுளரக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. (நாலடி—14–2)

இவ்வாறு வரும். இவை புகழொடும் பொருளொடும் வந்தவாறு காண்க. தொகை நூலுள்ளும் பிறவற்றுள்ளும் வரும் செய்யுளுள் பெரும்பான்மையும் செவியுறைச் செய்யுளேயாம்.

**சூ. 443 : வசையொடும் நசையொடும் புணர்ந்தன்றாயின்
அங்கதச் செய்யுள என்மனார் புலவர். (129)**

க - து : மற்றொரு வகைக்கு இலக்கணம் கூறுகின்றது

உரை : மேற்கூறிய செவியுறை போலாமல் வசையொடும் (தன்னல) விருப்பொடும் புணர்ந்து வருமாயின் அவ்வகையினை அங்கதச் செய்யுள் என்று கூறுவர் புலவர்.

மேல் வெண்பாயாப்பிற்றாய் வருமென்ற செம்பொருளங்கதம், பழிகரப்பங்கதம் என்பவை வேறு இதுவேறு. அவை எள்ளல் முறையால் பழித்துக் கூறு ற்கண் வரும். அங்கதம் — பழிப்பு. ஈண்டுக் கூறிய அங்கதவகை. எல்லாப்பாவானும் எல்லாப் பொருள் மேலும் வரும்.

வசையாவது : வெறுப்பும் சினமும் பற்றி வரும் கடுமொழி. நசையாவது : இயையாதாயினும் பெறல் வேண்டுமென்னும் சிறுவேட்கை.

இவ்அங்கத வகை அகத்திணையுள் கைக்கிளை, பெருந் திணை பற்றியும், பிரிவுக் காலத்தில் தோழி இயற்பழித்தலும், பரத்தையர் கூற்றுமாகியவை பற்றியும் வரும். புறத்திணையுள் காஞ்சித்திணைப் பொருள் பற்றியும், கொடுப்போரேத்திக் கொடார்ப்பழித்தல் வஞ்சினங் கூறல் முதலியவை பற்றியும்வரும்.

எ - டு : யாரினும் இனியன் பேரன்பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச்சேவல்
சூன்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம் பொதிக் கொண்ட தீங்கழைக்கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே (குறுந்—85)



ஒருஉ, கொடியியல் நல்லார் குரல் நாற்றதுற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாக
தொடிய எமக்குநீ யாரை ? பெரியார்க்கு
அடியரோ ஆற்றாதவர் (கலி—87)

கடந்தடுதானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்பு கொளற்கரிதே
முந்நூறூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினர் செலினே (புறம் - 110)

எனவரும். இங்ஙனம். குறிப்பால் வசையும் நசையும் தோன்ற வருவனவெல்லாம் அங்கதச் செய்யுள் வகை எனக்கொள்க.

இம்மூன்று நூற்பாக்களையும் அங்கதச் செய்யுள் (சூ. 124) பற்றிய இலக்கணமே கூறியதாகக் கொள்வர் பேராசிரியர். அங்ஙனமாயின் அது கூறியது கூறலாயும் மயங்க வைத்தலாயும் முடியும். அன்றியும் எல்லாச் செய்யுளும் பொருள் உணர்த்தும் வகையால் இங்ஙனம் இருவகைப்படும் என்னும் செய்யுளியற் கொள்கையும் பெறப்படாதொழியும் என்க.

**சூ. 444 : ஒத்தாழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே (130)**

க - து : முறையானே கலிப்பா இலக்கணம் கூறத்தொடங்கி அஃது இத்துணை வகைப்படுமென்கிறது.

உரை : பொருளானும் உறுப்பானும் முடிபானும் வேறுபட்டு விரியுமாற்றான் கலிப்பா ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பா, கொச்சகக்கலி உறழ்கலி என நான்கு வகையினதாகும். ஒடு - எண்ணுப் பொருட்டு (எ-டு) இலக்கணம் கூறுமிடத்துக் காட்டுதும்.

**சூ. 445 : அவற்றுள்; ஒத்தாழிசைக்கலி இருவகைத்தாகும் (131)**

க - து : ஒத்தாழிசைக் கலிப்பாவின் பாகுபாடு கூறுகின்றது.

உரை : மேற்கூறிய நான்கனுள் ஒத்தாழிசைக்கலி இரு வகையாக வரும். இரண்டென்னாது 'இருவகை' என்றார் அவற்றுள்ளும் கூறுபாடுண்டென்றறிவித்தற்கு.

**சூ. 446 : இடைநிலைப் பாட்டே தரவு போக்கு அடையென
நடைபயின் றொழுகும் ஒன்று என மொழிப (132)**

க - து : ஒத்தாழிசைக்கலியுள் ஒன்றனது இலக்கணம் கூறுகின்றது.

**உரை :** மேற்கூறிய இருவகை ஒத்தாழிசைக் கலியுள் ஒரு கூறு இடைநிலைப் பாட்டும், தரவும், போக்கும் அடையும் என்ற உறுப்புக்களொடு வழக்கு பெற்றியலும் என்று கூறுவர் புலவர்.

இடைநிலைபாட்டு என்றது தாழிசையை. அராகம் முதலிய உறுப்புக்களும் இடைவருமாயினும் அவை வெவ்வேறு சிறப்புப் பெயர் பெறுதலான் இதனையே இடைநிலை என்றார். அன்றியும் இதுபிற உறுப்புப் போலாது கலியோசை தழுவியே வருமாதலின் வாளா இடைநிலை என்னாது "இடைநிலைப்பாட்டு" என்றார் என அறிக. "நடை" என்றதனான் இஃது ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருதலும் ஒரோ இடத்து இடையே தனிச்சொல் பெற்று வருதலும் கொள்க. தாழிசையை முற்கூறியது இவ்வகைக் கலிப்பா அதனாற்பெயர் பெற்று வரும் என்பதுணர்தற்கென்க.

தரவும் போக்கும் மேல் விளக்கப்பெற்றன. அடை என்றது தனிச்சொல்லை. இந்நான்கு உறுப்புக்களும் முறையானே வருவது நேரிசை ஒத்தாழிசைக்கலி எனப்படும்

எ - டு : பாஅல் அஞ்சிறைச் சவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறதர்ப் பட்ட ஆறுமயங்கருஞ்சுரம்
இறந்துநீர் செய்யும் பொருளினும் யாநுமக்குச்
சிறந்தனம் அதல் அறிந்தனி ராயின்
நீளிரு முந்நீர் வளிகலன் வௌவலின்
ஆள்வினைக் கழிந்தோர் போறல் அல்லதை
கேள்பெருந்தகையொடு எவன்பல மொழிகுவம்
நாளும் கோள்மீன் தகைத்தலும் தகைமே (இது தரவு)
கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண் டமைவாளோ
ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தொடு பைதல்கொண் டமைவாளோ
ஓரிரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ
(இவை மூன்றும் தாழிசை)
என வாங்கு, (இது தனிச்சொல்)
பொய்நநல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு
எந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வது
அந்நாள் கொண் டிறக்குமிவள் அரும்பெற லுயிரே
(இது சுரிதகம்) இது நான்குறுப்பும் முறையானே வந்த நேரிசை ஒத்தாழிசைக்கலி.



**சூ 447 :** தரவே தானும் நாலடி இழிபாய்
ஆறிரண் டுயர்பென் றேறவும் பெறுமே (133)

**க - து :** கலியுறுப்பினுள் தரவிற்கு அடிவரையறை கூறுகின்றது.

**உரை :** தரவென்னும் கலியுறுப்பு சிறுமை நான்கடியாய்ப் பெருமை பன்னிரண்டடியளவாய் உயர்ந்தும் நிற்கப்பெறும். உம்மையான், அதனிற் குறைந்து நிற்கவும் பெறுமெனக் கொள்க. சிறுபான்மை பன்னிரண்டடியினும் இகந்து வருமேனும் கொள்க.

எ - டு : 'ஆறறி அந்தணர்க்கு' என்னும் கடவுள் வாழ்த்துத்தரவு நான்கடியான் வந்தது. (கலி 1)
'வயக்குறுமண்டிலம்' (கலி-25) என்னும் கலிப்பாவின் தரவு பன்னிரண்டடியான் வந்தது

'அரிதாய அறனெய்தி' (கலி 11) என்னும் தரவு ஐந்தடியான் வந்தது. 'மணிநிறமலர்ப் பொய்கை' (கலி.70) என்னும் தரவு ஆறடியான் வந்தது. 'வீயகம்புலம்ப' (கலி.46) என்னும் தரவு ஒன்பதடியான் வந்தது. 'நீரார்செறுவில் நெய்தலொடு' (கலி-75) என்னும் தரவு பதிமூன்றடியான் வந்தது.

**சூ. 448 :** இடைநிலைப் பாட்டே
தரவகப் பட்ட மரபின என்ப (134)

**க - து :** தாழிசைக்கு அடிவரையறை கூறுகின்றது.

**உரை :** இடைநிலைப் பாட்டு, தரவின் அளவிற்குட்பட்ட அடிகளான் வரும் இலக்கணத்தது என்று கூறுவர் புலவர்.

சுருங்கி வருமென்னாது 'அகப்பட்ட' என்றமையான் நாலடித் தரவிற்கு நாலடித் தாழிசை வரினும் ஒக்குமென அறிக.

'மரபினது' என்றமையான் சிறுமை இரண்டடியான் வருமென்றும் பெருமை நான்கடியின் மிகாது வருதலே சிறப்புடைத்தென்றும் மிக்குவரினும் தரவிற் சுருங்கியே வருமென்றும் கொள்க.

எ - டு : 'அரிதே தோழிநாண் நிறுப்பாம்' (கலி 137) என்னும் நெய்தற்கலி ஏழடித் தரவானும் ஐந்தடித் தாழிசைகளானும் வந்தது.

**சூ. 449 :** அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகும் ஆங்கென மொழிப. (135)

**க - து :** தனிச்சொல் வரும் இடங் கூறுகின்றது.

உரை : அடைநிலையாகிய தனிச்சொல் தாழிசையின் பின்னர் வழக்குப் பயின்று அங்ஙனம் மரபாக வருமென்று கூறுவர் புலவர். "நடை" என்றதனான் மொழியசையாயும் வழியசை புணர்ந்தும் வருதலேயன்றிக் குறைவு சீர்த்தாகி வருமெனினும் கொள்க. ஆங்கென்றது மரபினைச் சுட்டி நின்றது.

'ஆங்கு' என்பதே தனிச்சொல்லாக வருமென்பார் நச்சினார்க்கினியர் அது குன்றக் கூறலாமாறுணர்க.

'ஆங்கு' என்றதனான் தாழிசைகட்கிடையே தனிச்சொல் வருதலும் கொள்க. எ - டு : மேற்காட்டினாம் (சூ. 123)

சூ. 450 : போக்கியல் வகையே வைப்பெனப் படுமே (136)

க - து : போக்கியலென்னும் சுரிதக உறுப்பாமாறு கூறுகின்றது.

உரை : போக்கியல் என்னும் சுரிதக வகையின் இலக்கணம் வைப்பு என்று கூறப்படும்

தரவு முதலாயவற்றாற் கூறப்பெறும் பொருள்களை அடக்கி முடித்து நிற்றலின் வைப்பு எனப்பட்டது. இது சொல்லான் முடிந்த இலக்கணம். ஆசிரிய நடையானும் வெண்பா நடையானும் இவ்வுறுப்பு வருதலின் 'வகை' என்றார்.

சுரிதகம், வாரம், வைப்பு, போக்கியல், அடக்கியல் என்பவை ஒரு பொருட்கிளவிகள். பின்னே கூறுவதனைப் போக்கிக் கூறுதும் என்பவாகலின் எல்லாவற்றிற்கும் பின் இறுதியாக நிற்கும் இவ்வுறுப்புப் போக்கியல் எனப்பட்டது.

சூ. 451 தரவிய லொத்தும் அதனகப் படுமே
புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே (137)

க - து : போக்கியலின் அடிவரையறையும் அதன் தன்மையும் கூறுகின்றது.

உரை : சுரிதக உறுப்பின் அடியளவாவது தரவிற்கோதப் பெற்ற இலக்கணத்தை ஒத்தும் அதற்குக் குறைந்தும் வரும். குற்றமற்ற அதன் இறுதிநிலை மேலே உரைக்கப்பட்டது

அஃதாவது தரவிற்கு ஓதிய பன்னிரண்டடி மேலெல்லையாக அமைந்து தரவு உறுப்பு எத்தனை அடியாக வருகின்றதோ அவ்வளவாகவும் அதிற் குறைந்தும் வரும் என்றவாறு. எனவே சிறுமை நான்கடியாக வரும் தரவுற்குச் சுரிதகம் அதனை ஒத்தும் அதனிற் குறைந்தும் வருமென்பதாயிற்று.



"அதனகத்தும் படுமே" என்னும் உம்மை செய்யுள் விகாரத்தான் தொக்கு அதனகப்படுமே என நின்றது. உரைத் தன்றே என்னும் ஏகாரம் தேற்றம். ஒத்தும் என நின்ற உம்மையை எதிர்மறையாக்கிச் சிறுபான்மை ஒவ்வாது மிக்கு வருமேனும் கொள்க.

எ - டு : 'படைபண்ணிப் புனையவும்' (கலி-17)என்னும் பாலைக் கலிப்பாடலின் சுரிதகம் தரவொடு ஒத்து வந்தது.
'பாடின்றிப் பசந்தகண்' (கலி-16) என்னும் பாலைக் கலிப்பாடலின் சுரிதகம் தரவினும் மிக்குவந்தது
'செருமிகு சினவேந்தன்' (கலி-13) என்னும் பாலைக் கலிப்பாடலின் சுரிதகம் தரவினும் குறைந்து வந்தது.

குறைந்து வருதலே பெரும்பான்மை என்பதைக் கலித் தொகையுள் வரும் பாடல்களால் அறியலாம்.

இந்நூற்பாவிற்குப் பேராசிரியர் கூறும் உரையும் விளக்கமும் தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறலாய் உள்ளமையை ஓர்ந்தறிக.

சூ. 452 : ஏனை ஒன்றே
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே (138)

க - து : பிறிதொரு வகையாகிய ஒத்தாழிசைக் கலியாமாறு கூறுகின்றது.

உரை : ஒத்தாழிசைக் கலிப்பாவின் பிறிதொரு கூறு முன்னிலைக் கண் தேவரைப் பராஅயினவாகி வரும்.

எனவே படர்க்கைப் பரவல் தேவபாணியாகாதென்பது பெறப்படும். இதனான் ஒத்தாழிசைக்கலியான் தேவரை முன்னிலைப்படுத்திப் பாடுவது இயற்றமிழ்த் தேவபாணி எனக் கொள்க.

சூ. 453 : அதுவே
வண்ணகம் ஒருபோகு என இரு வகைத்தே (139)

க - து : அஃது இருவகையாகும் என்கின்றது.

உரை : தேவரைப் பரவுதலாய் முன்னிலைக்கண் வருமென மேற்கூறிய ஒத்தாழிசைக்கலிப்பா வண்ணகம் ஒருபோகு என இருவகைத்தாகும்.

சூ. 454 : (அவற்றுள்) வண்ணகந் தானே
தரவே தாழிசை எண்ணே வாரமென்று
அந்நால் வகையிற் றோன்று மென்ப (140)

க - து : வண்ணக ஒத்தாழிசை ஆமாறு கூறுகின்றது.

EFEO_GUEST_JLC_02-069 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**உரை :** மேற்கூறிய இரண்டனுள் வண்ணக ஒத்தாழிசைதா ‹ தரவும் தாழிசையும் எண்ணும் வாரமும் ஆகிய நால்வகை உறுப்பொடு தோன்றுமென்று கூறுவர் புலவர். 'வகை' என்றதனால் தனிச்சொல் பெறுதலும் கொள்க.

எண்ணாவது அம்போதரங்கம். அஃது நீரலை ஓங்கியெழுந்து ஒருகாலைக்கொருகால் சுருங்கி அகன்று பரவுதல் போல நாற்சீரடியாய்த் தோன்றிப் பின் முச்சீரடியாகவும் முடியும். அங்ஙனம் பேரெண்ணாகத் தோன்றி அளவெண், இடையென், சிற்றெண் என்னுமாறு முடிதலின் 'எண்' எனப் பெயர்பெற்றது. எண், அம்போதரங்கம், அசையடி என்பவை ஒரு பொருட் கிளவிகள்.

வண்ணகமாவது, பண்ணும் திறனுமின்றிச் சீரும் இசையும் பெற்று முடுகியும் முடுகாதும் வரும் ஓசைவிகற்பமாம். அதனான் இஃது இசைநூல் வழிவந்த மரபுப் பெயர் என்பது பெறப்படும். இவ்வகைக் கலிப்பாக்களைத் தேவபாணி என வழங்கலும் இக்கருத்தானே என்பது புலப்படும். வண்ணகம் என்னும் இக்கலியுறுப்பு வேறு வண்ணம் என்னும் செய்யுளுறுப்பு வேறெென அறிக.

**சூ. 455 : தரவே தானும்**
**நான்கும் ஆறும் எட்டும் என்ற**
**நேரடி பற்றிய நிலைமைத் தாகும் (141)**

**க - து :** தேவபாணியாக வரும் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குரிய தாவுறுப்பிற்கு அடிவரையறை கூறுகின்றது.

**உரை :** வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குரிய தரவு தான் நான்கும் ஆறும் எட்டும் என்னும் இணையளவாகிய அடி பற்றி வரும் நிலைமைத்தாகும்.

நேரடி என்றது இரட்டைப்பட வரும் சமநிலை அடிகளை. ஏகாரம் பிரிநிலை 'தானும்' என்பது அசை.

**சூ. 456 : ஒத்துமூன் றாகும் ஒத்தா ழிசையே (142)**

**க - து :** வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குரிய தாழிசை வருமாறு கூறுகின்றது.

**உரை :** வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குரிய தாழிசை ஒத்து மூன்றாக அடுக்கி வரும். ஒத்தலாவது ஓசையானும், பொருளானும், அளவானும் ஒத்தல்.

**சூ. 457 : தரவிற் சுருங்கித் தோன்று மென்ப (143)**

**க - து :** மேற்கூறிய தாழிசைக்கு அடியளவு கூறுகின்றது



**உரை :** ஒத்து மூன்றடுக்கி வருமெனப்பட்ட தாழிசை ஒவ்வொன்றும் தரவு உறுப்பிற் சுருங்கிய அடிகளாகத் தோன்றி வருமெனக் கூறுவர் புலவர்.

**சூ. 458 : அடக்கியல் வாரம் தரவோ டொக்கும் (144)**

**க - து :** வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குரிய சுரிதகத்திற்கு அடியளவு கூறுகின்றது.

**உரை :** அடக்கியலாகிய வாரம் என்னும் இறுதி உறுப்பின் அடியளவு முதலுறுப்பாகிய தரவினை ஒத்துவரும்.

அஃதாவது நான்குமுதல் எட்டடியளவும் வரும் என்பதும் தரவினும் மிக்குவாராதென்பதும் கருத்து. 'ஓடு' இன்னோசையின் பொருட்டு ஓடு என நீண்டது.

**சூ. 459 : முதற்றொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே (145)**

**க - து :** எண்ணின் இயல்பு கூறுகின்றது.

**உரை :** எண்ணாகிய அம்போதரங்க உறுப்பு முதலாவது தொடை, அளவாற் பெருகி நிற்கப் பின்வரும் தொடைகள் குறைந்து வரும். அஃதாவது நாற்சீர் கொண்ட ஈரடியான் இரண்டும் ஓரடியால் நான்கும் முச்சீரடியால் எட்டும் இருசீரடியான் பதினாறும் வரும். எட்டும் பதினாறும் எனப்பட்டவை நான்கும் எட்டுமாக வரினும் கொள்ளப்பெறும்.

இவை முறையே பேரெண் அளவெண் இடையெண் சிற்றெண் எனவும் வழங்கப்பெறும்

'சிறப்புடைப் பொருளைப் பிற்படக்கிளத்தல்' என்பதனால் இவ்வுறுப்பைப் பிற்படக் கூறினார். தேவபாணிப்பாவிற்கு இஃது சிறப்புத்தந்து நிற்றலின் என்க.

**சூ. 460 : எண்இடை ஒழிதல் ஏதம் இன்றே**
**சின்னம் இல்லாக் காலை யான (146)**

**க - து :** மேலதற்கொருபுறனடை கூறுகின்றது.

**உரை :** வண்ணக ஒத்தாழிசைக்கலியுள் 'தனிச்சொல் என்னும் உறுப்பு வாராவிடத்து, அம்போதரங்க உறுப்பு இடையே வாராதொழிதல் குற்றமின்று. எனவே தனிச்சொல் வருமிடத்து அம்போதரங்கம் வாராதிருத்தல் குற்றமாம் என்றவாறு.

காரணம், நான்குறுப்பொடு அமைந்து நேரிசை ஒத்தாழிசைக் கலி எனற்கும் ஏற்குமாகலின் என்க.

EFEO_GUEST_JLC_02-070 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

“ சின்னம் அல்லாக்காலையான ” எனப் பாடங்கொண்டு சிற்றெண்ணாகிய அம்போதரங்கம் ஒழியாதவிடத்து எனப் பொருளுரைத்து, முற்கூறிய எண்ணின்றி வருதல் செய்யுட்கு ஏதமின்று என விளக்குவார் பேராசிரியர்.

ஆசிரியர் கருத்து அதுவாயின் “ ஏனை எண் ஒழிதல் ஏதமின்றே ” எனக் கூறியிருப்பார். மற்றும் சின்னம் என்பதற்கு அம்போதரங்கம் என்னும் பொருள் பொருந்துமாறில்லை.

‘ சின்னமில்லாக்காலை ’ என்பதே பாடம் என்பதனை உரையாசிரியர் உரையால் அறியலாம்.

இனி இவ்வுறுப்புக்கள் எல்லாம் அமைந்த வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா வருமாறு.

எ - டு : ‘ மணிவிளங்கு திருமார்பின் மாமலராள் வீற்றிருப்பப்
பணி தயங்கு நேமியும் பானிறத்த சுரிசங்கு
மிருசுடர்போ லிருகரத்தி லேந்தியமர் மாயோனும்
பங்கயத்தி லுறைவோனும் பாகத்தோர் பசுங்கொடிசேர்
செந்தழற்கண் ணுதலோனுந் தேருங்கா னீயென்பார்க்
கவரவர்த முள்ளத்து ளவ்வுருவா யல்லாத
பிறவுருவு நீயென்னிற் பிறவுருவு நீயேயா
யளப்பரிய நான்மறையா னுணர்த்துதற் கரியோனே
(இஃது எட்டடியான் வந்த தரவு)

எவ்வுயிர்க்கு முயிரேயா யியங்குதனின் றொழிலாகி
யவ்வுயிர்க்க ணடங்கியே யருளாது நிற்றலினால்
வெவ்வினைசெய் தவையுழந்து வெம்பிறவிக் கடலழுந்த
வவ்வினையை யகற்றாம னிற்பதுநின் னருளன்றே ;

பல்லுயிரும் படைப்பதுநின் பண்பென்றே பகரவினால்
வல்வினையின் வலைப்பட்டு வருத்தங்கூ ருயிர்தம்மை
நல்வினையே பயில்வித்து நடுக்கஞ்செய் பகைநீக்கி
யல்லல்வா யழுந்தாம லகற்றுவது மருளன்றே ;

அழிப்பதுநின் றொழிலென்றே யறைந்தாலு முயிரெல்லா
மொழித்தவற்று ளுணர்வுகளை யொருவாம
லுடனிறுத்திப்
பழிப்பின்றிப் பல்காலு மிப்பரிசே பயிற்றுதலி
னழிப்பதுவு மில்லையா லாங்கதுவு மருளன்றே
(இவை மூன்றும் அடுங்கிவந்த ஒத்தாழிசை)

வேள்வி யாற்றி விதிவழி யொழுகிய
தாழ்வி லந்தணர் தம்வினை யாயினை ;



வினையி னிங்கி விழுத்தவஞ் செய்யு
முனைவர் தமக்கு முத்தி யாயினை ;
(இவை நாற்சீர் ஈரடி இரண்டம் போதரங்கம்) பேரெண்

இலனென விகழ்ந்தோர்க் கிலையு மாயினை ;
உளனென வுணர்ந்தோர்க் குளையு மாயினை ;
அருவுரு வென்போர்க் கவையு மாயினை ;
பொருவற விளங்கிப் போத மாயினை ;
(இவை நாற்சீர் ஓரடியான் வந்த நான்கம் போதரங்கம்)
அளவெண்

பானிற வண்ணனீ
பனிமதிக் கடவுணீ
நீனிற வுருவுநீ
நிறமிகு கனலிநீ ;
யறுமுக வொருவனீ ;
யானிழற் கடவுணீ
பெறுதிரு வுருவுநீ
பெட்பன பிறவுநீ ;
(இவை முச்சீரடியான்வந்த எட்டம்போதரங்கம்) இடையெண்

மண்ணு நீ பண்ணு நீ
விண்ணு நீ பாவு நீ
மலையு நீ பாட்டு நீ
கடலு நீ தொடரு நீ
எண்ணு நீ அண்ண னீ
எழுத்து நீ அமல னீ
இரவு நீ அருளு நீ
பகலு நீ பொருளு நீ ;
(இவை இரு சீரடியான வந்த பதினாறம் போதரங்கம்) சிற்றெண்

ஆங்க, (இது தனிச்சொல்)
இணையை யாகிய விறைவநின் னடியிணை
சென்னியின் வாங்கிப் பன்னாள் பரவுதும்
மலர்தலை யுலகின் பன்னுயிர்க் கெல்லா
நிலவிய பிறவியை நீத்தல் வேண்டி
முற்றிய பற்றொடு செற்ற நீக்கி
முனிமை யாக்கிய மூவா முத்தியை
மயலற வளித்தநின் மலரடி
யரிய வன்றா யுரிதினிற் பெறவே ”
(இது தரவிற் குறைந்து வந்த ஆசிரியச் சுரிதகம்)

EFEO_GUEST_JLC_02-071 16/06/2011 © École française d’Extrême-Orient, www.efeo.fr

எண்ணும் சின்னமுமின்றி மூன்றுறுப்பான் வந்த தேவபாணி வண்ணக ஒத்தாழிசை வந்துழிக் கண்டு கொள்க.

**சூ. 461 :** ஒருபோகு இயற்கையும் இருவகைத்தாகும் (147)

**க - து :** தேவர்ப்பராயவற்றுள் பிறிதொன்றாகிய ஒருபோகும் இருவகையாம் என்கின்றது

**உரை :** வண்ணகத்தொடு மேற்கூறப்பெற்ற ஒரு போகு கலிப்பாவின் இயல்பும் இருவகைத்தாகும்.

**சூ. 462 :** கொச்சக ஒருபோகு அமபோதரங்கமென்று
ஒப்ப நாடி உணர்தல் வேண்டும் (148)

**க - து :** இருவகை எனப்பட்ட ஒரு போகிற்குரிய பெயர் கூறுகிறது.

**உரை :** ஒருபோகின் இருவகையான கொச்சக ஒருபோகு அம்போதரங்க ஒயபோகு என்று வரும் அவற்றை அவற்றிற்கு ஓதப்பெறும் இலக்கணத்தான் ஒப்ப ஆராய்ந்து உணர்க.

ஒருபோகு என்பது காரணப்பெயர் போகு-நீட்சி. "வார்த்தல் போகல் ஒழுகல் மூன்றும் நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள" (உரி-19.) என்றாராகலின் ஒருவகை நீட்சி என்பது பொருள். இவை முறையே இருபது அடிகளும் அறுபது அடிகளுமாய் நிறைந்து நீண்டு வருதலின் ஒருபோகெனப் பெற்றன.

இவ்இரண்டும் அடக்கியல் ஒழிந்த ஏனை உறுப்புகளான் ஒற்றுமைப் படுதலின் இவற்றின் வேறுபாட்டினை நுண்ணிதின் தெரிந்துகொள்ளவேண்டுதலின் "ஒப்பநாடி உணர்தல் வேண்டும்" என்றார். இன்னும் இதனானே ஏனைய கொச்சகக்கலி முதலியவற்றொடும் வேறுபடுத்து உணர்தல் வேண்டுமென்றும் அறிக முறையே இவற்றின் இலக்கணமாறு மேற்கூறுவார்.

**சூ. 463 ;** தரவின் றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை இன்றித் தரவுடைத் தாகியும்
எண் இடையிட்டுச் சின்னம் குன்றியும்
அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது
கொச்சக ஒருபோகு ஆகும் என்ப. (149)

**க - து :** கொச்சக ஒருபோகிற்கூறிய இலக்கணம் கூறுகின்றது.

**உரை :** தேவர்ப்பராஅய முன்னிலைக்கண்ணே வரும் ஒத்தாழிசைக் கலியின் பிரிவாகிய கொச்சக ஒருபோகு என்னும்



கலிப்பா தரவுறுப்பின்றித் தாழிசை பெற்றும், தாழிசையின்றித் தரவு உடையதாகியும் அம்போதரங்க உறுப்பு இன்றியும் தனிச் சொல் இல்லாமலும் சுரிதக உறுப்பின்றியும், நாற்சீரடியினும் மிக்கு ஐஞ்சீரடி முதலாக ஓங்கி நடைபெற்றும், கலியுறுப்புக்களுக்கு ஓதிய யாப்பியல்புகளானும் பொருளமைதியானும் வேறுபட்டு வருவதாகும் என்று கூறுவர் புலவர்.

தரவின்றி என்னாது 'இன்றாகி' என்றதனான் எருத்தமாக நிற்பினும் தனக்குரிய இலக்கணத்தின் வேறுபட்டு நிற்கு மென்றறிக. தரவுபெற்றும் என்னாது உடைத்தாகியும் என்றதனான் ஒன்றற்கு மேற்பட்ட தரவு சிறுபான்மை வரினும் கொள்க. அம்போதரங்க உறுப்பு நான்கும் வராமல் ஒன்றோ இரண்டோ வரினும் கொள்க என்பார் எண் இன்றி என்னாது 'இடையிட்டு' என்றார் என்க.

சின்னமில்லாத வழி வண்ணக ஒத்தாழிசையுள் அம்போதரங்கம் வாராது என்றமையின் ஒரு போகின்கண் சின்னமின்றியும் வருமென்பதுணர்த்தினார் என அறிக.

அடிநிமிர்ந்தொழுகியும் எனப் பொதுப்படக் கூறியதனான் சிறுமை பெருமை பற்றிய அடி வரையறையை இகந்து வருதலும் கொள்க. 'ஆகும் என்றதனான் இவ்வுறுப்புக்கள் தனித்தனி வருதலும் தாழிசைகள் அடுக்கி வருதலும், அடக்கியல் அடிகள் மண்டிலமாக வருதலும் நேரிசை ஒத்தாழிசையொடும் வெண் கலியொடும் மாறுபட்டு வருதலும் பிறவும் கொச்சக ஒருபோகென அடக்கிக்கொள்க.

இனி, பொருளின் வேறுபடுதலாவது : தேவர்ப்பராய முன்னிலைக்கண் வருதலேயன்றி ஏனையிடத்ததாகி வருதலும், மக்களைப் பராவி வருதலும் அகமும் புறமுமாகிய பொருளைத் தழுவி வருதலும் பிறவுமாம்.

**எ - டு :** "உளையாழி யோரேழுமொருசெறுவி னொடுங்குதலான்
விளையாட நீர்பெறா மீனுருவம் பரவுதுமே"
(இப்பரணிச் செய்யுள் தாழிசை தனித்து வந்தது.)
'யானைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கான வெருமைக் கருந்தலைமே னின்றாயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய் ;
வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரிய திரிகோட்டுக் கலைமிசைமே னின்றாயா



EFEO_GUEST_JLC_02-072 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

லரியரன்பூ மேலா னகமலர்மேன் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்;

சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்கணரிமான் சினவிடைமே னின்றாயாற்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறைபோற்ற வேநிற்பாய்''
(தாழிசை மூன்றடுக்கி வந்தது)

''நீறணிந்த திருமேனி நெருப்புருவங் கிளைத்ததுபோற்
கூறணிந்தகுங்குமங்கொண் டொருமுலையோ குறிசெய்ய
வேறணிந்த சுவடெறிப்ப வேனிலாற் கெரிவிழித்த
வேறணிந்த வெல்கொடியோ யெவ்வுயிர்நிற்
றவிர்ந்தனவே'' (தரவு மட்டும் வந்தது)

'' மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணம் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே;''
(படர்க்கைப் பரவலாய்த் தாழிசை அடிநிமிர்ந்து
வந்தது(

'' மழைநுழைந்து புறப்பட்ட மதியமு ஞாயிறும்போ
லுழைவழங்கு வலம்புரியுந் திகிரியு மொலிசிறப்பப்
பச்சென்ன வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய்க்
கச்சென்னக் கனல்கின்ற கதிர்முலைமேற் கவின்செய்ய
வம்மேகத் திடைப்பிறந்த நரையுருமே றதிசயிப் ப
மைம்மேனி மருங்கதிர வரியேறு வால்புடைப்ப
விண்டோயு மணிநீல வெற்பினிடை வேய்மிடைந்தாங்
கெண்டோளு மிடுநீழ லிளங்கிளிகள் களிகூரக்
கொதியாது கொதித்தெறிந்தகோட்டெருமைத்
தலையின்மிசை
மிதியாத சீறடி மிதித்தன போற்றோன்றத்
தாங்கிய புகர்வாளுங் கேடகமுந் தனித்தனி
வாங்கிய கோளரவு மதியமும் போன்றிலங்க
மைதொடுத்தகடற்புறஞ்சூழ் மலையென்ன மணியல்குல்
கொய்துடுத்த பொற்றுகிலின் கொழுஞ்சோதிக்
கொழுந்தோட்ட
நீனின்ற படிவத்தா னெடியோனை முதற்பயந்த
தாயென்று முதுமறை பரவினும்
யாயென் றல்ல தியாந்துணி யலமே''
'தரவு அடிநிமிர்ந்து வந்தது)



'' பூணாக வென்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணாகக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றான்
மாணாக வெண்ணூலான் வாணுதலோர் பாகங்கொண்
டுணாகும் பிச்சையா னுண்ணாத நஞ்சுண்டான்
வான்யாறு தாழ்ந்த சடையான் மழுவலத்தான்
யானார்வஞ் செய்யு மிறை;

எனவாங்குப் பாடி யிறைஞ்சுவோர்க் கெல்லாம்
வினைமாசு தீரும் விளக்காகுந் தோற்றத்
தனையோய் மறலிக்கு மச்சம் பயந்த
புனைபூங் கழற்கான்மேற் பூவொடு நீர்தூஉ
மனைமாண்ட பாக முளப்பட வாழ்த்தி
யெனைநாளு மேத்துது மெந்தையே நின்னை
நினையா தொழியற்க நெஞ்சு'' ... ... ... ... ...
(தரவு இணைந்து வந்தது

'' முழங்குதிரைக் கொற்கைவேந்தன்
முழுதுலக மேவல்செய மொழிசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன்
றாக்கரிய வைவேல் பாடிக்
கலங்கிநின் றாரெலாங் கருதலா காவண
மிலங்குவா ளிரண்டினா லிருகைவீ சிப்பெயர்ந்
தலங்கன்மா லையவிழ்ந் தாடவா டும்மிவள்,
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றாரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றாபவே''
இது மக்களைப் பரவி வந்தது.

'' ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்
கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற்ற வெண்கையாய் கேளினி;

படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்காற் கோடுய ரகலல்குற்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ

மண்டமர் பலகடந்து மதுகையா னீறணிந்து
பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள்
வண்டரற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவளோ

கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார்
சுவற்புரளத்
தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கான்
முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ;

எனவாங்கு,
பாணியுந் தூக்குஞ் சீரு மென்றிவை
மாணிழை யரிவை காப்ப
வாணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி"

(ஒத்தாழிசைபோல் வந்த) தேவபாணிக் கொச்சகம்,
மாமலர் முண்டகம் தில்லையோடு ஒருங்கு உடன்
கானல் அணிந்த உயர் மணல் எக்கர்மேல்,
சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கை சேர்த்த
நீர்மலி கரகம் போல் பழம் தூங்கு முடத் தாழைப்
பூமலர்ந் தவைபோலப், புள் அல்கும் துறைவ ! கேள்;

'ஆற்றுதல்' என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை ;
'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;
'அன்பு' எனப்படுவது தன் கிளை செறாஅமை;
'அறிவு' எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;
'செறிவு' எனப்படுவது கூறியது மறாஅமை;
'நிறை' எனப்படுவது மறை பிறர் அறியாமை;
'முறை' எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்;
'பொறை' எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்;
ஆங்கு அதை அறிந்தனிர் ஆயின், என் தோழி
நல் நுதல் நலன் உண்டு துறத்தல் கொண்க !

தீம் பால் உண்பவர் கொள் கலம் வரைதல்
நின்தலை வருந்தியாள் துயரம்
சென்றனை களைமோ ; பூண்க, நின் தேரே!

(தாழிசையும் தனிச்சொல்லுமின்றித் தரவும் எண்ணும்
சுரிதகமும் பெற்று அகப்பொருட்டாய் வந்தது)

பால்மருள் மருப்பின், உரல்புரை பாஅ அடி,
ஈர்நறுங் கமழ் கடாஅத்து, இனம்பிரி ஒருத்தல்
ஆறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து,
பொருள்வயிற் பிரிதல் வேண்டும்' என்னும்
அருள்இல் சொல்லும், நீ சொல்லினையே,
நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி,
'நின்னின் பிரியலன், அஞ்சல் ஓம்பு' என்னும்
நன்னர் மொழியும் நீ மொழிந் தனையே ;
அவற்றுள், யாவோ வாயின ? —மாஅல் மகனே !
'கிழவர் இன்னோர்' என்னாது, பொருள் தான்
பழவினை மருங்கின் பெயர்புபெயர்பு உறையும் ;
அன்ன பொருள்வயிற் பிரிவோய்-நின் இன்று



இமைப்புவரை வாழாள் மடவோள்
அமைக்கவின் கொண்ட தோள்இணை மறந்தே.
(இது தரவும் சுரிதகமும் பெற்றுவந்த கொச்சகம்)

செவ்விய தீவிய சொல்லி, அவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான்று, அவை எல்லாம்
பொய்யாதல் யான்யாங்கு அறிகோ மற்று?--ஐய !—
அகல்நகர்க் கொவ்வா அலர்தலைத் தந்து,
பகல்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன் ;
மகன் அல்லை மன்ற, இனி.

செல் ; இனிச் சென்றுநீ செய்யும் வினை முற்றி,
அன்புஅற மாறி. யாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ ? என்று. வருவாரை
என்திறம் யாதும் வினவல் ; வினவின்,
பகலின் விளங்குநின் செம்மல் சிதைய,
தவல்அருஞ் செய்வினை முற்றாமல், ஆண்டுஓர்
அவலம் படுதலும் உண்டு
(இது வெண்பாயாப்பினான் வந்த தரவிணைக்கொச்சகம்)

நிரைதிமில் களிறாக, திரைஒளி பறையாக,
கரைசேர் புள்ளினத்து அம்சிறை படையாக,
அரைசுகால் கிளர்ந்தன்ன உரவுநீர்ச் சேர்ப்ப ! கேள்;
கற்பித்தான் நெஞ்சுஅழுங்கப் பகர்ந்துஉண்ணான்,
விச்சைக்கண்

தப்பித்தான், பொருளேபோல், தமியவே தேயுமால்,
ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான்; மற்று அவன்
எச்சத்துள் ஆயினும், அஃது எறியாது விடாதே காண்
கேளிர்கள் நெஞ்சுஅழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்

தாள்இலான் குடியேபோல், தமியவே தேயுமால்,
சூள் வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின் ;
மற்று அவன்

வாள்வாய்நன்று ஆயினும், அஃது எறியாது விடாதே காண்
ஆங்கு—
அனைத்து, இனிபெரும! அதன் நிலை;
நினைத்துக் காண்;

சினைஇய வேந்தன் எயிற்புறத்து இறுத்த
வினைவரு பருவரல் போலத்
துணைவரு நெஞ்சமொடு வருந்தினள் பெரிதே. எனவரும்.
(இது மூன்றடித்தரவும் நான்கடித்தாழிசை இரண்டும்
தனிச்சொல்லும் சுரிதகமுமாக வேறுபட்டு வந்தகொச்சகம்)

EFEO_GUEST_JLC_02-074 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**சூ.464 :** ஒருபான் சிறுமை இரட்டியத னுயர்பே (150)

**க - து :** கொச்சக ஒரு போகிற்கு அடியளவு பற்றிய சிறுமை பெருமை கூறுகின்றது.

**உரை :** கொச்சக ஒருபோகுச் செய்யுளின் அடியளவு சிறுமை ஒருபஃது பெருமை இருபஃதடி ஆகும்.

இவ்வரையறை அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகும் தரவிற் கெனக் கொள்க.

எ - டு : “ தடங்கடற் பூத்த தாமரை மலராகி
யடங்காத முரற்சியா னருமறை வண்டிசைப்ப
வாயிர வாராழி யவிரிதழின் வெளிப்பட்ட
சேயித ழெனத் தோன்றுஞ் செம்பகலி னிரவகற்றிப்
படுபனிப் பகைநீங்கப் பருவத்து மழையானே
விடுமழை மறுத்திடினும் மென்மலரின் மதுமழையா
நெடுநிலங் குளிர்கூர நீர்மைசானி ழனாறி
யண்டங்கள் பலபயத்த வயன்முதலா மிமையோரைக்
கொண்டங்கு வெளிப்படுத்த கொள்கையை யாதலி
னோங்குயர் ப தியஞ் செல்வநின்
னீங்கா வுள்ள நீங்கன்மா ரெமக்கே ”

இது பதினோரடியான் வந்த கொச்சக ஒரு போகு.

**சூ. 465 :** அம்போ தரங்கம அறுபதிற் றடித்தே
செபபால் வாரம் சிறுமைக் கெல்லை (151)

**க - து :** அம்போதரங்க ஒரு போகிற்கு அடிபற்றிய சிறுமை பெருமை கூறுகின்றது.

**உரை :** அம்போதரங்க ஒருபோகுச் செய்யுட்குப் பெருமை அறுபது அடி அதனிற் செம்பாதியாக வரும் முப்பதடி, சிறுமைக் களவு ஆகும். செம்பால் நேர்பாதி, வாரம் - வருதல்

செம்பாலும் அதன் வாரமும் எனக்கொண்டு சிறுமைக் கெல்லை பதினைந்தடி என்பார் பேராசிரியர். அம்போதரங்க ஒரு போகிற்குரிய உறுப்பாக மேற்கூறும் விதியை நோக்கின் பதினைந்தடிச் சிற்றெல்லை பொருந்தாமை போதரும்.

**சூ. 466 :** எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்
அடக்கியல் வாரமொடந்நிலைக் குரித்தே (152)

**க - து :** அடியளவு அதிகாரப்பட்டமையின் முன்னூற்பாவான் அடியளவு கூறி இந்நூற்பாவின் அதுபெறும் உறுப்புக்கள் கூறிகின்றார்.



கொச்சகமாவது : தாழிசையின் வேறுபட்டு வெண்பாவாகவும் வெண்பாவினை ஒத்தும் தழுவோசையின்றி வரும் இடைநிலைப் பாட்டு. இஃது அடுக்கியும் அடுக்காதும் வரும். எண் : என்னாது சிற்றெண் என்றதனால் இருசீரடி அம்போதரங்கமே கொள்க. ‘அந்நிலைக்குரித்து’ என்றதனாற் றனிச்சொல் வருதலும் கொள்க.

எ - டு : “ செஞ்சுடர் வடமேரு விருமருங்குந் திரிகின்ற
வெஞ்சுடரு மதியமும்போல் வேலொடுகே டகஞ்சுழல
மாயிரு மணிப்பீலி மயிலெருத்திற் றோன்றுங்காற்
சேயொளி கடற்பிறந்த செந்தீச் சிறந்தெறிப்ப
மறுவருந்தம் மனத்துவகைக் கலுழ்ச்சியான்
வளர்த்தெடுத்த
அறுவருந்தம் முலைசுரந்தாங் ககல்விசும்பு சில துவற்ற
ஓருருவத் தெயின்மூன்றும் ஒருங்களித்தோன் வியப்பெய்த
ஈருருவத் தொருபெ ருஞ்சூர் மறுங்கறுத்த
விகல்வெய்யோய் (இஃது எட்டடியான்வத்த தரவு)
ஆங்க, வினையொழி காலத்து வெவ்வெயிற் கோலத்
தனைவருத் தத்த மறம்புரிந் தாங்கு
முனையடு கொற்றத்து முன்னான் குருவிற்
கனைகடல் சுட்டன கண்;
தேவரு மக்களுஞ் சீற்றத்தா னஞ்சாமைக்
காவல் புரியுங் கதிர்மதி போலு
மூவிரு தோன்றல் முகம்;
மடமகள் வள்ளி மணிக்கம் பலம்போ
லிடையிடை சுற்றுத லின்றுந் தவிரா
தொடையமை தார் டம்பன் றோள்;
அவ்வழி, யடியிணை சேரா வவுணரை நுங்கிப்
பொடிப்பொடி யாகிப் பொருப்பொடு மாய
விடியுமிழ் வானத் திடைநின்று கூஉங்
கொடியணி கோழிக் குரல்;
விழுச்சீரமரர் விசும்பிடைத் தோன்றிப்
பழிச்சிநின் றார்த்தார் பலர் ;
(இவை ஐந்தும் வெண்பா நடையாக வந்த கொச்சகம்)
உருகெழு முருமிய வுருமென வதிர்தொறு
மருகெழு சிறகொடு மணவரு மணியயில் ;
பெருகிய வருமறை பெறுநெடு மொழியொடு
பொருகளா வழியிசை புகல்வன சிறுகுறள் ;
(இவை இரண்டும் அராகம்)

EFEO_GUEST_JLC_02-075 16/06/2011 © École française d’Extrême-Orient, www.efeo.fr

சிவந்தன தசை சிலம்பின மலை
நிவந்தன தலை நிரம்பின குறை
ஆர்த்தன மறை ஆடினர் பலர்
போர்த்தன துகள் பொழிந்தனர் மலர்
(இவை இருசீரடி எட்டம்போதரங்கம்) சிற்றெண்

ஆங்கனந் தோன்றிய வடுபோர் வென்றியின்
வீங்கிருந் தொடித்தோள் விடலை நினக்கே
யாமறி யளவையிற் றமிழ்புனைந் தேத்துக
நின்ன தக்க தாயினு நின்னெதிர்
நானில மாக வேண்டும் யாணர்க்
கடம்புங் களிமயிற் பீலியுந் தடஞ்சுனை
நீரோடு நின்வயின் மாந்தர்
வாராப் புலமை வருகமா ரமக்கே"

(இஃது தரவொடொத்து எட்டடியான் வந்த ஆசிரியச் சுரிதகம் இது நாற்பத்துநான் கடியான் வந்தது)

130 ஆம் சூத்திர முதலாக 1 2 ஆம் சூத்திரம் வரை ஒத்தாழிசைக் கலிப்பாவின் இலக்கணம் கூறினார் இனி ஏனைக் கலிப்பாக்களை முறையானே கூறுவார்.

சூ. 467 : ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலான்
திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே (153)

**க - து :** நிறுத்த முறையானே கலிவெண்பாவின் இலக்கணம் கூறுகின்றது.

**உரை :** ஒரு பொருளைக் கருதிய இயல்பினால் நிறைந்து வெண்பா அடியினது இலக்கணத்தான் திரிபின்றி முடிவது கலிவெண்பாட்டாகும்.

'நுதலிய இயலானென்றும்', 'வெள்ளடி இயலானென்றும்' தனித்தனி கூட்டிமுடிக்க.

பொருள் என்றது : அகமும் புறமுமாகிய பொருளையும் கலியுறுப்புக்களையுமாம். பொருள் எனினும் மெய் எனினும் ஒக்கும். இவ்ஆசிரியர் கலியுறுப்புக்களை 'மெய்' என ஓதுதலை ஐஞ்சீரடுக்கியும் "ஆறு மெய் பெற்றும்" (சூ. 154) என்பத னான் அறியலாம். ஈண்டுப் பொருளென்றது இருட்டுறமொழிதல்.

அதனான் அவை இருவகையான் வருங்கால் அவற்றுள் ஒவ்வொன்றையே கருதி வர வேண்டுமென்பாராய் ஒரு



பொருள் நுதலிய என்றார். அஃதாவது வாழ்த்தியல் முதலாக எல்லாப் பொருள் மேலும் வரும்நெடுவெண்பாட்டினைப் போலாது, அகத்திணை ஒன்றையே பற்றியும், தாவுறுப்புப் போல ஒரே உறுப்புப் பற்றியும் வருதல் இதன் இலக்கணமாம்.

வெள்ளடியான் என்னாது வெள்ளடிஇயலான் என்றமையின் ஒரோஅடி பிறதளையான் வரினும், ஒரோவழி ஐஞ்சீரடி வரினும் இலக்கணமாகக் கொள்க.

ஒருபோகு கொச்சகம் முதலியவற்றைப் போல ஆசிரியத் தானும், வெண்பாவானும் சுரிதகம் பெற்றும் மண்டலித்தும் முடியாது வெண்பாட்டீற்றடி போல முடியுமென்பார் "திரிபின்றி முடிவது" என்றார் என உணர்க.

இதன் பெருமைக்கு அடிவரையறை இல்லை சூ. 160) என்பதனன் சிறுமைக்களவு உய்த்துணரப்படும். அஃதாவது ஒத்தாழிசைக்கலிப்பாவின் தரவிற்குப் பன்னிரண்டடியும் வண்ணகத்திற்கு எட்டடியும் எல்லை கூறினமையான் அவற்றிற்கு இடைப் பட்ட பத்தடி இதன் சிறுமைக்கு எல்லையாகக் கொள்க.

இனி இந்நூற்பாவின்கண் "முடிவது" என்றுள்ள பாடத்தை 'வருவது' எனக் கொண்டும் கொச்சகக்கலிப்பாவிற்குரிய இலக்கண நூற்பாவின் (சூ.154) முத மூன்றடிகளைத் துணித்து அவையும் கலிவெண்பாட்டிற்கே இலக்கணம் கூறுவதா கவும் கொண்டு பேராசிரியர் உரை கூறியுள்ளார்

அவ்வுரை கலிவெண்பாட்டிற்குரிய இலக்கணம் இது என வரையறை செய்யாமல் மயங்க வைப்பதையும் கவர்பொருள் மலிந்து தடுமாறச் செய்வதையும் காணலாம் அவற்றின் பொருந்தாமையை விரிப்பின் பெருகும் என்க.

**எ - டு :** "மரையா மால்கவர" (கலி-6) என்பது
பதினோரடியான் வந்தது
"சுடர்த்தொடீ கேளாய்" (கலி-51) என்பது
பதினாறடியான் வந்தது
"கயமலருண்கண்ணாய்" (கலி-37) என்பது
இருபத்திரண்டடியான் வந்தது
"தீம்பால் கறந்த" (கலி-111) என்பது
இருபத்துநான்கடியான் வந்தது.

இனித் "தீம்பால் கறந்த" என்னும் முல்லைக்கலியுள் "பூங்கரைநீலம் புடைத்தாழ மெய்யசைஇப் பாங்கரும்"



EFEO_GUEST_JLC_02-076 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

என ஐஞ்சீரடியும், ''குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்மற் றென்னை முற்றிழை ஏஎர்'' என ஆசிரியத்தளையும், இடுமுள் நெடுவேலி (கலி-12) என்னும் கலிவெண்பாட்டினுள் ''நெறி மயக்குற்ற நிரம்பா + நீடத்தம் சிறுநனி நீதுஞ்சி ஏற்பினும் அஞ்சும்'' என ஆசிரியத்தளையும் கலித்தளையும் வந்தவாறு காண்க.

இனி, இக்கலிவெண்பா அடுக்கியும் சுரிதகம் முதலாய உறுப் பொடு கூடியும் வரின் அவை எல்லாம் பின்வரும் கொச்சகக்கலி யின்பாற்படும் என்றுணர்க.

சூ. 468 : தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்
ஐஞ்சீ ரடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே (154)

க - து : நிறுத்த முறையானே கொச்சகக்கலி இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை : முதலுறுப்பாகிய தரவும் இறுதி உறுப்பாகிய சுரிதகமும் இடைநிலைப்பாட்டு என்னும் தாழிசையும் இடை மிடைந்தும், ஐஞ்சீராய் அடுக்கிய அடியும், தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதம் என்னும் ஆறு உறுப்புப் பெற்றும் வெண்பாவிற்குரிய நடையான் செவ்விதின் தோன்றும் பாநிலையையும், அவற்றின் வகையினையும் செய்யுள் இலக்கணத்தை நவின்ற புலவோர் கொச்சகக்கலியெனக் கூறி விளக்கினர்.

'பாட்டிடை மிடைந்தும்' என்றதனான் அராகமும் எண்ணும், தனிச் சொல்லும் இடையே வருமென்றும் அவை முறையாயும் முறை மயங்கியும் வருமென்றும் கொள்க. ஆறு மெய்பெற்றும் என்றதனான் ஐந்தும் நான்கும் பெறுதல் அதனுள் அடங்கும் எனக்கொள்க. ஐஞ்சீரடி என்னாது அடுக்கியும் என்றதனான் அவை முடுகி வரினும் ஆம் எனக் கொள்க. பாநிலையும் வகையும் என உம்மை விரித்து எண்ணுக. வகையே என்ற ஏகாரம் எண்ணேகாரம்.

வெண்பாவியலான் என்றது ஏழு எழுத்து முதல் பதினான் கெழுத்தளவும் வரும் நாற்சீரடியான் வருதலையும், வெண்டளை வருதலையும் சுட்டி நின்றது. இதனானே இடையிடையே கொச்சகவெண்பாக்கள் விரவி வருதலும் கொள்க.



இங்ஙனம் உறுப்புக்கள் மிக்கும் குறைந்தும் மயங்கியும் வருமேனும் பொருளானும் ஓசையானும் உறுப்பானும் இது கொச்சகக்கலியென்பது விளங்கித் தோன்றுமென்பார்'' ''வெளிப்படத் தோன்றும்'' என்றார்.

கொச்சக ஒருபோகு தெற்றெனவிளங்கிநில்லாமை கருதி முன்னர் ஒப்பு நாடி உணர்தல் வேண்டுமென்றதையும் உன்னுக. நுவன்றறைதலாவது விளக்கிக் கூறுதல்.

எ - டு : சான்றவிர், வாழியோ ! சான்றவிர் ! என்றும்
பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி, அறன் அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்ஆனால், இவ் இருந்த
சான்றீர் ! உமக்குஒன்று அறிவுறுப்பேன்: மான்ற
துளிஇடை மின்னுப்போல் தோன்றி, ஒருத்தி,
ஒளியோடு உருஎன்னைக் காட்டி, அளியள், என்
நெஞ்சுஆறு கொண்டாள்; அதற்கொண்டும் துஞ்சேன்,
அணிஅலங்கு ஆவிரைப் பூவோடு எருக்கின்
பிணையல்அம் கண்ணி மிலைந்து, மணிஆர்ப்ப,
ஓங்கிரும் பெண்ணை மடலூர்ந்து, என்எவ்வநோய்

தாங்குதல் தேற்றா இடும்பைக்கு உயிர்ப்பாக
வீங்குஇழை மாதர் திறத்துஒன்று, நீங்காது,
பாடுவேன், பாய்மா நிறுத்து.

யாமத்தும் எல்லையும் எவ்வத் திரை அலைப்ப,
'மா மேலேன்' என்று, மடல்புணையா நீந்துவேன்
தேமொழி மாதர் உறாஅது உறீஇய
காமக் கடல்அகப் பட்டு.

உய்யா அருநோய்க்கு உயவாகும் — மையல்
உறீஇயாள் ஈத்தஇம் மா.

காணுநர் எள்ளக் கலங்கித், தலைவந்து, என்
ஆண்எழில் முற்றி உடைத்துஉள் அழித்தரும்
'மாண் இழை மாதராள் ஏஎர்' எனக், காமனது
ஆணையால் வந்த படை,

காமக் கடும்பகையில் தோன்றினேற்கு ஏமம்
எழினுதல் ஈத்தஇம் மா.

அகைஎரி ஆனாதுஎன் ஆர்உயிர் எஞ்சும்
வகையினால், உள்ளம் சுடுதரும் மன்னோ
முகைஏர் இலங்குஎயிற்று இன்நகை மாதர்
தகையால் தலைக்கொண்ட நெஞ்சு !

அழல்மன்ற, காம அருநோய் ; நிழல்மன்ற,
நேரிழை ஈத்தஇம் மா.

ஆங்கு அதை,

அறிந்தனிர் ஆயின், சான்றவிர் ; தான் தவம்
ஒரீஇத் துறக்கத்தின் வழீஇ, ஆன்றோர்
உள்இடப்பட்ட அரசனைப் பெயர்த்து, அவர்
உயர்நிலை உலகம் உறிஇயாங்கு, என்
துயர்நிலை தீர்த்தல் நும்தலைக் கடனே (நெய்தற்கலி)

இது தரவும் போக்கும் உடையதாய் கொச்சக வெண்பாக்கள் விரவி வந்த கொச்சகக்கலி.

"அரிதினின் தோன்றிய" என்னும் கலிப்பா வெள்ளைச் சுரிதகமாய் இடையே வாழிசான்றீர், அம்மசான்றீர் எனச் சொற்சீரடிகள் பெற்று வெண்பாவியலான் வந்த கொச்சகக்கலி.

"புரிவுண்டபுணர்ச்சியுள்" என்னும் நெய்தற் கலிப்பாட்டினுள் கலித்தளையும் ஐஞ்சீரடியும் வந்தன (கலி-142)

மின்னொளிர் அவிரறல்" (கலி-55) என்னும் குறிஞ்சிக்கலி, ஆசிரியத்தளையும் அளவெண் ஆசிரிய அடியொடு விரவி, இகந்து தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த கொச்சகக்கலி.

"காமர் கடும்புனல்" என்னும் (கலி-39) கலிப்பா ஆறுறுப்பும் மயங்கி வந்த கொச்சகக்கலி

'காலவை, சுடுபொன்வளைஇய' (கலி-85) என்னும் மருதக்கலி தரவும் போக்குமின்றி ஐஞ்சீரடி விரவிவந்த கொச்சகக்கலி

பிறவும் வேறுபட்டுவரும் கொச்சகக்கலிகளைக் கலித்தொகையுள் கண்டு கொள்க.

இச்சூத்திரத்தை இரண்டாக்கிப் பேராசிரியர் கூறும் உரைக் கருத்துக்கள் நூல்நெறிக்கு ஒவ்வாமையை அவருரையையே நோக்கித்தெளிக. விரிப்பின் பெருகும்.

**சூ. 469 : கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின்றாதல் உறழ்கலிக் கியல்பே 155**

**க - து :** நிறுத்தமுறையானே உறழ்கலியினது இலக்கணங் கூறுகின்றது.

**உரை :** கொச்சகக்கலிக்கு ஓதியவாறன்றி ஒருவர் ஒன்றைச் செப்புதலும் மற்றவர் அதற்கு மறுமாற்றங் கூறுதலுமாகிய நேர்க் கூற்றுக்கள் இடையிடையே தொடுக்கப்பெற்றும் சுரிதகமின்றிப் பொருந்தும் பிற உறுப்புக்களான் ஆகி வருதல் உறழ்கலிக்கு இலக்கணமாகும். மிடைந்தும் என்னும் உம்மை ஏற்புடைய பிற உறுப்புகளைச் சுட்டி நின்றமையின் எச்ச உம்மை.



சிறுபான்மை சுரிதக உறுப்பமைய வருமேனும் அச்சுரிதகம் போக்கியலுக்குரிய பொருண்மை முற்றநில்லாமை நோக்கிப் "போக்கின்று" என்னாது 'போக்கின்றாதல்" என்றார் 'போக்கியல்' என்பது கடை குறைந்து போக்கென நின்றது.

"சுணங்கனி வனமுலை" என்னும் கலிப்பா தரவுடைத் தாய்க் கூற்றும் மாற்றமும் இடையிடைமிடைந் போக்கியலின்றி வந்த உறழ்கலி.

"ஒருஉநீ எங்கூந்தல்" (கலி-87) என்பது தரவும் போக்குமின்றிச் சொற்சீரடி பெற்று வெண்பாவியலான் வந்தது.

"நலமிகநந்திய" (கலி-113) என்பது ஓதிய இயல்பிற்கு வேறுபட்ட தரவும் சுரிதகமும் கொச்சகவெண்பாவும் பெற்று வந்த உறழ்கலி.

"வாரிநெறிப்பட்டு" (கலி-114) என்னும் பாடல் தரவும் போக்கியலும் பெற்று மறுமாற்றமின்றிக் கூற்றுடைத்தாய் வந்த உறழ்கலி. பிறவாறு வருவனவும் கண்டு கொள்க

இதுகாறும் (105 - 156) பா என்னும் செய்யுளுறுப்புக்குரிய இலக்கணங் (சூ-105) கூறி அவ்வுறுப்பானே அவ்வப்பெயர் பெற்று வழங்கும் நால்வகைப் பாவிற்கும் அவற்றின் வகைகளுக்கும் உரிய இலக்கணங்களை வகுத்தும் விரித்தும் கூறினார் ஆசிரியர். இனி அளவியல் கூறத்தொடங்குகின்றார்.

**சூ. 470 : ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை
ஆயிர மாகும் இழிபு மூன்றடியே (156)**

**க - து :** நிறுத்தமுறையானே அளவு என்னும் செய்யுளுறுப்புக் கூறுகின்றது.

**உரை :** ஆசிரியப்பாட்டின் பெருமைக்கு அடியளவு ஆயிரமாகும், சிற்றெல்லை மூன்றடியாகும். அடி என்பதனை ஆயிரத்தொடும் கட்டுக. பின்னர் 'இழிபு மூன்று' என்றதனான் முன்னர் ஆயிரம் என்பது பெருக்கத்தை உணர்த்திற்று

**எ - டு :** நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே (ஐங்- வாழ்த்து)

இது மூன்றடிச் சிற்றெல்லையான் வந்த ஆசிரியப்பாட்டு. மலைபடுகடாம் 583 அடிகளான் வந்தது. ஆயிரத்தளவும் வந்த பாட்டு இக்காலத்தரிய, வந்துழிக் கொள்க

ஆசிரியநடைத்தே வஞ்சி (சூ.104) என்றமையான்; ஒப்பின் முடித்தல் என்னும் உத்திவகையான் வஞ்சிப்பாவிற்கும் இவையே அளவாகக் கொள்க.

எ - டு : மந்தாநிலம் மருங்கசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தர
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்கு
இனிதின் ஒதுங்கிய இறைவனை
மனமொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே.

இது மூன்றடிச் சிறுமையான் வந்த வஞ்சிப்பா. மதுரைக் காஞ்சி 782 அடிகளான் வந்தது. பிறவும் வந்துழிக் கண்டு கொள்க.

சூ. 471 : நெடுவெண் பாட்டு முந்நா லடித்தே
குறுவெண் பாட்டிற் களவெழு சீரே (157)

க - து : வெண்பாவிற்கு அடி அளவு கூறுகின்றது.

உரை : வெண்பாவின் பேரளவிற்கு எல்லை ஏழு அடிக ளாகும். சிற்றளவிற்கு எல்லை ஏழுசீர்களாகும்.

வெண்பாட்டின் நெடுமைக்கும் வெண்பாட்டின் குறுமைக்கும் எனவும் மாறுக. அன்றி நெடுவெண்பாட்டினையும் (பஃறொடை வெண்பா) குறுவெண்பாட்டினையும் (குறள் வெண்பா) குறித்த தாகப் பொருள் கூறின் ஏனைய நேரிசை இன்னிசை வெண் பாக்களையும் விதந்து, கூறல் வேண்டும். அங்ஙனம் கூறாமையின் இவ்வாறு பொருள் கோடலே நூல்நெறிக்கொத்ததென்க.

வெண்பாட்டீற்றடி முச்சீர்த்தாகும். (சூ. 69) என்றமையான், ஏழுசீர் என்றது நான்கும் மூன்றுமாய் வருமென அறிக. முந்நாலடித்தென்றது உம்மைத் தொகை இதனைப் பண்புத் தொகையாகக் கொள்வர் உரையாசிரியன்மார். எட்டடிமுதலாகப் பயின்று வருவது கொச்சக வெண்பாக்களாக உள்ளமையானும் பத்தடிமுதலாகக் கலிவெண்பா வருதலானும் அங்கதப்பாட்டினை இவ்வெண்பா அளவினொடு ஆசிரியர் மாட்டெறிந்து கூறுதலானும் ஏழடி என்றலே சால்புடையதாம்.



குறுமைக்கு அளவு ஏழுசீரே எனப் பின் நிற்பதற்கு ஏற்ப நெடுமைக்களவு அடி ஏழே என ஆசிரியர் நயந்தோன்ற வைத்துள்ளமையை ஓர்ந்தறிக.

இனி வெண்பாவிற்கு நெடுமை குறுமை என ஓதாமல் நெடு வெண்பாட்டு, குறுவெண்பாட்டு என ஒருசார் வெண்பாக்களின் பெயர் தோன்றுமாறு ஓதினமையின் இடைவெண்பாட்டு நான்கடியான் வருமென்க. நான்கடியான் வருவனவற்றை நேரிசை வெண்பா என்றும் அளவியல் வெண்பா என்றும் வழங்குப மூன்றடியான் வருவன குறுவெண்பாட்டினுள் அடங்குமென்க.

எ - டு : வையக மெல்லாம் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள், செய்யகத்து
வான் கரும்பே தொண்டை வளநாடு, வாள்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கட்சிப் புறமெல்லாம் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சியகம் (யா. வி. மே.)
இது பெருமைக்கெல்லையாக வந்த ஏழடி வெண்பா.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

இது குறுமைக்கு எல்லையாக வந்த இரண்டடி வெண்பா.

நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தம்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினம் சேரக் கெடும். (நாலடி-18-9)

இது நாலடியான் வந்த அளவியல் வெண்பா ஒன்றைச் சார்த்தியே நெடுமை குறுமை கொள்ளுதல் இலக்கணமாதலின் நாலடியை அளவாகக் கொண்டு மிக்கதனை நெடுவெண் பாட்டென்றும் குறைந்தனைக் குறவெண்பாட்டு என்றும் கொள்ளப்பட்டவாறறிக. இதனான் மூன்றடியான் வருவதும் குறவெண்பாட்டென்பது கூறாமலே விளங்கும்.

சூ. 472 : அங்கதப் பாட்டளவு அவற்றோ டொக்கும் (158)

க - து : அங்கதமென்னும் பொருள்நிலை வகையல்லாத, அங்கதமாகிய வசைப்பாட்டிற்கு அளவை கூறுகின்றது.

உரை: மேல் செம்பொருளும் பழிகரப்புமாக வெண்பாயாப் பிற்றாய் வருமெனப்பட்ட அங்கதப்பாட்டிற்கு அடியளவு மேலே

EFEO_GUEST_JLC_02-079 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

வெண்பாவிற்குக் கூறிய சிறுமை பெருமையாகிய அளவொடு ஒக்கும்.

அஃதாவது இரண்டடிச் சிறுமையும் ஏழடிப் பெருமையுமாக வரும் என்றவாறு - ஒடு' என்பது ஓசை கருதி நீண்டது.

சூ. 473 : கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை என்றிவை
தொகைநிலை அளவின் அடியில என்ப (159)

க - து : பேரல்லை வரையறையில்லாத பாட்டுக்கள் இவை என்கின்றது.

உரை : வெண்பா இயலான் வருமெனப்பெற்ற கலிவெண் பாட்டு, கைக்கிளைச் செய்யுள் செவியறிவுறூஉ, வாயுறை வாழ்த்து. புறநிலை வாழத்து என்று கூறப்படுபவை அடியள வான் தொகைப் படுத்துக் கூறும் அடிவரையறை இல்லாதன எனக் கூறுவர் புலவர். 'செவியறிவுறூஉ' என்பது குறைந்து நின்றது.

கிளைஎதுகை கருதிச் செவியறிவுறூஉ முற்கூறப்பட்டது. பெருமைக்கு வரையறையில வென்றதனான் சிற்றெல்லை வரையறைப்படும் என உய்த்துணர வைத்தார் அஃதாவது கலிவெண்பாவிற்குப் பத்தும் ஏனையவற்றிற்கு நான்கும் எனச் சான்றோர் வழக்குநோக்கிக் கொள்க என்றவாறு.

இனி யாப்பருங்கல விருத்திரையுள் இச்சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டியவிடத்து அதன்பின்

"முடிபொருளல்லா தடியள பிலவே" என்றொரு சூத்திரத்தைக் காட்டி " என்றார் தொல்காப்பியனார் " எனக் காணப்படுகின்றது. அச்சூத்திரம் இன்றைக்குள்ள தொல் காப்பியத்துள் காணப்படவில்லை. அச்சூத்திரம் அடியளவு இல என்பதற்கு அமைதி கூறுவது போல அமைந்துள்ளது.

சூ 474 : புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றும் திண்ணிதின தெரியின்
வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
பண்புற முடியும் பாவின என்ப (160)

க - து : மேற் சூத்திரத்துப் புறநிலை வாழ்த்து முதலிய மூன்றும் அதிகரித்தமை யின் அவற்றிற்கு எய்திய தன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : புறநிலை வாழ்த்து வாயுறை செவியறிவுறூஉ எனப் பொருட்டிறத்தால் மூவகையாக நிலைபெற்ற வாழ்த்தியல்



வகைப் பாக்கள் மூன்றும் ஊன்றி ஆராயுமிடத்து அவை வெண்பா இலக்கணத்தாலும் ஆசிரிய இலக்கணத்தாலும் பண்புறமுடியும் பாக்கள் என்று கூறுவர் புலவர்.

முன்னர் வாழ்த்தியல் வகையே (சூ.110) என்ற வழி இவை "கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா' என்றதல்லது இன்ன பாவிற்குரியவை என்று விதந்து கூறாமையின் வெண்பாவானும் ஆசிரியத்தானும் வருமென ஈண்டுக் கூறினார். 'பண்பு' என்றதனான் வெண்பாவாயும் ஆசிரியமாயும் தனித்து முடிதலே யன்றி இரண்டும் கலந்த மருட்பாவானும் வரும் எனக் கொள்க.

மருட்பாவாகவே வருமென இச்சூத்திரத்திற்குப்பொருள் கூறின் அது குன்றக் கூறலாம் என்க. 'திண்ணிதின் தெரியின்' என்றதும் இக்கருத்தே பற்றியென உணர்க இவ்வாற்றான் மருட்பா நான்கு பொருள் பற்றிவரும் என்பதும் பெறப்பட்டது.

எ - டு : திங்கள் இளங்கதிர்போற் றென்திங்களூர்த்தேவன்
மைந்தர் சிறப்ப மகிழ்சிறந்து - திங்கட்
கலைபெற்ற கற்றைச் சடைக்கடவுள் காப்ப
நிலைபெற்று வாழியரோ நீ. (புறநிலை வாழ்த்து)

இமையா முக்கண் இலங்குசுடர் வாய்ந்த
உமையொரு பாகத் தொருவன் காப்பநின்
பல்கிளைச் சுற்றமொடு நல்லிதின் நந்தி
நீபல வாழிய வாய்வாட் சென்னிநின்
ஒருகுடை வரைப்பின் நீழல் பெற்றுக்
கிடந்த எழுகடல் நாப்பண்
அகலிரு விசும்பின் மீனினும் பலவே (பு. வா ஆசிரியம்)

கண்ணுதலோன் காப்பக் கடன்மேனி மால்காப்ப
எண்ணிருதோள் ஏந்திழையாள் தான்காப்பப்-பண்ணிய
சென்னியர்க் களிக்கும் தெய்வநீ
மன்னுக நாளுமிம் மண்மிசை யானே
(புற- வா, மருட்பா:)

சூ. 475 : பரிபா டல்லே
நாலீ ரைம்பஃது உயர்படி யாக
ஐயைந் தாகும் இழிபடிக் கெல்லை. (161)

க - து : பரிபாடலின் அடியளவிற்கு வரையறை கூறுகின்றது.

உரை : பரிபாடல் இருநூறடிப் பேரெல்லையாகவும் இருபத் தைந்தடிச் சிற்றெல்லையாகவும் வரும்.



EFEO_GUEST_JLC_02-080 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எ - டு : மணிவரையூர்ந்த (பரிபாடல்-) என்னும் பாடல் முப்பத்திரண்டு அடிகளான் வந்தது. விரிகதிர்மதிய மொடு (பரிபாடல்) என்னும் பாடல் நூற்றுநாற்பதடி களான் வந்தது. 25 அடிச் சிற்றெல்லையும் 200 அடிப் பேரெல்லையும் வந்துழிக் காண்க.

**சூ. 476 :** அளவியல் வகையே அனைவகைப்படுமே (162)

**க - து :** பின்னது நிறுத்தல் என்னும் உத்திவகையான் அளவியல் வகை இவ்வளவே என முடித்துக் கூறுகின்றது.

**உரை :** செய்யுளுறுப்பினுள் ஒன்றாகிய அளவினது இயல்பு மேற்கூறிய அத்துணைப் பகுதிப்படும்.

கலிவகைக்குரிய அளவினை விதந்து கூறிற்றிலராயினும் கலியுறுப்புக்களுக்கு ஓதிய அளவையான் அவற்றை உய்துணர்ந்து கொள்ளுதல் இந்நூற்பாவின் பயனென அறிக.

**சூ. 477 :** எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை யில்லன ஆறென மொழிப. (163)

**க - து :** அளவியல் அதிகாரப்பட்டமையான் அதனைத் தொடர்ந்து அளவிற்படாதவை இவை என்கின்றது

**உரை :** பாட்டு முதலாகிய எழுவகைச் செய்யுள் இலக்கியத்துத் தோன்றி வழங்கும் செய்யுட்களை ஆராயின் அவற்றுள் அடி வரையறை இல்லாதன ஆறு வகையன எனக் கூறுவர் புலவர். நிலம் என்றது இலக்கியத்தை.

**சூ. 478 :** அவைதாம்
நூலி னான உரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறை மொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான. (164)

**க - து :** 'அடிவரையில்லன' என்பவற்றின் பெயரும் முறையும் கூறுகின்றது.

**உரை :** அடிவரையறைப் பாடாதவை எனப்பட்டவைதாம் நூலின்கண் ஆகிவருவனவும், உரையின்கண்ணாகி வருவனவும் விடுகதையொடு புணர்ந்தபிசியின்கண்ணாகி வருவனவும், காரணங் கருதி வரும் முதுமொழியின்கண்ணாகி வருவனவும் மறைந்த மொழிகளாற் கிளக்கப்பட்ட மந்திரத்தின் கண்ணாகி வருவனவும், மேற்கோளினை இடை வைத்துக் கூறும் குறிப்பின் கண்ணாகி வருவனவும் ஆகும்.



'பாட்டுரை நூலே' (சூ. 75.) என்னும் சூத்திரத்து வாய் மொழி என்றும் அங்கதமென்றும் கூறப்பட்டவையே ஈண்டு முறையே மந்திரமென்றும் கூற்றிடை வைத்த குறிப்பென்றும் கிளக்கப்பெற்றன.

ஆண்டுக் கூறியவாறே கூறாமல் பெயர் வேறுபடுத்தக் கூறியது என்னையெனின்? வாய்மொழியை மந்திரமாகக் கூறாமல் வாயுறையாகக் கூறினும் அங்கதத்தைக் குறிப்பு மொழியாற் கூறாமல் செம்பொருளாகவும் மொழிகரப்பாகவும் கூறினும் ஆங்கவை அடிவரையறையுற்ற பாட்டாக நிகழும். அவை அடி வரையறையின்றி மறைமொழி கிளந்தும் கூற்றிடை வைத்தும் வரின் இப்பெயர்களான் வழங்கப்பெறும் என்றறிவித்தற் கென்க.

**சூ. 479 :** அவற்றுள்
நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகை யினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே. (165)

**க - து :** நூலினது இலக்கணம் கூறுகின்றது.

**உரை :** மேற்கூறிய ஆறனுள் நூலெனச் சிறப்பித்துக் கூறப் படுவதைக் கருதுமிடத்துத் தொடக்கமும் முடிவும் முரணுதலின்றித் தொகையாகவும் வகையாகவும் பொருண்மை புலப்படக் காட்டி ஆழ்ந்தமைந்து அகன்ற உரையொடு பொருந்தி மிக நுட்பமாகப் பொருளை விளக்குதல் அதனுடைய தன்மையாகும்.

ஈண்டுக் கூறிய இயல்புகள் சிறிதும் குறையாதமைதல் வேண்டுமென்பார் 'அது' அதன் பண்பெனச் சுட்டிக்கூறினார் என உணர்க. பண்பு என்றது இலக்கணத்தை.

நூலையாக்கும் மரபு முறைமை பற்றி மரபியலுள் விளங்க ஓதப்படுதலின் நூலினது இலக்கணமே ஈண்டுக் கூறப்பட்டதென அறிக.

**சூ. 480 :** அதுவே தானும் ஒருநால் வகைத்தே (166)

**க - து :** நூலது பாகுபாடு கூறுகின்றது.

EFEO_GUEST_JLC_02-081 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**உரை :** மேற்கூறிய நூல் நான்கு வகையினதாகும் வகை என்றது பகுப்பினை.

**சூ. 481 :** ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த ஓத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்று
ஆங்கனை மரபின் இயலு மென்ப (167)

**க - து :** நூல்வகை நான்கு என்றதை விளக்குகின்றது.

**உரை :** யாதானும் ஒரு பொருளைக் கூறக் கருதிய சூத்திரங்களால் வருவதும் ஓரினமாகிய பொருளை வகுத்துணர்த்தக் கிளந்த ஓத்துக்களான் வருவதும் இனமாய பல பொருளை விரித்துணர்த்தக் கிளந்த படலங்களான் வருவதும் அம்மூன்று உறுப்புக்களையும் அடக்கி நிறைந்து பிண்டமாக வருவதும் என அத்தன்மைத்தாகிய மரபினாலே வகைப்பட்டு நூல் நடைபெறும் என்று கூறுவர் புலவர்.

இவை ஒன்றற்கு ஒன்று சினையும் முதலுமாக நின்று தனித் தனியாயும் கூடியும் வருதலின் வகைப்படுத்தப்பட்டதென அறிவித்தற்கு 'ஆங்கனை மரபின் இயலும்' என்றார்.

யாதானும் ஒரு பொருளைப்பற்றிச் சில சூத்திரங்களான் அமைந்த நூல் சூத்திரமென்று வழங்கப்பெறும். வடமொழியில் மகேசுரச் சூத்திரம், பிரமசூத்திரம் என்னும் நூல்களைப் போலத் தமிழின்கண் அக்காலத்திருந்து மறைந்தன போலும்.

இனமொழி என்றது இனமாய பொருளை. அது சூத்திரமும் அவற்றானாய இயலுமாக வரும். அது தாள வகையோத்து, என்றாற்போல்வது. படலமாவது அதிகாரம் அது சில ஓத்துக்களான் அமைந்து பன்னிருபடலம், என்றாற்போல வருவது. பிண்டம்-தொகுதி, அஃதாவது முழுமையானது. தொல்காப்பியம், வீரசோழியம் போல்வனவாய் வருவது. பிண்டங்களால் நிறைந்தது பிண்டி, என ஒருவகையை மிகுத்துக் கூறுவார் பேராசிரியர். இயற்றமிழ் ஒன்றான் மட்டும் நிறைந்த தொல்காப்பியம் போல்வனவதைப் பிண்டம் என்றால் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் மூன்றும் நிறைந்ததற்கு ஒரு பெயர் வேண்டுமென்று கருதி அவ்வாறு கூறினார். அகத்தியம் பிண்டி என்பது அவர் கருத்து. முத்தமிழையும் பற்றிய முழு நூலாயின் இயற்றமிழ் முதலியவை படலம் என்று பெயர் பெறுவதல்லது பிண்டம் எனப்படாதாகலின் அது பொருந்துமாறில்லை என்க



**சூ. 482 :** அவற்றுள்
சூத்திரத்தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதலின்றிப் பொருள் நனி விளங்க
யாப்பினுட்டோன்ற யாத்தமைப்பதுவே (168)

**க - து :** சூத்திரத்தின் பொது இலக்கணம் கூறுகின்றது

**உரை :** மேற்கூறிய வகை நான்கனுள் சூத்திரமாவது ஆடியின்கண் பரந்த பொருள்கள் குவிந்து நுணுகித் தோன்றும் நிழல்போலக் கூறப்படும் பொருளின் பரப்பெல்லாம் அறியும் வண்ணம் தோன்றி, இதுவே அதுவே என ஐயுற்று ஆராய்தல் வேண்டுதலின்றிப் பொருளின் கூறுகள் யாவும் நனிவிளங்க ஆசிரிய முதலாய யாப்பினுள் யாதாயினும் ஒன்றன் யாப்புமுறை தோன்றயாக்கப்பட்டதாகும்.

பாட்டிற்குரிய ஓசையும் அடி வரையறையும் வேண்டாது தூக்கு அமைந்து நிற்பதொன்றே சாலும் என்பார். "யாப்பினுட் டோன்ற யாத்து" என்றும் "அமைப்பது" என்றும் கூறினார்

எனினும் "பாஅ வண்ணம் நூற்பாற் பயிலும்" என்பத னான் அசையும் சீரும் இசையொடு சேர்த்தமைத்தலே சிறப் புடைத்து என்பதும் போதரும். சூத்திரத்தின் மரபுஇயல்பு மரபியலிற் கூறுவார்.

**சூ. 483 :** நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது
ஓத்தென மொழிப உயர்மொழிப்புலவர் (169)

**க - து :** ஓத்தென்னும் வகைக்கு இலக்கணங் கூறுகின்றது.

**உரை :** ஓரினமாகிய மணிகளுள் தரத்தால் ஒத்த மணிகளை வரிசை பெறக் கோத்தமைப்பது போல ஒன்றற்கொன்று இயைபுடையவாகிய வரும் பொருளை ஒருங்குநிரல் பட வைத்துச் செய்யும் நூல் வகையை ஓத்தெனக் கூறுவர் சிறந்த புலவர்.

எழுத்திலக்கணமேயாயினும் தனிப்பக்காண்பதும் மொழியிடை நிற்பதுமாகிய வேறுபாடு கருதி நூன்மரபு மொழிமரபு என வைத்தாற்போல நிரல்பட வைத்துச் செய்யப்பெறுவது ஓத்து என்னும் நூல் வகையாகும்.

EFEO_GUEST_JLC_02-082 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**சூ. 484 :** ஒருநெறி யின்றி விரவிய பொருளான்
பொதுமொழி தொடரின் அது படலமாகும் (170)

**க - து :** படலமென்னும் நூல் வகைக்கு இலக்கணங் கூறுகின்றது.

**உரை :** ஒரு பொருளே என்னும் முறைமையின்றி வேறு பட்டு விரவிய பொருளாற் பொதுப்பொருள் தோன்ற ஒத்துக் களை நிரல் படுத்துத் தொடர வைத்துச் செய்யப்படுவது படலமென்னும் நூல் வகையாம்.

கிளவியாக்கம் முதலாக ஒன்பது ஒத்துக்கள் நால்வகைச் சொற்களின் இலக்கணமாக வேறுபட்டு நின்றவாறும் யாவும் சொல்லிலக்கணமே கூறுதலின் சொற்படலம் என ஒரு பெயர் பெற்றவாறும் காண்க. புறத்திணைகளேயன்றி அகப்புறத் திணைகளாகிய கைக்கிளையையும் பெருந்திணையையும் கொண்டு பன்னிருபடலம் அமைந்தவாறும் காண்க.

**சூ. 485 :** மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயின்
தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப (171)

**க - து :** பிண்டம் என்னும் வகைக்கு இலக்கணம் கூறுகின்றது.

**உரை :** மேற்கூறிய சூத்திரம், ஒத்து, படலம் என்னும் மூன்றையும் உறுப்பாக உள்ளடங்கிய இலக்கணத்ததாயின் தலையாய தமிழ் மொழிப்புலவர் அதனைப் பிண்டம் என்று கூறுவர்.

தோன்று என்பது தொடைநயங்கருதித் தோன்று என நீண்டது. புகழொடு தோன்றும் புலவர் எனினும் ஆம். எ-டு: தொல்காப்பியம்.

**சூ. 486 :** பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும் என்று
உரைநடை வகையே நான்கென மொழிப (172)

**க : து :** அடிவரையில்லன என்றவற்றுள் நிறுத்தமுறையானே உரை வகைச் செய்யுள் ஆமாறு கூறுகிறது.

**உரை :** கதை தழுவி வரும் தொடர்நிலைச் செய்யுட்கண் கதை நிகழ்வினைத் தொடர்வுபடுவதற்குப் புலவர் இடை-யிடையே அமைக்கும் குறிப்புக்களான் வருவனவும், பாவாக



நடைபெறாமல் செய்யுள் தொடர்களான் வருவனவும்; இயங்கு திணையும் நிலைத்திணையும் கருத்துப் பொருளும் காட்சிப் பொருளும் உள்பொருளும் இல்பொருளுமாக வரும் அஃறிணைப் பொருள்களை உயர்திணைக்குரிய பண்பும் செயலும் உடையன போல வைத்து ஒரு பயன் கருதிக்கற்பனை மொழியாக வரு வனவும்; ஆடலும் பாடலும் கொண்டு கதை தழுவி வரும் கூத்தின்கண் முன்னும் பின்னும் இடையினும் விதூடகக் கூற்றாகக் தோன்றி வருவனவும், என மேற்குறித்த உரை வழங்கும் வகை நான்கு எனக்கூறுவர் புலவர்.

எ - டு : 1) சிலப்பதிகாரத்துள் இடையிடையே வரும் உரை களும் கட்டுரைகளையும் போல்வன பாட்டிடை வைத்த குறிப்பு என்க. அது ஒரு சொல்லானும், தொடரானும் பலதொடரானும் பொருள் விளக்கத்திற்கேற்ப வரும். இடைக்கால நாடகத் தமிழுள் இவ்வகை பயின்று வருமாறு காண்க. 2) அறஞ்செய விரும்பு - ஆறுவது சினம், கண்டொன்று சொல்லேல்'' (ஆத்தி சூடி) என்றாற் போலப் பாட்டினமைப்பை ஒத்துவருவன அது ஒரு பொருளை வற்புறுத்தக் கிளந்து கூறுதலின் 'கிளவி' எனப் பட்டது ஒரு பாவிற்குரிய திணை துறை முதலிய கூறுவதும் இதன்கண் அடங்கும். 3 சிற்றூர்ப்புறங்களில் விழாக் காலத்து நிகழும் பாரதக்கதை போல்வனவாகும். இக்காலத்துச் சிறுகதை, தொடர்கதைகளை ஒக்குமெனக் கொள்க. 4) இது எள்ளல் இளமை, பேதைமை மடன் என்னும் அடிப் டையில் கேட்போர் வெண்ணகை கொள்ளுமாறு நிகழும், அதனான் இது பொருளொடு புணர்ந்த நகை மொழி எனப்பட்டது.

## நோக்கத்தக்கதொரு குறிப்பு

இச்சூத்திரத்தை அடுத்து ''அதுவே தானும் இருவகைத் தாகும்'' ''ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே'' என்னும் இரண்டு சூத்திரங்கள் உரையாசிரியன்மார் நூல்களில் வைக்கப்பட்டுள. இவை இரண்டும் மேற்கூறிய உரைவகைச் செய்யுட்கே இலக்கணம் கூறுவதாகக் கருதி அவர்கள் உரைவரைந்துள்ளனர். இவை எவ்வாற்றானும் உரை வகைச் செய்யுள் இலக்கணங்களோடு இயையாமை சிறிது நோக்கினும் புலனாகும். இச்சூத்திரத்தின் பொருளமைப்பினை ஆழ்ந்து நோக்கின் இவை குறிப்புமொழி பற்றிய இலக்கணங்கள் என்பது விளங்கும். எனவே இவ்வுரையுள் அவை ''எழுத் தொடும் சொல்லொடும்'' (சூ. 1) என்னும் சூத்திரத்தின் பின் வைத்து உரை கூறப்பட்டுள்ளன.

EFEO_GUEST_JLC_02-083 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சூ. 487 : ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்
தோன்றுவது கிளந்த துணிவி னானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே (173)

க - து : முறையானே பிசியினது இலக்கணம் கூறுகின்றது.

உரை : "நொடியொடு புணர்ந்த பிசி" என மேற்கூறிய பிசி வகை நிலையாவன. வினைபயன் மெய் உருவென்னும் ஒப்புமை பொருந்த அப்பொருளை மறைத்து உவமையையே பொருள் போலக் கூறும் உவமத்தான் வருதலும். இனிமேல் நிகழ்வது இது எனக்கருதிக் கூறும் துணிவினான் வருதலும் என இரு வகையாம்.

தோன்றுவது' என்பது இனி நிகழ்வது இதுவெனத் தம்மறிவிற்குத் தோன்றும் கருத்தினை, அதனை உறுதியாக எண்ணிக் கூறுதலின் துணிவு எனப்பட்டது, பித்து-பிச்சு-பிசி என நின்றது. பேதுறச் செய்வது பித்து, ஆகலின் பேதுறக் கூறும் இதனைப் "பிசி" என்றார்.

எ - டு : பிறையைக் கௌவி மலை நடந்தது (யானை) பெட்டிக்குள் வைத்துக் கட்டிய முத்து (பற்கள்) இவை ஒப்பொடுபுணர்ந்த உவமத்தான் வந்தன, குஞ்சுக்குச் சிறகு முளைத்தால் கூட்டில் இருக்காது. கரும்புக்கட்டி வெளியிற் கிடந்தால் எறும்புக்கூட்டம் தானே வரும் இவை முறையே குழந்தை வளர்ந்தால் வெளியே விளையாடச் செல்லும் என்பதும் செல்வம் வெளிப்படையாக இருந்தால் பலரும் பறித்துச் செல்வார் என்பதும் ஆம் இவை தோன்றுவது கிளந்த துணிவு

துணிவுக்குப் பேராசிரியர் நீராடான் பார்ப்பான் நிறஞ் செய்யான் நீராடின் ஊராடும் நீரிற்காக் கை" என்பதைக் காட்டினார். அஃது ஒப்பொடு புணர்ந்த இயல்பேயன்றித்தான் கருதிக் கூறிய துணிவாகாமையறிக.

நொடியொடுபுணர்ந்த பிசி என்றாராகலின் உவமம் பற்றி வரும் விடுகதைகள் யாவும் பிசியாதற்கு ஒக்கும் என்க. அங்ஙனம் உருவகம் பற்றி வருவனவும் ஒக்கும் என்னை? உருவகத்தை "வேறுபட வந்த உவமத் தோற்றம்" என ஆசிரியர் கூறியதும் காண்க.

சூ. 488 : நுண்மையும சுருக்கமும ஒளியுடைமையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப. (174)

க - து : முறையானே முதுமொழியின் இலக்கணங் கூறுகின்றது.



உரை : யாதானுமோர் ஏதுவைக் கருதி வரும் எனப் பெற்ற முதுமொழியாவது ; கருத்து நுட்பமும் சொற்சுருக்கமும் பலகாற் பயின்ற விளக்கமுடைமையும் உணர்தற்கு எளிமையும் ஆகிய பண்புகளொடு விளக்கமாகத் தோன்றிக் கூறுவோர் தாம் கருதிய பொருட் பயனை முடித்தற்கு வரும் இயல்பினது ஏதுநுதலிய முதுமொழி என்று கூறுவர் புலவர்.

இது பெரும்பான்மையும் பழமொழியாயும் சிறுபான்மை கட்டுரை (இடித்துரை) யாயும் வரும்.

எ - டு : குலவிச்சைக் கல்லாமற் பாகம்படும். பாம்பறியும் பாம்பினகால் ஞாயிற்றைக் கைம்மறைப்பாரில், கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறு, வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற் போல, எனவரும்.

சூ. 489 : நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப (175)

க - து : முறையானே மந்திரச் செய்யுள் ஆமாறு கூறுகின்றது.

உரை : உவந்து கூறினும் முனிந்து சொல்லினும் அச்சொற் பொருள் தப்பாமல் நிறைவேறும் மொழியினைக் கூறும் ஆற்றலுடைய மாந்தர் தம் ஆளுமையாற் கிளந்த மறைமொழியே மந்திரமாம் எனக் கூறுவர் புலவர்.

மந்திரம் என்றது மந்திரச் செய்யுளை பொய்யறிவாளர்க்குத் தன் பொருட்பயனை மறைத்து நிற்றலானும், இவ்வுலகியலுக்கு முரணாக மறுத்து நிற்றலானும் மெய்யறிவுநூல் 'மறை' எனப்பட்டது

மறைநூல் இவ் ஆசிரியர் காலத்து நான்கு கூறாக வகுக்கப் பட்டிருந்தமை பனம்பாரனார் பாயிரத்தால் புலனாகும். 'மாந்தர்' என்றது ஈண்டு மந்திரத்தினையுடையார் என்னும் பொருட்டாய் நின்ற உட்பிணைப்புச் சொல். (மந்திரத்தார் = மாந்தர்) மாந்தர் மக்கள் என்புழிவரும் மாந்தர் பல்லோரறியும் சொல். அது வேறு இது வேறு 'நிறைமொழி மாந்தர் பெருமை சொல். நிலத்து மறைமொழி காட்டிவிடும்"— என்றது காண்க. ஆணை என்றது மெஞ்ஞான உணர்வை ஆளும் ஆளுமையை (வீறு) உணர்த்தி நின்றது. 'ஆண்மை' என்பது குணப் பண்பையும் ஆணை என்பது செயற்பண்பையும் உணர்த்தும்.

மந்திரம் :- அகத்து உறுப்பு (கரணம்) நான்கனுள் சித்தத்தின் செயற்பாடு. அஃது அகத்தெழுவளியிசையான் அரில்தப

நாடின் அகச்செவிக்குப் புலனாக அமைந்து நிகழும் நுண்மொழி. நிறைமொழியாளர் அவற்றை மெய்தெரிவளியிசையான் புறச் செவிக்குப் புலனாக அருளுதலான் 'மறைமொழி' என்றார்.

இம்மந்திரங்கள் ஒழுக்கம் (சரியை) வழிபாடு (கிரியை) உணர்வை ஒன்றுபடுத்தல் (யோகம்) மெய்யறிதல் (ஞானம்) ஆகிய நால்நெறிக்கும் வெவ்வேறாக அமைந்து நிகழும்.

அவற்றுள் இம்மைப் பயன் விளைவிக்கும் தேவரைப்பராவும் பூசனைக்கும் வேள்வி முதலாய கரணங்கட்கும், பிணி முதலிய வற்றை நீக்குவதற்கும் உரியவாய் அவ் அருளாளர்களாற் கூறப்பெற்ற மந்திரச் செய்யுளை இலக்கிய வகையுள் ஒன்றாகத் தொன்று மொழிப்புலவோர் கொண்டமையான் அதனை ஆசிரியர் எடுத்தோதினார் என்றறிக.

தமிழ் மந்திரங்கள் யாவும் வடமொழிப்படுத்தப்பட்டமையின் மந்திரங்கட்கு இலக்கியம் காட்டற்கு அரிதாயிற்று. அம்மந்திரங் களை இடைவைத்து வெண்பாவானும் ஒருபோகு கொச்சகத் தானும் அமைத்த பாக்கள் வாய்மொழியாய் அங்கத வகைப்பாட்டினுள் அடங்கும். திருமூலர் அருளிய திருமந்திரச் செய்யுட்கள் அடிவரையறைப்பட்டு நிகழ்தலின் பாவுள் அடங்கின. அடிவரையின்றி வரும் மந்திரச் செய்யுட்களை நிறைமொழி மாந்தர் வாய்க் கேட்டறிக.

வாய்மொழிப் புலவநின் றானிழற் றொழுதே (பரிபா-1)
மாயா வாய்மொழி உரைதர வலந்து
வாய்மொழி ஓடை மலர்ந்த
தாமரைப் பூவினுட் பிறந்தோனும், தாதையும்
நீயென மொழியுமால் அந்தணர் அருமறை (பரி-3)

என்னும் பரிபாடற்றொடர்களால் மந்திரங்கள் தமிழில் இருந்தமை போதரும்.

**சூ. 490 : எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிப்**
**பொருட்புறத் ததுவே குறிப்பு மொழி என்ப (176)**

**க - து :** கூற்றிடைவைத்த குறிப்புமொழியாமாறு அதன் இலக்கணங் கூறுகின்றது.

**உரை :** எழுத்திலக்கணத்தொடும் சொல்லிலக்கணத்தொடும் இயையாததாகிச் சொல்லினது செம்பொருளைவிட்டு அதன் புறத்ததாய்க் கேட்போர்க்குத்தன்கருததுப் புலனாகுமாறு வருவது குறிப்பு மொழி என்று கூறுவர் புலவர்.



சொல்லின் முதனிலை இடைநிலை இறுதிநிலை மயக்க மரபு முதலிய எழுத்திலக்கணத்தையும்; எழுவாய், பயனிலை, வேற்றுமை மரபு, முதலிய சொல்லிலக்கணத்தையும் நோக்காமல் பொருட் குறிப்பு மட்டுமே நோக்கி வருதலின் எழுத்தோடும் சொல்லொடும் புணராதாகி என்றார். எழுத்து, சொல் என்பவை ஆகு பெயர்கள்.

அடிவரையறையுடைய பாட்டின்கண் திணையுணரும் வண்ணம் உறுப்பாகப் புணர்க்கப்படும் உள்ளுறை உவமமும் இறைச்சியும் முன்னமும் பிறவும் வடிவு திரிந்து அடிவரையறை யில்லாதனவாய் வரின் அவையும் குறிப்பு மொழியாம்

இதனைக் கூற்றிடை வைத்த குறிப்பென ஆசிரியர் ஓதினா ராகலின் 'கூற்று' என்னும் செய்யுளுறுப்பு அகப்பொருட்கே சிறந்துரிமையாகித் தலைவன் கூற்று முதலாக வருவன ஆதலின் அக்கூற்றினை இடமாகக் கொண்டும் இச்செய்யுள் வகை தோன்றும் என்பது பெறப்படும்.

**சூ. 491 : அதுவே தானும் ஓரிரு வகைத்தே (177)**

**க - து :** குறிப்புமொழி இருவகைப்படுமெகின்றது.

**உரை :** மேற்கூறிய குறிப்பு மொழி கூறுவோர்பகுதியான் இருவகைப்படும்.

**சூ. 492 : ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே**
**ஒன்றே யார்க்கும் வரைநிலை இன்றே (178)**

**க - து :** குறுப்பு மொழியின் வகை உணர்த்துகின்றது.

**உரை :** மேல் இருவகைத்து எனப்பட்டவற்றுள் ஒருகூறு செவிலிக்குரியதாக நிகழும். மற்றொரு கூறு வரைவின்றி யாவர்க்கும் உரியதாக நிகழும். செவிலி என முற்கூறியதனான் பின்னர்க் கூறிய யார்க்கும் என்றது அகப் பொருளிற் கூற்றிற் குரியராக வருவோரே என்பது பெறப்படும். மற்றென்பதனை பின்னின்ற ஒன்றே என்பதனொடு கூட்டுக - அசையாகக் கொள்ளினுமாம்.

இக்குறிப்பு மொழியமைந்து அடிவரையின்றி வந்த இலக்கியம் இக்காலத்து அரிதாயினமையின் வந்துழிக் காண்க. பாட்டிடை வந்த குறிப்பு இறைச்சியாயும், சுட்டாயும் நகையாயும் அடங்க லின் இஃது உரையின்கண் வரும் என அறிக.

EFEO_GUEST_JLC_02-085 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**சூ. 493 : பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத் தியயே (179)**

**க : து :** இதுகாறும் அடிவரையில்லனவாகிய செய்யுளைப் பற்றிய மரபுகளைக் கூறி இனி அடிவரையறையுடையதெனினும் ஆசிரியம் முதலிய பாட்டுக்களைப் போலாமல் இசைத்தமிழ் மரபிற்றோன்றி இயற்றமிழ்ப் பகுதியாக வழங்கும் பண்ணத்தி என்னும் பாவகையினது இலக்கணங் கூறுகின்றார்.

**உரை :** அறுவகைப் பாக்களுக்கும் உரியவாக அவற்றிடைக் கலந்த அறமுதலாய மும்முதற்பொருளையும் அகமும் புறமுமாகிய திணைப் பொருளையும் தமக்குப் பொருளாகக் கொண்டு அகவல் முதலாய பாட்டினைப் போல் யாம்பமைதி உடையவாய் வருதல் பண்ணத்தி என்னும் பாவகையாகும்.

மரபு, தூக்கு, பா, திணை, கைகோள் என்றின்னோரன்ன உறுப்புக்களின்றி அசையும் சீரும் நோக்கும் வண்ணமும் என்றின்னோரன்ன உறுப்புக்களைப் பெற்றுப் பண்ணும் ஓசையும் உடையவாய் யாப்பமைதி பெற்று வருதலின் பாட்டெனக் கொள்ளவும் படாமல் பாட்டு இன்று எனத் தள்ளவும் படாமல் இசைத்தமிழின் நீங்கி இயற்றமிழ்க்குரிய வாய் வருதலின் "பாட்டின் இயல" என்றார்.

இது பண்ணொடும் இசையொடும்கூடி யாழொடும் முழவொடும் பொருந்தவரின் இசைத்தமிழ்ப் பகுதியாகும். இசையின்றிப் பண்ணளவாய் ஓசை பெற்று வரின் இயற்றமிழ்ப் பகுதியாகும்.

இயற்றமிழ்ப் பகுதியாய்ப் பண்ணுப்பெறுங்கால் தொடர்ச்சியின்றி இடையிடையே இன்னோசை பெற்றுவரும் என்பது இதன் பெயராற் புலனாகும். அஃதாவது பண்ணினை அகத்தே உடையது (பண் அகத்து + இ) என்பது இதன் பொருள்.

இப்பாவகையாவது கழனிஉழவர் பாடும் மழைப் பாட்டும், வெள்ளப் பாட்டும், ஏர்ப்பாட்டும், நடவுப் பாட்டும், நெற்களப் பாட்டும், கிணைப்பொருநர் பாடும் போர்க்களப் பாட்டும், வெற்றிப்பாட்டும், கட்டுங்கழங்கும் காண்பார் பாடும் பாட்டும் போல்வனவாகும். 'நாட்டுப்பாடல்' என இக்காலத்து வழங்கும் பாடல்கள் இப்பண்ணத்தி வழி வந்தவைகனேயாம். பள்ளு முதலாய சிற்றிலக்கியங்கள் இதன்வழித் தோன்றியவை எனலாம்.

எழுநிலத்தெழுந்த செய்யுள் கூறிய வழி இதனைக் கூறாமை யானும் அடிவரையில்லனவற்றைக் கூறி முடித்ததன்பின் இதனைக் கூறுதலானும், இதனைப் பிறன்கோட் கூறலாகக் கொள்வார் ஒரு சாரார், இதனைப் பிசியொடு ஒக்கும் என ஆசிரியர் கூறுதலான் பெரும்பான்மையும் உலகியல் வழக்குப் பற்றியே இவ்வகைச் செய்யுள் வழங்கின எனக் கொள்ளலாம். அதுபற்றி இதனை ஆசிரியர் புறனடை போலக் கூறினார் எனக் கருதலாம்.



இனி இச்சூத்திரம் இடைக்காலத்தெழுந்த இன வகைகளை அடக்கிக் கூறுவதாக வலிந்துரை கூறுவார் இளம்பூரணர். பேராசியர் பாட்டும் உரையும் கோலச் செயல்படுவனவென்றும், அவை நாடகச் செய்யுளாகிய பாட்டுமடையும், வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும் கடகண்டும் முதலாயன என்றும் கூறுவார். உரையாசிரியன்மார் விளக்கங்கள் இதுப்பற்றிப் பின்வரும் மூன்று சூத்திரக்களொடும் இயையாமையின் அவை பொருந்துமாறில்லை என்க.

**சூ. 494 : அதுவே தானும் பிசியோடு மானும் (180)**

**க - து :** பண்ணத்திக்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

**உரை :** யாப்பமைதியாற் பாட்டினியலவாய் வரும்பண்ணத்தி பொருளமைதியாற் பிசியொடு ஒத்து வரும்.

அஃதாவது அகப்பொருள் புறப்பொருள்களுள் கைக்கிளையையும் பாடாண்டிணையையும், அடிப்படையாகக் கொண்டு ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும், தோன்றுவது கிளந்த துணிவினானும் வரும். பண்ணொடு கூடி வருதலின் சிறுபான்மை ஆளத்தி முறையில் இசைக்கப்படுதலும் கொள்க.

**சூ. 495 : அடிநிமிர்பு கிளக்கின் ஈரா றாகும் (181)**

**க - து :** பண்ணத்தியின் அடியளவு கூறுகின்றது.

**உரை :** பண்ணத்திச் செய்யுள் வகையின் அடியளவினைக் கிளந்து கூறின் அதன் பெருக்கம் பன்னிரண்டடியாகும்.

ஈர்ஆறாகும் என்னும் குறிப்பான் சுருக்கம் இரண்டடியாகும் எனக்கொள்க.

இச்சூத்திர பாடம் "அடிநிமிர்கிளவி" என உளது. "அடிநிமிர்பு கிளக்கின்" என்பதே உண்மையான பாடம் என்பது பேராசிரியர் உரையான் அறியக்கிடக்கின்றது. அவ்வுரையாவது - "அப்பண்ணத்தியின் அடிப்பெருங்கங் கிளக்குங்கால் பன்னிரண்டாம்" என்பது. இங்ஙனம் உரை நோக்காது தவறாக அச்சிடப் பெற்றுள்ள சூத்திரங்கள் சில உள.

EFEO_GUEST_JLC_02-086 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**சூ. 496 : அடியிகந்து வரினும் கடிவரை யின்றே (182)**

**க - து :** ண்ணத்திக்கு அடி பற்றியதொருபுறனடை கூறுகின்றது.

**உரை :** "பாட்டினியல பண்ணத்தி" என்றதனான் அது நாற்சீரடியானே வருமென்பது பெறப்பட்டது. அங்ஙனமின்றி ஒரோவழி நாற்சீரடியின் இகந்து ஐஞ்சீரடி அறுசீரடிகளானும், இரு சீரடி முச்சீரடிகளானும் வரினும் நீக்கும் நிலை இன்று.

அடி என்றது எழுத்தளவையான் வரும் நாற்சீரடியினை "அடியிகந்துவரினும்" எனப் பொதுப்படக் கூறியதனான் மேற் கூறிய பன்னிரண்டடியினும் இகந்து வரினும் கடிவரையின்று எனவும் கொள்க. ஏற்றப்பாட்டு முதலியவை இகந்து வருமாறு கண்டு கொள்க.

**சூ. 497 : கிளரியல் வகையிற் கிளந்தன தெரியின்**
**அளவியல் வகையே அனைவகைப்படுமே (183)**

**க - து :** 'அளவு' என்னும் செய்யுளுறுப்பினை முடிந்தது முடித்தல் என்னும் உத்திவகையான் முடித்துக் கூறுகின்றது. இதன் பயன் அளவென்பதற்குரிய இலக்கணத்தை உய்த்துணர வைப்பதாகும்.

**உரை :** ஒன்றனைப்பற்றி அளவு கூறுமிடத்து இவ்விவ்வாறு வகுத்துக் கூறல் வேண்டும் என அளவியலார் கூறும் இலக்கண முறையானே மேற்கிளந்தவற்றை ஆராயின் அளவியல் என்னும் உறுப்பு அத்துணை வகைப்படும்.

அளக்கும் முறையாவது ஒரு பொருளின் வண்ணம், வடிவு முதலாய அளவுகளை, செய்கை, உறுப்பு, உணர்வு, பயன் முதலியவாக அளத்தல்.

அவ்வகையானே எழுத்திற்கு மாத்திரை கூறுவது முதலாக எழுத்து அசைசீர் அடி தொடைகளுக்கு எண்பற்றிய அளவு கூறுதலும், உறுப்பு அளவு கூறுதலும், உறுப்பினானாகிய பாக்களுக்கு அவ்வவற்றின் உறுப்புக்களின் அளவு கூறுதலும், அவற்றைத் தொகுத்தும் வகுத்தும்விரித்தும் கூறுதலும், பெருக்கம் சுருக்கம் கூறுதலும், உடன்பாட்டாற் கூறுதலும், வரையறை இன்று என எதிர் மறுத்துக் கூறுதலும், பிறவும் எல்லாம் விளங்க எடுத்தோத்தானும் உத்தி வகையானும், விதப்பானும் கூறியவற்றையெல்லாம் அடக்கி "அளவியல் வகையே அனைவகைப்படுமே" என்றார் என அறிக.



மேல் "அளவியல் வகையே அனைவகைப்படுமே" என்றது அறுவகைப் பாக்களுக்கும் அவைபெறும் உறுப்புக் களுக்கும் மட்டுமேயாம். ஈண்டுக் கூறியது. இதுகாறும் கூறப் பெற்ற ஏழுவகை நிலத்தையும் அடக்கி இனிக் கூறப்பெறுவன வற்றிற்கும் இலக்கணம் பெறும் வகையில் முடித்துக் காட்டியதா கும். ஆதலின் இது கூறியது கூறலாகாமை அறிக.

**சூ. 498 : கைக்கிளை முதலா ஏழ்பெருந் திணையும்**
**முற்கிளந் தனவே முறை (மை) யினான (184)**

**க - து :** நிறுத்த முறையானே 'திணை' என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது

**உரை :** திணை என்பது கைக்கிளை முதலாகப் பெருந்திணையீறாகக்கிளந்த ஏழு பெரிய திணைகளும் ஆம். அவை முறையானே மேற்சொல்லப்பட்டவைகளேயாகும்.

வெட்சி முதலாய ஏழும் குறிஞ்சி முதலியவற்றின் புறத் திணைகளேயாதலின் அவை வேறல்ல. இவற்றுள்ளே அடங்கு மென்பார் "ஏழ்பெருந்திணையும்" என்றார்.

திணை என்னும் தலைமைப்பாடுடையவை இவையே என்பதனை முற்படக் கிளந்த எழுதிணை" (அகத்-சூ-1) என்றதனான் அறிக. முற்பட என்றது தலைமைப்பட என்றவாறு, புறத்திணைகள் கைகோள் வகை பெறாமையும் உணர்க.

**சூ. 499 : காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்**
**பாங்கொடுதழா அலும் தோழியிற் புணர்வுமென்று**
**ஆங்கநால் வகையினும அடைந்த சார்வொடும**
**மறையென மொழிதல் மறையோ ராறே (185)**

**க - து :** நிறுத்த முறையானே இருவகைக் கைகோளுள் களவின் இயல்பு கூறுகின்றது.

**உரை :** இயற்கைப் புணர்ச்சியும் அதன் சார்பும் இடந் தலைப்படலும் அதன் சார்பும் பாங்கொடுதழாலும் அதன சார்பும் தோழியிற் கூட்டமும் அதன் சார்பும் என மேற்கிளந்தனவாகிய நான்கும் களவொழுக்கம் எனச் சொல்லுதல் களவியலிலக்கணம் கூறும் புலவர் நெறியாகும்.

அதிகாரமுறைமை என்னும் உத்தியான் "முற்கிளந்தனவே" என்பது கூட்டப்பட்டது. அன்றி 'ஆங்க' என்பதனாற் கொள்ளினும் அமையும்.

EFEO_GUEST_JLC_02-087 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

அடைந்த சார்பென்றது; வன்புறை,மதியுடம்பாடு அறத்தொடு நிற்றல், குறியீடு முதலியவற்றையாம், மறுமைக்குரிய உறுதி கூறும் மெய்ப்பொருள் நூலை மறை என்று வழங்குமாறு போல இம்மைக் குரிய இன்பப் பகுதியாகிய இசையையும், காமத்தையும் தெய்வப் பகுதியாகிய மந்திரத்தையும் கூறும் நூல்களை மறை என வழங்குதல் தமிழ்ச் சான்றோர் வழக்காகும்.

கைகோள் இரண்டனுள் களவு முன்னிகழ்தலானும் நாடக வழக்கும் உலகியல் வழக்கும் பொருந்தச் செய்யுள் செய்தற்குச் சிறத்தலானும் ''மறையென மொழிதல் மறையோராறே'' எனச் சிறப்பித்துக்கூறப்பட்டது.

சூ. 500 : மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்
இவை முதலாகிய இயல்நெறி திரியாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடும் புணர்ந்தது கற்பெனப்படுமே (186)

க - து : இது கற்பின் இயல்பு கூறுகின்றது

உரை : வரைவு மலிதல் உடன்போக்கு முதலியவற்றால் புறத்தார்க்குக் களவு வெளிப்படுதலும், களவின்றித் தலைமக்கள் தமர் வதுவை கூட்டித் தரப்பெறுதலும், இவைமுதலாக அறநெறி திரியாது, கூடுதலும் விருந்தோம்பலும் ஆகியவற்றான் மலிதலும், அன்பு மேலிட்டான் வரும் புலவியும், தலைவனின் பரத்தைமை காரணமாக வரும் ஊடலும் வாயிலாரானும் ஆற்றாமையானும் உணர்த்தப்பெறும் உணர்வும், ஓதல் முதலியவற்றான் நிகழும் பிரிவும் ஆகிய இவற்றொடு பொருந்தி நிகழும் ஒழுக்கம் கற்பென்று கூறப்படும்.

களவென்பது பெற்றோரும் புரப்போரும் அறியாது நிகழ்வ தாகலின் அவர் அறிந்த காலையே அது கற்பின்பாற்படுமென்பார் ''மறைவெளிப்படுதலும்,' என்றார் அஃது உடன் போக்கு - கற்பொடு புணர்ந்த கௌவை முதலியவாம்.

தமரிற் பெறுதல் என்பது கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதாகும். இவை முதலாகிய என்றது கொடுப் போரின்றிக் கரணமொடு புணர்தலும் பிறவுமாம். துனி, ஊடலுள் அடங்கும். பிற விளக்கங்கள் களவியலுள்ளும் கற்பியலுள்ளும் கண்டு கொள்க.



சூ. 501 : மெய்பெறு மவையே கைகோள் வகையே (187)

க - து : கைகோள் இவ் இருவகையே என்கின்றது. இது பின்னது நிறுத்தல் என்னும் உத்திவகை

உரை: பொருள்பெற மேற்கூறப்பெற்ற களவும் கற்பும் ஆகிய அவ்இரண்டே கைகோள் வகையாகும்.

சூ. 502 : பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தியொடு
அளவியன் மரபின் அறுவகை யோரும
களவினிற் கிளவிக்கு உரியர் என்ப (188)

க - து : நிறுத்த முறையானே ''கூற்று'' என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறத் தொடங்கிக் களவின் கண் கூற்று நிகழ்த்துதற்குரியார் இவர் எனக் கூறுகின்றது.

உரை : பார்ப்பானும் பாங்கனும் தோழியும் செவிலியும் சீரிய தகவுடைய சிறப்பினரான தலைவனும் தலைவியும் என உரையாடுதற்குரிய மரபினையுடைய அறுவகையோரும் களவென்னும் கைகோளிடத்துக் கூற்று நிகழ்த்துதற்கு உரியர் எனக் கூறுவர் புலவர். பார்ப்பான் முதலியவை தொகுதி ஒருமை. அவர்தாம் பலராதலின் அறுவர் என்னாது அறுவகையோர் என்றார். இது வரும் நூற்பாவிற்கும் ஒக்கும்.

'' அளாவியன் மரபின் என்பது'' எதுகை நோக்கிக் குறுகி நின்றது அளாவுதல் கலந்துரையாடல்

இருவகை ஒழுக்கத்திற்கும் உரியவர் தலைவனும் தலைவியுமே யாகலின் 'சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தி' என்றார் ஒடு எண்ணுப்பொருளது.

பாங்கனும் தோழியும் கிழவனொடும் தோழியும் செவிலியும் தலைவியொடும், பார்ப்பான் தலைவி ஒழிந்த ஏனையரொடும் கூற்று நிகழ்த்துதல் மரபு என்பது தோன்ற ''அளாவியன் மரபின்'' என்றார்.

சூ. 503 : பாணன் கூத்தன் விறலி பரத்தை
ஆணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியார் (189)

க - து : கற்பாகிய கைகோளின்கண் கூற்று நிகழ்த்துதற்குரியார் இவர் எனக் கூறுகின்றது.



EFEO_GUEST_JLC_02-088 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

உரை : பாணனும் கூத்தனும் விறலியும் பரத்தையும் அன்பு சான்ற அறிவரும் கண்டோரும், பேணத்தக்க சிறப்பினையுடைய பார்ப்பான் முதலாக மேற்கூறப் பெற்ற அறுவரொடும் கூடிப் பழமையான இலக்கண மரபினான் கற்பின்கண் கூற்று நிகழ்த்து தற்குரியராவர்.

இவர் ஐவரும் தலைவன் தலைவியரொடு கூற்று நிகழ்த்துதற் குரியார் என்பார் தொன்னெறி மரபின் கற்பிற்குரியார் என்றார்.

கற்பியலுள் ஓதிய பாட்டியை விறலியுள்ளும் இளையரைப் பாங்கனுள்ளும் அடக்கி ஓதினார் என்க. பாங்கரும் இளையரும் செயலாலன்றி வேறுவேறல்லர் என்க. இதனை 'உழைக்குறுந் தொழிலும் காப்பும், உயர்ந்தோர் நடக்கையெல்லாம் அவர்கட் படுமே'- என்னும் கற்பியற் சூத்திரத்தான் அறியலாம். விருந்தினர் கூற்று நிகழ்த்துதற்குரியர் அல்லர் ஆதலின் நீக்கப் பெற்றது. அந்தணர், அறிவர் என்பதனுள் அடங்கும் பாகர் கேட்போரே யன்றிக் கூற்று நிகழ்த்துவோராய் வருதல் புலனெறி வழக்கின்று என்க. தொன்னெறி மரபென்றதனான் நற்றாய் கூற்றுச் சிறுபான்மை வருமெனக் கொள்க.

சூ. 504 : ஊரும் அயலும் சேரி யோரும்
நோய்மருங் கறிநரும் தந்தையும் தன்னையும்
கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது
கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும் (190)

க - து : கூற்றுறுப்பிற்குப் புறனடை கூறுகின்றது.

உரை : ஊராரும், அயலவரும், சேரியோரும், தலைமக்களின் பாங்கிருந்து அவர் தம் துயர் அறிவோரும், தந்தையும், மூத்தோரும், கூறும் கூற்றுக்கள் செய்யுள் செய்யும் புலவோரானும், தோழி முதலாய பிற உறுப்பினரானும் எடுத்துக் கூறப்படுவதல்லது அவர் தாமே நேர்க்கூற்றாகக் கூறுதல் இருவகைக் கைகோளினும் இன்மை வலியுடையதாகும்.

நல்லிசைப் புலவோர் இலக்கியத்தான் இந்நெறி புலப்படு மென்பார் "யாப்புறத் தோன்றும்" என்றார். ஊரார் என்றது உள்ளூரினரை. அயலார் என்றது ஊர்ப்புறத்தவரை. சேரியோர் என்றது பரத்தையின் பாங்காயினாரை. தன்னை = (தன் + ஐ) என்றது உடன்பிறந்தோருள் மூத்தோரையும் தந்தையையும் குறிக்கும்.



சூ. 505 : கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது (191)

க - து : இதுவுமது.

உரை : தலைவனிடத்தும் தலைவியிடத்தும் நற்றாய் நேர்க் கூற்றாகக் கூறுதல் முற்றாகத் தோன்றாது.

எனவே செவிலியொடும் தந்தை தன்னையரொடும் அறிவரொடும் கூறுதல் தோன்றுமெனக் கொள்க.

சூ. 506 : ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப (192)

க - து : இதுவுமது.

உரை : ஒள்ளிய தொடியினை அணிந்த காதன்மை சான்ற ஆயத்தார், செவிலி, நற்றாய், தலைவன், தலைவி, ஆகிய இவரொடு கண்டோர் மொழிதல் இலக்கியத்துட் கண்ட மரபு எனக் கூறுவர் புலவர்.

கண்டோர் - என்றது : தலைவனும் தலைவியும் உடன் போக்கின் கண் இடைச்சுரத்துக் கண்டோரை. அதனான் அஃது அவர்க்குக் காரணப் பெயராயிற்று. மாதர் என்றது ஆகுபெயர். அது தலைவன் தலைவியர்பால் அன்புடைய பெண்டிரைச் சுட்டி நின்றது.

சூ. 507 : இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய லாணையிற் கிளத்தற்கும் உரியன் (193)

க - து : தலைவன் கூற்றிற்காவதோர் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : தலைவியொடு உடன்போக்கின்கண் இடைச் சுரத்தின் பால் தலைவன் தலைவியிடத்து உலக வழக்காகிய ஆணையினால் வீறுகோளுரை கூறுதற்கும் உரியன்

என்றது, தலைவி சுரத்தின் கொடுமையை மறக்க மெல்லிய இனிய காதல் மொழி பேசுதற்குரிய தலைவன் இடைச்சுரத்துத் திரியும் வேட்டுவர் முதலானோரால் துயர் நேருமோ எனத் தலைவி தன்னகத்தே அச்சமுற்று வருந்தலைக் குறிப்பா னுணருங்கால் அவள் அச்சத்தை நீக்க வீறுமொழி கூறற்கும் உரியன் என்றவாறு. உம்மை அன்புமொழி கூறுதலைச் சுட்டி நின்றது.

EFEO_GUEST_JLC_02-089 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எ - டு : " நுமர்வரின் ஓர்ப்பின் அல்லது அமர்வரின்
முந்நீர் மண்டலம் முழுதும் ஆற்றா
தெரிகணை விடுதல் ஓவிலனே
அரிமதர் மழைக்கண் கலுழ்வதை எவனோ "
(நச்-உரை-மேற்)

" நீவிளையாடுக சிறிதே யானே
மழகளிறு உரிஞ்சிய பராரைவேங்கை
மணலிடு மருங்கில் அரும்புறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென்
நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே " (நற்.362)

என்றாங்கு வரும் தலைவியைத் தேற்றுதற்பொருட்டுக் கூறலின் தற்புகழ்ச்சியாகா தென்றறிக. அங்ஙனம் கூறுதல் வழக்கென்பது தோன்ற " வழக்கியல் ஆணை " என்றார்.

சூ. 508 : ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங் குரியர் முன்னத்தின் எடுத்தே (194)

க - து : ஏனையோர் கூற்றிற்காவதோர் சிறப்புவிதி கூறுகின்றது.

உரை : நற்றாயும் கண்டோரும் ஒழிந்த எனையோர் தலைவன் தலைவியொடு மரபானே கூற்று நிகழ்த்துங்கால் மேல் அகத்திணையியல் முதலியவற்றுள் மொழிந்தவாறு முன்னத்தின் எடுத்துக் கூறுதற்கு உரியார்.

முன்னமாவது : இடமும், செவ்வியும் தத்தம் தகுதியும் பற்றிய குறிப்பு. அஃதாவது பாங்கன் கழறிக் கூறுதலும், பரத்தை தன்னைத்தலைமை செய்து கொண்டு கூறுதலும் பிறவும் அறக்கழிவுடையன அல்ல என்பார் மொழித்தாங்குரியர் என்றார். எ - டு : மேலை இயல்களுட் கண்டு கொள்க.

சூ. 509 : மனையோள் கிளவியும் கிழவன் கிளவியும்
நினையுங் காலை கேட்குநர் அவரே (195)

க - து : நிறுத்த முறையானே கேட்போர் என்னும் செய்யுளுறுப்பு ஆமாறு கூறுகின்றது.

உரை : கேட்போரை ஆராயுமிடத்து மேல் முன்னத்தின் எடுத்து மொழிதற்குரியார் எனப்பெற்ற அப்பதின்மரே தலைவன் தலைவியின் கூற்றுக்களைக் கேட்போராவார். தலைவன் தலைவியர் தம்முட் கேட்போராவார் என்றவாறு.

'நினையுங்காலை' என்றதனான் கூற்றுப் பற்றி ஓதிய இலக்கணங்களான் விதிவிலக்குகளை ஓர்ந்தறிந்து கொள்க.



சூ. 510 : பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே (196)

க - து : கேட்போர் பற்றிய விதி கூறுகின்றது.

உரை : யாப்பொடு புணர்ந்து நிகழ்தலானே பார்ப்பார் அறிவர் என்று சிறப்பித்துக் கூறப்பெறும் இவ் இருவர் கூற்றும் யாவர்க்கும் கேட்டலை வரையார். யாவரும் இவ் இருவர் கூற்றுக்களுக்குக் கேட்போராவார் என்றவாறு.

அவர் கூற்று அறமுதலாகிய மும்முதற்பொருளொடும் புணர்ந்துவரும் இயல்புடைத்தாகலின் யாவரும் கேட்பார் என்றவாறு. யாப்பென்றது—அற முதலாகிய நூல்களை. புணர்தலான் என்பது புணர்ந்தென விகாரப்பட்டு நின்றது.

சூ. 511 : பரத்தை வாயில் எனஇரு வீற்றும்
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப்பயனிலவே (197)

க - து : இதுவுமது

உரை : பரத்தையர் வாயில்கள் என்னும் இரு பகுதி யாரும் தலைவியைக் கேட்பாளாகக் கருதிக் கூறாத கூற்றுக்கள் அகப்பொருட் பயனில்லாதவையாகும். சுட்டிக் கூறுதலாவது தலைவி கேட்பாளாகத் தலைவிக்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை கூறுதல். வாயில்கள் முன்னிலைப் புறமொழியாகக் கூறுதல்.

சூ. 512 : வாயில் உசாவே தம்முளும் உரிய (198)

க - து : வாயில்கள் கூற்றுக்குச் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : தலைமக்கள் கேட்பக் கூறுதலேயன்றி வாயில்கள் கூற்று அவர்தம்முள்ளும் கேட்டற்குரியவாம். எனவே வாயிலாரும் கேட்போராவார் என்றவாறு.

சூ. 513 : ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியாற்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர் (199)

க - து : நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல்சான்ற புலனெறி வழக்குப் பற்றி அஃறிணைப் பொருள்களும் உயர்திணை போலக் கூறுவதும் கேட்பதுமாக அமையும் எனப்புறனடை கூறுகின்றது.

இது வழுவமைதியாய புறனடையாதலின் இதன்கண் கூற்றும் கேட்போருமாகிய இருவகை உறுப்பும் ஒருங்குணர்த்தப் பெற்றன.

**உரை :** ஞாயிறு முதலாக நெஞ்சு ஈறாகக் கூறப்பெற்றனவும் அவை போல்வன பிறவும் தாமே கருதியது போன்ற முறைமையான் வாயாற் சொல்வன போலவும் செவியாற் கேட்பன போலவும் பொருளியலுள் நோயும் இன்பமும் என்னும் சூத்திர முதலாகச் சொல்லியவாறு செய்யுள் செய்தற்கமையும் என்று கூறுவர் புலவர்.

'பிறவும்' என்றதனான் முகிலும் தென்றலும், கண்ணும், தோளும் முதலியவும் பூவும் கொடியும் போல்வனவும் கொள்க. புலம்புறுபொழுது = தலைமக்கள் பிரிந்து தனிமையுற்று வருந்துமிடத்துள்ள பொழுது. அவை பெரும் பொழுதும் சிறு பொழுதுமாம்.

எ - டு களவியல் கற்பியல் பொருளியல்களுள் காண்க.

சூ. 514 : ஒருநெறிப் பட்டாங்கு ஓரியல் முடியும்
கரும நிகழ்ச்சி இடனென மொழிப (200)

க - து : 'இடன்' என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது.

**உரை:** அகமும் புறமுமாகிய திணைக்கண் பலவகைப்பட்டு நடக்கும் ஒழுகலாறுகளுள் ஒரு நெறியான் அமைந்து ஓரொழுக்கம் நிறைதற்குரிய கருமமாகிய நிகழ்ச்சி இடனெனக் கூறுவர் புலவர்.

ஓரொழுக்கமாவது இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, அறத்தொடுநிலை, உடன்போக்கு, வரைவு, பொருள் வயிற்பிரிவு, வெட்சி, வஞ்சி, உழிஞை, என்றாங்கு வருவனவும் கைக்கிளை பெருந்திணை, என வருவனவும் பிறவுமாம்.

எ - டு : அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு. (குறள்-)

இது தலைவன் ஐயுற்றுக் கூறியது என்றவழி யாண்டு நிகழ்வதென்றாற்குக் களவின்கண் இயற்கைப் புணர்ச்சியிடத்து எனவும்

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர் (குறள்)

இது தலைவன் புணர்ச்சி மகிழ்தல் கூற்று என்றவழி, யாண்டு நிகழ்வதென்றாற்குக் கற்பின் கண் இல்வாழ்க்கையிடத்து எனவும்



நறவுத் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவலிட்ட பைங்காற் பந்தர்ப்
புனல்தரும் இளமணல் நிறையப் பெய்ம்மின்
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉம் என்னைக்கு,
உழையோர் தன்னினும் பெருஞ்சாயலரே (புறம்)

இது தந்து நிறை பற்றிக் கண்டோர் கூறியது என்றவழி, யாண்டு நிகழ்வதென்றாற்கு வெட்சிக்கண் கரந்தையிடத்து எனவும்

சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி
பாரி வேள் பாற் பாடினை செலினே (புறம்-105)

இது விறலியாற்றுப்படை என்புழி யாண்டுநிகழ்வதென்றாற்கு பாடாண்டிணையுள் புகழ்ச்சியிடத்து எனவும் ஓர் எல்லையைக் கொண்டு நிற்றலாகும்

பொதுவாய் நிற்பனவும் முன்னும் பின்னும் வருவனவற்றான் ஓரிடத்தை வரைந்துணர்த்துமாகலின் 'இடன்' செய்யுட்கு உறுப்பாயிற்றென அறிக. இடம் எனினும் களம் எனினும் ஒக்கும்.

சூ. 515 : இறப்பே நிகழ்வே எதிர தென்னும்
திறத்தியல் மருங்கின் தெரிந்தன ருணரப்
பொருள் நிகழ் வுரைப்பது கால மாகும் (201)

க - து : காலம் என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது.

**உரை :** இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்னும் முத்திறத்தான் இரு வகைப் பொருள் பற்றிய திணை நிகழ்ச்சிகளும் இயலும் பாங்கினான் செய்யுட்கண் வரும் பொருள் நிகழ்வினது காலத்தைத் தெரிந்துணருமாறு உரைக்கப்பெறுவது காலமென்னும் உறுப்பாம்.

உய்த்துணருமாறின்றி விளங்க நிற்றல் வேண்டுமென்பார் தெரிந்தனர் உணர என்றார்.

எ - டு : எவ்வியிழந்த வறுமையாழ்ப் பாணர்ப்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழிய நெஞ்சே மனைமரத்து
எல்லுறு மௌவல் நாறும்
பல்லிருங்கூந்தல் யாரளோ நமக்கே (குறு-19)

EFEO_GUEST_JLC_02-091 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இது பன்முறையான் உணர்த்தியும் தலைவி ஊடல் தவிராவழித் தலைவன் இனைந்து கூறியதாகலின் ஊடல்நிகழ்வு இறந்த காலத்தது என்பது தெரிந்துணர நின்றது.

நள்ளென்றன்றே யாமம் சொல்லவிந்து
இனிதடங்கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சாதேனே (குறு-8)

இது களவின்கண் வரைபொருட்குப் பிரிந்த தலைவனை எண்ணி வருந்துந்தலைவி தோழி உறங்குதலை நோக்கிக் கூறியதாகலின் துஞ்சுதல் நிகழ்ச்சி நிகழ்காலத்ததெனத் தெரிந்துணர நின்றது.

அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோ ராயின்
உரவோர் உரவோராக
மடவமாக மடந்தை நாமே

இது தோழி தலைவனின் பிரிவு பற்றிக் கூறிய வழி தலைவி கூறியது. இதன்கண் பிரிதலாகிய நிகழ்ச்சி எதிர்காலத்தது எனத்தெரிந்துணர நின்றது. பிறவும் இவ்வாறே கண்டு கொள்க.

கூற்று நிகழ்த்தும் காலத்தை உணர்த்தாமல் பொருள் நிகழ் வினை உணர்த்தும் காலமே ஈண்டு உறுப்பெனப்பட்டது என்றறிக. மாலை முதலாய சிறுபொழுதும் கார் முதலாய பெரும் பொழுதும் திணை உணர்தற்குரிய உறுப்பாதலன்றிச் செய்யுளுக் குரிய உறுப்பாகா என்றறிக

**சூ. 516 : இது நனி பயக்கும் இதன்மா றென்னும்**
**தொகைநிலைக் கிளவி பயன எனப்படுமே (202)**

**க - து :** பயன் என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது.

**உரை :** இதன் காரணமாகப் பெரிதும் இது விளையும், என்னும் முடிவினை அறிய நிற்கும் கூற்றுக்கள் பயன் என்று கூறப்படும்.

பயனைக் கருதியன்றிச் சான்றோர் சொற்களை வழங்கா ராதலின் அச்சொற்றொடர் வாயிலாகக் கேட்போர்க்குத் தாம் கருதும் பயனைத் தோன்றச் செய்தல் இவ்உறுப்பாகும். அஃதாவது தலைவன் முதலாகக் கூற்று நிகழ்த்துவோர் சொற்களுக்குள் மறைந்து நிற்கும் பயனைக் கேட்போர் உணருமாறு கிளத்தல்.



எ - டு : செல்லாமை யுண்டேல் எமக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. [குறள்-]

இத்தோழிகூற்றுத் தலைவியின் ஆற்றாமை உணர்த்தல் பயனாக வந்தது.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு (குறள்)

இடித்துரைப்பாரை அரசன் உழையராகக் கொள்க என்பது இதன் பயனாம். ஏனையவும் இவ்வாறே வரும்.

**சூ. 517 : உய்த்துணர்வின்றித் தலைவரு பொருளான்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும் (203)**

**க - து :** 'மெய்ப்பாடு' என்னும் செய்யுளுறுப்பினது இலக்கணம் கூறுகிறது.

**உரை :** மேல், மெய்ப்பாட்டியலுள் எட்டாக விரித்துக் கூறிய மெய்ப்பாடுகள் ஒரு செய்யுட்கண் ஒன்றும் பலவும் வரும் வரினும் நுண்ணிதாக உய்த்துணருமாறன்றி அச்செய்யுட்கண் சிறப்பாக வரும் பொருளான் இது மெய்ப்பாடு என அப்பொருண்மை தோன்ற முடிந்து நிற்பது மெய்ப்பாடு என்னும் உறுப்பாகும்.

மெய்ப்பாடுகளைப்பற்றி மேல்விரித்துக் கூறப்பெற்றதனால் ஒரு செய்யுட்கண் பலவரினும் அவற்றுள் தலையாயதாக நிற்பதே உறுப்பாகச் சுட்டப் பெறும் என்பது கருத்து.

**சூ. 518 : எண்வகை இயல்நெறி பிழையா தாகி**
**முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே (204)**

**க - து :** மெய்ப்பாட்டியலுட் கூறப்பெற்ற இயல்பினதே அது என்கின்றது.

**உரை :** எட்டு வகையான் இலக்கணநெறி பிழையாமல் வருவனவாக மேல் மெய்ப்பாட்டியலுட் கூறப்பெற்ற முடிவுகளை யுடையதே அது. எ-டு மெய்பாட்டியலுட் கண்டு கொள்க.

**சூ. 519 : சொல்லொடும் பொருளொடும் முடிவுகொள் இயற்கை**
**புல்லிய கிளவி எச்ச மாகும (205)**

**க - து :** எச்சம் என்னும் செய்யுளுறுப் பாமாறு கூறுகின்றது.

**உரை :** சொல்லதிகாரத்துள் சொல்லெச்சமும் இசை (பொருள்) எச்சமும் இவ்வாறு முடியும் என்ற இலக்கணத்தைப் பொருந்திவரும் கிளவி எச்சமென்னும் உறுப்பாகும்,



EFEO_GUEST_JLC_02-092 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சொல்லதிகாரத்துக் கூறப்பெற்றவையே இவை, வேறு அல்ல என்பார் 'முடிவு கொள் இயற்கை' என்றார். ஆண்டுச் சொல்லிலக்கண நோக்கிற்கூறிய பத்துவகை எச்சங்களுள் இவ் இரண்டுமே செய்யுட்கு உறுப்பாகக்கொள்ளப் பெறுவனவாதலின் விதந்து கூறினார்.

எ - டு : "மருந்தெனின் மருந்தே வைப்பெனின்வைப்பே" (குறு-17) இச்செய்யுளுள் 'எமக்கு' என்னும் சொல் எச்சமாக நின்றது.

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றொர் உள்ளி
நறுமலர் நாணின கண். (குறள்-)

"பிரியேன் என்றுரைத்த சூளுரையைக் காவாமையின் அவர்பால் நிற்க வேண்டிய சிறுமை" அவரின் நீங்கி நம்கண் வர என்பது பொருள். இது குறிப்பெச்சம்.

இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து. (குறள்-)

கொடும் பகையைக் காலத்தோடு வெல்க என்பது குறிப்பெச்சம். பிறவும் இவ்வாறு செய்யுளின் பொருளை முடித்தற்குரியவனாக வருபவையெல்லாம் இவ்வுறுப்பாகக் கொள்க.

சூ. 520 : இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியதென்று
அவ்விடத் தவரவர்க்கு உரைப்பது முன்னம் (206)

க - து : 'முன்னம்' என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது.

உரை : எழுவகைத் திணைப் பொருளைப் பற்றி வரும் கரும நிகழ்ச்சிக்கண் வரும் கூற்றுமொழி, இவரிவர்க்குரியது என அவ்வவ்விடத்து அவரவர்க்குப் பொருந்த உரைப்பது முன்னம் என்னும் உறுப்பாகும்.

முன்னம்-சிந்தித்து உணரும் குறிப்பு. உரைப்பது, என்றது செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது. செய்யுள் செய்யும் புலவன் அவ்வவ் உறுப்பினரை அவ்வாறு உரைக்கச் செய்வது என்பது கருத்து.

எ - டு : "ஏஎ இஃதொத்தன்" என்னும் குறிஞ்சிக்கலியுள் வரும் தலைவன் தலைவியர் பெருந்திணையின் பாற்படுவர் என்பது தோன்ற அவர் உரை நிகழ்ந்தவாறு காண்க.

'என்னோற்றனை கொல்லோ" என்னும் மருதக்கலியுள் வரும் தலைவன் தலைவியர் ஏவல் மரபினராகிய அடியோர்



என்பது தோன்ற உரை நிகழ்ந்தவாறும் "யாரிவன் என்னை விலக்குவான்" என்னும் முல்லைக்கலியுள் வருபவர் வினைவல பாங்கினராகிய நிலமக்கள் என்பது தோன்ற உரைநிகழ்ந்தவாறும் "புரிவுண்ட புணர்ச்சியுள் புல்லாரா மாத்திரை" என்னும் நெய்தற்கலியுள் வரும் தலைமகள் கூற்றுப் பெருந்திணைக் குரியவை போலக் கூறினும் ஐந்திணைக்குரிய தலைவியே இவள் எனப் புலப்பட உரை நிகழ்ந்தவாறும் காண்க.

"நள்ளிவாழியோ நள்ளி, நள்ளென்" (புறம்149) என்னும் புறப்பாட்டு வரவு எமர் மறந்தனர் என்றமையான் பாணன் கூற்று என உணர நின்றவாறும் "மழைக்கணம் சேக்கும் மாமலைக் கிழவன்" (புறம்-131) என்னும் புறப்பாட்டு "குன்றம்பாடினகொல்லோ களிறுமிகவுடைய" என்றமையான் புலவர் கூற்று என உணர நின்றவாறும் காண்க. பிறவும் இவ்வாறே கண்டுகொள்க.

சூ. 521 : இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்குநெறி யின்றி
இதுவாகு இத்திணைக்கு உரிப்பொரு ளென்னாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப (207)

க - து : 'பொருள் வகை' என்னும் செய்யுளுறுப்புப் பற்றிய இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை : களவின்கண் இயற்கைப்புணர்ச்சி முதலியவற்றான் வரும் இன்பமும், ஒருவழித்தணத்தல் வருந்தொழிற்கருமை, வரை பொருட்பிரிவு முதலியவற்றான் வரும் இடும்பையும் கற்பின்கண் இல்வாழ்க்கை, ஊடலுணர்தல் முதலியவற்றைப் பொருந்திவரும் பிரிவில்லா உடனுறைவும், ஓதல், பகை முதலியவற்றான் நிகழும் பிரிவும், விருந்தோம்பல் அறப்புறங்காவல் முதலிய ஒழுக்கமும், புறத்திணைகளுள் வெட்சி முதலியவற்றான் வரும் இன்பமும், இடும்பையும், பாடாணும் வாகையும் பற்றி நிகழும் ஒழுக்கமும், என்று சொல்லப்பெற்ற அவ்வொழுகலாறுகள், இழுக்குறும் முறைமையின்றிக் கைக்கிளை முதலாகிய பதினான்கு திணை கட்கும் ஓதப்பெற்ற மரபினான் இவ்வொழுக்கம் (உரிப்பொருள்) இத்திணைக்கே உரியது என வலிந்து கூற நில்லாமல் அவ்வொழுக லாறுகள் பொதுவாக நிற்றல் பொருள்வகை எனக் கூறுவர் புலவர்.

என்றது, மேற்கூறிய இன்பம் முதலாய ஒழுகலாறுகள் நானில மக்கள் யாவருக்கும் உரியவையாதலின்

முதல்கரு உரிப்பொருள் என்று மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை (அகத்திணை-3)

EFEO_GUEST_JLC_02-093 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எனத் திணையை வரையறை செய்தற்காக ஓதப்பெற்ற இலக்கணத்தால், முதற்பொருள் பற்றியும், கருப்பொருள் பற்றியும், திணை கூறுங்கால் அவ்வத்திணைக்கட்கு ஏற்கும் என ஓதப்பெற்ற உரிப்பொருளே ஆண்டு வர வேண்டுமென்பதில்லை. ஆண்டுஇவை பொதுவாய் நிற்கும் என்றவாறு.

அகத்திணையியலுள் ஓதப்பெற்ற புணர்தல் முதலாய உரிப் பொருள்கள் குறிஞ்சி முதலாய திணைகட்கு உரியவை என்று கூறியதன்றி இதுவே இத்திணைக்கண் வரல் வேண்டுமென்னும் யாப்புறவில்லை. அவை பொதுவாயும் வரும் என்பதும் அவ்வாறு வருதல் பொருள்வகை என்பதும் கருத்து. உரிப் பொருள் காரணமாகத் திணை திரிதல் இல்லை என்பதனை.

திணைமயக்குறுதலும் கடிநிலையிலவே
நிலன்ஒருங்கு மயங்குத லில்லென மொழிப (அகத்-14)

என்றதனானும் உணர்க.

எ - டு : யானே ஈண்டை யேனே என்நலனே
ஏனல் காவலர் கவண் ஒலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு ஆண்டொழிந் தன்றே (குறுந்-54)

இப்பாடல் முதற்பொருளானும் கருப்பொருளானும் குறிஞ்சித் திணையாய் நின்று பிரிவாகிய உரிப்பொருளைக் கொண்டு நின்றது வரைபொருட் பிரிவாகிய பாலையாதலின் அவ் வொழுக்கம் இழுக்கு நெறியின்றியமைந்தவாறு காண்க.

அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே. (குறு-49)

இப்பாடல் முதற்பொருளானும் கருப்பொருளானும் நெய்த லாய் நின்று உரிப்பொருள் பொதுவாக நின்றது. ஊடலின்றித் தலை மகன் பிரிவாற்றாமை என்னும் இரக்கம் தோன்றக் கூறினமையின் இழுக்குநெறியின்றி அமைந்தவாறு காண்க.

உதுக்காண் அதுவே இதுவெனமொழிகோ
நோன்சினை இருந்த இருந்தோட்டுப் புள்ளினம்
தாம்புணர்ந் தமையின் பிரிந்தோர் உள்ளத்
தீங்குரல் அகவக் கேட்டும், நீங்கிய



ஏதி லாளர் இவண்வரின், போதின்
பொம்மல் ஓதியும் புனையல்
எம்முந் தொடாஅல் என்குவெம் மன்னே (குறுந் 191)

இப்பாடல் கருப்பொருளான் முல்லைத்திணையாய் நின்று ஊடல் என்னும் உரிப்பொருள் தோன்ற நின்றவாறும், பிரிவாற்றாமை தோன்ற நின்றவாறும்காண்க. "ஓதியும் புனையல் எம்மும் தொடாஅல் என்குவெம்" என்றதனால் அதுவரை ஆற்றியிருப்பேன் என்பது தோன்ற நின்றமையின் இழுக்கு நெறியின்றி அமைந்தவாறு காண்க பிறவும் இவ்வாறே ஓர்ந்துகொள்க. ஏனைய விளக்கம் உரிப்மொருளல்லன மயங்கவும் பெறுமே (அகத்-15) என்னும் சூத்திர உரையுட் கண்டு கொள்க.

சூ. 522 : அவ்வம் மாக்களும் விலங்கு மன்றிப்
பிறஅவண் வரினும் திறவதின் நாடித்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறந் தானே துறையெனப் படுமே (208)

க - து : 'துறை' என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது

உரை : நடுவணைந்திணைக்கு உரிமைப்படுத்தோதிய நில மக்களும், விலங்கும் பிறவும் செய்யுட்கண் கருப்பொருளாய்ப் பொதுப்பட வரினும், அச்செய்யுட்குரிய உரிப்பெருளைத் திறமுற ஆராய்ந்து அவ்வத்திணைக்குரிய இலக்கணத்தான் முடிக்கப் பெறின் அங்ஙனம் முடியும் யாப்பினது திறனே துறை என்று கூறப்படும்.

"பிற" என்றதனான் ஊரும் நீரும் பூவும் மாவும் பிறவும் கொள்க. வரினும் என்னும் உம்மை வாராமை தோன்ற நின்றது

அஃதாவது மேற்கூறிய 'பொருள் வகை' என்னும் உறுப்பு அமையுங்கால் அது திணைப் பொருளை மயக்குமளவிற்காகாது என்பதும், பொருள்நிகழ்ச்சியால் இதன் உரிப்பொருள் இதுவென உணரும் வண்ணம் மரபிற் பிறழாமல் அமைத்தலே துறை" என்பதும் இதன் கருத்தாகும்.

எ - டு : "ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்" என்னும் குறிஞ்சிக் கலியுள் வரும் தலைவியை "கொழுநிழல் ஞாழல் முதிரிணர் கொண்டு, கழும முடித்த கண்கூடு கூழை" என நெய்தல் நிலத்துத் தலைமகள் போலவும் "ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்" என அவளை மருதநிலத்துக் கண்டான் போலவும்

"இவளைச் சொல்லாடிக் காண்பென் தகைத்து" என முல்லை நிலத்து மகன் போலவும் கூற்று நிகழ்த்திய தலைவன் நிறையழி கொல்காயானை நீர்க்குவிட்டாங்குப் பறையறைந் தல்லது செல்லற்க என்னா இறையே தவறுடையான். (கலி- ) என முடித்தலின் இது சொல்லெதிர் பெறா அன்சொல்லியின் புறலாகிய கைக்கிளையின்பாற்பட்டுக் குறிஞ்சித்திணைக்குரிய பொருளாய்த் துறைகொள அமைந்தவாறு காண்க.

**சூ. 523 :** அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்றுபொருள் முடியத் தந்தனர் உரைத்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின (209)

**க - து :** 'மாட்டு' என்னும் செய்யுள் உறுப்பாமாறு கூறுகின்றது.

**உரை :** ஒரு தொடர்நிலைச் செய்யுட்கண் பொருளின் தொடர்பை உணர்த்தும் சொற்களும் சொற்றொடர்களும் சேய்மைத்தாக நிற்பினும் அண்மைத்தாக அமையினும் அப்பொருள் இயன்று முடியுமாறு அவற்றைக் கூட்டி உணர்த்துதலைப் பாட்டியல் வழக்கின்கண் 'மாட்டு' எனக் கூறுவர் புலவர். கூட்டுதல் - கோத்தமைத்தல், இயைத்தல்.

தொடர்நிலைச் செய்யுளுள் இடையே வரும் வண்ணனைகளையும் இடைப்பிறவரலாக வருவனவற்றையும் ஓர்ந்து பொருட்டொடர்பைக் காட்டும் சொற்றொடரை ஆங்காங்கே இயைபுபடுத்துவது இவ்வுறுப்பாகும்

பொருள்கோள்வேறு-'மாட்டு' என்னும் இவ்வுறுப்பு வேறு. சுண்ணம் முதலாகிய பொருள்கோள் சொற்களைத் துணித்துப் பொருள்பொருந்தக் கூட்டுவது. மாட்டென்பது புலவரின் கருத்துத் தோன்ற இயன்ற பொருளை இணைத்துக் காட்டுவதாகும்.

இவ்வுறுப்பு எல்லாச் செய்யுட்கும் வரல் வேண்டுமென்னும் யாப்புறவில்லை. இவ்வுறுப்புப் பெற்றதனையே பாட்டு என்பது பண்டையோர் மரபு. திருமுறுகாற்றுப்படை முதலியவற்றைப் பத்துப்பாட்டு என்றதும் இம்மரபு பற்றியேயாம். இதனை, ஆசிரியர் "பாட்டியல் வழக்கு" என்றதனான் அறியலாம்.

**எ - டு :** மால்வரைநிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிறைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந் தியற்றாககவின் பெறுவனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழை



சேணிகத்து விளங்கும் செயிர்தீர் மேனி
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளை தூ விதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதழ்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டி
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைத்த பிண்டி ஒண்டளிர்
நுண்பூ ணாகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுறிஞ்சிய பூங்கேழ்த்தேய்வை
தேம்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலை கொட்டி, விரிமலர்
வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப்பாடி
சூரர மகளிர் ஆடும் சோலை,
மந்தியும் அறியா மரம்பயில் அடுக்கத்துச்
சுரும்பும் மூசாச்சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்"
(முருகு 12-44)

இங்ஙனம் முறுக்காற்றுப்படையுள் வரும் இம்முப்பத்து மூன்றடிகளுள் புலவர் அமைத்துள்ள பொருளை சுவைப்படக் காணுங்கால் சேணுயர் வெற்பின், சோலை, அடுக்கத்துக் காந்தள், மிலைந்த சென்னியன் என்றும் கிண்கிணி கவைஇய சீறடி தோள் அல்குல்-கவின் பெறு வனப்பின் சூரரமகளிர் என்றும் செயிர்தீர் மேனி, திருநுதல் துகளறுமுச்சி கவின்பெறு சூரரமகளிர் என்றும் செண்பகம் செறீஇ, அட்டி வளைஇ, திளைப்பக் கொட்டி அப்பிய வனப்பின் சூரர மகளிர் ஆடும் சோலை என்றும் சேய்த்தும் அணித்துமாகச் சொற்களை மாட்டிப் பொருள் கொள வைத்துள்ளமையையும் 'வனப்பினை மீட்டும் மீட்டும் மறித்துக் கூட்டிப் பொருள் கொள்ளுமாறு வைத்துள்ளமையையும் காண்க.

இதற்குப் பேராசிரியர் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளமுறை பொருள்கோள் என்பதற்கு ஒத்ததாக உள்ளமைகாண்க.

**சூ. 524 :** மாட்டும் எச்சமும் நாட்டலின்றி
உடனிலை மொழியினும் தொடர்நிலைபெறுமே (210)

**க - து :** மாட்டு, எச்சம், என்னும் உறுப்புக்கள் பற்றித் தொடர்நிலைச் செய்யுள்கட்கொரு புறனடை கூறுகின்றது

**உரை ;** மேற்கூறிய மாட்டும், எச்சமும் ஆகிய அவ் அவ் உறுப்புகளின்றி ஒனறன்பின் ஒன்றாகப் பொருள் முடித்து செல்லும் முறைமையாற் செய்யினும் அவை தொடர்நிலைச் செய்யுள் என நிலைபெறும்

இதனான் அவ்இரண்டு உறுப்புக்களும் இன்றிவரினும் தொடர்நிலைச் செய்யுள் என்று கூறுதற்கிழுக்கில்லை என்பதும் அவை புலவோர் தம் சதுரப்பாடு தோன்ற நாட்டப்பெறும் உறுப்புக்கள் என்பதும் புலப்படும்

சிலம்புள்ளும் பெருங்கதையுள்ளும் மாட்டின்றிப் பலகாதைகள் அஃமந்துள்ளமை காண்க. நற்றிணை முதலாய தொகைப் பாடல்களுள் பல எச்சமென்னும் உறுப்பின்றி வந்துள்ளமை காண்க. மாட்டும் எச்சமும் என இடமுதலாக எண்ணிக் கூறியதன்றித் தலை தடுமாற்றாகக் கூறவில்லை என்றுணர்க.

**சூ. 525 : வண்ணந் தானே நாலைந் தென்ப**

**க - து :** இது முதலாக வண்ணம் என்னும் செய்யுளுறுப்புப் பற்றிய இலக்கணங் கூறுகின்றார். இச்சூத்திரம் வண்ணத்தின் தொகையா மாறு கூறுகின்றது.

**பொருள் :** வண்ணம் எனச் சிறப்பித்துச் சொல்லப்பெறுவன இருபஃது என்று கூறுவர்.

பிறவாறும் வகுத்துக் கூறுவார் உளர் என்பது தோன்ற இருபஃது என்னாது "நாலைந்து" என்றார். வண்ணம்-ஓசை நடை.

இசைநாலுள், பாலைத்திரிபுகளுள் குறிப்பிட்டபண் அமையுமாறு செய்யும் உறுப்பினைத் திறம் என்ப. அவ்வாறே இயற்றமிழுள் அமையும் ஓசைநடையை வண்ணம் எனல் மரபு. வண்ணம் என்னும் சொல்லே அதன் இலக்கணத்தைப் புலப் படுத்து நின்றது.



**சூ. 526 : அவைதாம்,**
பாஅ வண்ணம் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்
எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம் முடுகுவண்ணமென்று
ஆங்கென மொழிப அறிந்திசி னோரே (212)

**க - து :** மேற்கூறிய வண்ணம் இருபஃதின் பெயரும் முறையும் கூறுகின்றது. 'என்று' என்பது எண்ணிடைச் சொல்.

**உரை :** இருபஃதெனப் பெற்ற அவ்வண்ணங்கள்தாம் பாவண்ணமும் ................. முடுகுவண்ணமும் என எடுத்துக் கூறுவர் வண்ணத்தியல்பினை அறிந்த புலவர். ஆங்கு அசை.

இவற்றின் இயல்புகளைப் பின்னர் முறையாகக் கூறுவார். இவ்வண்ணங்கள் சீர்பற்றியும் எழுத்துப் பற்றியும் தொடை பற்றியும் இசைபற்றியும் சொல்பற்றியும் வருதலின் சொற்சீரடி முதலாக எழுசீரடியளவும் எல்லா அடிக்கண்ணும் கொள்ளப்பெறும் நாற்சீரடிக்கண் வருவன சிறப்புடையவாகும். தொடை பற்றி வரும் வண்ணம் நாற்சீரடிக்கண் கொள்ளப்படும்.

மற்று இவ்வணங்கள் ஓரடியை எல்லையாகக் கொண்டு வகுக்கப்படுதலின் ஒரு செய்யுளின்கண் ஒரே வண்ணம் வரல் வேண்டுமென்னும் யாப்புறவில்லை வரின் சிறப்புடையதாகும்.

**சூ. 527 :** அவற்றுள
பாஅ வண்ணம்
சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும் (213)

**க - து :** பாவண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

**உரை:** மேல் நிரல்படுத்திய இருபது வண்ணங்களுள் பாவண்ணம் சொற்சீரடிகளை உடையதாகி இலக்கண நூலின்கண் பயின்று வரும்.

நூற்பாற் பயிலும் எனவே பிற செய்யுட்கண் அருகிவரும் எனக்கொள்க. பாவுதல் = பரவி நிற்றல்.



EFEO_GUEST_JLC_02-096 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எ - டு : அவற்றுள்; அஇஉ
எஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓரளபிசைக்குங் குற்றெழுத்தென்ப. (எழுத்-3)
கடாஅம் சென்னிய கடுங்கண்யானை
இனம் பரந்தபுலம் வளம்பரப் பறியா
நின்படைஞர்
சேர்ந்த மன்றம் கழுதை போகி (பதிற்-25) எனவரும்.

இவ்வண்ணம் சீரைப் பற்றித் தோன்றும்.

**சூ. 528 : தாஅ வண்ணம்**
**இடையிட்டு வந்த எதுகைத் தாகும். (214)**

க - து : தாஅ வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : தாஅவண்ணமாவது ஒருசீர் இடையிட்ட எதுகையினையுடையதாய் வரும்.

எ - டு : யாரினும் இனியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனில் இழைஇயர் (குறுந்-85)

எனவரும் இவ்வண்ணம் தொடைநிலை பற்றி வரும்.

**சூ. 529 : வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே (215)**

க - து : வல்லிசை வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : வல்லிசை வண்ணமாவது வல்லெழுத்துக்கள் பிறவற்றினும் மிக்கு வரும்.

எ - டு : சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇ
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை (குறுந்-142)

**சூ. 530 : மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே 216**

க - து : மெல்லிசை வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : மெல்லிசை வண்ணமாவது மெல்லெழுத்துக்கள் பிறவற்றினும் மிக்கு வரும்.

எ - டு : மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண் டனகொல்
வண்டின் மாண்குணம் மகிழ்நன்கொண் டான்கொல்
(ஐங்-90)

**சூ. 531 : இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே (217)**

க - து : இயைபு வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : இயைபு வண்ணமாவது இடையெழுத்துக்கள் பிறவற்றினும் மிக்குவரும்.



எ - டு : ஓரூர் வாழினும் சேரி வாரார்
சேரி வரினும் ஆரமுயங்கார் (குறு-231)

என வரும். இம்மூன்றும் எழுத்துப் பற்றியதாய் வரும்.

**சூ. 532 : அளபெடை வண்ணம் அளபெடை பயிலும். (218)**

க - து : அளபெடை வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : அளபெடை வண்ணமாவது இருவகை அளபெடைகளும் பயின்று வரும்.

எ - டு : தேஎர் பரந்தபுலம் ஏஎர் பரவா (பதிற்-26)
பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்றுநுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள் (கலி-36)
சிறாஅஅர் துடியர் பாடுவல் மகாஅஅர் (புறம்-291)
கண்ண் டண்ண்ணெனக் கண்டும் கேட்டும்.

எனவரும். இவ்வண்ணம் தொடை பற்றியதாய் வரும். எழுத்துப் பற்றியதெனினும் ஒக்குமாதலின் மிகும் என்னாது 'பயிலும்' என்றார்.

**சூ. 533 : நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்219**

க - து : நெடுஞ்சீர் வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : நெடுஞ்சீர் வண்ணமாவது நெட்டெழுத்துப் பயின்று வரும். சீர் என்றது தாள அறுதியாகிய ஓசையை. குறுஞ்சீர் என்பதற்கும் இது ஒக்கும்.

எ - டு : வைகா வைகல் வைகவும் வாரார்
எல்லா எல்லை எல்லவும் தோன்றார் (குறுந்-285)

**சூ. 534 : குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும் (220)**

க - து : குறுஞ்சீர் வண்ணத்தின் இயல்பாமாறு கூறுகின்றது.

உரை : குறுஞ்சீர் வண்ணமாவது குற்றெழுத்துப் பயின்று வரும்.

எ - டு : இழையணிந் தியல்வரும் கொடுஞ்சி நெடுந்தேர்
வரைமருள் நெடுமணல் தவிர்ந்தனி ரசைஇ
(குறுந்-345)

**சூ. 535 : சித்திர வண்ணம்**
**நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே (221)**

க - து : சித்திர வண்ணத்தின் இயல்பு கூறுகின்றது.

**உரை :** சித்திர வண்ணமாவது நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் ஒத்த அளவினவாய் வரும். நேர்தல்-ஒத்தல்.

**எ - டு :** ''நோமென் நெஞ்சே நோமென் நெஞ்சே'' (குறுந்202)
''வேம்பின் பைங்காயென் தோழி தரினே (குறு-196)

**சூ. 536 : நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும் (222)**

**க - து :** நலிபு வண்ண மாமாறு கூறுகின்றது.

**உரை :** நலிபு வண்ணமாவது ஆய்தப்புள்ளிஎழுத்துப் பயின்று வரும்.

**எ - டு :** அஃகாமை செல்வத்திற்கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப்பொருள் (குறள்.)
நலிதல் தேய்தல் இவைநான்கும் எழுத்துப் பற்றிய வண்ணம்.

**சூ. 537 : அகப்பாட்டு வண்ணம்**
**முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே (223)**

**க - து :** அகப்பாட்டுவண்ண மாமாறு கூறுகின்றது.

**உரை :** அகப்பாட்டு வண்ணமாவது சீரமைப்பினான் வண்ணத்து ஓசை நிறைவு பெறாததுபோல் நின்று, முடிந்ததன் மேலதாகி வரும். ''முடியாத்தன்மை'' ''முடிந்தது'' என்பவை ஓசையியல்பினைச் சுட்டி நின்றன. 'இன்' உவமப் பொருட்டாய் நின்றது.

**எ - டு :** ''ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து''
என்னும் கலிப்பாவின் சுரிதகத்தின் ஈற்றடி இறுதிச்சீர்
பாணியும் தூக்கும் சீரும் என்றிவை
மாணிழை அரிவை காப்ப
ஆணமில் பொருளெமக் கமர்ந்தனை ஆடி

எனத் தேமாவாய் அகவல் தூக்காகிய ஓசை குறைந்து எச்சமாக நிற்பதுபோல் தோன்றினும் அசையும் சீரும் இசையோடு சேர்த்தி (சூ-10) என்றதனான் ஈகாரத்தின் இனமாகிய இகரத்தை ஆடீஎன நீட்டி இசைக்க முடிந்து பொருளும் முற்றி நிற்றல் காண்க. அகப்பாடு = உள்ளடங்கல்.

**சூ. 538 : புறப்பாட்டுவண்ணம்**
**முடிந்தது போன்று முடியா தாகும் (224)**

**க - து :** புறப்பாட்டு வண்ணத்தின் இயல்பாமாறு கூறுன்கின்றது.

**உரை :** புறப்பாட்டு வண்ணமாவது சீரமைப்பினான் வண்ணத்து ஓசை முடிவுற்றது போல நின்று முடியாத இயல்பிற்றாகும்.



ஈண்டும் 'முடிந்தது' 'முடியாது' என்பவை ஓசை பற்றியன வாகும்.

**எ - டு :** ஆறறி யந்தனர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்
கூறாமல் குறித்தன்மேற் செல்லுங் கடுங்களி
மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய்! கேளினி

என்னும் இத்தரவின்கண் ஈற்றடிநாற்சீராய் நிறைந்து வண்ணத்து ஓசை முடிந்தது போல நிற்கின்றது. முறையாக நோக்கின் 'கேளினி' என்னும் இறுதிச்சீர் 'கேள்' என்ற அளவியல் பொருள் முடிந்து 'இனி' என்பது பின்வரும் தாழிசையொடு தொடர்வதைச் காணலாம். அஃதாவது

எண்கையாய் கேள்! என்பது விளி 'இனி' என்னும் பொழுதை உணர்த்தும் சொல்.

இனிப், படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி ஆடுங்கால் கோடுயர் அகலல்குல்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ?

எனத் தாழிசையொடு தொடர்ந்து '' இனித் தருவாளோ '' என வினாவொடு நின்றது. எனவே சீரினது ஓசை முடிந்தது போன்று அமைந்து நிற்பதை அறியலாம். புறப்பாடுவெளிப்படல் அஃதாவது நீங்கிச் செல்லுதல்.

இவை இரண்டற்கும் உரையாசிரியன்மார் பாடற்கருத்துச் சொற்களால் முடிந்தது போலவும் முடியாதது போலவும் நிற்கும் என விளக்கந் தந்தனர். அது வண்ணத்திற்குரிய இலக்கணமாகாமை அறிக.

**சூ 539 : ஒழுகும் வண்ணம் ஓசையின் ஒழுகும் (225)**

**க - து :** ஒழுகுவண்ணமாமாறு கூறுகின்றது.

**உரை :** ஒழுகுவண்ணமாவது ஓடை நீர்போல இடையறாது ஓசை ஒழுகிச் செல்லும்.

**எ - டு :** பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே

என வரும். தாழிசை உறுப்புப் பெரும்பான்மையும் ஒழுகுவண்ணத்தான் நிகழும். இவை மூன்றும் ஓசை பற்றியதாய் வரும்.

**சூ. 540 : ஒரூஉ வண்ணம் ஒரூஉத்தொடை தொடுக்கும் (226)**

**க - து :** ஒரூஉ வண்ணமாமாறு கூறுகின்றது.

**உரை :** ஒரூஉ வண்ணமாவது ஒரூஉத்தொடையாகத் தொடைபட்டு வரும். ஒரூஉத் தொடையாவது முதற்சீரும் நான்காம் சீரும் மோனை முதலாயவற்றான் பொருந்தி நிற்பது.

**எ - டு :** " இவரியார் என்குவை யாயி னிவரே
ஊருட னிரலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசை " (புறம்-201)

என வரும்.

இவ் வண்ணம் தொடை பற்றியதாக நிகழும். ஒரீஇத் தொடுக்கும் எனப் பாடங் கொள்வார் பேராசிரியர்.

**சூ. 541 : எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும (227)**

**க - து :** எண்ணும் வண்ணம் ஆமாறு கூறுகின்றது

**உரை :** எண்ணுவண்ணமாவது எண்ணுப் பெயராகவும் எண்ணப்படும் பெயராகவும் எண்ணுப் பயின்று வரும்.

**எ - டு :** ஐந்திருள் அறநீக்கி நான்கினுள் துடைத்துத்தம்
ஒன்றாற்றுப் படுத்தநின் ஆர்வலர் தொழுதேத்தி
(பரிபா - 4)

பாழ்எனக் கால் எனப் பாகென ஒன்றென
இரண்டென மூன்றென நான்கென ஐந்தென
ஆறென ஏழென எட்டெனத் தொன்றென
நால்வகை ஊழியின் நவிற்றும் சிறப்பினை (பரி-3)

எனவரும். இவை எண்ணுப்பெயர் பயின்று வந்தன
நுதலும் தோளும் திதலை யல்குலும்
வண்ணமும் வனப்பும் வரியும் வாட (அக- 119)

எனவும்

நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத்தனையை (பதிற் - 14)

எனவும் வரும். இவை எண்ணப்படும் பெயர் பயின்று வந்தன. இவ்வண்ணம் சொல்லைப் பற்றியதாய் வரும். எண்ணப்பெறும் சொற்கள்மாட் டமைந்த ஓசைவிகற்பங்களே இவ்வண்ணமாகும். அகைப்பு வண்ணத்திற்கும் இவ்விளக்கம் ஒக்கும்.

**சூ. 542 : அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும் (228)**

**க - து :** அகைப்பு வண்ணம் ஆமாறு கூறுகின்றது.



**உரை :** அகைப்பு வண்ணமாவது ஓசையானது இடையிடையே அறுத்தறுத்து நடக்கும்.

**எ - டு :** எல்லாகியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழும் நாளே (புறம்-232) எனவும்
செங்கட் காரி கருங்கண் வெள்ளை
பொன்கட் கச்சைக் கருங்கண் மாஅல் (பரி-3) எனவும்
வரும். இவ்வண்ணமும் சொல்லைப் பற்றியதாய் வரும்.

**சூ . 543 : தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும் (229)**

**க - து :** தூங்கல் வண்ணம் ஆமாறு கூறுகின்றது.

**உரை :** தூங்கல் வண்ணமாவது வஞ்சி ஓசைமிக்கு வரும்.

**எ - டு :** அரிமயிர்த் திரள்முன்கை
வாலிழை மடமங்கையர்
வரிமணல் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து (புறம்-11)

எனவரும். இவ்வண்ணம் இருசீரடி முச்சீரடிகளின்கண் வருமென்பார். வஞ்சி பயிலும் என்றார். வஞ்சியென்றது வஞ்சி அடிகளை. இவ்வண்ணம் ஓசை பற்றியதாய் வரும்.

**சூ . 244 : ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லின் சொல்லியது சிறக்கும் (230)**

**க - து :** ஏந்தல் வண்ணம் ஆமாறு கூறுகின்றது.

**உரை :** ஏந்தல் வண்ணமாவது சொல்லிய சொல்லானே, சொல்லப்பட்ட அடியின்கண் சொல்லியது சிறந்து நிற்கும்

**எ - டு :** வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்

நாற்சீரினும் சொல் ஒத்து வருதல் இரட்டைத் தொடையாகலின் இது சிறிது வேறுபட்டு வருமெனக் கொள்க.

இவ்வண்ணம் சொல்லைப் பற்றியதாய் வரும். ஓசையும் ஒத்து வருதலின் வண்ணமாதற் குரியதாயிற்று

**சூ . 545 : உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்**

**க - து :** உருட்டு வண்ணம் ஆமாறு கூறுகின்றது.

**உரை :** உருட்டு வண்ணமாவது அராகமாய் நாற்சீரடிக்கண் தொடைபெற்று நடக்கும்.

EFEO_GUEST_JLC_02-099 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எ - டு : உருமுரறு கருவிய பெருமழை தலைஇய (அகம் 158)
எனவரும்.

**சூ. 546 : முடுகுவண்ணம்**
**அடியிறந் தொழுகி அதனோ ரற்றே (232)**

க - து : முடுகுவண்ணமாமாறு கூறுகின்றது.

உரை : முடுகுவண்ணமாவது நாற்சீரடியின் மிக்கு ஒழுகி மேற்கூறிய அராகத்தொடு ஒத்ததாகி வரும்.

எ - டு : நெறியறி செறிகுறி புரிதரி பறியா அறிவனை முந்துறீஇ
எனவரும். (கலி. 39)

இதனான் நாற்சீரடிக்கண் முடுகிவரின் அது உருட்டு வண்ணமெண்பதும் அடியிறந்து முடுகிவரின் அது முடுகுவண்ணம் என்பதும் புலனாகும். இவை இரண்டும் ஓசை பற்றியதாய் வரும்.

**சூ. 547 : வண்ணந்தானே அவையென மொழிப (233)**

க - து : வண்ணத்தின் தொகையை வரையறுத்துக் கூறுகின்றது.

உரை : (புலனெறி வழக்காகி வரும்) வண்ணங்கள்தாம் மேற்கூறிய அவையே என்று கூறுவர் புலவர்.

முன்னர் ''வண்ணந்தானே நாலைந்தென்ப'' எனக் கூறியதனான் இது வேண்டாகூறலாகாதோ எனின்? ஆகாது, என்னை.

தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும் என்று கூறியவதனான் ஏனைய பாக்களின் ஓசையாற் பிறப்பனவற்றையும் வண்ணமாகக் கோடல் ஆமோ எனவும் பொழிப்புத்தொடையும். ஒருஉத் தொடையும் பற்றி வண்ணங்கூறியவதனான் பிற தொடைபற்றியும் வண்ணம் கோடலாமோ எனவும் தோன்றும் ஐயத்தை நீக்கவும், நல்லிசைப் புலவோர் கொண்ட வண்ணம் இவையே என வலியுறுத்தவும் கூறினாராகலின் என்க.

இனி உறுப்புப் பற்றி ஓதிய முதல் சூத்திரத்துள், ''பொருந்தக் கூறிய எட்டு'' என பிரித்துக் கூறிய அம்மை முதலியவற்றின் இயல்பினை கூறுவார்.

முகம் மார்பு வயிறு கை கால் முதலிய உறுப்புக்களான் அமைந்ததொறு வடிவம் ஆடை அணி முதலியவற்றாற் புணையப் பெறின் அதன்கண் வெளிப்படும் பொலிவு பல்வேறு



திறப்படத் தோன்றுவது போல மாத்திரை முதலாகிய உறுப்புக்களானமைந்த செய்யுட்கள் அம்மை முதலாகிய உறுப்புக்கள் அமைந்து பொலிவு செய்தலின் இவ் எட்டனையும் பிரித்துக் கூறினார். இவற்றை வனப்பென வழங்குவர் இடைக்காலத்தார்.

பேராசிரியர் வனப்பென்பதை ஆசிரியர் அமைத்துக் கூறியதாகக் கருதி ''வனப்பியல்தானே வகுக்குங்காலை'' என ஓர் அடியைப் பாடமாகச் சேர்த்து உரை வரைந்துள்ளார். இளம்பூரணத்திலும் நச்சினார்க்கினியத்திலும் இத்தொடர் காணப்படவில்லை. தொகைச் சூத்திரத்தின் கண்ணும், இவை பற்றிய இலக்கணச் சூத்திரங்களிடத்தும் 'வனப்பு' என்னும் சொல் காணப் பெறவில்லை. ஆதலின் பேராசிரியர் பாடம் ஆய்தற்குரியது.

அது நிற்க. தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கையும் செய்யுளையும், செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல்களையும் கண்டு போக்கறுபனுவல் செய்த இவ் ஆசிரியர் காலத்து வழங்கிய இலக்கியங்கள் யாவும் மறைந்துவிட்டமையின் செய்யுளியலுள் ஆசிரியர் கூறும் இலக்கண விதிகளைச் சில இடங்களில் வரையறுத்துணர்தற்கு இயலவில்லை. இடைக்கால இலக்கணங்கள் யாவும் தொல்காப்பிய நெறிக்கு வேறுபட்டனவாய் உள்ளமையின் அவற்றாலும் பயன் கோடற்கியலவில்லை.

எனவே. அம்மை முதலாய இவ் எட்டு உறுப்புக்களையும் பற்றிய உரை விளக்கம் இற்றைக்குச் சங்கச் செய்யுட்கள் என வழங்கும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகியவற்றையும் பதினெண்கீழ் கணக்கினுள் திருக்குறள் நாலடியார் முதலியவற்றையும் உரையாசிரியன்மார் குறிப்புக்களையும் துணையாகக் கொண்டு வரையப்படுகின்றது. இடைக்காலத்தில் வழங்கிய மரபு கருதி இவ்வுரையுள் இவை வனப்பென்னும் பெயரால் விளக்கப் பெறுகின்றன.

**சூ. 548 : சின்மென் மொழியாற் சீர்புனைந்தியாப்பின்**
**அம்மை தானே அடிநிமிர் பின்றே (234)**

க - து : முறையானே 'அம்மை' என்னும் உறுப்பினது இலக்கணங் கூறுகின்றது.

உரை : வழக்குப் பற்றி நிகழும் எளிய சொற்களால் சீர்களைத் தொகுத்து அடிகள் பல்காமற் சிலவாக யாத்துச் செய்யின் அஃது அம்மை என்னும் வனப்புறுப்பாகும்.



EFEO_GUEST_JLC_02-100 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பின்வரும் அழகென்னும் வனப்புச் செய்யுண்மொழியான் யாக்கப்பெறுவது என்பதனான் சின்மொழி என்பது வழக்குச் சொல் என்பது பெறப்படும். சின்மையாவது மென்மை. மென்மை எளிமையைக் குறிக்கும். அம்மையாவது செறிவு, ஈண்டு அது சுருக்கத்தை உணர்த்தி நின்றது. இச் சுருக்கத்தை இரத்தினச் சுருக்கம் என்பது போலக் கொள்க அம்-அம்மு அமுங்குதல் என்பவை செறிதல் முதலாய பொருள்படுமாறு காண்க.

இஃது அடி வரையறையுடைய பாக்களுள் நிறைந்து செறிந்த கருத்துக்களையுடையதாய்க் குறைந்த அடிகளான் வரும்.

எ - டு : இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்ந் தக. என்றாங்குவரும்

இவ்வனப்புப் பெரும்பான்மையும் தனிச்செய்யுளின் கண்ணே வரும். இலக்கண நூற்பாக்கள் இவ்வனப்பின்பாற்படும்.

சூ. 549 : செய்யுள் மொழியாற் சீர்புனைந்து யாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே (235)

க - து : அழகென்னும் உறுப்பின் இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை : நால்வகைச் செய்யுளீட்டச் சொற்களான் தொடை நயம்படச் சீர்களைப் புனைந்து யாப்பின், அவ்வகை அழகென்னும் வனப்புறுப்பு என்று சொல்லப்படும். செய்யுள் மொழியென்றதனான் திரிசொற்கள் பயின்று வருமெனக் கொள்க. சீர்புனைந்து என்பதனான் வண்ணங்கள் சிறந்து வரும் எனக்கொள்க.

இது தனிச் செய்யுள் தொடர்நிலைச் செய்யுள் இருவகைக் கண்ணும் பயின்று வரும்.

எ - டு : குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந் தீயக்
கண்களி பெறுஉம் கவின்பெறு காலை
எல்வளை ஞெகிழ்த்தோர்க் கல்லல் உறீஇச்
சென்ற நெஞ்சம் செய்வினைக் கசாவா
ஒருங்குவரல் நசையோடு வருந்துங் கொல்லோ
அருளான் ஆகலின் அழிந்திவண் வந்து
தொன்னலன் இழந்தவென் பொன்னிறம் நோக்கி
ஏதி லாட்டி இவளெனப்
போயின்று கொல்லோ நோய்தலை மணந்தே (நற்-56)



எனவரும். கலித்தொகை, பரிபாடல்களுள் பல பாக்கள் இவ் வனப்புடையவையாகும். சிலம்புள்ளும் பெருங்கதையுள்ளும் இது பயின்று வருமாறு கண்டு கொள்க.

சூ. 550 : தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே (236)

க - து : தொன்மை யென்னும் உறுப்பின் இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை : தொன்மை என்னும் உறுப்பாவது இடையிடையே அடிவரையில்லாத உரைச்செய்யுளொடு புணர்ந்த பாக்கள் பழைய வரலாறுகளின் மேற்றாய் வரும். தொன்மை பழைமை. அது வழக்குப்பற்றி வரும் வரலாறு. எ-டு: இக்காலத்தரிது

அஃது இக்காலத்துச் சிற்றூர் விழாக்காலத்துக் கூறப்பெறும் இராமாயணம் பாரதம் முதலிய உரைநடை இலக்கியம் போல்வதாகலாம்.

சூ. 551 : இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோல் என மொழிப தொன்மொழிப் புலவர் 237

க - து : தோல் என்னும் உறுப்பின் இலக்கணம் ஆமாறு கூறுகின்றது.

உரை : இனிய ஓசையுடைய எளிய சொற்களான் உயர்ந்த பொருளைப்பற்றிக் கூறினும், விரிந்த சொற்களான் பலவாய அடிகளான் நடைபெறினும் அவற்றைத் தோல் என்னும் வனப் புறப்பாகக் கூறுவர் தொன்மை நெறியறிந்த இலக்கணப்புலவர்.

விழுமியது என்றது அறனும் நயனும் வீட்டிற்குக் காரணமாகிய மெய்யறிவும் பற்றி வரும் கருத்துக்கள்.

பரந்த மொழியாவது அறிவுடையோராலும் அருளாளர்களாலும் பல்கால் பேசப்பட்டுப் பயிலும் சொற்கள். அவற்றைப் பெருமொழி என்பது வழக்கு. தொன்மைத் தன்மையுடையது தோல். அது கொள்-கோள் என வருதல் போன்றது :

தொன்மை என்பது பழமை : தோல் என்பது தொன்று தொட்டு வந்து என்றும் புதிதாகவே இருப்பது. திருமுருகாற்றுப் படை, பொருண்மொழிக் காஞ்சி முதலிய பாடல்கள் இவ்வனப் பினைச் சார்ந்தவையாகலாம்.

சூ. 552 : விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே. (238)

க - து : விருந்தென்னும் வனப்பின் இலக்கணம் ஆமாறு கூறுகின்றது.

EFEO_GUEST_JLC_02-101 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

உரை : விருந்தாவது வண்புகழ்மூவர் தண்பொழில் வரைப்பின் யாப்பின் வழியதாகி வராமல் புதுவதாகப் புனைந்து கூறும் யாப்பின் மேற்றாகும்.

அது பொதுவியற் கூத்தினுள் படைத்து மொழியாயும் பொருளொடு புணர்ந்த நகை மொழியாயும் அவ்வப்போது புனைந்து கூறும் செய்யுட்களாகும்.

அஃது இக்காலத்து வழங்கும் ஆசுகவியும், இலாவணியும் போன்றது எனக்கொள்க.

சூ. 553 : ஞகாரை முதலா ளகாரை ஈற்றுப்
புள்ளி இறுதி இயைபெனப் படுமே (239)

க - து : இயைபென்னும் உறுப்பின் இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை: மொழியிறுதிக்கண் நிற்றற்குரிய ஞணநமன யரலவழள என்னும் புள்ளி எழுத்துக்கள் நாற்கணங்களொடும் புணருங்கால் புணரியல் விதி தவிராமல் இயைபு பட்டு நிற்கும் வனப்பு இயைபு என்று கூறப்படும்.

உயிர்மெய் ஈற்றினை நீக்குதற்குப் புள்ளியிறுதி என்றார். புணர்ப்பென்பது அவாய்நிலையான் வந்தது.

பாட்டு முதலாய ஏழு வகைச் செய்யுட்களைச் சொற்பொருள் விளங்க வேண்டுமென்று கருதிப் புணர்ச்சியின்றிச் சொல்லுதலும் எழுதுதலும் சிலரது வழக்காதலின், ஆண்டுப்புணர்ச்சியின்றி விட்டிசைத்து ஓசைஇயைபு அழியும் மன்றே ? அங்ஙனம் ஓசை யழியாமற் செய்தல் இவ்வுறுப்பாகும்.

இப்புள்ளி எழுத்துக்களை இறுதியாகக் கொண்டு முடியும் செய்யுட்கள் இயைபு என்னும் வனப்பென்பார் உரை யாசிரியன்மார்.

இவற்றுள் ஞகாரம் முதனிலை ஏவலாய் அன்றிப் பெயரீறாக வாராமையானும் அது சாரியை பெற்றே வருமென ஆசிரியர் ஓதுதலானும் ; வகாரஈறு சுட்டுப்பெயராயும் உரிச்சொல்லீறாயும் அன்றி வாராமையானும் தெவ் என்னும் உரிச்சொல் உகரச் சாரியை பெற்றே வருமாகாலானும் இவற்றை ஈறாகக் கொண்டு செய்யுள் முடிதற்கு இயையாமை அறிக. மற்ற நகர ஈறு இரு சொற்களின் கண் ஈறாகி வருதலின் அஃது ஈறாகி வருதல் அரிதென்க. அன்றியும் வனப்பென்பது ஒரு செய்யுளின்கண் விரவி நிறைந்து நிற்பதோர் உறுப்பாகும். ஈற்றெழுத்து



ஒன்றினைக் கருதி ஓர் வனப்பு உறுப்பு வகுக்கப்பட்டதென்றல் பொருந்துமாறில்லை. அதனால் ஆசிரியர்க்கது கருத்தன்று என்பது விளங்கும்.

எ - டு : கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.

இதனைக் கண்தாம் எனவும் கலுழ்வது எனவும் புணர்ச்சி யின்றி ஓதின் னகரத்தொடு மயங்காத தகாரம் விட்டிசைத்தும் நான்காம் சீரொடுபடும் ஒருஉவண்ணம் கெடும். கலுழ்வது என்பது ஆசிரியத்தளை என்பதற்கு ஏற்ப நிற்குமாறும் செப்பலோசை நிரம்பாவாறும் காண்க.

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு

இதனை நிலத்து இயல்பான் நீர்திரிந்து அற்று ஆகும் மாந்தர்க்கு இனத்து இயல்பது ஆகும் அறிவு

எனப் பிரித்தோதின் செப்பலோசை முழுதும் கெடுமாறறிக. இனி

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்று பிரித்த வழியும் பொருளும் ஓசையும் கெடாது நிற்பினும்

அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

என்புழி இன்னோசை மிக்கு நடத்தலின் புணர்ச்சிஇயையும் வனப்பாமாறு கண்டு கூறினார் என அறிக.

சூ. 554 : சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே (240)

க - து : புலன் என்னும் உறுப்பின் இலக்கணம் ஆமாறு கூறுகின்றது.

உரை : அவ்வச் சேரிகளிற் பயின்று வழங்கும் சொற்களான் அவற்றைக் கேட்போர் ஆராய்ந்துணர்தல் வேண்டாமல் செவ்விதாகக் கிளக்கப் பெற்றுக் குறித்த பொருள் வெளிப் டையாகத் தோன்றி நிற்பின் அதனைப் புலன் என்று கூறுப இலக்கண மரபுணர்ந்த புலவர்.

சேரிமொழி என்பது வட்டார வழக்கு. சேரி என்பது பெரும்பான்மையும் ஓரினத்தார் மிக்கு வாழும் ஊராகும். சேர் = திரட்சி (உரி-) செவ்விதிற் கிளத்தலாவது கவர் பொருள்படாமற்

EFEO_GUEST_JLC_02-102 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கூறுதல் குறித்தது. கூறுவோன்தான் குறித்த பொருள் புலப்பட நிற்றல். அவை கதை தழுவி வரும் கூத்துப் பாடல்கள் போல்வனவும் இயற்சொற்களால் வரும். பாடாண் பாட்டுக்களுமாம்.

சூ. 555 : ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்கனம் ஒழுகின்
இழையின் இலக்கணம் இயைந்த தாகும் (241)

க - து : இழைபென்னும் உறுப்பின் இலக்கணம் ஆமாறு கூறுகின்றது.

உரை : வல்லொற்றொடு புணர்த்த சொற்களைத் தொடர்ந் தமைக்காமல் ஏனையெழுத்துக்கள் பயிலும் சொற்களான் நாற் சீரடிக்கண் எழுத்தளவையான் வரும் குறளடி முதலாகக் கழிநெடி லடியீறாக உள்ள ஐத்தடிகள் தம்முள் ஒத்து எடுத்தலோசைமிக்க மொழிகளான் நடைபெறின் இழைபென்னும் இலக்கணம் ஆங்கு அவ்விடத்து இயைந்ததாகும் என்று கூறுவர்.

ஒற்றொடுபுணர்ந்த வல்லெழுத்தென்றது, தனிமொழி புணர் மொழி இரண்டற்கும் பொதுவாய் நின்றது. "வல்லெழுத் தடக்காது" என்றதனான் ஏனை எழுத்துக்களை அடக்குதல் பெறப்பட்டது.

ஐந்தடி ஒப்பித்தலாவது ஒரு செய்யுளின்கண் வரும் நாற்சீர் அடிகள் குறளடியாயின் ஓரடிக்கண் நான்கு எழுத்து முதல் ஆறெழுத்து வரையே வருதலும் கழிநெடிலடியாயின் பதினே ழெழுத்து முதல் இருபதெழுத்து வரையே வருதலும் ஆகும். ஏனைய அடிகளும் அவ்வாறேயாம்.

எ - டு : வண்டு சென்று முண்டகத்து
விண்டு நின்ற கொங்கு நன்கு
கொண்டு வந்து வந்து நின்று
மண்டு மென்று கண்டு கொள்ளே

இது ஐந்தெழுத்தும் நாலெழுத்தும் பெற்ற குறளடிகளே வந்த கொச்சகக் கலிச்செய்யுள்.

அரும்பற முல்லை அலர்ந்தன தேனைச்
சுரும்புண வந்தவை சூழும் — விரும்பி
அதிர்ந்தன காரும் அருளிலாக் கூற்றம்
எதிர்ந்திடின் யார்தகைப்பா ரீங்கு.



இது முதல் மூன்றடியும் பன்னிரெண்டெழுத்து அளவடியான் வத்த வெண்பா ஏனையவும் இவ்வாறே கண்டு கொள்க.

குறளடி முதலா என்பற்கு நச்சினார்க்கினியர் இருசீரடி முதலாக எனப் பொருள் கூறினார். சீர்களை எண்ணி இவ் ஆசிரியர் அடிவகுத்துக் கூறாமையின் அவ்வுரை இந்நூல் நெறிக்கு ஒவ்வாதென்க.

சூ. 556 : செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவவுள வேனும் வந்தவற் றியலான்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே 242

க - து : செய்யுளியலுக்காவதொரு புறனடை கூறுகின்றது

உரை : நல்லிசைப் புலவோர் வல்லிதிற் செய்த செய்யுட்களிடத்து அமைந்துள்ள செய்யுள் இலக்கணங்களைப் பொருள்பெற ஆராய்ந்து அமைத்த செய்யுள் இலக்கணத்தினின்று பிழைபட்டவை போல ஒரோவழிச் செய்யுட்கள் வருபவை உள எனினும் ஈண்டு இவ்வியலுட் கூறப்பெற்ற நெறியானே உத்தியானும், விதப்பானும் நோக்கி அவற்றை முடித்துக்காட்டல் செய்யுளிலக்கணத்தைத் தெளிந்தோரின் கடப்பாடாகும்

பிழைத்தன போல என்றது ஊன்றி நோக்கின் பிழையின்மை புலப்படும் என்றவாறு. வந்தன உளவேனும் என்னாது வருபவுள வேனும் என எதிர்காலத்திற்கேற்பக் கூறியதனான் இனிவரும் சான்றோர் செய்யுட்களைப் கூறப்பெற்ற இலக்கணத்தைக் கொண்டு திரிபின்றி முடித்துக் கொள்ளுதல் கடப்பாடாகும் என அறிக. இழைத்தல் நயம்படக் கூறுதல்.

மாத்திரை முதலாக ஓதப்பெற்ற உறுப்புக்களுள் செய்யுட்கு அடிப்படையான உறுப்புக்கள் பிழையாது வரல் வேண்டு மென்பதும் பொருளமைதிக்கேற்பச் சிலவுறுப்புக்கள் குறைந்து வரும் என்பதும் வந்த உறுப்புக்கள் தத்தம் இலக்கணத்தின் வழுவின்றி அமைதல் வேண்டுமென்பதும் செய்யுளிலக்கணத்தின் பயனாகலின் பிழைத்தன போல என்பதை அடிப்படை உறுப்புக் களை நீக்கி ஏனையவற்றிற்குக் கொள்க.

செய்யுளியல் உரை முற்றியது

EFEO_GUEST_JLC_02-103 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

## ஒன்பதாவது

# மரபியல்

மரபாவது இருதிணைப் பொருளையும் இருவகை வழக்கினும் சான்றோர் தொன்று தொட்டு வழங்கிவரும் முறைமையாகும். சொல்லதிகாரத்துள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருளுணர்த்தும் பெயரும் வினையும் ஆகிய சொற்கள் தம்முன் தொடருங்கால் பொருள் மயக்க மின்றி அமையவேண்டுமென்று கூறிய, சொல் சொற்றொடராக்கமரபும், செய்யுளியலுள் எழுவகைச் செய்யுட்களையும் நால்வகைச் சொற்களான் யாப்பு வழிப்படுத்து அமைத்துக் கொள்ளும்படிக் கூறிய மரபுமன்றி, மாத்திரை முதலாய உறுப்புக்களுள் ஏற்பன கொண்டு செய்யப்பெறும் பாட்டு முதலாகிய செய்யுட்கண் இருதிணைப் பொருள்களது தன்மை இயல்புகளையும் ஒழுகலாறுகளையும் பற்றிக் கிளக்குங்கால் அப்பொருள்களின் பண்போடமைந்த தன்மைகள் தெற்றெனப் புலப்படுமாறு சான்றோரான் வழிவழியாக வழங்கப்பட்டு வரும் மரபுகளையும் இருவகையாய நூலாக்க மரபுகளையும் பற்றிக் கூறுதலின் இவ்வியல் மரபியல் என்னும் பெயர்த்தாயிற்று

அவ்வாற்றான் இவ்வியலுள் ஓதப் பெறும் மரபுகளாவன இருதிணைப் பொருள்கட்கும் இயற்கையாக அமைந்த இளமை, ஆண்மை, பெண்மை பற்றி வழங்கும் பெயர்க் குறியீட்டு மரபுகளும், ஓரறிவுயிர் முதலாய உயிர்களைப்பற்றிய மரபுகளும் உயர்திணைக்கண் பண்பும் செயலும் பற்றிய குடிமை வகையான் அமைந்த நால் வகைக்குலம் பற்றிய வெளிப்பாட்டு மரபுகளும், உலக வழக்கினது சில மரபுகளும், மரபு பிறழக்கூடாதென்பதற்குக் காரணமும் முதலும் சார்புமாகிய நூல்களைப்பற்றிய மரபுகளும் அவற்றொடு தொடர்புடைய பிறவுமாம்.

இவ்வோத்து இருவகை வழக்கிற்குமுரிய பொருள்களைப் பற்றிய மரபுகளைத் தொகுத்துக் கூறலின் செய்யுளியலின் பின் இறுதியியலாக வைக்கப்பட்டதென்க. இந்நூலுள் ஓதப்பட்டவை யாவும் தமிழ் நெறிமரபுகளே என்பது தோன்ற நூன் மரபு எனத் தோற்றுவாய் செய்து மரபியல் எனமுடித்துக்காட்டியுள்ள ஆசிரியரது சதுரப் பாட்டினை ஓர்ந்துணர்ந்து கொள்க. இதனை எட்டாவது இயலாகக் கொள்ளுதல் சாலதென்பதும் பிறவும் பற்றிப் பேராசிரியர் கூறுவனவற்றையும் அறிந்து கொள்க.



**சூ. 557 :** மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியு மென்று
ஒன்பதும் குழவியொடு இளமைப் பெயரே (1)

**க - து :** இருதிணைக்கண்ணும் தோன்றும் அவ்வப்பொருள்களின் இளமைத் தன்மையைக் குறித்துவரும் குறியீடுகள் இவை என்கிறது.

**பொருள் :** பிறிதொன்றனொடு ஒப்பிட்டுக் கூறுதற்கரிய சிறப்பினையுடைய மரபிலக்கணம் பற்றிக் கிளந்து கூறப்புகின் குழவி என்பதனொடுகூடப் பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி என்று சொல்லப்படும் ஒன்பதும் இளமைத்தன்மையை உணர்த்தி வரும் பெயர்களாம்.

குழவியொடு என்பதனை முன் வைத்துக் கூட்டுக. கூட்டவே இளமைப்பெயர் பத்து என்பது பெறப்படும் 'ஒடு' எண்ணின் கண் வந்தது. ஏகாரம் அசை. எடுத்துக்காட்டுப் பின்வரும் சிறப்புச் சூத்திரங்களின் உரையுள் கண்டுகொள்க. 'குஞ்சு' என்பது திசைச்சொல்லாய் மருவிய பிற்கால வழக்கென அறிக. சிறுபான்மை 'போத்து' என்பது இளமை குறித்தும் வரும்.

"மாற்றருஞ் சிறப்பின் என்றதனானே" எனத்தொடங்கிப் பேராசிரியர் கூறும் சில விளக்கங்கள் ஈண்டைக்கியைபுடையன வல்ல என்க

**சூ. 558 :** ஏறும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்
சேவும் சேவலும் இரலையும் கலையும்
மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்
போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
யாத்த ஆண்பாற் பெயரென மொழிப (2)

**க - து :** உயர்த்திணைக்கண் அமைந்தது மக்களினம் ஒன்றேயாகலின் அது தவிர்ந்த பல்வேறு இனமுடைய அஃறிணைக் கண் ஆண்மைத் தன்மை குறித்து வரும் மரபுச்சொற்கள் இவை என்கின்றது.

**பொருள் :** சான்றோரான் யாத்துரைக்கப்பெற்ற ஏறு என்பது முதல் கடுவன் என்பது ஈறாகிய பதினைந்தும் பிறவும் ஆண்மைப் பகுப்பினைக் குறித்து வரும் மரபுப்பெயர்கள் எனக்கூறுவர் புலவர்.

'பிறவும்' என்றதனான் காளை, விடை என்றாங்கு ஆண்மை குறித்துவருவனவும் கொள்க. ஆண் என்பது இரு



EFEO_GUEST_JLC_02-104 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திணைக்கும் உரிய சாதிப்பெயர். ‘காளை’ என்பது திணையொடு பழகிய பெயராதற்கண் உயர்திணையை உணர்த்தி நிற்குமென்க.

சூ. 559 : பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகும் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே (3)

க - து : பெண்மைத் தன்மை உணர்த்தி வரும் சொற்கள் இவை என்கின்றது.

பொருள் : சான்றோரது வழக்கு முடிபாக அமைந்த பேடை என்பது முதலாகப்பிடி என்பது ஈறாகிய பதின்மூன்றும் பெண்மை குறித்து வரும் சொற்களாம்.

“அந்தஞ்சான்ற” என்றதனான் ஆண், பெண் என்னும் மரபுப்பெயர்கள் ஓரறிவுயிராகிய புல்லிற்கும், மரத்திற்கும் சிறுபான்மை வருதலும் கொள்க. ஆண்பனை, பெண்பனை என்றுவரும்.

சூ. 560 : அவற்றுள்
பார்ப்பும், பிள்ளையும் பறப்பவற் றிளமை (4)

க - து : மேல் தொகுத்துக் கூறிய மூவகை மரபுப்பெயர்களும் இன்ன இன்ன பொருள்கட்குச் சிறந்துரிமை பெற்றுவரும் எனக்கூறத்தொடங்கி இச்சூத்திரத்தான் இளமைப் பெயர்களுள் இரண்டற்குரிய மரபு கூறுகின்றது.

பொருள் : மேற்கூறியவற்றுள் பார்ப்பு, பிள்ளை என்ற இளமைப்பெயர்கள் பறப்பனவற்றிற்குரியனவாக வரும்.

எ - டு : மேற்கவட்டிருந்த பார்ப்பினங்கட்கு (அகம்-31)
இல்லிறைப் பள்ளித்தன் பிள்ளையொடுவதியும் (குறு-46)

எனவரும். கிளிப்பிள்ளை என்பது கிளிப்புள் என்பதன் திரிபாகலின் அஃது இளமை குறித்ததன்று. பிறவும் இவ்வாறு வருவனவற்றை ஓர்ந்தறிந்து கொள்க.

சூ. 561 : தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன. (5)

க-து : மேற்கூறிய பெயர்கள் தவழ்வன வற்றிகும் ஆமென்கின்றது.

பொருள் : இளமைப் பெயர் பெறுமிடத்துத் தவழ்ந்து செல்லும் யாமை, உடும்பு, முதலை, ஓந்தி முதலாயினவையும் பறவையொடு ஒப்ப அப்பெயர்களைப் பெறும்.



எ - டு : யாமைப் பார்ப்பின் அன்ன (குறு-152)
தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலை (ஐங்-41)

எனவரும். “தாமும்” என்றதனான் சிறுபான்மை ஊர்வன நடப்பனவற்றிற்கும் அவை வருதல் கொள்க.

எ - டு : பிள்ளை வெருகிற்கு அல்கிரையாகி (குறு-107)

எனவரும். பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க

சூ. 562 : மூங்கா வெருகு எலி மூவரி யணிலொடு
ஆங்கவை நான்கும் குட்டிக் குரிய. (6)

க-து : குட்டி என்னும் இளமைப்பெயர் வருமாறு கூறுகின்றது

பொருள் : மூங்கா, வெருகு, எலி புறத்தே மூன்று வரிகளையுடைய அணில் என்னும் அவை நான்கும் குட்டி என்னும் இளமைப் பெயர் கொள்ளுதற்குரியவாம்.

மூவரியணில் என்றது இனச்சுட்டில்லாத பண்பு கொள் பெயர்.

எ - டு : மூங்காக்குட்டி (மூங்கா = கீரி இனம்)
வெருகுக்குட்டி (வெருகு = பூனையினம்) எலிக்குட்டி

எனவரும். “ஆங்கவை” என்றதனான் தத்துவனவற்றுள் தவளைக்குரியதாக வருதலும் கொள்க - தவளைக்குட்டி எனவரும்.

சூ. 563 : பறழ் எனப்படினும் உறழ்ஆண் டில்லை. (7)

க - து : பறழ் என்னும் இளமைப்பெயர் வருமாறு கூறுகின்றது

பொருள் : மேற்கூறிய நான்கற்கும் இளமைப் பெயர் பறழ் என வழங்கப் படினும் முரணாதல் இல்லை. இவ்வழக்கு அருகியது.

‘உறழாண் டில்லை’ என்றதனான் சிறுபான்மை குரங்கினது இளமைக்கு உரியதாக வருதலும் கொள்க.

எ - டு : கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லாவன் பறழ் கிளைமுதற் சேர்த்தி (குறு-69)

எனவரும்.

சூ. 564 : நாயே பன்றி புலிமுயல் நான்கும்
ஆயுங் காலைக் குருளை என்ப. (8)

க - து : குருளை என்னும் இளமைப்பெயர் வருமாறு கூறுகின்றது.

EFEO_GUEST_JLC_02-105 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**பொருள் :** நாய், பன்றி, புலி, முயல் நான்கற்கும் உரிய இளமைப் பெயர் குருளை என்று கூறுவர் புலவர்.

எ - டு : திறவாக்கண்ண சாய்செவிக்குருளை (சிறுபாண்-130)
விழியாக் குவளை மென்முலை சுவைப்பக்
குழிவயிற்றுஞ்சம் குறுந்தாட் பன்றி (பேரா·மேற்)
இரும்புலிக் குருளையிற் றோன்றும் (குறு - 47)
குருளை கோட்பட லஞ்சிக் குறுமுயல்
வலையிற்றப்பாது (பேரா - மேற்)

" ஆயுங்காலை " என்றதனான் சிறு வெள்ளரவின் அவ்வரிக் குருளை (குறு-119) என அராவின் இளமைக்கு வருதலும் கொள்க.

**சூ. 565 : நரியும் அற்றே நாடினர் கொளினே. (9)**

க - து : இது குருளைப் பெயர் நரிக்கும் உரித்தென்கிறது.

**பொருள் :** ஆராய்ந்து கொள்ளின் நரியின் இளமைப்பெயரும் அத்தன்மைத்தாகும்.

எ - டு : பிணந்தின் பெண்டிர்க்குக் குருளை காட்டிப்
புறக்காட்டு ஓரி புலவுத்தசை பெறூஉம் (பேரா-மேற்)

" நாடினர்கொளின் " என்றதனான் " வெயிலாடு முசுவின் குருளை உருட்டும் " (குறு-38) என முசுவின் இளமைக்கு வருதலும் கொள்க

**சூ. 566 : குட்டியும் பறழும் கூற்றவண் வரையார் (10)**

க - து: நாய் முதலிய ஐந்தற்கும் எய்தியதன்மேற் சிறப்புமரபு கூறுகின்றது.

**பொருள் :** மேற்கூறிய நாய், பன்றி, புலி, முயல், நரி ஆகிய ஐந்தனுக்கும் குட்டியும் பறழும் உரியனவாகக்கூறும் கூற்றினை நீக்கார் புலவர்.

எ - டு : நாய்க்குட்டி, பன்றிக்குட்டி, புலிக்குட்டி, முயல்குட்டி, நரிக்குட்டி என வழக்கின்கண் பயின்றுவரும்.
பாசிப்பரப்பிற் பறழொடு வதிந்த
உண்ணாப்பிணவின் உயக்கஞ்சொலிய
நாளிரை தரீஇய எழுந்த நீர்நாய் (அகம். 336) எனவும்
வயநாய் எழுந்து வண்பறழ் தழீஇ (அகம். 248) ,,
புலிப்பறழ் அன்ன பூஞ்சினை வேங்கை (பேரா-மேற்) ,,
பதவுமேயல் பற்றி முயற்பறழ் ஓம்பும் ,, ,,
நரிப்பறழ் கவர நாய் முதல் சுரக்கும் ,, ,,



**சூ. 567 : பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே (11)**

க - து : மேற் கூறியவற்றுள் நாய் ஒழிந்தவற்றிற்குப் பிள்ளை பெயரும் உரித்தென்கின்றது.

**பொருள் :** மேற்கூறிய ஐந்தனுள் நாயல்லாதவிடத்து இளமைப் பெயர் கொள்ளுங்கால் ஏனைய பன்றி, புலி, முயல், நரி ஆகிய நான்கற்கும் பிள்ளை என்னும் பெயர் கூறலும் பிழையில்லை.

இச்சூத்திரத்திற்கு இரண்டாவது பொருளாகப் பேராசிரியர் கூறுவது நாய் முதலிய நான்கும் (சூ. 8) அல்லாதவிடத்துப் பிள்ளைப்பெயரும் பிழைப்பாண்டில்லை எனக்கொண்டு ' நரிப் பிள்ளை ' என்பதே கோடலும் ஒன்று ' என்பார்.

இவ்வழக்கு இக்காலத்து அரிது. பன்றி, புலி, ஆகிய இவற்றின் பிற பெயர்களாகிய ஏனம், கொடுவரி என்னும் பெயர் களின் வழி எனப்பிள்ளை கொடுவரிப் பிள்ளை என வழங்கிற்றாகக் கொள்ளலும் ஒன்று.

**சூ 568 : யாடும் குதிரையும் நவ்வியும் உழையும்
ஓடும் புல்வாய் உளப்பட மறியே (12)**

க - து : மறி என்னும் இளமைப்பெயர் வருமாறு கூறுகின்றது.

**பொருள் :** விரைந்து செல்லும் புல்வாய் உளப்பட யாடு, குதிரை, நவ்வி உழை ஆகிய ஐந்தற்கும் இளமைப்பெயர் மறி எனவரும்.

எ - டு : மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற இடையன்
(அகம் - 94)
உள்ளில் வயிற்ற வெள்ளை வெண்மறி (ப - 104)
எனயாட்டின் மேல் வந்தன. மறிக்குதிரை எனவரும்
நவ்விநாண்மறி கவ்விக்கடன் கழிக்கும் (குறு - 242)
மறியாடுமருங்கின் மடப்பிணை யருத்தி (அகம் - 34)
தெளித்துநடை மரபின்தன் மறிக்குநிழலாகி (குறு - 213)
முறையே நவ்வி, உழை, புல்வாய்க்கு வந்தன

' ஓடும் புல்வய் ' என்றதனானே செவ்வரைச்சேக்கை வருடைமான்மறி (குறு - 187) என வருடைமான் இளமைக்கு வருதலும் கொள்க.

**சூ. 569 :** கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப (13)

**க - து :** குட்டி என்னும் பெயர் குரங்கின் இளமைக்கும் வரும் என்கின்றது

**பொருள் :** மரக்கிளையின்கண் வாழும் குரங்கிற்கும் குட்டி என்னும் இளமைப்பெயர் உரித்தாக வரும் எனக்கூறுவர்புலவர் "கோடுவாழ்" என்றதனான் பிறகுரங்கினத்திற்கும் இம்மரபு கொள்க

எ - டு : குரங்கு குட்டி, முசுக்குட்டி, ஊகக்குட்டி எனவரும் குரங்கும் என்னும் உம்மையாற்றழுவப்படற்குரியதாக யாடு முதலியவை குட்டி என்னும் பெயர்பெறும் என விதிக்கும் ஒரு சூத்திரம் இருந்து கெட்டிருத்தல் வேண்டும். பேராசிரியர் இச்சூத்திரம், 'யாடும் குதிரையும்' என்பதனைத் தழுவியதாகக் கொண்டு யாட்டுக் குட்டி. குதிரைக்குட்டி, நவ்விக்குட்டி, உழைக்குட்டி, புல்வாய்க்குட்டி எனவரும் என்பார். அவர்கருத்து ஏற்புடையதே.

**சூ 570 :** மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பா லான (14)

**க - து :** குரக்கினத்திற்கு மகவு முதலியனவும் உரித்தென்கிறது

**பொருள் :** மேற்கூறிய குரங்கின் பகுதிக்கு மக, பிள்ளை, பறழ் பார்ப்பு என்னும் அவையும் அத்தன்மையனவாம். என்றது : இவையும் அவற்றிற்கு இளமைப் பெயராக வருதற்கு உரியவாம் என்றவாறு.

எ - டு : உயர்கோட்டு மகவுடை மந்திபோல (குறு-29)
குரங்குப்பிள்ளை. வரையாடுவன் பறழ் தந்தை (26)
ஏற்பனஏற்பன உண்ணும் பார்ப்புடை மந்தியமலை
எனவரும். (குறு - 278)

**சூ. 571 :** யானையும், குதிரையும் கழுதையும் கடமையும்
மானோ டைந்தும் கன்று எனற்குரிய (15)

**க - து :** கன்று என்னும் இளமைப்பெயர் வருமாறு கூறுகின்றது

**பொருள் :** யானை, குதிரை, கழுதை, கடமை, மான் ஆகிய ஐந்தும் இளமைப் பெயர்களுள் கன்று எனக் கூறுதற்கு உரியனவாம்.

எ - டு : யானைக்கன்று, குதிரைகன்று, கழுதைக்கன்று, கடமைக்கன்று, மான்கன்று எனவரும் இவை வழக்கு
கன்று கால் ஒய்யும் கடுஞ்சுழி நீத்தம்
புன்றலை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட்டியானை விளிபடத்துழவும் (அகம்-68)



கன்று புகுமாலை நின்றோளேத்தி (அக-6) காட்டாதனவற்றிற்குச் செய்யுள் வந்த வழிக்கண்டுகொள்க.

பேராசிரியர் இச்சூத்திரத்தை ஆனோடைந்தும் என இசையறுத்து ஆன்கன்று என உதாரணம் காட்டுவார் ஆவும் எருமையும் பின்னர் (சூ. 20) மாட்டெறியப்படுதலான் மான் எனப்பிரித்துப்பாடம் கோடலே நேரிதென்க. 'ஆன்' என்பது ஆண்பாற்கும் பொது எனப் "பேடையும் பெடையும்" என்னும் சூத்திரத்துள் கூறியவர் ஈண்டு ஆன் எனப்பிரித்தல் மாறுகொளக் கூறுதலாகும் என்க.

**சூ. 572 :** எருமையும் மரையும் வரையார் ஆண்டே (16)

**க - து :** கன்றென்னும் பெயர் இவற்றிற்கும் உரித்தாகின்றது.

**பொருள் :** எருமையும், மரையும் கன்று என்னும் பெயரான் வழங்கப் பெறுதலை நீக்கார் ஆசிரியர்.

எ - டு : கன்றாற்றுப்படுத்த புன்றலைச்சிறாஅர் (குறு-241)
எனவும் கன்றுடை மரையா துஞ்சும் (குறு-115)
எனவும் வரும்.

**சூ. 573:** கவரியும் கராமும் நிகர்அவற் றுள்ளே (17)

**க - து :** இவையும் கன்று எனற்குரிய என்கின்றது

**பொருள் :** மேற்கூறிய ஏழனிடத்த தாகக் கவரியும் காரமும் கன்று என்னும் பெயர் கோடற்கு ஒக்கும்.

எ - டு : கவரிக்கன்று, கராக்கன்று எனவரும். கவரி-ஒரு வகை மான் கராம் சிறுமுதலை. எருமை முதலிய நான்கும் ஒத்தவரவின அன்மையின் பிரித்துக் கூறப்பட்டன.

**சூ. 574:** ஒட்டகம் அவற்றோடு ஒருவழி யொன்றும் (18)

**க - து :** கன்று என்னும் பெயர் ஒட்டகத்திற்கும் உரியதாகும் என்கிறது.

**பொருள் :** ஓரோவிடத்து ஒட்டகம் மேற்கூறியவற்றொடு பொருந்திக் கன்று என்னும் பெயர் பெற்று வரும்

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே சோனகர், யவனர் முதலிய பிற நாட்டவர் தமிழகத்தில் வணிக முதலாய தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்தனர் ஆகலின் பாலைக்குரிய மாவாகிய ஒட்டகம் வழக்கிற் பயின்று இலக்கிய வழக்கின் கண்ணும் இடம் பெறலாயிற்றெனத் தெரிகின்றது. மற்று கடல் கொண்ட குமரி நாட்டின்கண் பாலைநிலக் கருப்பொருளாய்த் தொல்பழந்

தமிழிற் பயின்று வந்திருத்தல் வேண்டும் முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிச் செய்த தொல்காப்பியர் அதனை மேற்கொண்டு கூறினாராவார் என்பது ஒரு சாரார் கருத்து.

**சூ. 575: குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை (19)**

**க - து :** குழவி என்னும் பெயர் வருமாறு கூறுகின்றது.

**பொருள் :** குழவி என்னும் இளமைப்பெயர் கொள்ளுதலை குஞ்சரம் பெற்றுவரும். குஞ்சரம் — யானை.

எ - டு : கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டென
களிறு விளிப்படுத்த கம்பலை வெரீஇ
ஒய்யென எழுந்த செவ்வாய்க்குழவி (அகம்-165)

யானை என்னும் சாதிப்பெயர் கொண்ட விலக்கு வண்ணம் முதலிய குணவியல்பு காரணமாகக் கரி, கைம்மர, கயந்தலை எனச் சுட்டப்படுதல் போல பருமைக்குணம் பற்றிக் குஞ்சரம் என்றார் [ கொம் + சரம் — கொம் — கொம்மை — வடிவப்பருமை சரம் = சரித்தல் — நடத்தல். ]

**சூ. 576: ஆவும் எருமையும் அவைசொலப்படுமே (20)**

**க - து :** மேல்யானை வகைக்கு ஓதிய மரபுப் பெயர்கள் இவற்றிகும் கூறப்படும் என்றது

**பொருள் :** ஆவிற்கும் எருமைக்கும் மேல் யானை (சூ.15) குஞ்சரம் சூ.(19) என்பவற்றிற் ஓதிய கன்று குழவி என்னும் இளமைப்பெயர்கள் சொல்லப்படும்.

கன்று என்பது எருமைக்கும் வருமென மேற்பெறப்பட்டதெனினும் குழவிப்யெயர் எய்துவித்தல் வேண்டி ஈண்டு ஓதப்பட்டதென்க. ஆன் என்பது சாதிப்பெயராகலின் பசுவினத்தைச் சுட்டுதல் வேண்டி 'ஆ' என விதந்தோதினார். இச்சொல் பெரும்பான்மையும் னகரச் சாரியையொடும், சிறுபான்மை 'ஆபெயர்த்துள்தருதல்', 'ஆவொடுபட்ட நிமித்தங்கூறல்' என்றாற் போலவும் வரும்.

எ - டு : அன்கன்று (ஆக்கன்று) ஆன்குழவி (ஆக்குழவி)
எருமைக்கன்று எருமைக்குழவி எனவும்
மடக்கட்குழவி அணவந்தன்ன (குறு-94) மோட்டெருமை முழுக்குழவி (பட்டி-14, 15) எனவும் வரும்.

பேராசிரியர் இச்சூத்திரம் இவற்றிற்குக் குழவிப்யபயர் ஒன்றையே விதிப்பதாகக் கொண்டு குஞ்சரம் ஆணும் பெண்ணும்



என இரு கூற்றனவாகலான் 'அவை' எனப்பன்மையாற் கூறினார் என்பார். 'சொல்லப்படும்' என்பது இளமைப் பெயரைச் சுட்டுவதாகக் கோடலே நேரிதாம்.

**சூ. 577 : கடமையும் மரையும் முதனிலை ஒன்றும் (21)**

**க - து :** கடமையும் மரையும் பற்றி எழுவதோரையமகற்றுகின்றது,

**பொருள் :** கடமையும் மரையும் இளமைப்பெயர் பெறுங்கால் முதற்கண் கூறிய கன்றென்னும் அளவே பொருந்திவரும். அஃதாவது கன்று என்னும் பெயர் பெறுவனவற்றுள் இனத்தால் ஒற்றுமையுடைய ஆ, எருமை, கடமா, மரையா என்னும் நான்கனுள் ஆவும், எருமையும் குழவிப்பெயரும் பெறும் என எடுத் தோதினமையான் ஏனையிரண்டிற்கும் குழவிப்பெயர் இலேசினான் எய்தும் போலும் எனஎழும் ஐயம் நீங்க முதற்கண் ஓதிய அவ்ஒருநிலைபெறும் என்றார்.

**சூ. 578 : குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்
நிரம்ப நாடின் அப்பெயர்க் குரிய. (22)**

**க - து :** குழவிப்பெயர் இம்மூன்றற்கும் வரும் என்கின்றது.

**பொருள் :** முடிய ஆராய்ந்து காணின் குரங்கு, முசு, ஊகம் ஆகிய மூன்றும் குழவிப்பெயர் கோடற்கும் உரியவாம். அருகிய வழக்கென்பார் 'நிரம்ப நாடின்' என்றார்.

எ - டு : குரங்குக்குழவி, முசுக்குழவி, ஊகக்குழவி எனவரும்.

**சூ. 579 : குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
கிழவ வல்ல மக்கட் கண்ணே. (23)**

**க - து :** மக்கட்குரிய இளமைப்பெயர் வருமாறு கூறுகின்றது.

**பொருள் :** குழவி, மகவு என்னும் அவ்இரண்டல்லாத ஏனைய இளமைப்பெயர்கள் மக்கட்கண் கிளக்கப்படுவனஅல்ல.

எ - டு : காவல், குழவி கொள்பவரின் ஓம்புமதி (புறம்-5)
குழவிமருங்கினும் கிழவதாகும் (புறத் - 25)
மான்றோற்பள்ளி மகவொடு முடங்கி. (பெரும்பாண்-89)
எனவரும். ஆண்பிள்ளை எனவருதல் பிற்கால வழக்கெனக் கொள்க. அன்றிக் "கிழவவல்ல" எனபிறவற்றின்மேல் வைத்துக் கூறியதனான் சிறுபான்மை பிள்ளைப்பெயர் கோடலும் ஒன்று.



EFEO_GUEST_JLC_02-108 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சூ 580 : பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே (24)

க - து : ஓரறிவுயிர்கட்கு வரும் இளமைப்பெயர் கூறுகின்றது.

பொருள் : பல்வேறுபட்ட புல்லும் மரனுமாகிய ஓரறிவுயிர் களின் இளமைப் பெயர்கட்குப் பிள்ளை குழவி, கன்று, போத்து என்க்கொள்ளுதல் மரபாக அமையும். உம்மையாற் சான்றோர் வழக்கின் கண்வரும் பிறவும் கொள்ள அமையும் என்க

எ - டு : கமுகம் பிள்ளை, கமுகங்கன்று, வாழைக்கன்று எனவும்
வீழில் தாழைக் குழவித்திநீர் (பெரும் 357) எனவும்
புன்கம்போத்து, போத்துக்கால் எனவும் வரும்

போத்து என்னும் இளமைப்பெயர் பொதிதல் என்பதடியாகவும் ஆண்பாற்பெயர் பொத்துதல் என்பதனடியாகவும் அமைந்தன வாகலின் வேறு வேறு என உணர்க.

குழவிவேனில், குழவித்திங்கள், குழவிஞாயிறு என்பவற்றை யும் பகுவாய் வரால் பல்வரி இரும்போத்து, புலிபோத்தன்ன புல்லணற்காளை என்பவற்றையும் பிறவழியான் வந்தன என எடுத்துக்காட்டுவார் பேராசிரியர், குழவிவேனில் முதலியவை அணிநயம்படவந்தன எனவும் வராற் போத்து. புலிப்போத்து ஆயவை ஆண்மைப்பெயராக வந்தனஎனவும் கோடலே நேரிதாம்.

சூ 581 : நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே. (25)

க - து : மேலதற்கொரு புறனடை கூறுகின்றது.

பொருள் : ஓரறிவுயிரிடத்து நெல்லும் புல்லும் பற்றி இளமைப்பெயர் கூறார் புலவோர். நெல்லொடு கூட்டிக் கூறினமையின் புல்லென்றது. பசும்புல்வகை என்பது தெளியப் படும்.

சூ. 582 : சொல்லிய மரபின் இளமைதானே
சொல்லுங் காலை அவையல திலவே. (26)

க - து : இளமைப்பெயர் பற்றிப் புறனடை கூறுகின்றது.

பொருள் : மேல் கிளந்து கூறப்பெற்ற மரபினையுடைய இளமைப் பெயர்கள் பல்வேறுபட்ட பொருளைப்பறறிக் கூறு மிடத்துப் பத்து வகையாகக் கூறப்பெற்ற அவையன்றி வேறு இல்வாகும். தானும் ஏயும் அசைகள்.



உயிர்ப்பன்மையுள் ஒரு சிலவற்றை எடுத்துக்காட்டி ஓதினமை யான் பிறபிறபொருள் பற்றி வேறும் இளமைப் பெயர் உண்டு கொல் எனக் கருதற்க இவையன்றிப் பிறவில்லை ஆதலின் இவற்றுள் ஏற்பனவற்றை அவ்வவற்றோடு பொருந்தி வழங்குக என்பதிதன் பயனாகக் கொள்க.

'சொல்லுங் காலை' என்றதனான் இளமை என்னும் அப் பண்புப் பெயரே இளமைப் பெயராக வருதலும் கொள்க. இளமான், இளங்குயில் எனவும் அணிநயமாக இளங்கதிர், இளவேனில் இளந்திங்கள் எனவும் இருபெயரொட்டாக இளங்குழவி, இளங் கன்று எனவும் வருவனவற்றை வழக்கு நோக்கிக் கொள்க.

இனிப் பேராசிரியர் "கணைக் கோட்டுவாளைக் கமஞ்சூல் மடநாகு," "எருமை நல்லான் கருநாகு பெறூஉம்" என நாகு என்பதும் இளமைப் பெயராக வரும் என்பார். நாகு என்பது பெண்மைப் பெயராகப் பின்னர் ஆசிரியர் விதந்தோதுதலான் அவர் கருத்து ஆய்வுக்குரியதாகும். இனி இளமைக்கு மறுதலை யாகிய முதுமை பற்றிய மரபு கூறாமைக்குக் காரணம் மூப்பு, முதுமை என்பது எல்லாப் பொருள்கட்கும் வேறுபாடின்றி ஒப்ப வருதலான் வகைப்படாதாயிற்றென்க.

சூ. 583 : ஒன்றறி வதுவே உற்றறிவதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே (27)

க - து : பிள்ளை குழவி (சூ 24) என்னும் சூத்திரத்து ஓரறி உயிர் என்பது அதிகாரப்பட்டமையான் அறிதற் கருவியாற் பாகுபாடு பெறும் உயிர் வகைகளைக் கூறத் தொடங்கி நூலோர் வகுத்த உயிர் வகை இன்னவாற்றன் இத்துணை என்று இச் சூத்திரத்தான் உணர்த்து கின்றார்.

பொருள் : ஒன்றறிவதுவே உற்றறிதுவே-மெய் என்னும் பொறி யான் ஊறு (ஊற்றுணர்வு) என்னும் ஒரே உணர்வையறிதல் ஓரறி வுயிர். இரண்டறிவதுவே அதனொடுநாவே:- மெய், நா என்னும் இரண்டு பொறிகளான், ஊறு, சுவை என்னும் இரண்டுணர் வினையறிதல் ஈரறிவுயிர். மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே- மெய், நா, மூக்கு என்னும் பொறிகளான் ஊறு, சுவை, நாற்றம் என்னும் மூன்றுஉணர், வினையறிதல் மூவறிவுயிர்.நான்கறிவதுவே

அவற்றொடு கண்ணே-மெய் நா, மூக்கு, கண் என்னும் நான்கு பொறிகளான் ஊறு, சுவை, நாற்றம் ஒளி என்னும் நான்கு உணர்வினையறிதல் நாலறிவுயிர். ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே - மெய், நா, மூக்கு, கண், செவி என்னும் ஐந்து பொறிகளான் ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்னும் ஐந்துணர்வினையறிதல் ஐயறிவுயிர்.

ஆறறிவதுவே அவற்றொடுமனனே-ஐம்பொறிகளானும் மனம் என்னும் அகக்கருவியானும் முறையே ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்னும் ஐம்புலத்தறிவொடு, நன்மை தீமை என்னும் மனவுணர்வினையும் அறிதல் ஆறறிவுயிர் என்றவாறு.

இங்ஙனம் அறிகருவிகளை நிரல் படுத்தியமையின் உயிர்கள் அவ் எண்ணுமுறையான் வழங்கப்படுவன வாயின. “நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தனரே” என்றது இவ்வுலகத்து உயிர்கள் பிறப்பெடுத்த உடம்பின்கண் தோன்றும் உணர்வுகள் அம் முறையானே ஒன்றன்பின் ஒன்றாக அமைந்து நிகழ்தலை நடுவு நின்றுணர்ந்த சான்றோர் அங்ஙனம் முறைப்படுத்தினர் என்றவாறு.

மனம், புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அகக்கருவி (அந்தக்கரணம்) நான்கனுள் மனம் ஒன்றனைப்பற்றும், புத்தி அதனை ஆராயும், சித்தம் அதனை நிச்சயிக்கும், அகங்காரம் செயல்படுத்தும் ஆதலின் உணரும் கருவிகள் புத்தியும், சித்தமுமே யாம். அவ்வாற்றான் மெய்ம்முதலாகிய ஐம்பொறிகளைப் போலவே மனம் என்னும் அகக்கருவியும் ஒன்றினைப் பற்றி நிற்கும் நிலைமைக்கண் புறக் கருவிகளொடு ஒத்தலின் “ஆறறிவதுவே அவற்றொடுமனனே” என்றார்.

எனவே, இவ் ஆறு கருவிகளானும் அவ்வப்பொருள்கள் உயிரான் அறியப்படும் என்பதும் அங்ஙனம் அறிந்ததனை உணரச் செய்வன புத்தியும், சித்தமும் என்பதும் விளங்கும். என்னை? ஒருபொறியான் எய்தும் அறிவு பிறிதொருபொறியான் எய்தப் படாமையானும் ஐம்பொறிகளின் துணையின்றியே கனவு நிலையில் மனம் இன்பத்துன்பங்களைப்பற்றிச் சித்தத்திற்குச் செலுத்துதலானும் அவை ஆறும் தனித்தனி அறிகருவிகளே என்பது தேறப்படும்.

இனி, ஐம்பொறி அறிவு நிறைந்தபின்னரே ஆறாவதாகி மன அறிவு தோன்றும் என நெறிப்படுத்தினாராகலின் மன அறிவு தோன்றாதவற்றிற்கு இன்பத்துன்ப உணர்வுகள் இல்லை என்பதும் “பிறவும் உளவே அக்கிளைப்பிறப்பே” என்றதனான்,



மக்கட்கேயன்றிப் பிறபொறியறிவுடைய உயிர்கட்கு மனஅறிவின் கூறுகள் சிலபல விழுக்காடுகள் அமையப்பெறும் என்பதும் அவ் வாற்றான் அவ்வக்கூறுகளுக்கேற்ப அவற்றிற்கும் இன்பத்துன்ப உணர்வுகள் உண்டென்பதும் தெளியப்படும்.

இனி, தத்துவநூலார் பொறிகளின் வாயிலாக மனம்அறிந்து உயிர்க்கு அறிவிக்கும் என்னும் கொள்கைக்கு இது முரணாம் எனின் முரணாகாது. என்னை? ஆண்டு அவர் மனம் என்பது அகக்கரணம் நான்கையும் சேர்த்துக்கூறும் குறியீடாகலான் என்பது. அகக்கரணம் நான்கனுள் மனம் ஏனைய மூன்றற்கும் கருவியாம். ஏனைய மூன்றும் உயிர்உணர்விற்குக் கருவியாம். அதனான் அந்நுண்மை தோன்ற “நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே” என்றார் ஆசிரியர் என்க.

இனிப் பொறிகளான் மனமே அறியும் எனின்? சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றை அறிவாக எண்ணுதலும் அவற்றான் ஓரறி உயிர் முதலாக வகைப்படுத்தலும் பிழையாம் என்க. அன்றி மனம்என்பது எல்லா உயிர்கள் மாட்டும் சூக்குமமாக உண்டெனின் ஓரறிவுயிர் ஈரறிவுயிர் என வகுப்பது இல்லது மொழிதலாகும் என்க.

* ஆழ்ந்து துயிலும் ஒருவனை ஓர் எறும்பு கடித்தவழி அவன் கைகள் தாமாகச் சென்று துடைத்தல் மனத்துணையின்றியே ஊற்றுணர்வு சித்தத்திற்கு அறிவித்தல் விளங்கும் இவ்வாறே ஏனையவுமாம்.

பொருளியலுள் கூறப்பட்ட பல மரபுகட்கு இவ்வுயிரிலக்கணக் கோட்பாடு அடிப்படையாக நிற்றலை ஓர்ந்து கொள்க.

சூ 584 : புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (28)

க - து : ஓரறிவு கொண்ட பிறப்பின இவை என்கின்றது.

பொருள் : புறக்காழனவாகிய புல்லும் அகக்காழனவாகிய மரனும் ஊறு என்னும் ஓரறிவினையுடைய உயிர்களாம். அங்ஙனம் ஓரறிவுடைய பிறப்புக்கள் பிறவும் உள.

கிளை என்றது பிரிவினை. அஃதாவது ஓரறிவு முதலாக ஆறறிவு வரை வகுத்துக் கொண்ட வகைகளை. பிறவும் உளவே என்றது ஈண்டு எடுத்துக்காட்டிய புல்லும் மரனுமேயன்றி ஓரறி வுடையவை பிறவும் உள என்றவாறு. இவ்விளக்கம் இவ்வாறு மேல் வருவனவற்றிற்கும் ஒக்கும். பிறவாவன பல்வகைப் புல்லும், செடி கொடிகளும், நீர்ப்பாசி முதலியவுமாம்.

EFEO_GUEST_JLC_02-110 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பேராசிரியர் கிளைப்பிறப் பென்பதனை கிளையும் பிறப்பும் என்று கொண்டு கிளையென்பன புறக்காழும் அழுக்காழுமின்றி புதலும் கொடியும் போல்வன. பிறப்பென்பன மக்களானும் விலங்கானும் ஈன்ற குழவி ஓரறிவினவாகிய பருவமும், எஞ்ஞான்றும் ஓரறிவினவேயாகிய என்பில் புழுவும் என இவை. இவை வேறு பிற பின '' என்பார்.

மக்களானும் விலங்கானும் ஈன்ற குழலிகள் ஓசைகளை உணர்த லானும், பாலூட்டப்பெறுதலானும், என்பில் புழு நுண்ணிய பொருள்களையும் இலை முதலாயவற்றையும் அரித்துண்ணுத லானும் ஓரறிவுடையவை எனக் கூறுதல் ஒவ்வுமாறில்லை இவ்வாறே மேல் வரும் சூத்திரவுரைகளுள் அவர் கூறும் கருத்துக் கள் ஒவ்வாதனவாக உள. அவற்றை மாணாக்கர் ஆய்ந்து கொள்க.

சூ 585 : நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (29)

**க - து :** ஈரறிவுடையன இவை என்கின்றது.

**பொருள் :** நந்தும் முரளும் ஊறு, சுவை என்னும் இரண்டு அறிவினை உடைய உயிர்களாம். அங்ஙனம் ஈரறிவுடைய பிறப்புக்கள் பிறவும் உள. பிறவாவன. கிளிஞ்சில், அட்டை, புழு முதலியனவாம். நந்து = நத்தை ; முரள் = சங்கு

சூ. 586 : சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (30)

**க - து :** மூவறிவுடையன இவை என்கின்றது.

**பொருள் :** சிதலும் எறும்பும், ஊறு, சுவை, நாற்றம் என்னும் மூன்று அறிவினை உடைய உயிர்களாம். அங்ஙனம் மூவறிவுடைய பிறப்புக்கள் பிறவும் உள.

பிறவாவன ஈயல், மூதாய், முதலியனவாம். சிதல் - கறையான் மூதாய் = இந்திரகோபவண்டு.

சூ. 587 : வண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (31)

**க - து :** நாலறிவுடையன இவை என்கின்றது

**பொருள் :** பல்வேறுபட்ட வண்டும், தும்பியும் ஊறு, சுவை நாற்றம், ஒளி என்னும் நான்கு அறிவினையுடைய உயிர்களாம்



அங்ஙனம் நான்கறிவுடைய பிறப்புக்கள் பிறவும் உள. பிறவாவன : தேனீ, குளவி முதலாயினவும் நீர்வாழ்வனவற்றுள் சிலவும் ஊர்வனவற்றுள் சிலவுமாம்.

நண்டு செவியறிவும் உடையதாகாலானும் ஞெண்டு அலவன் கள்வன் என்பனவேயன்றிச் சங்க நூல்களுள் நண்டு என்பது பயின்று வாராமையானும் வண்டென்பதே பாடமாதல் தெளியப்படும்.

சூ. 588 : மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (32)

**க - து :** ஐயறிவுடைய உயிர்கள் இவை என்கின்றது.

**பொருள் :** நாற்கால் விலங்கும் பல்வேறு பறவைகளும் ஊறு, சுவை, நாற்றம், ஒளி. ஓசை என்னும் ஐந்து அறிவினை உடைய உயிர்களாம். அங்ஙனம் ஐந்தறிவுடைய பிறப்புக்கள் பிறவும் உள. பிறவாவன : எண்கால்வருடையும் கவரிமா முதலியவையும் நீர்வாழ்வன, ஊர்வனவற்றுள் செவியறி வுடையவைகளுமாம்.

மாவும் மாக்களும் எனப்பாடங் கொள்வார் பேராசிரியர். இரண்டும் ஒருபொருளே உடையனவாதலானும், பெரும்பான்மை யான புள்ளுக்குலம் இன்றியமையாது கூறப்படல் வேண்டுதலா னும் அப்பாடம் சிறவாமையறியலாம்.

உறைவிடமறிந்து சேறலானும் பகைநேர்ந்துழிவெல்லும் வகை யறிந்து மாறுதலானும் குடம்பை யமைத்துப் பேணிக்கொள்ளு தலானும் இன்பத்துன்ப உணர்வுகளை வெளிப்படுத்தலானும் ஐயறிவுனடயன பலவும் ஓரளவுமன அறிவுடையனவேயாம் ஆதலின் மாக்களென்பார் மனஉணர்ச்சி இல்லாதார் எனப் பேராசிரியர் கூறுதல் பொருந்தாமையறிக.

சூ. 589 : மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (33)

**க - து :** ஆறறிவுடைய உயிர் இவை என்கின்றது.

**பொருள் :** மக்கள்தாம் ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை, எண்ணம் என்னும் ஆறறிவினையுடைய உயிர் எனப்படுவர் அங்ஙனம் ஆறறிவுடைய பிறப்புகள் பிறவும் உள. 'தாமே' ன்றது பிறவற்றினின்றும பிரித்துச் சிறப்புணர்த்தி நின்றது. பிறஎன்ற வற்றுள் சிலவருமாறு—குரங்கு, குதிரை, யானை, நாய், முதலியவை எண்ணுதலாகிய மன அறவை ஓரளவு உடையனவாம்.

கிளை எனப்படுவார் தேவரும்தானவரும் முதலாயினார்என்பார் பேராசிரியர் அங்ஙனங்கூறுதல் ஒவ்வாதென்பது சொல்லதிகார உரையுள் (கிளவி 1, 4) விளக்கப்பட்டது. மேலும் அவர் ஊமும், செவிடும், குருடுமாக ஊனமுற்ற மக்கட்பிறப்பினரை நாலறிவுயிர் ஐயறிவுயிர் எனக்கருதிக் கூறுவார், அவை ஊழ்வினையானும் பிறஏதுக்களானும் நேர்ந்தகுறையாவதன்றி அங்ஙனம் ஓர் இனம் இன்மையான் அவ்வாறு கூறுதல் வழுவாம் என்க.

மற்று இதன் பின்னர் "ஒருசார் விலங்கும் உளவெனமொழிப" என ஒரு நூற்பாக்காணப்படுகின்றது. பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே என்பதனுள் அவை அடங்குமாதலின், உரைத்தொடரை ஏடெழுதினோர் அங்ஙனம் சூத்திரமாகப் பிரித்தெழுதினர் போலும்.

சூ. 590 : வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்
கேழற் கண்ணும் கடிவரை யின்றே (34)

க - து : ஓரறிவுயிர் அதிகாரப்பட்டமையான் உயிர்வகைகளை விளக்கி இனி நிறுத்தமுறையானே ஆண்பாற்குரிய மரபுப் பெயர்களைக் கூறத் தொடங்குகின்றார்.

இச்சூத்திரம் களிறு என்னும் பெயர்க்குரியவை இவை என்கின்றது. இதனை இரண்டு சூத்திரமாகக் கொள்வார் இளம்பூரணர்—நோக்குடைய பொருள்களிறு ஆகலின் ஒன்றாகக் கோடலே நேரிது.

பொருள் : களிறுஎன எடுத்துக்கூறுதல் யானைஇனத்திற் குரித்து, கானப்பன்றியிடத்து இப்பெயர் கூறுதலும் நீக்கப்படுத லின்று.

எ - டு : கடுங்களிற்றொருத்தல் (கலி-2) களிற்றியானை-எனவும் களிற்றுக் கேழல் எனவும் வரும்.

சூ. 591 : புல்வாய் புலியுழை மரையே கவரி
சொல்லிய கராமொடு ஒருத்தல் ஒன்றும் (35)

க - து : ஒருத்தல் என்னும் ஆண்மைப்பெயர் வரும் இனம் இவை என்கின்றது.

பொருள் : புல்வாய், புலி. உழை, மரை, கவரி, கராம் எனச் சொல்ல பட்டவை ஒருத்தல் என்னும் பெயர் கூறற்குப்பொருந்தும்.

எ - டு : காடுமீக்கூறும் கோடேந்தொருத்தல் (அகம் - 65)
எனவரும். பிறவற்றிற்கு இலக்கியம் வந்தவழிக் கண்டுகொள்க.



சூ. 592 : வார்கோட்டி யானையும் பன்றியும் அன்ன (36)

க - து : இதுவுமது.

பொருள் : நெடியகோட்டினையுடைய யானையும், பன்றியும் ஒருத்தல் என்றற்குப் பொருந்திவரும். இவற்றிற்குச் செய்யுள் வழக்கு வந்துழிக் கண்டுகொள்க.

சூ. 593 : ஏற்புடைத் தென்ப எருமைக் கண்ணும் (37)

க - து : இதுவுமது.

பொருள் : ஒருத்தல் என்னும் பெயர் எருமைக்கண் கூறற்கும் ஏற்புடைத்தெனக் கூறுவர் புலவர் — இலக்கியம் வந்தவழி கண்டு கொள்க.

சூ. 594 : பன்றி புல்வாய் உழையே கவரி
என்றிவை நான்கும் ஏறெனற் குரிய (38)

க - து : ஏறு என்னும் ஆண்மைப் பெயர்க்குரியவை இவை என்கின்றது.

பொருள் : பன்றி, புல்வாய் உழை, கவரி என்னும் நான்கும் ஏறு என்னும் ஆண்மைப்பெயர் கோடற் குரியவையாம்.

எ - டு : "கடிபுனங்கவரும் ஏற்றினம் பன்றியின்
இருளைவெரூஉம்" (பேரா - மேற்)
வெருள் ஏறுபயிரும் ஆங்கண் (அகம் - 121)
திரிமருப்பு ஏறொடு தோல் தேர்க்குழட (கலி - 13)
ஏற்றிளங்கவரி எரியென வெருவ (பேரா - மேற்)
எனவரும்.

சூ. 595 : எருமையும் மரையும் பெற்றமுமன்ன (39)

க - து : இதுவுமது.

பொருள் : எருமை, மரை, பெற்றம் என்னும் இவையும் ஏறு எனற்குரியவையாம்.

எ - டு : ஏற்றெருமை நெஞ்சம் வடிம்பினிடந்திட்டு (கலி - 103)
வரிமாற் பாவை மரையேறு களிக்கும் (பே - மேற்)
புலம்பயிரருந்த அண்ணல் நல்லேறு (குறு - 344)
எனவரும்.

சூ. 596 : கடல் வாழ் சுறவும் ஏறெனப் படுமே. (40)

க - து : இதுவுமது.

பொருள் : நிலத்துக்கண் வாழாமல் கடலின்கண் வாழும் மீனினமாகிய சுறாவும் ஏறுஎனக்கூறப்படும் எ - டு : சுறவே றெழுதிய மோதிரந்தொட்டாள் (கலி - 84) எனவரும்.

**சூ. 597 : பெற்றம் எருமை புலி மரை புல்வாய்**
**மற்றிவை எல்லாம் போத்தெனப் படுமே. (41)**

க - து : போத்தென்னும் ஆண்மைப்பெயர் பெறற்குரியவை இவை என்கின்றது.

பொருள் : பெற்றம் எருமை, புலி, மரை, புல்வாய் என்னும் இவையெல்லாம் போத்து எனச்சொல்லப்படும்.

எ - டு. எறிபோத்து (பெற்றம்) உழுபோத்து (எருமை)
புலிப்போத்தன்ன புல்லணற்காளை (பெரும்பாண் - 138)
மரைப்போத்து, கவைத்தலை முதுபோத்து (குறு-213)

எனவரும்.

'எல்லாம்' என்றதனான், பன்றிக்கும், சான்றோர் வழக்காகி வரும் பிறவற்றிற்கும் இப்பெயர் கொள்க

**சூ. 598 : நீர்வாழ் சாதியும் அதுபெறற் குரிய (42)**

க - து : இதுவுமது.

பொருள் : நீரின்கண் வாழும் ஒருசாரனவும் போத்து என்னும் பெயர் பெறுதற்கு உரியவாம்.

இம்மரபு பெரும்பான்மையும் விலங்கொடு ஒத்ததன்மை யுடையனவாய் குட்டியீன்று வாழும் சுறா, முதலை, இடங்கர் முதலியவற்றிற்கும் சிறுபான்மை முட்டையிட்டு வாழும் வரால், வாளை முதலியவற்றிற்கும் வரும்.

எ - டு : முதலைப் போத்து முழுமீனாரும் (ஐங் - 5)
பகுவாய் வரால் பல்வரி இரும்போத்து (அகம் - 36)
வாளைவெண் போத்து உணீஇய (அகம் - 27)

எனவரும்

**சூ. 599 : மயிலும் எழாஅலும் பயிலத் தோன்றும் (43)**

க - து : இதுவுமது

பொருள் : பறவை இனமாகிய மயில், எழாஅல் இவற்றிற்குப் போத்து என்னும் மரபுப்பெயர் பயில வழங்கும் 'பயில' என்றதனான் நாரைக்கும் கொள்க.



எ - டு : "மயிற்போத்தூர்ந்த அயிற்படைநெடுவேள்" (பேரா)
நிழலறு நனந்தலை எழாஅல் ஏறு குறித்த (அகம் - 103)
நாரை நிரை போத்து அயிரை ஆரும் (குறு - 166)

எனவரும்

'செம்போத்து' என்பது சாதிப்பெயர். ஆண்மைப்யெயர் அன்று.

**சூ. 600 : இரலையும் கலையும் புல்வாய்க்குரிய. (44)**

க - து : இரலை, கலை என்னும் ஆண்பாற் பெயர் வருமாறு கூறுகின்றது.

பொருள் : மேற்கூறியவற்றுள் இரலை, கலை என்னும் ஆண்மைப் பெயர்கள் புல்வாய் இனத்துள் ஆண்விலங்குகட் குரியவையாம்.

எ - டு : புல்வாய் இரலை நெற்றியன்ன (புற - 374) எனவும்
கவைத்தலை முதுகலை காலின் ஒற்றி (குறு - 213)

எனவும் வரும்

**சூ 601 : கலையென் காட்சி உழைக்கும் உரித்தே**
**நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும் (45)**

க - து : மேலதற்கொரு புறனடை கூறுகின்றது.

பொருள் : இரலை கலை என்றவற்றுள் கலை என்னும் சொல்லினது தோற்றம் பெண்பாலாகிய உழைக்கும் உரித்தாகும். அப்பெயர் முசுவிற்கும் நிலை பெற்றாதாகும்.

எ - டு : கள்ளியங்காட்ட புள்ளியம் பொறிக்கலை (அகம் - 97)
எனவும், முசுக்கலை எனவும் வரும்.

**சூ. 602 : மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்**
**யாத்தஎன்ப யாட்டின் கண்ணே. (46)**

க - து : மோத்தை தகர் உதள் அப்பர் என்னும் பெயர்வருமிடம் கூறுகின்றது.

பொருள் : மோத்தை, தகர், உதள், அப்பர் என்னும் ஆண்மைப்பெயர்கள் யாட்டின்கண் வருதற்கு யாப்புடையன எனக் கூறுவர் புலவர்.

எ - டு : வெள்யாட்டு மோத்தை (பேரா - மேற்)
தகர்மருப்பேய்ப்பச் சுற்றுபு சுரிந்த (அகம்-101)
உதள, நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்
(பெரும் - 151)

எனவரும். அப்பர் என்பது இக்காலத்து வழக்கு வீழ்ந்தது போலும் என்பார் பேராசிரியர், 'யாத்த' என்றதனான் து

என்பதுயாட்டிற்குக் கொள்க என்பார்அவர். - கிடா என்பதே செஞ்சொல் அது கடா எனவும் வழங்கும். எ. டு. நிலைக் கோட்டு வெள்ளைநால் செவிக்கிடாய் (அகம்-156) எனவரும். குரங்கினை 'அப்பர்' என்றலும் கொள்க என்பார் பேராசிரியர் அவ்வழக்கு அறியுமாறில்லை.

**சூ. 603 : சேவற் பெயர்க் கொடை சிறகொடுசிவணும்**
**மாயிருந் தூவி மயிலலங் கடையே.**

**க - து :** சேவல் என்னும் ஆண்மைப்பெயர் வருமிடம் கூறுகின்றது.

**பொருள் :** சிறகோடமைந்த பறவையினத்துள் நெடிய தோகை யினையுடைய மயில் அல்லாத பிறவற்றிற்குச் சேவல் என்னும் ஆண்மைப்பெயர் கொடுத்துச் சொல்லுதல் ஒக்கும்.

மாயிருந்தூவி மயில் ஆண்பாலாயினும் அது பெண்போலும் சாயலுடையதாய் மகளிர்க்கு உவமமாகக் கூறப்படுதலின் ''மாயிருந்தூவி மயிலங்கடை'' என்றார். ஏற்குமிடத்துச் சேவல் எனக்கூறினும் இழுக்காதெனக்கொள்க.

எ - டு : காமர் சேவல் ஏமஞ்செப்ப (அகம்-103) இது கோழிச் சேவல். வளைக்கட்சேவல்வாளாதுதுமடியின் (அகம் - 122) என்பதுமது. கானங்கோழி கவர்குரற்சேவல் (குறு·107) உள்ளூர்க்குரீஇத்துள்ளுநடைச்சேவல் (குறு - 242) எனவரும். பிறவும் சான்றோர் இலக்கியங்களுட் கண்டு கொள்க

**சூ. 575 : ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம்**
**ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப. (48)**

**க - து :** ஏற்றை என்னும் பெயர் வருமிடங்கூறுகின்றது

**பொருள் :** ஆற்றலொடு கூடிய ஆண் இனத்திற்கெல்லாம் ஏற்றை என்னும் ஆண்மைப்பெயர் உரியது எனக் கூறுவர் புலவர்.

எ - டு : குருங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை (நற் - 36)
செந்நாய் ஏற்றைக் கம்மென ஈர்ப்ப (அகம்-111)
கொடுந்தாள் முதலைக் கோள்வல் ஏற்றை (குறு-324)
பிணர்மோட்டுநந்தின் பேழ்வாய் ஏற்றை (அகம்-246)
புற்றாள் வெள்ளெலி மோவாய் ஏற்றை (அகம்-133)
இடுகாட்டுள் ஏற்றைப் பனை. (நாலடி.96)

எனவரும் உறுப்பு முதலாய வற்றான் ஆண்மை, பெண்மை வேறுபாடு தெற்றென. விளங்காதன விளங்கிக்கொள்ளுதற்கு ஏது இது என்பார் '' ஆற்றலொடு புணர்ந்த '' என்றார்.



**சூ. 605 : ஆண்பா லெல்லாம் ஆண்எனற் குரிய**
**பெண்பா லெல்லாம் பெண்எனற் குரிய**
**காண்ப அவையவை அப்பா லான. (49)**

**க - து :** மேற்கூறப்பெற்ற மரபுப்பெயர்களேயன்றி ஆண், பெண் என்னும் பொதுப்பெயரானும் அவை வழங்கப்படும், என இனிவரும் பெண்மைப் பெயர்க்கும் ஒப்ப அரிமாநோக்காகப் புறனடை கூறுகின்றது.

**பொருள் :** ஆண்மையுடையனவாகக் காணப்படுவனவெல் லாம் ஆண் எனற்கும் பெண்மையுடையனவாகக் காணப்படுவன வெல்லாம் பெண் எனற்கும் உரியவாம். அவ்இருபெயர்களான் கூறப்படும் அவை அப்பிரிவுகட்கு உரியன ஆகலான்.

எ - டு : ஆண்யானை, ஆண்புலி பெண்புலி, ஆண்பறவை, பெண்பறவை ஆண்மயில் பெண்மயில் ஆண்ஞெண்டு பெண்ஞெண்டு, ஆண்எலி, பெண்எலி, ஆண்வண்டு, பெண் வண்டு, ஆண்பனை பெண்பனை எனவரும்.

இதன்பயன் ஆண்மையும் பெண்மையும் பற்றிக் கூறப்பெற்ற மரபுப்பெயர்கள் இன்ன பொருட்குரியவாக வருமெனக் கூறிய விடத்து, யானை, புலி, பன்றி, எருமை எனப்பொதுப்பட சாதிப் பெயரான் கூறியதன்றி ஆண்யானை, பெண்யானை என விதந்து கூறாமையான் ஆண்மைப்பெயர்க்குரியவை ஆண்பாற்பகுதிக்கும் பெண்மைப்பெயர்க்குரியவை பெண்பாற்பகுதிக்கும் உரியவை என அறிந்து கொள்ளுதலாம். காண்ப அவையவை அப்பாலான என்றதும் அக்கருத்தேபற்றியென்க. அதனானே உறுப்பமைதி யினான் ஆண், பெண் வேறுபாடுகாணலும் கொள்க.

**சூ. 606 : பிடியென் பெண்பெயர் யானை மேற்றே (50)**

**க - து :** நிறுத்த முறையானே பெண்மைக்குரிய மரபுப்பெயர் கூறத்தொடங்கு கின்றார். இச்சூத்திரம் பிடி என்னும் பெண்மைப்பெயர் வரும் இடம் கூறுகின்றது.

**பொருள் :** பிடி என்னும் பெண்மைப்பெயர் யானை மேற்றாய் வரும்.

எ - டு : பிடிபிடி முருக்கியபெருமரப் பூசல் (அகம்-8) எனவரும்.

**சூ. 607 : ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை**
**பெட்டை என்னும் பெயர்க்கொடைக் குரிய (51)**

**க - து :** பெட்டை என்னும் பெயர் பெறுதற்குரியவை இவை என்கின்றது

EFEO_GUEST_JLC_02-114 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**பொருள் :** ஒட்டகம், குதிரை மரை என்னும் இவை பெட்டை என்னும் பெண்பால் மரபுப்பெயற்கு உரியவையாம்.

எ - டு : ஒட்டகப்பெட்டை, குதிரைப்பெட்டை, கழுதைப் பெட்டை மரைப்பெட்டை எனவரும். பெட்டைக் குதிரை, பெட்டைக்கழுதை எனவும் கூறப்பெறும்.

**சூ. 608 : புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப. (52)**

க - து : பெட்டை என்னும் பெயர் பறவை இனத்திற்கும் உரித்து என்கின்றது.

**பொருள் :** பெட்டை என்னும் பெயர் பெறுதற்குப் புள்ளினமும் உரியவாம்.

எ - டு : பெட்டைக்கோழி, பெட்டைமயில், பெட்டைகுயில் எனவரும்.

**சூ. 609 : பேடையும் பெடையும் நாடின் ஒன்றும். (53)**

க - து : புள்ளினத்திற்குப்பேடை, பெடை. என்பனவும் உரிய என்கின்றது.

**பொருள் :** ஆராயுமிடத்துப்பேடை, பெடை என்னும் மரபுப் பெயர்கள் புள்ளினத்திற்கும் பொருந்தி வரும்.

எ - டு : குயிற்பேடை, குயிற்பெடை, அன்னப்பேடை, அன்னப் பெடை. இவை 'ஒன்றும்' எனவே பெட்டை என்பது பயின்றுவாராமை பெறப்படும்.

**சூ. 610 : கோழி கூகை ஆயிரண் டல்லவை
சூழுங் காலை அளகெனல் அமையா (54)**

க - து : அளகென்னும் பெண்மைப்பெயர் வருமிடங்கூறுகின்றது.

**பொருள் :** ஆராயுமிடத்து அளகு என்னும் பெயர் கொள்ளுதற்குக் கோழி, கூகை என்னும் இரண்டுமல்லாத பிறவற்றிற்கு அமையாவாம்.

எ - டு : மனைவாழ் அளகின் வாட்டொடு பெறுகுவீர்
(பெரும்பா-206)
இது, கோழிப்பெட்டை கூகைக்குச் செய்யுள் வந்த கண்டு கொள்க

**சூ 611 : அப்பெயர்க் கிழமை மயிற்கும் உரித்தே (55)**

க - து : அளகு என்னும் மரபுப்பெயர் மயிலுக்கும் ஆம் என்கின்றது



**பொருள் :** அளகு என்னும் பெயரை உரிமையாகக் கொள்ளல் மயிலுக்கும் உரியதாகும்.

**சூ. 612 : புல்வாய் நவ்வி உழையே கவரி
சொல்வாய் நாடின்பிணைஎனப் படுமே (56)**

க - து : பிணை என்னும் பெண்மைப்பெயர் பெறற்குரியவை இவை என்கின்றது.

**பொருள் :** புல்வாய், நவ்வி, உழை, கவரி என்பவற்றுக்குப் பெண்மைப் பெயர் சொல்லும் வழியை ஆராயின் அவை 'பிணை' எனப்படும்.

எ - டு : கலைபிணை விளிக்கும் கானத்தாங்கண் (அகம்-192)
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை (புறம்-2)
நெறிகோட்டிரலை மான்பிணை (குறு - 183)
கவரிமான்பிணை நரந்தங் கனவும் (பதிற்-11)
எனவரும்

**சூ. 613 : பன்றி புல்வாய் நாய் என மூன்றும்
ஒன்றிய என்ப பிணவென் பெயர்க்கொடை (57)**

க - து : பிணவு என்னும் பெண்மைப் பெயர்க்குரியவை இவை என்கின்றது.

**பொருள் :** பன்றி, புல்வாய், நாய் எனப்படும் மூன்றும் பிணவு என்னும் பெண்மைப்பெயர் கொள்ளுதற்குப் பொருந்தியவை எனக்கூறுவர்.

எ - டு : நெடுந்தாட் செந்தினைக் கெழுந்த கேழல்
குறுந்தாட் பிணவொடு குறுகல் செல்லாது
(பேரா-மேற்)

குறியிறைக் குரம்பை குறத்தி ஓம்பிய
மடமடைப் பிணவொடு கவர்கோட்டிரலை ( ,, )
நாய்ப்பிணவொடுங்கிய கிழநரி ஏற்றை ( ,, )
மென்புனிற் றம்பிணவு பசித்தெனப் பைங்கண்
செந்நாயேற்றை கேழல் தாக்க (அகம்-21)

எனவரும். ஒன்றிய என்றதனான் "ஈருயிர்ப்பிணவின் வயவுப் பசிகளைஇய" (அகம்-72) எனப்புலிக்கும் வருதல் கொள்க

**சூ. 614 : பிணவல் எனினும் அவற்றின் மேற்றே (58)**

க - து : பிணவல் என்பதும் அவற்றிற்கு உரித்தென்கின்றது.

**பொருள் :** பிணவு என்பதேயன்றிப்பிணவல் என்னும்பெயரும் மேற்கூறிய பன்றி, புல்வாய், நாய் என்பற்றிற்கு வரும்.

EFEO_GUEST_JLC_02-115 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எ - டு : இரியற்பிணவல் தீண்டலின் (அகம்-21) இது பன்றி.
நால்முலைப் பிணவல் சொலியக் கானொழிந்து (அகம் 248)

என்பதுமது. பிறவும் வந்துழிக்கண்டு கொள்க.

சூ. 615 : பெற்றமும் எருமையும் மரையும் ஆவே (59)

க - து : மேல் ''அந்தஞ்சான்ற'' என்னும் சூத்திரத்து இலேசினாற்றழுவிக் கொண்ட ஆ என்னும் பெயர் வருமிடம் கூறுகின்றது.

பொருள் : பெற்றம் எருமை மரை என்னும் மூன்றும் ஆ என்னும் பெண்மைப் பெயர் பெற்றுவரும்

எ - டு : புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி (அகம்-56)
சேற்றுநிலை முனைஇய செங்கட்காரான் (குறு-26)
மரையா மரல் கவர மாரி வறப்ப (கலி-6)

எனவரும்

சூ .616 : பெண்ணும் பிணவும் மக்கட் குரிய (60)

க - து : பெண் பிண என்பவை வருமிடம் கூறுகின்றது.

பொருள் : பெண், பிணா என்னும் பெண்மை மரபுப் பெயர்கள் மக்கட் பெண்பாற்கு உரியவாக வரும்.

எ - டு : பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி (அகம்-112)
ஈன்பிணவொழியப் போகி (பெரும்பாண்-90)

இப்பெயர் ஈறு குறுகி உகரம் பெற்ற வழி அஃறிணைக்கு வருதல் மேல் கூறப்பெற்றது.

ஒன்றென முடித்தல் என்பதனான் ஆண் என்னும் பொதுப் பெயர் மக்கள் ஆண்பாற்கு மரபாக வருதல் கொள்க. இதற்குப் பேராசிரியர் ஆண்கடனுடைமையிற் பாண் கடனாற்றி (புறம்-201) என்பதனைக் காட்டுவார். ஆண்டு ஆண் என்பது ஆளுமைப் பண்பு குறித்து நின்றதாகக் கோடலே நேரிதாம். மற்றும் அவர் பிணா என்னும் ஆகார இறுதி வருமொழி வன்கணமன்மையின் குரியதன் இறுதிச் சினை கெட்டு உகரம் பெறாது நின்றதென்பார். கனவொடு மயங்கல் என வருதலின் அவர் கருத்துப் பொருந்துமாறில்லை.

சூ. 617 : எருமையும் மரையும் பெற்றமும் நாகே (61)

க - து : நாகு என்னும் பெண்மைப் பெயர் பெறுபவை இவை என்கின்றது.



பொருள் : எருமை, மரை, பெற்றம் ஆகிய மூன்றும் நாகு என்னும் பெண்மைப் பெயர்பெறும்.

எ - டு : எருமை நல்லான் கருநாகு பெறூஉம்(பெரும்பாண்-165)
உடனிலை வேட்கையின் மடநாகுதழீஇ (அகம்-64)

எனவரும். மரைக்கு இப்பெயர் வந்துழிக்கண்டுகொள்க.

சூ 618 : நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே (62)

க - து : நாகு என்னும் பெண்மைப் பெயர் நந்துக்கும் உரித்தென்கின்றது.

பொருள் : நீர்வாழ்இனத்துள் நந்து என்பது நாகு என்னும் பெயர் பெற்றுவரும்

எ - டு : நாகிள வளையோடு பகல் மணம் புகூஉம் (புறம்-266)
எனவரும்.

சூ. 619 : மூடும் கடமையும் யாடல பெறாஅ (63)

க - து : மூடு கடமை என்னும் பெயர் வருமிடம் கூறுகின்றது.

பொருள் : மூடு, கடமை என்னும் பெண்மைப்பெயர்களை யாடு அல்லாத பிறஉயிரினங்கள் பெற்று வாரா.

எ - டு : வந்தவழி கண்டுகொள்க. மூட்டுக்குட்டி என்பது வழக்கு.

சூ. 620 : பாட்டி என்பது பன்றியும் நாயும் (64)

க - து : பாட்டி என்னும் பெண்மைப்பெயர் பெறுவன இவை என்கின்றது.

பொருள்: பன்றியும் நாயும் பாட்டி என்பதனைப் பெற்றுவரும்.

எ - டு : வந்தவழி கண்டுகொள்க.

[இக்காலத்துச் சில இடங்களில் வழங்கும் பட்டிநாய் என்பது பாட்டி என்பதன் திரிபாகலாம்.]

சூ 621 : நரியும் அற்றே நாடினர் கொளினே (65)

க - து : நரியும் பாட்டி என்னும் மரபுப் பெயர் பெறும் என்கின்றது.

பொருள் : ஆராய்ந்து கொள்ளின் நரியும் அவ்விலக்கணத்த தாய்ப் பாட்டி என்னும் பெயர்பெறும்.

எ - டு : வந்தவழிகண்டுகொள்க.

சூ. 622 : குரங்கும் முசுவும் ஊகமும் மந்தி (66)

க - து : மந்தி என்னும் பெண்மைப் பெயர் பெறுவன இவை என்கின்றது.



EFEO_GUEST_JLC_02-116 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பொருள் : குரங்கு, முசு, ஊகம் என்னும் குரக்கினம் மந்தி என்னும் பெயர் பெற்றுவரும்.

எடு - : கைம்மை உய்யாக் காமர் மந்தி (குறு - 69) எனவரும்.

சூ 623 : குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய் கிளியைத் தத்தை என்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள் நிறப்பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்
முடிய வந்த வழக்கின் உண்மையின்
கடியலாகா கடனறிந்தோர்க்கே (67)

க - து : இருவகை வழக்கினும் மருவிப்பயிலும் ஒருசார் மரபுப்பெயர்களும் அவை கடியலாகாதன எனவும் கூறுகின்றது.

பொருள் : ஆண்குரங்கினைக் கடுவன் என்றலும், கூகையைக் கோட்டான் என்றலும், கிளியைத்தத்தை என்றலும், வெருகினைப் பூசை என்றலும் ஆண்குதிரையைச் சேவல் என்றலும் கருநிறப்பன்றியை ஏனம் என்றலும் ஆண் எருமையைக் கண்டி என்றலும் மரபாகநிரம்பி வந்த இருவகை வழக்கின்கண் உளவாதலின் மரபினைப்பேணும் கடனறிந்தோர்க்கு அவை கடியப்படாவாம்.

கடனறிந்தோர் கடியலாகா என்றதனான், கானவாரணம் ஈனும் காடாகி விளியும் நாடுடையோரே (புறம் - 52) எனக்கோழியை வாரணம் என்றலும். வெருக்குவிடையன்ன வெருள் நோக்குக்கயந்தலை "எனவெருகினை விடையென்றலும் இவ்வாறு வருவனபிறவும் கொள்க. பேராசிரியர் "முடியவந்த அவ்வழக்குண்மையின்" எனப்பாடம் கொள்வார்.

சூ. 624 : பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே (68)

க - து : மேற் கூறிய மூவகை மரபுப்பெயர்களைப் பற்றிய புறனடை கூறுகின்றது.

பொருள் : ஆண்மைப் பெயரும், பெண்மைப் பெயரும், இளமைப்பெயருமாக வகைப்பட்டு வரும் மரபுப் பெயர்கள், "மாற்றருஞ் சிறப்பின்" என்னும் சூத்திரம் முதல் "குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்" என்னும் சூத்திரம் ஈறாக



எடுத்தோதப் பெற்ற அவையேயாம். இச்சூத்திரம் முடித்துக் காட்டல் என்னும் உத்தி வகையாம்.

இதற்குப் பேராசிரியர் கூறும் உரையும் விளக்கமும் தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறலாக உள்ளமையை ஓர்ந்துகொள்க.

சூ. 625 : நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய (69)

க - து : எழுவகைச் செய்யுள் வழக்கின்கண் புறத்திணை மாந்தராகவரும் அந்தணர் முதலாய நாற்பாலாரையும் வரைந்துணர்த்தலும் தேர்ந்து உணர்தலும் பொருட்டு அவரவர்க்கு உரியனவாக அடையாள முறைமையான் நூலோர் வகுத்துக் கொண்ட உடைமைப்பொருளும், உரிமையும், செய்தொழிலும், மேற்கொள்ளும் சிறப்பு வினையும் பற்றிய இலக்கிய மரபு கூறத்தொடங்கி இச்சூத்திரத்தான் அந்தணர்க்குரிய அடையாளம் இவை எனக் கூறுகின்றார்.

ஈண்டு அந்தணர் என்றது. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும். அறவோரை மட்டுமல்லாமல், பார்ப்பார், மறையோர், ஐயர், அந்தணர், நூலோர் என்னும் தகுதி வேறுபாடுடைய அனைவரையும் அடக்கியதொரு தொகுதிப்பெயர். இவ்வாறே பின் வேந்தர், வணிகர், வேளாண்மாந்தர் என வருபவரையும் கொள்க.

அந்தணருள் இல்லறத்து நின்றார்க்கும், துறவு பூண்டு ஒழுகுவார்க்கும் பொதுவாகிய சில அடையாளங்களே கூறப்படுதலின் துறவு பூண்டார்க்கு ஏலாதனவற்றை விலக்கி ஏற்பனவற்றை ஓர்ந்து கொள்க. ஏனையோர் துறவு பூண்டவழி அவர் அந்தணரின் பாற்படுவார் எனவும் கொள்க.

பொருள் : உலகியலான் நாற்பாலராக இயங்குபவர்தம் உடைமை, நடை, தொழில் முதலியவைபற்றி அவ்வவர்க்குரிய மரபுகளை ஆராயுமிடத்து, முந்நூலும் (முப்புரிநூல்) கமண்டலமும், முக்கோலும் இருக்கை மணையும் அநதணர்க்குரிய உடைமையாகும்.

'ஆயுங்காலை' என்றதனுன் ஓலைக்குடையும் மரத்தாலாகிய பாதக்குறடும் அக்கமணியும் அவை போல்வன பிறவும் கொள்க. மான்தோல், மரப்பலகை, குசைப்புல் ஆகியவற்றுக்கெல்லாம் பொதுவாக மணை என்றூர். முந்நூல்.மந்திரம், நோன்பு, யோகம் ஆகிய வினை முன்றையும் மேற்கொண்ட நிலைமையைக் காட்டும் அடையாளம். முப்புரிநூல், அந்தணர், அரசர் தவிர்ந்த ஏனையோர் நூல்பூணுதல் ஆரியர் வழக்காகும். முக்கோல், அறத்தாலும்,

EFEO_GUEST_JLC_02-117 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

ஞானத்தாலும், வேள்வியாலும் காவலை மேற்கொண்ட நிலையைக் குறிக்கும் மூன்று மரக்கொம்புகளை ஒருங்கு கூட்டியமைத்த கோல், ஒரு கோலுடைமை அருளாட்சி ஒன்றனையே குறிக்கும் இவ் விளக்கம் திருக்குறளானும், நல்லிசைப்புல்வோர் நவின்ற சங்கப் பாடல்களானும், திருமுறைநூல்களானும் உய்த்துணர்ந்து கொள்ளப்பட்டதாகும். இதனை ஆரிய நூலார் வழிவந்த கொள்கை விளக்கங்களோடு ஒப்பிட்டு வேற்றுமை தெரிந்து கொள்க. முந்நூலும் மணையும் பொது. கரகமும் முக்கோலும் துறவு பூண்டார்க்குரியவாகும்.

எ - டு : பாட்டுள்ளும் தொகையுள்ளும் அந்தணர் பற்றிவரும் செய்யுளுள் கண்டுகொள்க.

சூ. 626 : படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய (70)

க - து : நாற்பாலாருள் இரண்டாம் பிரிவினராகிய அரசர்க்குரிய பொருள் ஆமாறு கூறுகின்றது

பொருள் : கொடிப்படையும், கொடியும், கொற்றக்குடையும் முரசும், நால்வகை நடையுடையனவாகக் கூறப்பெறும். புரவியும், தேரும், தோளிலும் முடியிலும் சூடும், மாலையும் கண்ணியும் ஆகிய தாரும், பொன் முதலியவற்றாலான முடியும் அரசர்க்கு வாய்ந்தனவாகிய பிறவும் நூல்நெறியும் உலகியல் வழக்கும் தேர்ந்து ஆட்சியை மேற்கொள்ளும் செங்கோலினை உடைய அரசர்க்கு உரியனவாகும்.

வாள் முதலிய கருவிகளும் அடங்கப் பொதுப்படப் "படை" என்றார். போர்ப்பூவும், குடிப்பூவும் அடங்கத்'தார்' என்றார். போர்ப்பூவாவன, வெட்சி வஞ்சி முதலியன. குடிப்பூவாவன, போந்தை, வேம்பு, ஆர் முரசு என்றது, படைமுரசு, கொடைமுரசு மணமுரசு என்னும் மூன்றையும் குறித்து நின்றது. நடைநவில் புரவி என்றது பட்டத்து உரிமையான் பெயர் கொண் டிலங்குதலைக்கருதிற்று அப்பெயராவன கோரம், கனவட்டம் என்றாற் போல்வன. களிற்றுக்கும் இஃதொக்கும். நன்மையும், தீமையும், குற்றமும், குணமும் நாடி, அளித்தலும் தெறுதலும் அவர்க்குரியன என்பது தோன்றத் "தெரிவுகொள் செங்கோல்" என்றார். அதனான் செங்கோலுடைமையை உடம்பொடு



புணர்த்துக் கூறினார். "நேர்வனபிற" என்றதனான், கவரியும், கழலும், அரண்மனையும் அவைபோல்வனவும் கொள்க. பூணூலும், மணையும் வரும் சூத்திரத்தாற்கொள்க.

சூ. 627 : அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்கு
ஒன்றிய வரூஉம் பொருளுமார் உளவே (71)

க - து : அந்தணார்க்குரியவற்றுள் சில ஏற்குமாற்றான் அரசர்க்கும் உரியவாக வரும் என்கின்றது.

பொருள் : அந்தணார்க்கு உரியவையாக ஓதப்பட்டன வற்றுள்ளும் அரசர்க்குப் பொருந்துவனவாக வரும் பொருள்களும் உளவாகும். அவற்றை மரபு அறிந்து கொள்க என்றவாறு. அவையாவன முந்நூலும், இருக்கையும், இலேசினாற் கொண்ட காலாசும் பிறவுமாம்.

'ஒன்றியவரூஉம்' என்றது. அவர்க்கு அமைந்தவாறே வாராமல் அரசர்க்குப் பொருந்துமாற்றான் வரும் என்றவாறு. அஃதாவது அரசர்க்குரிய முந்நூல் அறநெறிக்காவலும், அறப்புறக்காவலும் மேற்கொண்டமையை உணர்த்தும், மணை என்பது அரியணை யாக அமையும். காலாசு தோல் முதலியவற்றான் வனையப் பட்டனவாகும். பிறவும் அன்ன.

எ - டு : பாட்டுள்ளும் தொகையுள்ளும் வேந்தர் பற்றிவரும் செய்யுளுள் கண்டுகொள்க.

வேள்விக்கலப்பையும் ஒன்றிவரூஉம் என்பார் பேராசிரியர். அந்தணர்க்கு ஓதியவற்றுள் அது. கூறப்பெறாமையானும் சுருவை முதலாய பொருள்கள் வேள்விக்குத் துணைக்கருவிகளேயன்றி அவை அடையாளத்திற்குரிய பொருள்களாகாமையானும் அவர் கருத்து ஏற்குமாறில்லை என்க.

சூ. 628 : பரிசில் பாடாண்டிணைத் துறைக்கிழமைப்பெயர்
நெடுந்தகை செம்மல் என்றிவை பிறவும்
பொருந்தச் சொல்லுதல் அவர்க்குரித்தன்றே (72)

க - து : இஃது ஐயங்களையுமுகத்தான் அரசர்க்குரிய பிறிதொருவகைப் பொருள் மரபு கூறுகின்றது

"அந்தணாளர்க்குரியவும் அரசர்க்கு ஒன்றியவரூஉம்" என்றதனானே அரசர்க்குரியனவற்றுள்ளும் அந்தணாளர்க்கு ஒன்றிய வருவனவும் உளகொல்? என மாணாக்கர் ஐயுறாமைப் பொருட்டு இன்ன இன்ன பொருள் அந்நணர்க்குரியவாகா என்றும் அவை அரசர்க்கே உரியவென்றும் உணர்த்துகின்றது.

EFEO_GUEST_JLC_02-118 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பொருள் : பரிசில் வழங்கலும், பரவலும் புகழ்ச்சியுமாகவரும் பாடாண்டிணைக்குரிய பெயரும், நெடுந்தகை, செம்மல் முதலிய பெயர்களும் அவை போல்வன பிறவும் அந்தணர்க்குப் புனைந் துரைவகையான் ஓரோவிடத்துச் சொல்லப்படுதலன்றி அவர்க்கு இயற்கை முறையான் பொருந்தச் சொல்லுதல் உரியதன்று.

அவர் என்றது அந்தணரை. அவர்க்கு உரித்தன்று எனவே அவை அரசர்க்குச் சொல்லுதல் உரித்து என்பதாம். பாடாண் டிணைத்துறைக்கிழமைப் பெயர்களாவன காளை, மீளி, தோன்றல் என்றாற்போல ஆளுமை குறித்து வருவனவாம்.

**சூ. 629 : ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்**
**யாரும் சார்த்தி அவையவை பெறுமே (73)**

க - து : நாற்பாலார்க்கும் ஏற்ப வருவதொரு மரபு கூறுகின்றது.

பொருள் : அந்தணர் முதலாய யாவர்க்கும், பிறந்ததனானும், வாழ்வதனானும் கிழமையுற்ற ஊரும், சுட்டியுணர்தற் பயத்தவாய் இடப்பட்ட இயற்பெயரும், அவ்வவர்தம் தொழிற்குரிய கருவியும் சார்த்தப்பெற்று அவையவை மரபாகக் கொள்ளப்பெறும்.

எ - டு : கடியலூர் உருத்திரங்கண்ணனார், உறையூர்ச் சோழன் நலங்கிள்ளி, மதுரை அறுவை வாணிகன் இள வேட்டனார் அம்பர்கிழான்நாகன் என்பவை ஊர் சார்த்தப் பெற்று வந்தன.

மாடல மறையோன், இது பெயர் சார்த்தப்பெற்று வந்தது வல்வில் ஓரி இஃதுஉடைத்தொழிற்கருவி சார்த்தப்பெற்று வந்தது.

"அவையவை" என்றதனான் சாதிபற்றி சார்த்தப்பட்டு வருதலும் கொள்க. அவை. இடையன் நெடுங்கீரன், மதுரைக் கொல்லன் வெண்ணாகன், குறமகள் இளவெயினி எனவரும்.

இனி உடைத்தொழிற்கருவி என்பதனை உடைத்தொழிலும் கருவியும் எனப்பிரித்துத் தொழில்பற்றி வருவனவைவும் கொள்க. அவை: கோடைபாடிய பெரும்பூதனார், பாலைபாடிய பெருங் கடுங்கோ, சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன்ராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்றாற் போலவரும். பிறவும் இவ்வாறே கண்டு கொள்க.



**சூ. 630 : தலைமைக் குணச்சொல்லும் தத்தமக் குரிய**
**நிலைமைக் கேற்ப நிகழ்த்தும் என்ப (74)**

க - து : இதுவுமது.

பொருள் : தத்தமக்குரிய தகுதிக்கேற்ப அவரவர் தலைமைக் குணத்தைச் சார்த்திக்கூறும் சொல்லும் மரபாக நிகழ்தப்பெறும் எனக்கூறுவர்புலவர்

"வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்று
அன்னபிறவும் அதன் குணம் நுதலிவருவனவெல்லாம்

குணமாக அடங்குதலின் "குணச்சொல்" என்றார், 'நிலைமை' என்றது பண்பும் செயலும் பற்றி வரும் தகுதி.

எ-டு: பாண்டியன் கருங்கை ஒள்வாட் பெரும் பெயர் வழுதி, யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார், மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன் தேவன், மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன், கடுந்தோட் கரவீரன், தேர்வண்மலையன் என வரும். பிறவாறு வருவன வற்றையும் தேர்ந்து கொள்க.

இதற்குப் பேராசிரியர் கூறும் உரை விளக்கம் பாடாண் டினைக்கு ஏற்புடையதாதலன்றி மரபிலக்கணமாகக் கோடற் கியலாமையறிக.

**சூ. 631 : இடையிரு வகையோர் அல்லது நாடின்**
**படைவகை பெறாஅர் என்மனார் புலவர் (75)**

க - து : நாற்பாலருள் படைக்கலம் பெறுதற்குரியராக வரும் மரபு வருகின்றது.

பொருள் : இலக்கண வழக்கினை ஆராயின் நாற்பாலாருள் இடைநிற்கும் அரசரும், வணிகரும் அன்றி முதல் நிற்கும் அந்தணரும், இறுதி நிற்கும் வேளாண் மாந்தரும் படைக்கல வகையினைச் சுட்டிக் கூறப்பெறார் எனக் கூறுவர் புலவர்.

அங்ஙனம் சுட்டிக் கூறுதல் தமிழ் மரபு அன்று என்றவாறு. உலகியல் வழக்கினை நாடி ஆசிரியர் "வேந்துவிடு தொழிலிற் படையும் கண்ணியும் வாய்ந்தனர் என்ப அவர் பெறும் பொருளே" என மேற்கூறுவார் எனின்? ஆண்டு அவற்றை அரசர் பாற்பெற்றுச் செயலாற்றுதற்குரியர் என்றதன்றி அவற்றான் உரிமைசுட்டப்பெறுவர் என்பதன்று. உரிமை சுட்டுதலாவது கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி வல்வில்ஓரி, வேல் பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி எனக்கிழமை கூறுதலாம். [மற்றுப்

EFEO_GUEST_JLC_02-119 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பரசுராமன் என அந்தணர்க்கு வந்ததால் எனின் அஃது ஆரிய வழக்காதலன்றித் தமிழ்வழக்கன்று எனவிடுக்க.

பேராசிரியர் இத்நூற்பா கருவிகளைக் கைக்கொள்ளுதலையே கருதியதாக எண்ணி ஒருசார் அந்தணர் படைவகைக்குரியார் எனக் கூறிப் பரசுராமன், துரோணன், கிருபன் முதலாயினரைக் கூறுவர்.

**சூ. 632 : வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை (76)**

**க - து :** நாற்பாலாருள் வாணிகர்க்குரித்தாகவரும் மரபு கூறுகின்றது.

**பொருள் :** இலக்கண வழக்கினை ஆராயின் வைசியன் வாணிகத்தான் வாழும் வாழ்க்கையைச்சுட்டி மரபு கூறப்பெறும் என்பர் புலவர் 'நாடின்' என்பதும் 'என்மனார் புலவர்' என்பதும் அதிகரித்தன.

அந்தணர், அரசர், வேளாளர் ஆகியோர் தத்தமக்குரியதொழில் களைப் புரிதலான் பொருளை ஈட்டிவாழும் வாழ்க்கையர், வாணிகர் பொருளைக் கொண்டு பொருளையீட்டி வாழும் வாழ்க்கை யராதலின் அம்மரபு தோன்றச் செய்யுள் செய்தல் வேண்டுமா தலின் தமிழ் நூலார் மற்ற மூவர்தம் மரபுகளைக் கூறுமிடத்து அவர்தம் வாழ்க்கைச் சுட்டாமல் வைசியரைக் கூறுமிடத்து வாழ்க்கையைச் சுட்டி கூறினார் என்க.

'வைசியன்' என்னும் பெயர் வீசுதல் என்னும் தொழிற் சொல் அடிப்படையாகப் பிறந்த வடசொல்லாகும். வீசுவோன் = விற்போன், பல்பண்டம் பகர்ந்து, வீசும் (பட்டி) என்பதனான் அறிக. வீசுவோன் வைசியன் என வடமொழியாக ஆக்கம் பெற்றதென்க. இதற்கொத்த மேலையாரியச் சொற்கள் இன்மை யும் காண்க. 'வைசிகன்' என்பது பிழையான பாடம்.

**சூ. 633 : மெய்தெரி வகையின் எண்வகை உணவின்**
**செய்தியும் வரையார் அப்பா லான (77)**

**க - து :** வாணிகர், அரசர்க்கும் வேளாண்மாந்தர்க்கும் இடைப்பட்ட வராதலின் அவ் இருவர்க்கும் உரியவற்றுள் ஒருகூறு இவர்க்கும் ஆதல் மாபென உணர வேளாண்மாந்தர்க்குரிய கூறுகள் சில வணிகர்க்கும் உரிய என்கின்றது

**பொருள் :** மேற்கூறிய வாணிகப்பகுதியினரிடத்து உலகியற் பொருண்மை சான்ற வழக்கினைத் தெரிந்த வகையானே எண் வகையான் உணவுப்பொருள்களை விளைவிக்கும் செயலையும்



சுட்டிக் கூறுதலை நூலோர் நீக்குவாரல்லர். அதனையும் மரபாகக் கூறுவர். இவர் கூல வாணிகர் எனப்படுவார். பிறவணிகர் இப்பர், கவிப்பர், பெருங்குடிவாணிகர்என மூவகையினர். இவர் மன்னவ ரொடொப்பக் கூறப்பெறுவர்.

எண்வகை உணவாவன : நெல்லு, காணம், வரகு, இறுங்கு, தினை சாமை, புல்லு, கோதும்பை என்பார் இளம்பூரணர். பயிறு, கடலை, உழுந்து, கடுகு, எள்ளு, கொள்ளு என்பார் பேராசிரியர். எண்வகை என்பதற்கு எட்டும் அவற்றின் வகையும் எனக்கொள்வது நேரிது.

**சூ. 634 : கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே (78)**

**க - து :** இதுவுமது.

**பொருள் :** மேற்கூறிய வணிகரிடத்துக் கண்ணியும்தாரும் அணிதலைமரபாகக் கூறுவர் புலவர்.

என்றது, எட்டி காவிதி முதலிய சிறப்புப்பெற்றார்க்கு அரசர் அடையாளப்பூ வழங்கிப் போற்றுதல் முறைமையாகலின் அவை குடிமரபாகக் கூறுதற்கு ஒக்கும் என ஒருசாராசிரியர் கருதினர் என்பது பட 'எண்ணினர்' என்றார். எண்ணினர் என்றதனான் இவ் ஆசிரியர் காலத்து அவ்வழக்கு அருகியிருத்தல் வேண்டு மென்பது புலனாகும். கண்ணி என்பது சூடும்பூ—தார் என்பது அணியும் மாலை.

**சூ. 635 : வேளாண் மாந்தர்க்கு உழுதூ ணல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி (79)**

**க - து :** வேளாண் மாந்தர்க்கு வரும் மரபு கூறுகின்றது

**பொருள் :** நாற்பாலாருள் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்ற சிறப்பினையுடைய வேளாண் மாந்தர்க்கு ஏரான் உழுது உணவினை விளைவு செய்தளிக்கும் செயலை மரபாகக் கூறுதல் அன்றிப் பிறவகைத் தொழில்களை உடையாராகக் கூறுதல் மரபில்லை எனக் கூறுவர் நூலோர்.

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம் விட் டேம் என்பார்க்குநிலை" என்பதனான் அந்தணாளர் ஆற்றும் அறநெறிக்கடமைகட்கும், "பலகுடைநீழலும் தங்குடைக்கீழ்க் காண்பார் அலகுடை நீழலவர்" என்பதனான் அரசரியற்றும் காவற்கடமைகட்கும், மெய்தெரிவகையின் 'எண்வகை உணவின்



EFEO_GUEST_JLC_02-120 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

செய்தியும் வரையார்' என்பதனான் வாணிகர் புரியும் வைசியத் தொழிலுக்கும் உழுவாரே துணையும், ஆதாரமுமாதலின்; உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்பது விளங்க உழுதுவித்தி விளைவு செய்து அளித்தலையே அவர்க்கு உரிய மரபாகக் கூறுதல் வேண்டும். பிற கூறின் அவரைப்பிரித்தறிய ஒண்ணாமை யோடு அவரது சிறப்பும் உணரப்படா என்பராய் "இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" என்றார்.

மற்று, தச்சும், கொல்லும், நெசவும் பிறவுமாகிய கைத் தொழில் புரிவோரை அத்தொழிலடிப்படையில் தச்சர், கொல்லர் காருகர் எனவும் அவ்வாறே மற்றையோரையும் காழியர், கூவியர், கண்ணுளர், பாசவர், வாசவர், ஓசுநர், குயவர், மண்ணீட்டாளர் எனவும் கலைத்தொழில் புரிவோரைப் பாணர், கூத்தர், பொருநர் எனவும் திணைநிலை மாந்தரை அவ்வந் நிலம் பற்றிக் குறவர் இடையர், பரவர், கானவர் என்னும் பெயரானும், அவர்தம் வினைநிலைபற்றி வேட்டுவர், எயினர், கோவலர், நுழையர் என்னும் பெயரானும், திணைக்கிழமை கருதியவழி, வெற்பன் பொருப்பன், நாடன், ஊரன், கொண்கன் துறைவன் என்னும் பெயரானும் வழங்குதல் வேண்டும். அங்ஙனமன்றி அந்தணர், அரசர், வணிகர் ஒழிந்த யாவரையும் வேளாளர் என வழங்குதலும், வினைவலபாங்கினர், அடியோர் இழிசினர் முதலானோரை அவர்பாற்சார்த்தி வழங்குதலும் மரபன்று என்பதும் இதனான் வற்புறுக்கப்பட்டதென்க.

இங்ஙனம் வற்புறுத்தும் நோக்கமையச் சூத்திரம் செய்தமைக்குக் காரணம், தமிழ் நூலோர் வகுத்த நாற்பால் மரபினைத் திரித்தல் வேண்டிப் பிறப்பினை (நிறத்தினை) அடிப்படையாகக் கொண்ட ஆரியரது வருணக்கோட்பாடுகள் தமிழகத்தில் ஆங்காங்கே கரவாகப் புகுத்தப்பட்டமையேயாம். அங்ஙனம் ஆரியவழக்கு ஆங்காங்கே ஊடுருவிய நிலையைப் "பொய்யும் வழுவும் தோன்றியபின்னர் ஐயர்யாத்தனர் கரணம் என்ப" என்னும் ஆசிரியர் கூற்றான் அறியலாம் (கற்-உரை காண்க) ஆரியர்தம் வருணக்கோட்பாட்டினை நீதிமுறைமை யொடு இணைத்துப் புராணகங்கள் வாயிலாகவும் சமயநூல்கள் வாயிலாகவும் ஆளுவோர் துணையொடு பரப்பி வந்தமையான் தமிழ்நெறி மரபுகள் இடைக்காலத்தே சிதைந்துபோய் ஆரியக் கோட்பாடு இடம் பெறத்தலைப்பட்டது. அவ்வாற்றான் அவர் வகுத்த நாலாம் பிரிவாகிய சூத்திரர் மேல்மூவர்க்கும் பணியாளர், அடியோர், தன்னுரிமையில்லாதவர் என ஆரிய மனுநூல் களாற் பரப்பி விட்டமையானும் இம்மரபியல் நூற்பாக்களுக்கு



உரையாசிரியன்மார் தெளிவின்றிக் கூறியுள்ள மயக்க உரைக ளானும் ஆரியக்கோட்பாடுகளையே தொல்காப்பியம் கூறுவதாகப் பிறழக்கருதிய பிற்காலத்தாரும் இற்றைய தமிழ் ஆய்வாளர் சிலரும் இந்நூற்பாக்களை இடைச்செருகல் எனக் கூறுவாரா யினர்.

ஆரியநூலார் அமைத்துக்கொண்ட நால்வருணக்கோட்பாடு கள் வேறு தமிழ்நூலார் வகுத்துக்கொண்ட நாற்பால் கோட்பாடு வேறு என்றும், ஈண்டுக்கூறப்பெற்ற மரபு செய்யுள் செய்வார் அவரை இவ்வாறு சுட்டிப்புலப்படுத்தல் வேண்டும் என்னும் மரபென்றும் தெளிதல் வேண்டும். இதன் தொடர்பாக அகத் திணையியல் உரையுள்ளும் புறத்திணையியல் உரையுள்ளும் நாற்பால் பற்றிக் கூறப்பெற்றுள்ள உரைவிளக்கங்களையும் இதனொடு கூட்டி மாணாக்கர் தேர்ந்து கொள்க.

**சூ 636 :** வேந்துவிடு தொழிலிற் படையும் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர் பெறும் பொருளே (80)

**க - து :** வேளாண் மாந்தர்க்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

**பொருள் :** வேந்தனது ஆணைவழி அவன்பாங்கினராக ஏற்றுச்செலுத்தும் காவல், பகை, துணை முதலிய தொழிலை மேற்கொள்ளின் வேளாண்மாந்தர் படைக்கலம் ஏற்றல், படை நடத்துதல், கண்ணிசூடுதல் ஆகியமரபினை அவர் பெறும் பொருளாக அடைந்தாராகக் கூறப்பெறுவர் என்பர் நூலோர்.

மன்னர்பாங்கிற்பின்னோராகுப (அகத்-32) என்னும் விதிபற்றி மன்னர்க்குரிய வினைகளை வேந்தன் வேளாண்மாந்தர்க்கு அளித்தலை "வேந்துவிடுதொழில்" என்றார். தொழில் என்றது ஈண்டுப்பகைவயிற்சேறல் முதலாய வினைகளை. பொருள் என்றது வேந்தன் அளிக்கும் சிறப்பினை இதுவும் வேளாண் மாந்தர்க்கு உரிய மரபாகலின் "வாய்ந்தனர்" என்றார்.

**எ - டு :** புறத்திணையியலுரையுட் கண்டு கொள்க.

**சூ. 637 :** அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே (81)

**க - து :** வேந்து வினை அதிகாரப்பட்டமையான் அதுபற்றி அந்தணர்க்காவ தோர் சிறப்பு மரபு கூறுகின்றது.

**பொருள் :** அரசன் பகைமுடித்தல் காரணமாகச் சேய்மைக் கண் பிரியுங் காலும் ஆட்சிக்குரியோன் நனி இளையோனாக இருக்குமிடத்தும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுச் செங்கோன்மை

EFEO_GUEST_JLC_02-121 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பூண்டொழுகுதல் அந்தணர்க்கு நீக்கும் நிலைமைத்தன்று. அங்ஙனம் வருதல் மரபாம் என்றவாறு.

சூ. 638 : வில்லும் வேலும் கழலும் கண்ணியும்
தாரும் மாலையும் தேரும் வாளும்
மன்பெறு மரபின் ஏனோர்க்கும் உரிய (82)

க - து : தானே சேறலும் தன்னொடு சிவணிய ஏனோர் சேறலும் (அகத் -29) என்றும், மேவிய சிறப்பின் ஏனோர் (அகத்-30) என்றும் வேந்து வினை இயற்கை வேந்தனின் ஒரீஇய ஏனோர் மருங்கினும் (அகத் - 33) என்றும் அகத்திணையியலுள் ஏனோர் எனச்சுட்டிக் கூறிய மாந்தர்க்கு எய்தும் மரபுகளைப் புறனடை வகையாற் கூறுகின்றது.

பொருள் : மன்னரான் எவ்வப்பெறும் மரபினையுடைய குறுநில மன்னர் தானைத்தலைவர், தானை மறவர், தண்டத்தலைவர், வாணிக மாந்தர் மண்டில மாக்கள் முதலிய ஏனோர்க்கும் வில்லும் வேலும் வாளும் ஆகிய படைக்கலங்களை கோடலும், போருடற்றலும் காவல் புரிதலும், கழல் யாத்தலும், கண்ணி சூடுதலும், தாரும் மாலையும் அணிதலும், தேரை ஊர்தலும் உரியமரபாகக் கூறப்பெறும்.

வில்லும் வேலும் என்றதனொடுவையாது வாளினை இறுதிக்கண் வைத்தமையான், தண்டும், கிடுகும் பிறவும் கொள்க. இன்னும் அதனானே குதிரைபோல்வன பெறுதலும் கொள்க. உம்மை இறந்ததுதழீஇயிற்று.

'அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே' என்றதனான் "மன்பெறு மரபின்" என்பதற்கு. நாடாளும் பொறுப்பினைப் பெறும் மரபினான் எனப் பொருள் கொண்டு அந்தணாளர் ஆட்சிப் பொறுப்பினை மேற்கொண்டவிடத்துக், குடையும், முடியும் அரியணையும் தவிர்ந்த ஏனையவற்றுள் ஏற்பன அவர் பெறற்குரியவராகக் கூறலும் மரபாம் எனக் கொள்க. பிறவும் சான்றோர் இலக்கியம் பற்றி வருவனவெல்லாம் ஓர்ந்தறிந்து கொள்க.

சூ. 689 : அன்ன ராயினும் இழிந்தோர்க் இல்லை (83)

க - து : நாற்பால வரும் வேந்து விடு தொழிலின் ஏனோரும் பற்றி இதுகாறும் கூறிய மரபிற்குரியதொரு, புறனடை கூறுகின்றது.

பொருள் : அந்தணர் முதலிய நாற்பாலராயினும், வேந்து விடு தொழிலின் வாய்ந்தனராயினும், மன்பெறு மாபின் ஏனோரா யினும் அவரவர்தம் குடிமைபற்றியும், குலம்பற்றியும் அவரவர்க்கு



ஓதிய அறநெறி ஒழுக்கங்களினின்று வழுவி இழிந்தாராயின் அவர்க்கு மேற்சொல்லப்பெற்ற மரபுகளைச் சார்த்திக்கூறுதல் நூலோர் வழக்கில்லை.

என்றது "பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" எனவும் "கொலை மேற்கொண்டாரிற்கொடிதே" (குறள்-551) எனவும் "தலையின் இழிந்த மயிரனையர்" எனவும், "மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்" எனவும், "மக்களே போல்வர்கயவர்" எனவும், நெறியின் நீங்கிய மக்களைச் சான்றோர் பழித்து விலக்கலான் "இழிந்தோர்க்கில்லை" என்றார். இழிந்தோர் = நிலையிற்றாழ்ந்தோர்.

இனி அடியோர் வினைவலபாங்கினரும், இழிசினரும் தன்னுரிமையுடையாரல்லராகலின் அவர்பற்றி ஆராய்ச்சியில்லை என்றறிக.

இச்சூத்திரங்களுக்கெல்லாம் பேராசிரியர் கூறும் உரை தமிழ் நெறி மரபிற்கொவ்வாதனவும் சூத்திரச் சொற்கிடக்கைக்கு ஏலாதனவுமாக அமைந்து தன்னான் ஒருபொருள் கருதிக் கூறலாக நிற்றலை ஓர்ந்து கொள்க.

சூ. 640 : புறக்கா ழனவே புல்லென மொழிப
அகக்கா ழனவே மரமென மொழிப (84)

க - து : ஓரறிவுயிர் வகைப்படுமாறும் அதற்குக் காரணமும் கூறுகின்றது. காழ்பற்றி வகைப்படுதலின் ஒரு சூத்திரமாக ஓதினார்.

பொருள் : புறத்தே காழ் உடைய ஓரறிவுயிரினத்தைப் புல்லினம் என்றும் அகத்தே காழுடைய ஓரறிவுயிரினத்தை மரம் எனவும் கூறுவர் புலவர் (காழ் = வயிரம்) மரத்தொடு கூட்டிக்கூறினமையின் புல்லென்னும் பல பொருளொரு சொல் மர இனத்தைச் சுட்டுகின்றது.

வ;லாறு : பனை, கமுகு, தாழை போல்வனவும் வேய், கரும்பு போல் வனவும் புல் என்றற் குரியவையாம். இருப்பை, புளி ஆச்சா, தேக்கு ஓமை, உகாய், புன்னை போல் வன மரம் என குரியவையாம்.

இங்ஙனம் புல்லும், மரமும் எடுத்தோதியது என்னை எனின்? அவற்றின் உறுப்புக்களின் பெயர்கள் வேறுபடுதலின் அம் மரபுணர்த்தற்கென்க. நீர்நிலைகளில் வளர்வனவும், தரையிற் படர்வனவுமாகிய ஓரறிவுயிரின உறுப்புக்களின் பெயர் வேறு படுதலின்மையின் அவற்றை எடுத்தோதாராயினர் என்க.

எ - டு : இரும்பனம்புல்லின் பசுந்தோட்டுக் குடம்பை (பே-மே) யாஅங் கொன்ற மரஞ்சுட்டியவின் (குறு 198) என்வரும்

புல்வேய் குரம்பை என்றாந் போல வருவன கோரையும் வேழமு மாகிய புல்வகையினவாம்.

குறிப்பு : இச்சூத்திரம் முதலான நான்கு சூத்திரங்களும் 69ஆம் சூத்திரத்திற்குப்பின் இருத்தல் வேண்டும் இப்பிழை ஏடெழுதினோரான் நேர்ந்திருத்தல் வேண்டும்.

சூ. 641 : தோடே மடலே ஓலை என்றா
ஏ ிட இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர். (85)

க - து : புல்லின் உறுப்புகளை வழங்கும் மரபு கூறுகின்றது.

பொருள் : தோடு, மடல், ஓலை ஏடு, இதழ் பாளை, ஈர்க்கு, குலை என அங்ஙனம் மாபாக வந்தன பிறவும் புல்இனத்தொடு வரும் உறுப்புக்குரிய மரபுக்சொற்களாம் எனக்கூறுவர் புலவர். பிறவும் என்றதனான் குரும்பை, நுகும்பு நுங்கு எனவருவன கொள்க.

எ - டு : இரும்பனை வெண்டோடு மிலைந்தோனுமல்லன் (புறம்-45) மாவென மடலும் ஊர்ப (குறு-17) துகள் தபுகாட்சி அவையத்தார் ஓலை, பனைநுகும் பன்ன சினைமுதிர் வரர்லொடு (புறம்-249) வண்கோட் பெண்ணை வளர்ந்த நுங்கின் (சிறுபா 27) எனவரும். பிறவும் சான்றோர் செய்யுட்கண் கண்டுகொள்க.

சூ. 642 : இலையே தளிரே முறியே தோடே
சினையே குழையே பூவே அரும்பே
நனையுள் ளுறுத்த அனையவை எல்லாம்
மரனொடு வருஉம் கிளவி என்ப. (86)

க - து : அகக்கா முடைய மரஉறுப்புக்களை வழங்கும் மரபு கூறுகின்றது.

பொருள் : இலை, தளிர், முறி, தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை என்பவற்றை உள்ளடக்கிய அவைபோல்வனவாய வெல்லாம் மரஇனத்தின் உறுப்புகளை வழங்கும் மரபுச்சொற்கள் எனக்கூறுவர் புலவர்.

அனையவை என்றதனான், வளார், தழை, கொம்பு, கோடு முதலியன கொள்க,



எ - டு : தெய்வமடையிற் றேக்கிலை குவைஇ (பெரும்பா-104) முறிமேயாக்கை (நற்-151) யாஅ ஒண்டளிர் அரக்கு விதிர்த் தன்ன (அகம்-333) தோடுதோய் மலிர்நிறை யாடி யோரே (அகம்-166) மேக்கெழுபெருஞ்சினை இருந்த தோகை (குறு-26) கொய்குழை அகைகாஞ்சி (கலி-74) நனைத்த செருந்தி (அகம்-150) அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர் மரஞ்செல மிதித்த மாஅல்போல (அக-56) எனவரும்.

'கிளவி' என்ற மிகையான் சிலபிறழ்ந்துவரினும் கொள்க.

சூ. 643 : காயே பழமே தோலே செதிலே
வீழோ டென்றாங் கவையு மன்ன (87)

க - து : மேற்கூறிய இரண்டற்கும் பொதுவாய சில மரபு கூறுகின்றது

பொருள் : காய், பழம், தோல், செதிள், வீழ் என்று சொல்லப்படுவனவும் அவைபோல்வன பிறவும் மேற்கூறிய இரண்டற்கும் வரும் மரபுச் சொற்களாம்.
அவைபோல்வனவாவன: அரை, வேர், பட்டை எனவருவன.

எ - டு : பனங்காய், மாங்காய், பனம்பழம், மாம்பழம், வேப்பந்தோல், பனஞ்செதிள், மூங்கிற்பட்டை, புளியம்பட்டை, தாழை வீழ், இச்சிவீழ், ஆலம் வீழ் என வரும்.

சூ. 614 : நிலம்நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமை
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும் (88)

க - து : மக்களது பொருளறிவு சொற்களான் நிகழ்தலின் அவ்வப்பொருளுக்கு அமைந்த அவ்வச் சொற்களைத் திரிபின்றி மேற்கொள்ளல் வேண்டும் எனச் சொற்களை ஆளுமுகத்தான் மரபினை வலியுறுத்துகின்றது.

பொருள் : உலகம் எனப்படும் காட்சிப் பொருளும் கருத்துப் பொருளும் ஆகிய யாவும் நிலம் நீர் தீ வளி விசும்பு ஆகிய பூதங்கள் ஐந்தும் தம்முள் வெவ்வேறு அளவைகளான் கலந்துள்ள கூட்டுப்பொருள்களேயாதலின் அவற்றை அவ்வாறே கூறுதும் என்னாது, உலகியல் நடைபெறும்பொருட்டு இருதிணையாகவும் அவற்றை ஐம்பாலாகவும் இலக்கண நெறியான் சான்றோர் வகுத்து வழங்கிய வழக்குச் சிதையாமற் பொருட்டு அவர் வகுத்தவாறே திரிபுபடாத சொற்களான் தழுவிக் கூறல்வேண்டும்.

அஃதாவது இருதிணை ஐம்பாற் பொருள்களைக் கருதியுணரச் சான்றோர் எவ்வெச் சொற்களான் குறியீடு செய்து வழங்கினரோ

EFEO_GUEST_JLC_02-123 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

அம்மரபு பிறழாமல் அவற்றை அவ்வாறே தழுவி வழங்கல் வேண்டு மென்றவாறு.

" அவ்வாறே கூறுநும் " என்பது இசையெச்சம் அதன் கருத்தாவது யாவும் ஐம்பெரும்பூதங்களின் கலப்பேயாதலின் நிலம்வலிது, நீர்தண்ணிது என ஐம்பூதங்களைக் குறித்துக் கூறுமாறுபோல. அவன் வந்தது, அவள் வந்தது, அது வந்தது எனக் கூறுதும் எனல் கூடாது என்பது

இயல்நெறி என்றது பொருள்களை உயிர்ப் பொருள் உயிரில் பொருள் எனப்பிரித்து உயிர்ப்பொருளை ஓரறிவுயிர்முதலாக வகுத்து அவற்றை உயர்திணை அஃறிணை எனப்பகுத்து அவற்றை ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல எனவிரித்து அமைத்துக்கொண்ட இலக்கண முறைமையை, ''வழா அமை'' என்றது வினையிற்றோன்றும் பாலறிகிளவியும்'' பெயரிற்றோன்றும் பாலறிகிளவியும் மயங்கல்கூடா தம்மரயினவே " என்ற மரபு சிதையாமல் வழங்குதலை " திரிவில் சொல் " என்றது எலிக் கன்று, புலிப்பிள்ளை, எருமைச்சேவல் குயிற்போத்து, பனை யிலை, புளிஓலை என்றாற்போலக் கூறாமல், எலிக்குட்டி, புலிக்குட்டி, எருமைப் போத்து, குயிற்சேவல், பனைஓலை, புளியிலை, என இளமைப்பெயர் முதலாக ஓதியவற்றைத் திரிபின்றி வழங்குதல்.

சூ. 645 : மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான. (89)

க - து : மரபுதிரிதல் எவ்வாற்றானும் செய்யுள் வழக்கிற்கு ஆதல் இல்லை என்கின்றது.

பொருள் : நால்வகைச் சொற்களான் ஈட்டப்பெறும் மரபு வழிப்பட்ட செய்யுட்கு மூன்றதிகாரத்தும் ஓதிய மரபுநிலை திரிதல் எவ்வாற்றானும் இல்லை.

இல்லை என்றது நல்லிசைப்புலவோர் அங்ஙனம் செய்யுள் செய்தலில்லை என்றவாறு.

" இயற்சொல் திரிசொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே " என்றதனான்

" சொல்லின் ஆன " என்றும் " மரபே தானும் நற்சொல்லிய லான் யாப்பு வழிப்பட்டன்று " என்றதனான் " மரபு வழிப்பட்ட செய்யுள் " என்றும் கூறினார். அம்மரபாவன : எழுத்ததி காரத்துள் செய்யுட் கண் ஆகும் என்ற சில புணர்ச்சி விதிகளும்



சொல்லதிகாரத்துள் " இவ்வாறு வருதல் ஒக்கும் " என்ற சில சொல்லமைதிகளும் பொருளதிகாரத்துச் செய்யுளியலுள் ஓதிய இலக்கணக் கோட்பாடுகளும் இவ்வியலுள் மேற்கூறிய மரபு களுமாம். அவையாவும் அடங்க " மரபுநிலை " என்றார்.

நிகழ்காலத்தே அவ்வப்பொழுது தோன்றி உடன் அழிந்து விடும் பேச்சுவழக்குப் போலாமல் செய்யுள் வழக்கு எதிர் காலத்தே நின்று நிலவுவதொன்றாகலின் சொன்மரபு செய்யுட்கு வலியுறுத்தப்பட்டதென அறிக. பேச்சு வழக்கின்கண் ஒரோ வழித்திரியினும் அது நிலைபெறாது என்பது கருத்து. பேச்சு வழக்கு நிலைபேறுடையதன்று என்பது ஆசிரியர் கருத்தாயின் பாயிர ஆசியரியர் " வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்துஞ்சொல்லும் பொருளும் நாடி " எனக் கூறியது முரணாம் எனின் ? ஆகாது என்னை " செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தோன் " என்றதனான் ஆண்டுக்கூறப்பட்ட வழக்கு என்பது உயர்ந்தோர் வழக்கென்பது தெளியப்படும். அவ் வழக்கே கொள்ளப்படும் என்பது " வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே " என்னும் சூத்திரத்தான் விளங்கும்.

சூ. 646 : மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும் (90)

க - து : மரபைப்பேணுதல் இன்றியமையாதது என்பதற்குக்காரணங் கூறு கின்றது.

பொருள் : சான்றோரரான் வழங்கப்பட்டுவரும் மரபு தன்நிலை திரியுமாயின் காலந்தொறும் சொற்பொருள் பிறிதுபிறிதாகி விடும்.

செவிப்புலனாம் ஓசையைக் கொண்டு கண்ணானும் கருத் தானும் கொள்ளும் பொருளறிவு மரபின் அடிப்படையான் ஆவதன்றிச் சொல்லுக்கும் அதனான் அறியப்படும் பொருளுக்கும் யாதொரு பருப்பொருட்டொடர்பும் இல்லையாதலின் மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும் என்றார். மரபுநிலைதிரியின் சென்ற காலத்துச் செய்த இலக்கியம் இக்காலத்தும் இக்காலத்துச் செய்யப் படும் இலக்கியம் எதிர்காலத்தும் பயன்படாமல் ஒழியும் ஆதலின் மரபு வற்புறுத்தப்பட்டது.

சூ. 647 : வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான (91)

க - து : மரபுநிலை திரிதல் கூடாதென்றமையான் அம்மரபு செய்யுள் வழக்கை நோக்கியதோ உலகவழக்கை நோக்கியதோ எனநிகழும் ஐயத்தைக் களையுமாற்றான் ஈரிடத்தும் உயர்ந்தோர் வழக்கமே மரபெனப்படும் என்கின்றது.



EFEO_GUEST_JLC_02-124 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பொருள் ; வழக்கு என நூலோரான் சிறப்பித்துச் சொல்லப் படுவது உயர்ந்தோர் கண்ணதாகும். அதற்குக்காரணம் மொழி ஆக்கம் நிகழ்தல் அவரிடத்தது ஆகலான்.

என்றது, அறமுதலாய மறை நெறிகளை யுணர்ந்து அகமும் புறமுமாகிய பொருள்பற்றி எழுவகைப்பட்ட செய்யுளை நாடக வழக்கும் உலகியல் வழக்கும் பொருந்தயாத்தற்கண் நால் வகையாய சொற்களைத்தேர்ந்து அமைத்தலும், படைத்தமைத்த லும் ஆகிய சொல்லாக்க நிகழ்ச்சி புலன் நன்குணர்ந்த புலமையோர் கண்ணதாகும் என்றவாறு. அதனான் அவரை உயர்ந்தோர் என்றார் அங்ஙனம் அவர் படைத்துக் கொள்வர் என்பது பாயிரத்துள் '' செந்தமிழ் '' என்பதற்கு உரை கூறியவழி விளக்கப்பட்டது ஆண்டுக்கண்டு கொள்க.

'' திரிவில் சொல்லொடுதழாஅல் வேண்டும் '' என்பது முதலாக ஆசிரியர் இருவகை வழக்கினும் சொற்களை ஆளுமாறு பற்றிய இலக்கணநெறியே கூறிவருதலானும் இவ்வியல் நுதலியதும் அதுவேயாகலானும் இந்நூற்பாவும் அம்மரபு பற்றிய தொரு விளக்கமே என்பது தெளியப்படும்.

சூ. 648 : மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை இயல
முதலும் வழியுமென நுதலிய நெறியின. (92)

க - து : செய்யுளியலுள் தோற்றுவாய் செய்துஉரைக்கப்பெற்ற இலக்கணநூல் பற்றிய மரபுகளையும், இலக்கணக்கோட்பாடுகளையும் கூறத் தொடங்கி இச்சூத்திரத்தான் அஃது இருவகைப்பட்டு நடக்கும் என்கின்றார். நூல்எனினும், புலம்எனினும் இலக்கணம் எனினும், செய்யுள் எனினும் நிலம் எனினும் இலக்கியம் எனினும் ஒக்கும்

பொருள் : சொல்லப்டும் பொருளினது மரபுநிலை திரியாத மாட்சிமையை உடையனவாகி உரைபடும் நூல்கள் இருவகை இயல்பின, அவைதாம் முதல்நூலும் வழிநூலும் எனக்கருதிக் கொள்ளும் முறையினவாகும்.

இலக்கணநூல் மரபுதிரியின் பொருள் உணர்வு பிறிதுபிறி தாகுமாதலின் ' மரபுநிலைதிரியா என்றும் ' மரபுபற்றிச் செய்யுங் காலும் இறந்தது விலக்கி எதிரது போற்றி ஆக்கமுறச்செய்தல் வேண்டுமென்பார் ' மாட்சியவாகி என்றும் கூறினார்.

உரைபடும்நூல் என்றது. அவ்வாறு. உரைக்கப்படும்நூல் என்றவாறு. நூல்எனவே அமையும் ' உரைக்கப்படும்' என்றது



என்னையெனின், சில்வகை எழுத்திற் செய்யுட்டாகி நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத்தாகும் சூத்திரங்களான் இயற்றப்படுதலின் உரையின்றி அதன் நுட்பமெல்லாம் இனிது விளங்காதாகலின் உரையானே தெளியப்படும் என்பது உணர்த் தற்கு என்க. இத்தொடர் இரட்டுற மொழிதல் என்னும் உத்திக்கு இனம்.

'நுதலிய நெறி' என்றதன் கருத்து. இறைவன் அருளிய நூல் வழி வருவனவெல்லாம் வழி நூல்களேயாம் அருவமாய் எங்கும் நிறைந்து எல்லாவற்றுக்கும் காரணமாய் நிற்கும் பரம்பொரு ளாகிய இறைவன் தன்னை வழிபட்டார் வேண்டுவனவற்றை வேண்டியவாறு அருள்பவனாலின் அவனருளாற் செய்ததனையே முனைவன் கண்டநூல் என்றும், அங்ஙனம் அவ்ஆசிரியனாற் செய்தளிக்கப் பெற்ற முதனூற் பொருளைத் தொகுத்தும், வகுத்தும் தொகை விரியாகச் செய்தும் அவ்வக் காலத்தார் பயன்கொள்ளும் வண்ணம் வழிவழியாகச் செய்யப்படும் வழி நூல்களுள் ஒன்றனை முன்னதற்கு வழிநூலாகவும் பின்னதற்கு முதனூலாகவும் சொல்லுதற்கு ஏற்றலான் ஒன்றனை நோக்கி முதனூல் என்றும் வழிநூல் என்றும் கருதிக்கொள்ளப்படும் என்பதாம்.

மற்றுச்சார்பு நூல் (புடைநூல்) என்றும் எதிர்நூல் என்றும் சிலர் வகுத்துக்கூறுவார் உளரால் எனின், சார்பு நூல் என்பது மேற்கூறிய அவ்இருவகைநூலுள்ளும் கூறியவற்றுள் சில கொண்டு தாங்கருதுவன சிலகூட்டி உரைப்பதேயாகலான் அவ்வாற்றான் அதுவும் வழிநூலேயாம் அவ்இருவகை நூல்களையும் சுட்டி மறுத்துக் கூறலின் ஓராற்றான் எதிர் நூல் என்பதும் வழி நூலுள் அடங்கும். ஆதலின் அங்ஙனம் பிரித்து எண்ணுதல் வேண்டா என ஓர்ந்து அவையெல்லாம் அடங்க இரண்டு என்னாது ''இரு வகையியல'' என்றார் என்க.

வழிநூல் என்பது முதனூலொடு பெரிதும் ஒத்துச் சிறிது வேறுபடுதலன்றே? அவ்வேறுபாட்டின் சிறுமை பெருமைகருதிப் பலவாகஎண்ணுதல் பயனில் முறையாம் என்க. ஒருபொருளைப் பற்றிய இலக்கணத்தைச்சொல்லும் முறைமையான் நூல்கள் வகைப் படுதலன்றிப்பொருளே மாறுபடுமாயின் அஃது ஒருபொருளைப் பற்றிய இலக்கணமாகாமையும் இதனானே விளங்கும்.

சூ 649 : வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும். (93)

EFEO_GUEST_JLC_02-125 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

(நீங்கிய என்னும் பாடம் வ. உ. சி. பதிப்பில் உள்ளது அதுவே செம்மையான பாடமாதலின் கொள்ளப்பட்டது.)

க - து : நிறுத்தமுறையானே முதனூலாமாறு இதுவென்கின்றது.

பொருள் : செய்வினையான் வரும் இன்பத்துன்பங்காளகிய பயன்தன்னைச்சாராது இயல்பாகவே அதனின் நீங்கிய முற்றறிவுடைய முதல்வன் அருளியது முதனுலாகும்.

வாலறிவன் என்பார் வள்ளுவர், முன்னோன் என்னும் பொருட்டாகிய முனைவன் என்பது ஓர் ஆக்கச்சொல். வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே என்பது இதனானும் உணரப்படும்.

இந்நூலாசிரியர் தம்நூலுக்கு முதனூல் இதுவென வரைந்து கூறாமையானும், என்ப, என்மனார், என்றிசினோர், எனவும், புலவர் புலனுணர்ந்தோர் எனவும் ஆசிரியன்மார்பலரைச் சுட்டுகின்றமையானும் இவர் வழிநூல் வழித்தம்நூலைச் செய்துள்ளமை புலனாகும்.

எனவே செந்தமிழ் இலக்கண முதனூலின் காலஎல்லை கணித்தற்கரிதாய் மிகத்தொன்மையானது என்னும் அளவில் உணரநின்றது

" கூறியகுன்றினும் முதனூல் கூட்டித்
தோமின்றுணர்ந்த தொல்காப்பியன்றன்
ஆணையிற்றமிழறிந்தோர்க்குக் கடனே "

என்னும் பல்காப்பியப்புறனடைச் சூத்திரத்தான் தொல்காப்பியத்திற்கு முந்தையநூல்கள் யாதும் காணங்கிடையாமையான் தொல்காப்பிய வழிநிற்றலே தமிழறித்தோர்கடன் என்றாராகத் தெரியலாம். அவர்காலத்தே தொல்காப்பியமே தலையாய நூலாக வழங்கினமை புலனாகும். மற்றும் அவர் " முதனூல் கூட்டித்தோமின்றுணர்ந்த தொல்காப்பியன் " எனக்கூறுதலின் இவர்இறைவனருளிய முதனூலையும் கற்றுணர்ந்தார் எனக் கொண்டமையும் பெறப்படும். அவ்வாற்றான் தொல்காப்பியத்தை முதனூலொப்ப ஏற்றுக்கொள்ளலாம் என்பது அவர்கருத்தாதல் தெளியப்படும். இனி

வீங்குகடல் உடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென
வானோர் ஏத்தும் வாய்மொழிப் பல்புகழ்



ஆனாப்பெருமை அகத்தியனென்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
நல்லிசை நிறுத்த தொல்காப்பியனும் " எனவும்
" மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற்றண்டமிழ் தாவின்றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப்பகர்ந்த " எனவும்

இடைக்காலத்தெழுந்த சிலர் கருத்துக்களையும், புராணக்கதைகளையும் சுட்டிப்பேராசிரியர் அகத்தியமே முதனூல் எனக் கூறுவார். மேலும் அவர் இறையனார் அகப்பொருள்நூலை ஆலவாயமர்ந்துள்ள இறைவனே செய்தளித்ததாகவும் அதுவும் முதனூலே எனவும் விளக்குவார். அவர்கருத்துக்கட்கு அறிவொடுபட்டசான்று யாதும் இன்மையானும் இறையனார் அகப்பொருள் நூலின் சூத்திரநடையும் சொல்லமைப்பும் இடைக்காலநூலோர்தம் நடையும் கருத்துக்களையும் கொண்டு முழுமைபெறாமல் அமைந்துள்ளமையானும் அவர் கூறறுக்கள் ஆராய்தற்குரியனவாகும்.

சூ. 650 : வழிஎனப் படுவது அதன்வழித் தாகும் (94)

க - து : வழிநூலாமாறு கூறுகின்றது.

பொருள் : வழிநூல்எனச் சிறப்பித்துக் கூறப்படுவது முனைவன் கண்ட முதனூலின் வழிவந்ததாகும். [பின்பின் எழுந்தவையும் வழிநூல் எனற்கு ஒக்குமேனும் சிறப்பித்துச் சொல்லப்படுவது முதல்வன் அருளியநூலை அடுத்துத்தோன்றிய அவ்வொன்றனையே என்பது கருத்து.]

சூ. 651 : வழியின் நெறியே நால்வகைத் தாகும் (95)

க - து : வழிநூல் செய்தற்குரிய நெறி இவை என்கின்றது

பொருள் : வழிநூல் செய்தற்குரிய நெறி நான்குவகையினதாகும். நூலைப்பறறியேனும், செய்யுளைப்பற்றியேனும் பின்வரும் நால்வகைநெறியானன்றி வழிநூல் செய்யப்படா என்பது இதன் கருத்தாகும்.

சூ. 652 : தொகுத்தல் வகுத்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்லொடு அனைமரபினவே (96)

க - து : வழிநூல் செய்தற்குரிய நெறி இவை என்கின்றது.

பொருள் : முதனூலாசிரியன் பன்முகமாக விரித்துச் சொல்லியவற்றைச் சில்வாழ்நாள் சிற்றறிவுடையோரும் அறிந்து கொள்ளுமாறு அவற்றைத் தொகுத்துக்கூறலும், முதனூலாசிரியன் அரிதாகவும் நுண்ணிதாகவும் சொல்லியவற்றை விரித்துக்கூறலும் வேண்டுமாற்றான் அவ்விருநெறியும் அமையக்கூறலும், தமிழக எல்லைக்கப்பால் வாழ்நரும் செந்தமிழ்ப்பனுவலின் திறனறிந்து பயன் கொள்ள முதனூலை அவர்தம்மொழியிற் பெயர்த்து நெறி விளங்க யாத்துச்செய்தலும் என வழிநூலின் வகை அத்தகைய மரபினவாகும்.

தொகைவிரிஎன்றது தொகுத்து முன்னிறுத்திப்பின்னர் அவற்றை முறையானே விரித்துக்கூறுதலாம். மொழிபெயர்த்தல் என்பது தொகுத்தலும் விரித்தலும் தொகைவிரியாகச் செய்தலு மின்றி நூலுள் உள்ளது உள்ளவாறே பிறிதொருமொழிக்கண் பெயர்த்தமைத்தலாகலின் அதர்ப்படயாத்தல் என்றார்.

மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல் என்பதற்குப்பேராசிரியர் பிறபாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ்நூலாகச் செய்வது எனஉரைகூறுவார் தொகுத்தல் முதலிய மூன்றும் எந்த ஒரு முதனூலை நோக்கி நின்றனவோ மொழிபெயர்த்தல் என்பதும் அந்நூலை நோக்கி நிற்றலே முறையாதலானும், பிறபாடைப் பொருளை மொழிபெயர்த்து அமைப்பின் அதுபிறபாடையார்க்கு வழிநூலும் பெயர்க்கப்பட்ட மொழியினர்க்கு முதனூலும் ஆவதன்றி வழிநூலாகாமையானும் அவர்கருத்துப் பொருந்தாமை யறிக. என்னை பிறபாடையினின்று மொழிபெயர்க்கப்பட்ட பொருள் பெயர்க்கப்பட்ட மொழியாளர்க்குப்புதியதாகலின் என்க. அவ்வாறே தமிழினின்று பிறிதுமொழியிற் பெயர்க்கப்பட்டநூல் தமிழிற்கு வழிநூலும், பெயர்க்கப்பட்ட மொழிக்கு முதனூலும் ஆகும் என்க.

மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல் எனப்பொதுவிற் கூறினாரேனும் ஆசிரியர் காலத்தே நூல்வளத்தான்மிக்குச் செம்மையொடுதிகழ்ந்த மொழிகள், செந்தமிழும், வடமொழியுமே என்பது வரலாற்றான் அறியப்படுதலின் மொழிபெயர்ப்பென்பது அவ் இருமொழிகட்குள்ளே நிகழ்ந்து வந்தமை தெரியலாம் அதனான் இருசாராருள்ளும் இருமொழியும் தேர்ந்த புலமை சான்ற ஆசிரியன்மார் பலர் இருந்தமையும் விளங்கும்.

செந்தமிழ் நூல்களை மொழிபெயர்த்து யாத்தலை வழிநூல் வகையுள் ஒன்றாகச் சிறப்பித்துக் கூறியது உயர்ந்தோர்க்குரித்தாக



அகத்திணையியலுள் கூறப்பெற்ற கல்வியிற் பிரிவோர்க்கு இன்றி யமையாததாகலின் என்க. அவ்வாற்றான் தமிழ் நூல்கள் பல சமற்கிருதத்திலும் சமற்கிருத நூல்கள் பல தமிழிலும் ஆசிரியர் காலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தமை விளங்கும்.

பண்டு வேங்கடத்தின் வடபால் வழங்கிய ஆரிய மொழி மைய ஆசியாவினின்று பாரத நாட்டிற்கு வந்து கலந்தோரின் மொழிகளாற் பல்வேறு பிராகிருதமாக மாறி வழங்கியமையான் இடைக்கால நூலோர் சமற்கிருத மொழியையே ஆரியமொழியாகக் கருதியும் கூறியும் எழுதியும் ஒருவாறு நிலைபெறச் செய்து விட்டனர். ஆரியமொழி வேறு சமற்கிருத மொழிவேறு முன்னது மக்களான் பேசியும் எழுதியும் வழங்கப்பட்ட இயற்கை மொழி யாகும். பின்னது எந்நாட்டினும் எவ்வினத்தினும் தாய் மொழி யாக, இயற்கை மொழியாக வழங்கியதன்று. அஃது அறிஞர் பெருமக்களான் படைத்து அமைக்கப்பெற்ற செயற்கை மொழி யாகும். பழைய ஆரியமொழி சிதைந்து வேறுபட்டமையின் அம்மொழியில் எஞ்சிநின்ற நூற்கருத்துக்கள் சமற்கிருத மொழியான் பதிவு பெற்றன. இற்றைக்குள்ள சமற்கிருத நூல்களுள் இருக்கு, யசுர் ஆகிய வேதங்கள் பழைய ஆரியமொழியொடு பெரிதும் தொடர்புடையவை சாமமும் அதர்வணமும் சிறிது வேறுபட்டவை என அவற்றின் மொழிநடைகளை ஆராய்ந்த அறிஞர் தெளிவு படுத்துகின்றனர். நான்கு வேதங்களைத்தவிர்ந்த பிற நூல்கள் யாவும் பெரும்பான்மையும் தென்மொழியாளர் கருத்துக்களை கொண்டு விரித்துச் செய்யப் பெற்றவை என்பது ஆய்வாளர் பலர்தம் கருத்தாகும்.

சமற்கிருதம் என வடவரானும், வடமொழி எனத் தென்ன வரானும் சுட்டி வழங்கப்பெறும், அம்மொழி சிறுபான்மை பழைய ஆரியமும் பெரும்பான்மை பழந்தமிழும் கலந்து அளவை முறை யான் செம்மை செய்தமைக்கப்பட்டதாகும்.

அங்ஙனம் ஒருமொழியைப் படைத்துக் கொண்டதற்குக் காரணம், பாரதநாடு முழுமைக்கும் பொதுவாக ஒருமொழி வேண்டுமென அக்கால அறிஞர் பெருமக்கள் கருதியமையேயாகும். இதுபற்றிப் பாயிரவுரையுள்ளும், சொல்லதிகார உரையுள்ளும் ஓரளவு கூறினாம்.

சமற்கிருதமொழியாக்கத்திற்கு ஏற்பச் செம்மை செய்து கொள்ளப்பெற்ற பழந்தமிழ்ச் சொற்களை மீட்டும் தமிழ்மொழிக்கண் எடுத்தாளுங்கால் செந்தமிழ் இலக்கண நெறிக்கு ஏற்பச் செம்மை செய்து அவற்றிற்கு வடசொல் என்னும் பெயரிட்டு மேற்கொள்வா

ராயினர். அம்மரபு பற்றியே இவ்வாசிரியர் செய்யுட் சொல் நான்கனுள் ஒன்றாக அதனை எடுத்தோதி உடம்பொடுபுணர்த லாக, அதிகாரம், ஆதிஅந்தம், சூத்திரம், காண்டிகை முதலாய சொற்களை வழங்கினாராவார். அவற்றிற்கு நேரான செந்தமிழ்ச் சொற்கள் இருப்பவும் அங்ஙனம் ஆசிரியர் எடுத்துக் கொண்டமைக்குக் காரணம் அவை தமிழுக்குத்தாய உரிமை யுடையவை என உணர்த்துதற்பொருட்டேயாம். இம்மொழி வரலாற்று உண்மையை அறியாதாரும் அறிந்தும் கரவுடைமையான் மறைப்பாரும் அவற்றைக் கடனாகப்பெற்றதெனக் கூறுவர். இனி எதிர்காலம் உண்மையை வெளிப்படுத்துமாக.

சூ. 693 : ஒத்த சூத்திரம் உரைப்பின் காண்டிகை
மெய்ப்படக்கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை உத்தியொடு புணரின்
நூலெனு மொழிப நுணங்குமொழிப் புலவர் (97)

க - து : செய்யுளியலுட் கூறிய இலக்கணத்தானே அமைந்த முதனூல்வழி நின்று இயற்றப்படுவதொரு நூலுக்குரிய மரபாமாறு கூறுகின்றது.

பொருள் : மரபியலொடு ஒத்தசூத்திரம் தன்னுள் அமைந்த உரையினை விரிக்கவேண்டின், காண்டிகையின் பொருள்தோன்ற கிளக்கப்பட்ட வகையினையுடையதாகிப் பத்துவகைக் குற்றங்களு மின்றிப் பொருந்து மாற்றான் முப்பத்திருவகை உத்தியொடு பொருந்திவரின் நுண்ணிதின் உணர்ந்துரைக்கும் புலவோர் அதனை நூல் எனக் கூறுவர்.

சூத்திரம் வகையதாகிக் குற்றமின்றி உத்தியோடு புணரின் நூல் என மொழிப எனக் கூட்டிப் பொருள் கொள்க.

சூத்திரந்தானே ஆடிநிழலின் அறியத்தோன்றி
நாடுதலின்றிப் பொருள் நனி விளங்க
யாப்பினுட்டோன்ற யாத்தமைப்பதுவே

எனச் செய்யுளியலுள் கூறிய இலக்கண நெறியும்

மேற்கிளந்தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை எழுத்தின் செய்யுட்டாகிச்
சொல்லுங்காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத்தாகித்
துளக்கலாகாத் துணைமையெய்தி
அளக்க லாகா அரும் பொருட்டாகிப்
பல்வகை யானும் பயன்தெரி புடைபது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர் —(மர-99)



எனப் பின்னர் ஓதப்பெறும் மரபியல்பும் ஒருங்கு அமைந்து வருவதே சூத்திரம் என்பது விளங்க "ஒத்த சூத்திரம்" என்றார். சூத்திரம் என்றது சாதி ஒருமை.

முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள்நின்றகன்ற உரையொடு புண்ர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அது அதன் பண்பே. (செய்-165)

எனச் செய்யுளியலுள் ஓதிய இலக்கணத்தானாகி வரும் நூலுள் உரை அடங்கி நிற்குமிடம் சூத்திரமாகலின் "சூத்திரம் உரைப் பின்" என்றார். உரைப்பின் என்றது உரைவிரித்தலை வேண்டின் என்றவாறு.

காண்டிகை - கண்டம்பட நிற்றல். அஃதாவது சூத்திரத் தில்மைந்த சொற்களும், சொற்றொடர்களும் தம் கூறுகள் விளங்க நின்றல். காண்டிகையினது பொருள் என விரித்துக் கொள்க. கண்டம், கூறு, பகுப்பு என்பன ஒருபொருட் சொற்கள். மெய்ப் பட என்றது பொருள் தோன்ற என்றவாறு. மெய் = பொருள். ஈண்டு அது சொற்பொருளை உணர்த்தி நின்றது. காண்டிகையின் மரபியல்பு பின்னர்க் கூறப்படும். விளக்கம் ஆண்டுக் கண்டு கொள்க. 'கிளத்த' என்றது இளக்கப்பட்ட என்றவாறு.

சூத்திரத்துட்பொருளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற உரைப்பது உரை (மரபு - 102)

ஆதலின், அங்ஙனம் உரைவிரிப்பதற்கேற்பச் சூத்திரம் அமைய வேண்டுதலின் "வகையதாகி" என்றார். குற்றமும், உத்தியும் இவை யெனப்பின்னர் ஓதுவார். எல்லாச்சூத்திரத்தும் எல்லா உத்திகளும் பொருந்திவாரா பொருந்துவன ஓர்ந்தமைக்கப்படும் என்பார் "நேரிதின்" என்றார்.

நூலுக்கோதிய இலக்கணமும் மரபியல்பும் ஒருங்கமைந்த தொரு வழிநூலுக்கு இத்தொல்காப்பியத்தையே எடுத்துக் காட்டாகக்கொள்க. ஈரைங் குற்றமுமின்றி என்றமையான் அவை தாமே நிகழ வல்லனவாம் என்பது "முதல்வழியாயினும் யாப்பினுள் சிதையும்" எனப்பின்னர்க்கூறுமாற்றான் அறியலாம்.

"உத்தியொடுபுணரின் என்றதனான் அதன் அருமைப்பாடு புலனாகும்.

இனி, பேராசிரியர் சிறப்புப்பாயிரத்திற்கு விதிகாணும் நோக்கொடு ஈண்டைக்கு இயைபில்லாத பலகருத்துக்களை வலிந்து கூறியுள்ளமையை ஓர்ந்து விலக்குக.

சூ. 654 : உரையெடுத் ததன்முன் யாப்பினும் சூத்திரம்
புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்
விதித்தலும் விலக்கலும் எனஇரு வகையொடு
புரைதப நாடிப் புணர்க்கவும் படுமே (98)

க - து : மேற்கூறியநூலுக்கு எய்தியதன்மேற் சிறப்பு விதிகூறுகின்றது.

பொருள் : மேற்கூறியநூலின்கண் சூத்திரங்களை உரை தோன்றயாக்குமிடத்தும், குற்றமறக் காண்டிகை ஒருங்கு தோன்றப் புணர்க்குமிடத்தும், உணர்த்தப்படும் பொருளை உடன்பாட்டு முறையான் விதித்தலும், எதிர்மறை முறையான் விலக்கலும் என இருவகையான் குற்றமற ஆராய்ந்து புணர்க்கவும் படும்.

“அதன்முன்” என்ற சுட்டுப்பெயர் மேற்கூறியநூலை உணர்த்திநின்றது. யாப்பினும், புணர்ப்பினும் என்பவற்றிற்கு ஏழனுருபுவிரிக்க புணர்க்கவுய என்ற உம்மை இறந்ததழீஇய எச்சவும்மை.

விதித்தல் பெரும்பான்மையும், விலக்கல் சிறுபான்மையுமாக நிகழும். இவை தனித்தனி வருதலேயன்றி ஒரு சூத்திரத்தின் கண்ணே ஒருங்கும் வரும்.

எ - டு : பன்னீருயிரும் மொழி முதலாகும் (எழுத்-மொழி-26)

குஐ ஆன்எனவரூஉம் இறுதி
அவ்வொடு சிவணும் செய்யுளுள்ளே (சொ.வே-ம.25)

கற்பெனம்படுவது கரணமொடு புணர
கொளற் குறிமரபிற் கிழவன் கிழத்தியை
கொடைக் குரிமரபினோர் கொடுப்பக் கொள்வதுவே (கற்-1)

என வருவன விதித் லாம். இவை தனியே வந்தன.

“எ என வருமுயிர் மெய்யிறாகாது” (எழு-மொழி-38)
“இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந்திசையா” (கிள-48)
முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை. (அக-37)

என வருவன விலக்கலாம். இவை தனியே வந்தன.



உப்ப காரமொடு ஞகாரையு மற்றே
அப்பொரு ளிரட்டா திவணை யான (எழு-மொழி-48)

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கினாகிய உயர் சொற்கிளவி
இலக்கண மருங்கிற் சொல்ல றல்ல (கிளவி-27)

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒனுறி யுயர்ந்த பாலதாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிகலோ னாயினும் கடிவரையின்றே (கள - 2)

எனவருவன விதித்தலும் விலக்கலும் ஒருங்கு வந்தனவாம் பிறயாவும் இவ்வகையுள் அடங்குமாறு கண்டு கொள்க.

‘காண்டிகை’ என்பது உரைவகை எனப்பிறழக்கருதிக் கொண்டமையான் உரையாசிரியன்மார் நூற்கருத்தொடு ஒவ்வாத பல கருத்துக்களைக் கூறிச்சென்றனர். ‘உரை’ பற்றிய விதியினைச் “சூத்திரத்துட் பொருளன்றியும்” என்னும் நூற்பாவான் ஆசிரியர் எடுத்துக் கூறுதலின், காண்டிகை என்பது சூத்திர அமைப்புப் பற்றியதொரு இலக்கணமேயாகும். அக்காண்டிகைப் பகுதிகளுக்கு உரைக்கும் பொருள் காண்டிகையுரை எனப்படும். காண்டிகை என்பதே உரையாகாதெனத் தெளிக. இதனைப் “பழிப்பில் சூத்திரம்” (மரபு 100) “விட்டகல்வின்றி” (மரபு 100) எனப்பின்னர்வரும் நூற்பாக்களான் உணர்ந்து கொள்க. உரையாசிரியன்மாராற் பிறழ்ந்த இலக்கண வழக்குகளுள் இதுவும் ஒன்று

சூ. 655 : மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை எழுத்தில் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்
துளக்க லாகாத் துணைமை எய்தி
அளக்க லாகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்தெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர் (99)

க - து : செய்யுளியலுட் கூறிய இலக்கணத்தான்வரும் சூத்திரத்திற்கு மரபு வகையான் வரும் இயல்பு கூறுகின்றது.

EFEO_GUEST_JLC_02-129 16/06/2011 © École française d’Extrême-Orient, www.efeo.fr

பொருள் : ''நாடுதலின்றிப் பொருள்நனி விளங்க யாப்பினுள் தோன்ற யாத்தமைப்பதுவே'' எனச் செய்யுளியலுட் கிளந்து கூறப்பெற்ற சூத்திரத்துள் உணர்த்தப்படும் பொருளொடு அது சில்வகை எழுத்தானாகும் செய்கையை உடையதாகி எடுத்து விளக்குங்கால் உள்நின்று அகன்ற உரையெல்லாம் அகத்தே செறிந்ததாகி நோக்க நோக்க ஆழ்ந்து செல்லும் நுட்பத்தொடு கூடிய காட்சியை உடையதாகி, மாறுபடுவார்தம் கடாவினான் அசைத்தற்காகாத திண்மையுடையதாகி, இவ்வளவே எனவரை யறுத்தற்காகாத அரிய பொருளை யுடையதாகிப் பல்லாற்றானும் பொருள்விளக்க முடையதாதல் சூத்திரன் மரபியல்பு என யாப்புறவு செய்தனர் புலவர்.

சில்வகை எழுத்தென்றது, எண்ணலளவையாற் குறைந்து நிற்றலை. சூத்திரத்தின் தொகுதியே நூலாதலானும் நூலினை அடி வரையில்லாதனவற்றுள் ஒன்றாகக் கூறினமையானும் சூத்திரம் யாப்பினுட் படாதுபோலும் எனக் கருதற்க. அது பெரும் பான்மையும் அசை, சீர், தொடை, மரபு, நோக்கு, மாட்டு வண்ணம் முதலிய உறுப்புக்களான் அமைந்து பாவினது தன்மையை உற்றுச் செந்தூக்கும் வஞ்சித்தூக்கும் பட வரும் என்பது விளங்க உடம்பொடு புணர்ந்துச் சூத்திரஞ்செய்து ''பாவண்ணம் நூற்பாற்பயிலும்'' என ஓசையும் எடுத்துக் கூறினார் இவ்வாசிரியர். அவ்வாற்றான் ''சில்வகை எழுத்தின் செய்யுட்டாகி'' என விதந்து கூறினார். அதுபற்றியே சூத்திரத்தை நூற்பா என்று வழங்குதல் மரபாயிற்றென்க.

உறுபொருளேயன்றி வலிந்தும் நலிந்தும், போலியும் சொல்லுவார் சொற்பொருள் எல்லாம் கொண்டு நிற்றலின் ''உரை யகத்தடக்கி'' என்றார் துளக்குதல் = கலக்குதல். துணைமை = வலிமை குறித்து நின்றது. அஃதாவது தனக்கு முன்னும் பின்னும் உள்ள சூத்திரங்கள் தன் பொருளுக்கு இயைய நின்று துணை செய்தலின் அவ்வலிமை துணையெனப்பட்டது. இதனான் சூத்திரப்பொருள் ஒன்றனொடு ஒன்று இயைந்து வரல்வேண்டும் என்பதும் பெறப்படும். ''பல்வகையானும்'' என்றது. ஆடி நிழலின் அறியத் தோன்றுதல் முதலாக அரும்பொருட்டாதல் ஈறாகக் கூறியவற்றை.

இது சூத்திரத்தியல்பு என்றதனான் இதனைச் செய்யுளியலுள் கூறிய சூத்திர இலக்கணத்தொடு ஒருங்கு கூறாமல் ஈண்டு வைத்துக் கூறியது என்னையெனின்? ஈண்டுக் கூறியது வரை யறையுடைய இலக்கணமன்று சான்றோர் யாத்தமைக்கும் மரபு ஆகலான் ஆண்டு ஒருங்கு கூறாமல் ஈண்டுக் கூறினார் என்க.



இலக்கணம் என்பது சொல்லப்பெற்ற விதி அப்பொருளின் கண் திரிபும் குறைவுமின்றி நிலை பெறுவது. மரபென்பது இலக்கணம்போலச் சான்றோரான் மேற்கொள்ளப்பெறுவது. அஃதாவது மரபாகக் கூறப்படுவனவெல்லாம் அப்பொருளின் கண் ஒருவந்தம் நிலைபெறல் வேண்டுமென்பது யாப்புறவில்லை. சிலவோ பலவோ யாவுமோ அமையப்பெறலாம், அமையாதும் போகலாம் ஆதலின் நூலையும் சூத்திரத்தையும் பற்றிய இன்றி யமையாத இலக்கண முறைமையைச்செய்யுளியலுட் கூறி, மரபாக வருவனவற்றை ஈண்டுக் கூறினார் என்க. எனவே ஈண்டுக் கூறியவகை எல்லாம் ஒவ்வொரு சூத்திரத்தும் அமையவேண்டு மென்னும் கடப்பாடில்லை. ஏற்ற பெற்றி அமைந்து வரும். அஃதாவது உரியலுள் வரும் இருசீரடிச் சூத்திரம் முதல் களவியல் கற்பியலுள் வரும் பல அடிகளைக் கொண்ட சூத்திரம் இறுதியாக யாவற்றுக்கும் ''ஆடி நிழலின் அறியத்தோன்றி நாடுதலின்றிப் பொருள் நனி விளங்குதல்'' என்னும் இலக்கணம் பொருந்திவரும் ஈண்டுக் கூறிய மரபு சிலபல அடிகளையுடைய சூத்திரங்களுக்கே பொருந்திவருமென்க.

இங்ஙனம் ஆசிரியர் வகுத்து ஓதும் இயலமைப்பின் நுட்பங் களைச் சிறிதும் ஓராதார் இவ்வாறு வருவனவற்றின் நோக்கும் பொருளும் தேறாராய்த் தத்தமக்குத் தோன்றிய வாறெல்லாம் கருத்துரைத்துச் செல்வாராயினர்

எ - டு : வேற்றுமை குறித்த பொருள் மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் பொருள் மொழி நிலையும்
எழுத்தே சாரியை ஆயிருபண்பின்
ஒழுக்கல் வலிய புணருங்காலை (எழுத்-புண 10)

இச்சூத்திரம் நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும் தம்முட் புணர்ந்து தொகைமொழியாயும், தொடர்மொழியாயும் நிற்கும் என்பதும், புணருமிடத்து அவை வேற்றுமைப் பொருள்படவும் அல்வழிப் பொருள் படவும் புணரும் என்பதும் அவை தம்முள் இடையறவு படாமல் இணைதற்குப் புணர்ச்சித்திரிபுகளுள் தோன்றல் என்னும் விதிப்படி எழுத்தோ, சாரியையோ பெற்று நடக்கும் வன்மையுடையவை என்பதும், அவ்வழி அவை இயல்பாகப் புணர்தலும் உண்டு என்பதும், அவ்வாற்றான் சொற்றொடர்கள் வேற்றுமைத்தொடர் (அது அல்லாத) அல்வழித் தொடர் எனப்பாகுபாடுபெறும் என்பதும், உருபு வெளிப்படாமல் தொக்குநிற்கும் தொடர்களே வேற்றுமை குறித்த பொருள்மொழித் தொடர் என்பதும் பிறவும் ஆடி நிழலின் அறியத் தோன்றி நிற்குமாறும், புணர்மொழிகட்கு இடையே சாரியை வரும் என

நுதலிய பொருள் நாடுதலின்றி நனி விளங்கி நிற்குமாறும் கண்டு கொள்க.

இனி நிறுத்த சொல்லின் ஈறும் குறித்து வருகிளவியின் முதலும் மூவகைத்திரிபும், இயல்புமாகப் பெயரும், பெயரும் தொழிலும், தொழிலும் பெயரும், தொழிலும் தொழிலும் தொழிலு மாகிய சொற்களின் பொருளியைபு பற்றியே வேற்றுமைப்புணர்ச்சி அல்வழிப்புணர்ச்சி எனப்பாகுபாடுபெற்றதென்பது விளங்கி நிற்கு மாறும் கண்டுகொள்க.

மற்று இது நான்மரபு முதலாகக் கூறப்பெற்றகருவி இயல் களையும் சொல்லதிகார வேற்றுமையியலுள் கூறப்படும் வேற்றுமை யியல்புகளையும், கிளவியாக்கத்தும் எச்சவியலிலும் கூறப்பெறும் தொடர்மொழி இயல்புகளையும் தொகைமொழி இயல்புகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டு சில்வகை எழுத்தின் செய்யுட்டாய் ஆசிரியத் தூக்குப்பட தொடைநயத்தொடும் நிற்குமாறறிந்து கொள்க.

இனி வேற்றுமை குறித்த பொருள் என்பதனான் வேற்றுமை என்பது உருபென்பதும் பொருள் என்பது செயப்படுபொருள் முதலாயவை என்பதும் விளங்குதலான் தமக்கெனத்தனியுருபு இல்லாத எழுவாய் வேற்றுமையும் விளிவேற்றுமையும் புணர்ச்சி இலக்கண முறைமைக்கண் அல்வழியாக நிற்கும் என்பதும் அல்வழி என்பது உருபுகளான் வேற்றுமையுறும் தொடர் அல்லாத வழி என வேற்றுமைவழி என்பதனைச் சுட்டிக்குறியீடு பெற் றுள்ளது என்பதும் எழுத்தே சாரியை என்றதனான் சாரியை என்பதற்குச் சிறந்தது ஓரெழுத்து மொழியல்லாத இடைச் சொற்களே என்பதும் சார்ந்து நின்று இயைத்தலானும் இசைத்த லானும் ஓரெழுத்தும் சாரியை என்னும் வாய்பாட்டான் சுட்டப் படும் என்பதும் அவை புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்கு உதவுவனவாக வரும் என்பதும் பிறவுமாகிய உரைகளையெல்லாம் தன்னுள் அடக்கிக்கொண்டுநிற்குமாறும் அவ்வுரைகள் நுண்மை யொடு புணர்ந்த ஒண்மைத்தாகி நிற்குமாறும். இதற்கு முன்னும் பின்னும் அமைந்துள்ள சூத்திரங்களான் தன்பொருள் துளக்கலாகாத் துணைமையும் எய்தி நிற்குமாறும் தொகை மரபு முதலாக அடுத்துவரும் ஐந்தியல்களுள் கூறப்படும் விதிகட் கெல்லாம் அடிப்படையாய் அளக்கலாகா அரும்பொருட்டாகி பல்லாற்றானும் பயன் தெரிபுடைதாக நிற்குமாறும் கண்டுகொள்க. இனி, சில மரபுகள் கொள்ளாது வந்தனவற்றுக்குச் சில எடுத்துக் காட்டு,



எழுத்தெனப்படுவ.

அகரமுதல், னகர இறுவாய் முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே (எழுத் - 1)

என்பது அளத்தற்கரிய அரும்பொருளுடையதாகி ஏனையமரபுகள் பொருந்த வந்தது.

அவற்றுள், அஇஉ
எ ஒ என்னும் அப்பா லைந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப (எழுத்-3)

என்பது உரையகத்தடக்கிய ஒண்மையுடையதாக வந்தது.

மூவளபிசைதல் ஓரெழுத்தின்றே (எழுத்-5)

என்பது உரையத்தடக்கி வந்தது.

வல்லெழுத்தென்ப கசடதபற (எழுத்-19)

என்பது நுதலிய பொருளை விளக்கும் அளவினதாக மட்டுமே வந்தது பிறவும் இவ்வாறே ஓர்ந்துணர்ந்து கொள்க.

சூ. 656: பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்
கரப்பின்றி முடிவது காண்டிகையாகும். (100)

க - து : மேலே நூலுக்குரிய மரபுகளைத் தொகுத்துக்கூறிய வழி '' ஒத்த சூத்திரம் உரைப்பின் காண்டிகை மெய்ப்படக்கிளந்த வகையதாகி '' என ஓதியகாண்டிகை அமைந்துவரும் மரபு கூறுகின்றது.

பொருள் : செய்யுளியலுள் ஓதிய இலக்கணமும் இவ்வியலுள் மேற்கூறப்பட்ட மரபுகளும் பற்றி வரும் குற்றமில்லாத சூத்திரந் தான் உணர்த்தக்கருதிய இலக்கணங்களுள் யாதொன்றையும் மறைத்தலின்றிப் பொருள் நனிவிளங்கும் சொற்களானும், தொடர்களானும் முடிந்து நிற்பது காண்டிகை யாகும்.

சூத்திரமாவது சொற்களும் தொடர்களும் காண்டிகைபட அமைந்து நிற்பதொன்றாகலான், சூத்திரப்பொருள் நாடுதலின்றி நனிவிளங்க வேண்டின் காண்டிகையாகிய உறுப்புக்கரப்பின்றி நிற்றல் வேண்டுமென்றார் கரப்பின்றி முடிவது '' என்றார்.

இது, மரபாகலின் ஓரோவழிச் சூத்திரங்களின் முடிவு வெளிப் படையாகத் தோன்றாதிருப்பினும், சொல்லெச்சமும், பொருளெச்ச மும் இசையெச்சமுமாக நிற்பனவற்றைக்கூட்டி உத்தியோடு காணுமிடத்துப்பொருள் புலப்படுமென அறிக.

எ - டு : ஞநம யவஎனும் முதலாகு மொழியும்
உயிர் முதலாகிய மொழியும் உளப்பட
அன்றியனைத்தும் எல்லாவழியும்
நின்ற சொல்முன் இயல்ப ஆகும் மே (தொகை - 2)

இது, நிறுத்தசொல்லின்முன் இயல்பாகப்புணரும் குறித்துவருகிளவி கள் இத்தொடக்கத்தன எனக்கூறுபடநின்று கரப்பின்றி முடிந்தவாறு கண்டுகொள்க.

மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கைமருங்கின் மிகற்கை தோன்றலும்
உயிர்மிகவருவழி உயிர்கெடவருதலும்
... ... ... ... ... ... ... ... ...
ஐகார வேற்றுமைத்திரிபென மொழிப (தொகை - 15)

இதுஇரண்டாம் வேற்றுமைஉருபு தொக்குவரும் புணர்மொழிகள் இவைஎன விதிப்பதாகும். இதன்கண் ஒவ்வொருவிதியும் கூறுபட்ட தொடர்களாக நின்று கரப்பின்றி முடிந்தவாறு கண்டுகொள்க.

செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப (கிளவி - 28)

இது, சொற்கள் காண்டிகைபட நின்றுமுடிந்தது.

வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல்
வேறுபடுவினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத்தோன்றும் பொருள்தெரிநிலையே [கிள - ]

இது, தொடராகவும் சொல்லாகவும் கூறுபடநின்று, கரப்பின்றி முடிந்தது.

குறித்தோன் கூற்றம் தெரித்து மொழிகிளவி (கிளவி - 56)
என்றாற் போல்வன அரிதின் பொருள் கொள்ளுமாறு வருவன.

சூ. 657 : விட்டகல் வின்றி விரிவொடு பொருந்தி
கட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே (101)

க - து : இதுவுமது.

**பொருள் :** மேற்கூறிய காண்டிகையானது நுதலிய பொருள் விடுபட்டுப்போதலும், மிக விரிவுறுதலுமின்றி விளக்கத்தொடு பொருந்தி யாப்புறவமைத்த சூத்திரம் தன் குறிக்கோளை முடித்தலைக் கருதியதாக ஏது நடையினும் எடுத்துக்காட்டினும் பொருந்துமாறு அமைந்த பொருள் நெறியினையுடையதாகும்.

'விட்ட கல்வின்றி' என்றதனை விடுதலும், அகல்தலும் என உம்மை விரித்துப் பொருள் கொள்க. அஃதாவது யாவற்றையும் கூறின் சூத்திரம் நெடிதாகிச் செல்லுமெனக் கருதிச் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லாது விடுதலும் நாடுதலின்றிப் பொருள்



நனி விளங்க வேண்டுமென்று கருதிச் சொற்களைப் பெருக்கிக் கூறுதலும் இன்றி என்றவாறு.

விரிவொடு பொருந்தி என்றது, உள்நின்றகன்ற உரையெல்லாம் விரித்தற்குரிய சொற்களான் அமைந்து என்றவாறு. 'கட்டிய' என்றது "யாப்பினுட்டோன்ற யாத்தமைப்பதுவே" என்ற இலக்கணத்தை. ஏது நடையாவது இக்காரணத்தான் இஃது இவ்வாறு சொல்லப்பட்டது என விளங்கக் கூறும் நடை. எடுத்துக்காட்டென்றது கூறப்படும் இலக்கணம் இதனைப் பற்றியது என எடுத்துக்காட்டிக் கூறுதல். இவற்றை இடைக்கால நூலோர் 'ஏதுவின் முடித்தல், எடுத்துக்காட்டல்' என உத்தியாகக் கூறுவர். இவை காண்டிகை அமைப்பாதலன்றி உத்தி வகையாதற்கு ஏலாமையை ஓர்ந்து தெளிக. மேவுதல் = பொருந்துதல். அஃது ஈண்டு விரும்புமாறு, என்னும் நயத்தோன்ற நின்றது. மெய்ந்நெறி = பொருள் முறைமை. அது என்றது மேற்கூறிய காண்டிகையை.

இச்சூத்திரத்தான் நூல் என்னும் செய்யுள் வகைக்கு அடிவரை இல்லை என்னும் காரணமும் புலப்படும். மேலும் சூத்திரம் தான் கூறக்கருதிய பொருளமைதிக்கேற்ப இருசீரடி, மூச்சீரடிகளானும் அளவடிகள் ஓரடி முதல் பல அடிகளானும் அமைந்து வரும் என்பதும் பெறப்படும்.

எ - டு : பொற்பே பொலிவு (உரி-37) வறிது சிறிதாகும் (உரி-38)
இவை இருசீரடிகளான் அமைந்த சூத்திரங்கள்
காரும் மாலையும் முல்லை (அகத்-6)
வைகுறு விடியல் மருதம் (அகம்-9)

இவை மூச்சீரடிகளான் வந்தன.

மெய்யின் இயற்கை புள்ளியொடும் நிலையல் (எழு-15)
மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே (எழு-18)

என்பவை அளவடி ஒன்றான் அமைந்தவை.

"நாற்றமும் தோற்றமும்" என்னும் களவியற்சூத்திரம் நாற்பத்தாறு அடிகளான்வந்தது. "கரணத்தின் அமைந்து முடிந்தகாலை" என்னும் கற்பியற்சூத்திரம் ஐம்பத்தொன்பது அடிகளான் வந்தது. இவையெல்லாம் விட்டகல்வின்றி விரிவொடு பொருந்தி நிற்குமாறும், காண்டிகையாகக் கூறுபட்டு நிற்குமாறும் கண்டுகொள்க.

"குறுமையும் நெடுமையும் அளவிற்கோடலின்
தொடர்மொழியெல்லாம் நெட்டெழுத்தியல" (மொழி-17)



EFEO_GUEST_JLC_02-132 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இறைச்சிப்பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்து வழிமருங்கிற் றோன்ற லான (பெய-42)
காமத்திணையின் கண்ணின்று வருஉம்
நாணும் மடனும் பெண்மைய வாகலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்படவாரா அவள்வயினான (களவி-18)

என்றாங்குவருபவை ஏதுநடையான் கண்டம் படவந்தனவாம்.

ஒடுமரக்கிளவி உதிமரவியற்றே (உயிர்-மய-60)
சேயென் மரப்பெயர் ஒடுமரவியற்றே (உயிர்-மய-76)
வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினென்று
அன்னபிறவும் அதன்குணம் நுதலி
இன்னது இதுவென வருஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே (சொல்-எச்-20)
வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ
நின்றவை களையும் கருவிஎன்ப (கள-4)

என்றாங்கு வருபவை எடுத்துக்காட்டொடுவந்தனவாகும்.

இனி, வருவிசைப்புனலைக் கற்சிறைபோல
ஒருவன் தாங்கிய பெருமையானும் (புறத்-7)
பிறநீர்மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர்போலும் உணர்விற்றென்ப (கள-28)
அந்தரத்தெழுதிய எழுத்தின்மான
வந்தகுற்றம் வழிகெட ஒழுகலும் (கற் - 5)

என்றாங்கு வருபவை எடுத்துக்காட்டின் பாற்பட்டு அடங்கு மாறும்.

தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனான்
அநதமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும் (கற்-6)

என்றாங்கு வருவன ஏது நடையின் பாற்பட்டு அடங்குமாறும் பிறவும் இவற்றுள் அடங்குமாறறிந்து கொள்க.

சூ. 658 : சூத்திரத் துட் பொரு ளன்றியும் யாப்புற
இன்றியமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே. (102)

க - து : "ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை மெய்ப்படக்கிளந்த வகையதாகி" எனப்பட்ட காண்டிகையின்வழிச் சூத்திரத்திற்கு உரைகாணும் முறைமை கூறுமுகத்தான் உரையினது மரபாமாறு கூறுகின்றது.



பொருள் : "நாடுதலின்றிப் பொருள்நனிவிளங்கும்" எனப் பட்ட சூத்திரமானது நுதலிய உட்பொருளேயன்றி ஒரு தலையாக அதற்கு இன்றியமையாது பொருந்துவனவற்றையெல்லாம் அவ் உட்பொருளொடு கூட்டிச்சொல்லுதல் உரை எனப்படும். கருத்தினது உருவத்தைத் தெளிவுபட காட்டுதலின் உரை எனப்பட்டது.

உட்பொருளன்றியும் எனவும் ஒன்ற உரைப்பது எனவும் கூறியதனான் நுதலியபொருளை விதந்தெடுத்துக் கூறுதலும் உரையினது மரபென்பது விளங்கும். பொருள் எனினும் நுதலிய பொருள் எனினும் ஒக்கும். கருத்துரை என்பதும் அது. 'இன்றியமையாதியைபவை' இவை என்பது மேல் வரும் சூத்திரத்தான் கூறுப.

சூ. 659 : மறுதலைக்கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றன ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர் (103)

க - து : இதுவுமது.

பொருள் : மறுதலைப்பொருள்காட்டி வினாதலும், ஐயவாய் பாட்டான் வினாதலும், அவற்றிற்கு விடையிறுத்தலும் உடைத் தாய், எடுத்துக்கொண்ட அந்நூற்கருத்துக்களானும் முந்துநூற் கருத்துக்களானும் கற்போரிடத்துநிகழும் ஐயஉணர்வினையும், திரிபுணர்வினையும் களைந்து, கற்போர் தெளிவுறுமாறு ஒரு பொருளை ஒற்றுமைப்படக்கொளுத்திக் கவர்த்தலின்றி முடித்து நிற்றல் மேற் கூறிய உரையினது மரபாகும் எனக்கூறுவர் புலவர்.

இதனான் உரைகாண் போர்க்குத் தொன்னூற்பயிற்சியும் பல்கலையறிவும் வேண்டுமென்பதும் உணர்த்தப்பட்டவாறறிக. மறுதலை = எதிரானது, மாறானது, பிறிது என்னும் பொருள்தரும். கடா = ஐயத்தான் எழும்வினா. ஐயம் = ஒருபொருளின் மேல் இரண்டுபட்டுநிற்கும் உணர்வு மருட்கை = அறியாமை, திரிபுணர்ச்சி. கொளுவுதல் = உளங்கொள்ளுமாறு செறியச் செய்தல்.

எ - டு : அவற்றுள்,
முன்னிலை தன்மை ஆயிரிடத்தொடு
மன்னாதாகும் வியங்கோட்கிளவி (சொல்-வினை)

இது வியங்கோட்கிளவி நிலைபெறாத இடங்கூறுகின்றது. என்பது சூத்திரம் கருதிய துணர்த்தலாகும். இருதிணைச்சொற்கும் ஓரன்ன உரிமையாகவரும் விரவுனைகளுள் வியங்கோள் வினைச் சொல் முன்னிலையிடம் தன்மையிடம் என்னும் அவ்வீரிடத்துச் சொல்லாகநிலை பெறாதாகும் படர்க்கையிடத்துச்சொல்லாயே நிற்கும். என்பது காண்டிகைப்பொருள் உரைத்தல்.

இது விதித்தலும் விலக்கலும் என்னும் காண்டிகைபுணர்ப் பினுள் விலக்குதல் வகையினமைந்த சூத்திரம். ஏவல்கண்ணியும் கண்ணாதும் வரும் வியங்கோள்களுள் இது ஏவல்கண்ணாத வியங்கோட் சொல்லுக்குரிய விதியாகும். என்னை ?

"முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி"

என முன்னிலை வினை விதந்தோதப்பட்டமையான், முன்னிலை யாரைத் தொழிற்படுத்தும் ஏவல் கண்ணிய வியங்கோள் அடங்கு தலின் இஃது ஏவல் கண்ணாத வியங்கோட் கிளவி என்பது பெறப்படும்.

ஒருசார் வியங்கோள் வினைச் சொற்கள். (காண்க, வருக, உண்க என்றாற் போல்வன) கொற்றா காண்க, சாத்தா வருக. தேவா உண்க. என்புழி ஏவல் கண்ணியும், இல்லுறை தெய்வமே உண்க, மன்றமர் கடவுளே வருக. என்புழி ஏவல் கண்ணாமலும் நிற்கும் அஃதாவது வியங்கொள்ளும் பொருள் கண்கூடாகச் செயற்படுதலுப் படாமையும் என இருநிலைமையவாக நிற்கும்.

வாழ்க, பொலிக, ஒழிக, மன்னுக என்றாற்போல்வன கூறுவோர் விருப்பத்தைப் புலப்படுத்துவதன்றி செயற்படச் செய்வதன்றாகலின் ஏவல் கண்ணாதனவாகவேவரும் அவை யாவும் ஓரீற்றவாய் இருதிணை ஐம்பாற்கண்ணும் படர்க்கைச் சொல்லாயே வரும்.

வியங்கோள் எவற்பொருள் உடையதாயும் வருதலின் தன்மை முன்னிலை எனமுறையிற் கூறாமல் முன்னிலைத் தன்மை என முன்னிலையை முதல்வைத் தோதினார். இத்தகையவை இன்றி யமையாதியைபவை ஒன்ற உரைத்தலாம்.

மன்னுக பெரும நிலமிசையானே-கடாவுகபாகநின் கால்வல் நெடுந்தேர்-என முன்னிலைக்கண்ணும் யானும், வேந்தனும் வெல்க, யானும் நின்னொடுடனுறைக, என முன்னிலையை அகப்படுத்திய தன்மைக் கண்ணும், மெலிகோல் செய்தேனாகுக. குடிபழிதூற்றும் கோலேனாகுக எனத்தனித்தன்மைக்கண்ணும்



வியங்கோள் வருதலின் 'மன்னாதாகும்' என்றல் நிரம்பாதெனின்? என்பது மறுதலைக்கடா. அற்றன்று வியங்கோள் அவ்வீரிடத்தும் வழங்கப் பெறாதென்பது கருத்தன்று. வியங்கோட் சொல் முன்னிலைக்கண்வரினுப், தன்மைக்கண்வரினும் அவ்விடத்திற் குரிய சொல்லாக நிலை பெறாது படர்க்கையிடத்ததாயே நிற்கும் என்பது நுதலிய பொருள் என்க. அஃதாவது 'செய்ம்மன' என்னும் வாய்பாட்டுமுற்றுச் சொல் யான் உண்மன, நீயுண்மன, அவன் உண்மன எனவந்தவழிப் பொருள் விரித்துணர்த்துங் கால் யான் உண்பேன் நீ உண்பாய், அவன் உண்பான் என அவ்வவ் விடத்திற்குரிய பொருள் பயந்து மூவிடத்திற்கும் உரித்தாய் விரிந்து நிற்கும். யான் வாழ்க, நீ வாழ்க, அவன் வாழ்க என வியங்கோளாக வரும் வாழ்க என்னும் வியங்கோட் கிளவி பொருள் விரியுங்கால் யான் வாழ்வேனாகுக, நீ வாழ்வாய் ஆகுக, அவன் வாழ்வானாகுக எனப்படர்க்கை முடிபாக விரிதலன்றி அவ்வவ் இடத்திற்குரிய சொலலாக நிற்றற் இயையாமையான் "ஆயீரிடத்தொடும் மன்னாதாகும்" எனப்பட்டது. யான் வாழ்வேன், நீ வாழ்வாய், அவன் வாழ்வான் எனப் பொருள் கூறின் அது முற்று வினையாதலன்றி வியங்கோள் வினை யாகாமையறிக. என்பது மறுதலைக்கு மாற்றமுரைத்தலாம்.

ஆசிரியர் இவ் இலக்கணத்தை வியங்கோட்கிளவி எனச் சொன்மை பற்றியல்லது பொருண்மை பற்றி ஓதாமையும் ஆயீரிடத்தும் வராது என்னாமல், 'ஆயீரிடத்தொடு' என்றும் 'மன்னாதாகும்' என்றும் ஓதியமை நோக்கியுணர்க என்பது ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கியுரைத்தலாம்.

ஆயிரிடததொடு என்பதற்கு அவ்இரண்டிடத்தொடும் எனவும் மன்னாதாகும் என்றதனான் அவ்விடங்களொடு சிறுபான்மை வரும் எனவும் கூறுதல் கவர் பொருள் உரைத்தலாம். அவ்விரண்டிடத்தும் வாராது வரின் வழுவாம் எனவும் வருதல் வழுவமைதி எனவும் கூறல் போலிவுமையாம். அவ்வீரிடத்தும் வருதல் ஆசிரியர் காலத்தில் வழக்கில்லை. பிற்கால வழக்கு எனலும் அவற்றைப் புதியன புகுதலாகக் கொண்டு ஏற்கலாம் எனலும் வழுவுரையாம். என்னை

வழிபடு தெய்வம் நிற்புறங்காப்பப்
பழிதீர் செல்வமொடு வழவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்து (செய்-106)

என முன்னிலைக்கண் வாழ்த்துமாறு பற்றி ஆசிரியர் ஓதலின் என்க. என்பது போலி மறுத்துரைத்தலாம். இங்ஙனம் நோக்க

EFEO_GUEST_JLC_02-134 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நோக்க விரிவுபடுதலின் உள்நின்று அகன்ற உரை என்றார் ஆசுரியர் என்க

எனவே வியங்கோட்கிளவி பொருள் நிலையான் படர்க்கைக் சொல்லாவதல்லது பிற ஈரிடத்துச் சொல்லாக நிலைபெறாது என்பதும், வாழ்த்துதல் முதலாய பொருள்பற்றிவரும் வியங்கோள் வினை !இருதிணை ஐம்பால் மூவிடத்திற்குரியதாகவரும் பொது வினை என்பதும் பிறவும் தெளிவாம் என்பது தெற்றென ஒரு பொருள் ஒற்றுமை கொளீ இத்துணிவோடு உரைத்தலாம் பிறவும் அன்ன.

இனி இவ் உரை மரபுகள் யாவும் எல்லாச் சூத்திரத்திற்கும் அமைந்துவரும் எனக் கருதற்க. இதனை இலக்கணமாகக் கூறாமல் மரபாகக் கூறினமையும் அக்கருத்தேபற்றியெனத் தெளிக.

இச்சூத்திர உரையின்கண் பேராசிரியர் பிறிதுபிறிதேற்றலும் உருபுதொகவருதலும் (சொல்-105) என்னும் சூத்திரத்தை எடுத்துக்காட்டிக் கூறும் விளக்கங்கள் தவறானவை என்பதைச் சொல்லதிசார உரையான் கண்டு தெளிக

சூ. 660 : சொல்லப் பட்டன எல்லா மாண்பும்
மறுதலை யாயினும் மற்றது சிதைவே (104)

க - து : சூத்திரம் முதலியவற்றிற்கு மேற்கூறிய மரபியல்கள் பிறழின் சிதை வாகும் என்கின்றது.

பொருள் : சூத்திரம், காண்டிகை, உரை ஆகியவற்றிற்கு நாடுதலின்றிப் பொருள் நனிவிளங்குதல் முதலாகத் தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளுவுதல் ஈறாக ஓதப்பெற்ற மரபியல்பு கள் எல்லாம் மாறுபட அமையினும், அவற்றிற்குத்தக அமையா விடினும் வழிநூல் சிதைவுடையதாகும்.

"வழியெனப்படுவது அதன்வழித்தாகும்" என அதிகாரப் பட்டவழி நூலுக்கே இதுகாறும் மரபிலக்கணம் கூறப்பட்டு வருதலின் அது என்னும் சுட்டுப்பெயர் வழிநூலைக்குறித்து நின்றது என்பது மேல்வரும் சூத்திரத்தானும் விளங்கும். இதனான் வழிநூல் செய்வோர் இம்மரபிலக்கணங்களை வழுவாமற் போற்றல்வேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது.

சூ 661 : சிதைவில என்ப முதல்வன் கண்ணே (105)

க - து : கூறப்பெற்ற மரபிலக்கணங்கள் எல்லா நூற்கும் பொதுவன்றே அவற்றை வழிநூற்கே வற்புறுத்தியது என்னை? என நிகழ்வதோரை யம் அகற்றுகின்றது.



பொருள் : முதல்வன் அருளிய நூலின் கண் சிதைவுகள் என்பவை இல என்று கூறுவர் புலவர்.

முதனூலாசிரியன் வினையின் நீங்கிய விளங்கிய அறிவனாத லானும் மேற்கூறப்பட்ட மரபுகள் முதல் நூற்கண் அமைந்துள்ள முறைமைகளைத் தேர்ந்து வகுத்துக் கொள்ளப் பெற்றவையே யன்றிஆண்டு எடுத்தோதுப்பட்டவையல்ல வாகலானும் முதனூற் கண் சிதைவில என்ப என்றார். அவ்வாற்றான் மேற்கூறிய மாபிலக்கணங்கட்கு முதனூல் எடுத்துக்காட்டாக நிற்குமென்பது புலனாகும்.

சூ. 662 : முதல்வழி யாயினும் யாப்பினுட்சிதையும்
வல்லோன் புணரா வாரம் போன்றே (106)

க - து : முதனூல் கூறிய பொருளையே வகுத்துச் செய்யும் வழி நூற்கண் எவ்வாறு சிதைவு நேரும் என்னும் ஐயம் களைகின்றது.

பொருள் : முதனூற் பொருளை ஆண்டுள்ளவாறே கொண்டு வழிநூல் இயன்றதாயினும் அது தொகையாகவும், விரியாகவும், தொகைவிரியாகவும் செய்யப்படுதலின் அங்ஙனம் யாத்தமைக்கும் யாப்பினுள் இசைவல்லோன் முற்பட இசைக்கும் பாடலொடு அவ்வன்மை இல்லாதான் அதனைப் பிற்பட்டு இசைக்குங்கால் அதனொடு முழுதும் ஒப்ப இயையாத வாரப்பாடல் போன்று வழி நூற்கண் சிதைவு தானே தோன்றும்.

வாரம் என்னும் பல பொருளொரு சொல் ஈண்டு முற்பட ஒருவன் கூறும் பாடலை வாங்கி மற்றொருவன் பிற்கூறுதலை உணர்த்தி நின்றது. இதனை "வாரம் பாடும் தோரிய மகளிர்" (சிலம்பு-14-155) என்பதனான் அறிக.

முதனூற் பொருளைத் தொகுத்துச் செய்யுமிடத்துச்சில விடுபடுதலும் விரித்துச் செய்யுமிடத்துச்சில கூடுதலாக அமைதலும் இயற்கையாதலின் யாப்பினுட் சிதையும் என்றார்.

மொழிபெயர்த்து அதர்ப்படயாக்கும் வழிநூல் தொகுத்தலும் விரித்தலுமின்றி உள்ளவாறே செய்யப்படுதலின் சிதைவு நேரா தென்க. அதுவும் வன்மையில்லார் செய்யின் சிதையும் என்க.

சூ. 663 : சிதைவெனப்படுபவை வசையற நாடின்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல் மிகைபடக் கூறல்

EFEO_GUEST_JLC_02-135 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பொருளில கூறல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியான் இழுக்கங் கூறல்
தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்
என்ன வகையினும் மனங்கோளின்மை
அன்ன பிறவும் அவற்று விரியாகும் (107)

க - து : சிதைவாவன இவை என்றும் அவற்றின் தொகையும் கூறுகின்றது.

ஓதப்பெற்ற மரபியல்களினின்று வழுவியவெல்லாம் குற்ற மென்பது தானே பெறப்படுமாயினும் இன்ன காரணத்தான் இது குற்றம் என விளங்கிக் கொள்ளுதற் பொருட்டும் வழிநூல் செய்வார் அவ்வகைக் குற்றங்கள் நேராமற்பொருட்டும் இங்ஙனம் வகுத்துக் கூறினார் என்க. உரையும் நூலொடு ஒத்த சிறப்பினையுடையதாகலின் ஒப்பக்கூறல் என்னும் உத்திபற்றி உரைக்கும் இவ்விலக்கணம் கொள்ளப்படுமென்க.

பொருள் : சிதைவெனப்படுபவை வசையற நாடின் என்பது நூலின்கண் நேரும் குற்றம் இவை என விதந்து கூறப்படுவன வற்றைப் பிழையற ஆராயின் என்றவாறு.

மற்று அக்குற்றங்களை வசையறறாடின் என்றது என்னை யெனின்? சான்றோர் தம் நூலுள் பிறிதொரு பயன்கருதி முன்னர்க் கூறியதொன்றனைப்பின்னர் ஓரோவழிக் கூறியவற்றை ஒருவன் அறியாமையான் இஃது இன்ன குற்றம் எனச் சொல்லுமாயின் அதனை ஆராய்ந்து துணிதல் வேண்டி வசையறநாடின் என்றார்.

1) கூறியது கூறல் என்பது: முன்னர்க் கூறியதொரு விதியையே வேறுபொருளின்றிப் பிறிதோரிடத்தும் கூறுதலாம்.

2) மாறுகொளக்கூறல் என்பது தான்முன்னர்க் கூறியதொரு கோட்பாட்டிற்கு முரணானதொரு கருத்தினைப் பினனர் ஓரிடத்து கூறுதல்.

3) குன்றக்கூறல்என்பது. ஒன்றற்கு இலக்கணங் கூறப் புகுந்து அதன்பகுதிஎல்லாம் அடங்கக்கூறாமல் சிலவற்றை விட்டுச் சிலவற்றை எடுத்துக்கூறுதலாம்.

4) மிகைப்படக்கூறல்என்பது - கூறவந்த பொருளை விளக்குதற்கு எவ்வளவு சொற்கள்வேண்டுமோ அவ்வளவினும் மிகவிரித்துக் கூறுதலாம்.



5) பொருளில கூறல் என்பது எடுத்துக்கொண்டதொரு பொருளை விளக்குமிடத்து அதனொடு தொடர்பில்லாதவற்றையும் சேர்த்துக்கூறுதலாம்.

6) மயங்கக்கூறல் என்பது ஒன்றனது இயல்பினைக் கூறுமிடத்து வரையறுத்துணர்தற்கியலாகல்பிழைபட உணர்தற்கு ஏதுவாகும் நிலையில் தெளிவின்றிக் கூறுதலாம்.

7) கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதல் என்பது - அசையும் சீரும் இசையொடு சேராமல் செவிகைப்பச்செய்யும்படி யாத்தலாம் இஃது உருச்செய்து சிந்திப்பதற்கு உதவாமையின் குற்றமாயிற்று.

8) பழித்தமொழியான் இழுக்கங்கூறல் என்பது: புலவோரான் மதிக்கப்பெறாத சொற்களான் இழுக்கமுறக் கூறுதலாம். பழித்த மொழியாவது-இன்னபொருளை இன்னசொல்லாற் கூறுதல் இழிதகவாம் எனப்புலவோரான் விலக்கப்பட்டசொல். அச்சொற் களாற்கூறல் பொருளுக்குமாசாகுமாதலின் இழுக்கங்கூறல் என்றார். இவையிரண்டும் யாப்பமைப்புப் பற்றிய குற்றங்களாகும் மற்றவை பொருள்நடைபற்றியவையாகும்.

9) தன்னான் ஒருபொருள் கருதிக்கூறல் என்பது: முதனூலாசிரியன் கூறியதோர் இலக்கணத்தின் பொருளை உணராமல் தானே ஒருபொருளைக்கருதிக் கொண்டு கூறுதலும் ஆசிரியன் கருத்தினை ஓராற்றான் உணர்ந்தவழியும் அதனை இவ்வாறு கூறின் சிறக்கும் எனக்கற்பித்துக்கொண்டு கூறலுமாம். " தன்னான் " என்றது தனது விருப்பத்தான் என்றவாறு.

10) என்ன வகையினும் மனங்கோளின்மை என்பது; கூறப் பட்ட பொருளை எவ்வாற்றானும் மனங்கொளற்கியலாமல் அரிதாகக் கூறல். உத்திவகையானும் பிறநூல் வாயிலாகவும் உணர்தற்கு இயலாதென்பார் என்ன கையினும் என்றார்.

அன்னபிறவும் அவற்று விரியாகும் என்றது. அவைபோல்வன வாகிய பிறகுற்றங்களும் அவற்றின் விரியாக அமையும் என்றவாறு. அவையாவன ' வெற்றெனத் தொடுத்தல் ' மன்றொன்றுவிரித்தல் சென்று தேய்ந்திறுதல், நின்றுபயனின்மை என்றாற்போல்வன வற்றுள் சென்று தேய்ந்திறுதல் குன்றக்கூறலின்பாற் படுதற்கும் ஏனைய பொருளிலமொழிதலின் பாற்படுதற்கும் ஏற்பனவாதலின் " அவற்று விரியாகும் " என்றார். ஈரைங்குற்றமும் எனவரைந்து கொண்டதும், எனப்படுபவை எனச் சிறப்பித்ததும் அக்கருத்தே பற்றி என அறிக.



EFEO_GUEST_JLC_02-136 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

**சூ. 664 : எதிர்மறுத்துணரின் திறத்தவும் அவையே (108)**

க - து : நூலுக்குரிய மரபு கூறியவழி ஈரைகீகுற்றமுமின்றி என்றதனான் " மனத்துக்கண் மாசிலனாகுதல் அனைத்தறன் " என்றாற்போல அவையின்மையே குணமாம் எனக்கருதுதல் திரம்பாதென உணரக் குற்றங்களை விரித்துரைத்தவாற்றான் குணங்கள் ஆமாறும் அவற்றை உணருமாறும் கூறுகின்றார்.

பொருள் : நூலிற்காகா என மேற்கூறிய குற்றங்களை மறுத்து அவற்றிற்கு எதிர்மறையான பண்புகளை உணருமிடத்துக் குணங்களும் அவையேயாம்.

குற்றமெனப்பட்ட ஒன்றை மறுத்துக் கொண்டவழி அதுவே குணமாக அமைதலின் திறத்தவும் அவையே' என்றார். அஃதாவது கூறியதுகூறல் என்பது ஒரு சிதைவு அதனை எதிர் மறத்தலாவது கூறியது கூறாமை என்பது. அதனை உணர்த்துத லாவது சுருங்கக் கூறுதல். அவ்வாறு உணரப்பட்ட பொருளே குணம் என்க. அவ்வாறு மேற்கூறிய குற்றங்களை எதிர்மறுத்து உணருமிடத்து நேரும் குணங்கள் வருமாறு :

கூறியது கூறாமை சுருங்கக்கூறலாம், மாறுகொளக் கூறாமை முறைமையொடு கூறுதலாம். குன்றக் கூறாமை நிறைவுறக் கூறலாம். மிகைப்படக் கூறாமை அளவறிந்துரைத்தவாம், பொருளில கூறாமை மெய்ப்பட மொழிதலாம். மயங்கக் கூறாமை தெளிவசப்படக் கூறுதலாம். கேட்போர்க்கின்னா யாப்பிற் றாகாமை இன்னோசையுடைமையாம் பழித்த மொழியான் இழுக்கங் கூறாமை, நன்மொழி புணர்த்தலாம், தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறாமை ஆசான் மொழிந்தவை அமைவுறக் கூறலாம். என்ன வகையினும் மனங்கோளின்மை எல்லா வகையினும் உளங்கொளவைத்தலாம்.

எதிர்மறுத்துக் கொண்ட இத்திறங்களை (குணங்களை) யாப்பினுட்டோன்ற சூத்திரமாகச் செய்யின்

சுருங்கச் சொல்லல் முறையொடு கிளத்தல்
அகப்பட மொழிதல் அளவறிந்துரைத்தல்
மெய்ப்படமொழிதல் தெளிவுறப் பகர்தல்
இன்னிசையுடைமை நன்மொழி புணர்த்தல்
ஆசான் மொழிந்தவை அமைவுறக் கிளத்தல்
உளங் கொளவைத்தலொடு விளம்பியத்தும்
குணமென மொழிப குறியறிந்தோரே என அமையும்



இங்ஙனம் அமைத்தலை உரைச்சூத்திரம் என்ப.

இவற்றிற்கு எடுத்துக்காட்டு :

வினையிற்றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற்றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம் மரபினவே (கிளவி-11)

என்றாற் போல்வன சுருங்கக் கூறலாம்.

கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறு பெயர்க்காகும் இயற்கைய என்ப (வேற்று)

என்றாற் போல்வன முறைமையொடு திறுத்தலாம்.

வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும் (வினை-1)

என்றார் போல்வன அகப்பட மொழிதலாம்.

தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடுவரினே (பெய-17)

என்றாற் போல்வன அளவறிந்துரைத்தலாம்.

நிலந்தீ நீர்வளி விசும் போடைந்தும்
கலந்தமயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல் நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும். (மரபு - 91)

என்றாற் போல்வன மெய்ப்பட மொழிதலாம்.

மகடூஉமருங்கின் பால் திரிகிளவி
மகடூஉவியற்கை தொழில் வயினான (பெய - 40)

என்றாற் போல்வன தெளிவகப் படுத்தலாம்.

காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீரைந் தொடு பிறவும் அன்ன
ஆவியின் வரூஉம் கிளவி யெல்லாம்
பால்பிரிந்திசையா உயர்திணைமேன (கிளவி - 58)

என்றாற் போல்வன இன்னிசையுடைமையாம்.

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையின் கிழவோற் குரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய (கற் - 11)

என்றாற் போல்வன நன்மொழி புணர்த்தலாம்.

EFEO_GUEST_JLC_02-137 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இன்பமும இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்கு நெறியின்றி
இதுவாகித்திணைக் குரிப்பொருள் என்னாது
பொதுவாய் நிற்றல் பொருள் வகை என்ப (செய்-200)

என்றாற் போல்வன ஆசான் மொழிந்தவை அமைவுறக்கிளத்தலாம்

செப்பே வழீஇயினும் வரைநிலையின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவியான (கிளவி - 15)

என்றாற் போல்வன உளங்கொள வைத்தலாம்

தொல்காப்பியம் நூலுக்குரிய இலக்கணம் யாவும் நிரம்பிப் பத்துக்குணங்களும் உடையதொன்றாகலின் எல்லாச் சூத்திரங் களும் சிலபல குணங்களையுடையவாய் எடுத்துக்காட்டிற் குரியனவேயாகும். எனினும் ஈண்டுத் தெற்றென மாணாக்கர் சாணும் பொருட்டு ஒவ்வோர் எடுத்துக்காட்டே காட்டப்பட்ட தென அறிக.

இளம்பூரணத்தில் "எதிர் மறுத்துணரின் அத்திறத்தவும் அவையே" எனப்பாடம் உளது. அச்சுட்டு நின்று வற்றுதலின் அதுபாடமாகாமையறியலாம்.

சூ. 665 : ஒத்தகாட்சியின் உத்திவகை விரிப்பின்
நுதலிய தறிதல் அதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்
மொழிந்த பொருளொடொன்ற அவ்வயின்
மொழியாததனையும் முட்டின்று முடித்தல்
வாரா ததனான் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராததுணர்தல்
முந்து மொழிந்ததன் தலைதடுமாற்றே
ஒப்பக் கூறல் ஒருதலை மொழிதல்
தன்கோட் கூறல் முறை பிறழாமை
பிறனுடன் பட்டது தானுடன் படுதல்
இறந்தது காத்தல் எதிரது போற்றல்
மொழிவாம் என்றல் கூறிற் றென்றல்
தான்குறி யிடுதல் ஒருதலை யன்மை
முடிந்தது காட்டல் ஆணை கூறல்
பல்பொருட்கேற்பின் நல்லது கோடல்
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்துணி புரைத்தல்



பிறன்கோட் கூறல் அறியா துடன்படல்
பொருளிடையிடுதல் எதிர்பொரு ளுணர்த்தல்
சொல்லின் எச்சம் சொல்லியாங் குணர்த்தல்
தந்துபுணர்ந் துரைத்தல் ஞாபகங் கூறல்
உய்த்துக்கொண் டுணர்தலொடு மெய்ப்படநாடிச்
சொல்லிய வல்ல பிற அவண் வரினும்
சொல்லிய வகையான் சுருங்க நாடி
மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு
இனத்திற் சேர்த்தி உணரத்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூறிய நூலே (109)

க - து : "நேரிதின் முப்பத்திருவகை உத்தியொடுபுணரின்நூலென மொழிப" எனக்கூறிய உத்திவகைகள் இவை எனவும் அவற்றை ஓர்ந்துரைக்கு மாறும் கூறத்தொடங்கி ஒப்பக்கூறல் என்னும் நூற்புணர்ப்பு முறையானே உத்தியை ஓர்ந்துணர்த்தற்குரிய நெறியே நூலை உணர்ந்துரைத்தற்கும் நெறியாகும் எனக்கூறுகின்றது.

அவ்வாற்றான் இந்நூலின் மூன்றதிகாரத்திற்கும் ஏற்பதொரு புறனடையும் கூறிற்றாயிற்று.

உத்தி என்பது துணை எனப்பொருள்தரும் உதவு என்பதனடியாகப் பிறந்தசொல் பொருந்துதல் என்னும் பொருளில் (யுக்தம்) வடமொழிக்கண் அமைந்தது. அதனை எழுத்தொடுபுணர்ந்த வடசொல்லாக, ஏற்றுத்தமிழ் நூலார் இலக்கணக் குறியீடாகக் கொண்டனர் என்க. இது தென்சொல்லின் திரியே என்பது விளங்க 'ஒத்தகாட்சிஉத்தி' என்றார் ஆசிரியர். காட்சி = அறிவு → அறிதல். அறிவென்பது ஈண்டு நூலை உணர்த்தி நின்றது. இக்கருத்தே பற்றிவடநூலாரும் தந்திரஉத்தி எனவழங்குவர்.

இங்ஙனம் தென்மொழியின் குறையுரிச்சொல் அல்லது நிறையுரிச்சொல் ஒன்றனடியாக வடமொழிக்கண் ஆக்கமுற்றதொரு சொல்லை மீட்டுந்தமிழ்ப்படுத்தி ஏற்குங்கால் அது வடசொல் என்னும் குறியீடுபெறும் என்பது இவ்வுரையுள் ஆங்காங்கு விளக்கப்பெற்றது.

உத்தியைவிரிப்பின் என்னாது உத்திவகைவிரிப்பின் என்றதனான் இவை ஒவ்வொன்றும் சிலபலவாக விரியுந்தமையன என அறிக.

பொருள் : நுதலியதறிதல் என்பது : ஒருசூத்திரத்தின் பொருள் விரிவாக இருப்பினும் சுருக்கமாக இருப்பினும் சொல்ல முற்படும் கருத்துஇது எனச் சிலசொற்களான் அறியநிற்றல் என்றவாறு. நுதலுதல் = கருதுதல். அறிதல் என்பது அறியுமாறு நிற்றல் என்னும் பொருள்பட நின்றது. இஃது எல்லாச்சூத்திரங் களுக்கும் ஏற்புடையதொரு உத்தியாதலின் முதற்கண்வைக்கப் பட்டது.

எ - டு : எழுத்தெனப்படும் அகரமுதல் ...அலங்கடையே(எழு-1)

இச்சூத்திரம் தமிழ்மொழிக்குரிய எழுத்துக்களின் பெயரும், தோன்றி நிற்கும் முறையும் தொகையும் வகையும் கூறுகின்றது என அறிந்துரைத்தல் இவ்வுத்தியாம்.

இங்ஙனம் கூறுதல் கருத்துரையன்றோ? உத்தியாமாறு என்னையெனின்? கருத்துரையாயின் இஃது எழுத்து இத்துணை என்கின்றது. எனலே சாலும் பிறஇவ்வுத்தியான் அறியப்பட்டன வாம். என்னை. அகரமுதல் னகர இறுவாய் என்றதனான் பெயரும் முறையும் பெறப்பட்டன. சார்ந்துவரல் மூன்று என்றதனான் தனித்துவரல் மரபின முப்பஃது எனவகையும் அம் மூன்றொடும் கூட முப்பத்து மூன்று என அதன் தொகையும் பெறப்பட்டன என்க. இனி, செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறல் (கிள-20) எனவிதித்துப்பின்னர் ஆக்கந்தானே காரண முதற்றே (கிள-21) எனவந்த சூத்திரம் ஆக்கத்திற்கு விளக்கங் கூறுவதுபோல அமைந்திருப்பினும் ஆக்கமொடு கூறுங்கால் காரணத்தை முற்கூறிப்பின்னர் ஆக்கச்சொல்லைக் கூறுக என விதித்தல் கருத்தாகலின் இவ்வாறு வருவன இதன் வகையாம். பிறவும் அன்ன.

2) அதிகாரமுறைமை என்பது ஒரு சூத்திரத்தின் அமைந் துள்ளபொருள் பின்வரும் சூத்திரங்களொடு தொடர்ந்து செல்லுத லாம். சிறுபான்மை சொற்களும் தொடரும்

எ - டு : குற்றியலிகரம் நிற்றல் வேண்டும் ... ஊர்ந்தே (மொழி-1) என, எடுத்துக்கொண்ட குற்றியலிகரம் என்னும் பொருள், புணரியல் நிலையிடை......தோன்றும்(மொழி-2)என்னும் சூத்திரத்தொடும் தொடர்ந்தது. நிற்றல் வேண்டும் என்னும்தொடர் நெட்டெழுத்திம்பரும் ... வல்லாறூர்ந்தே (மொழி-3) என்னும் சூத்திரத்திற்கும் பயனிலையாகக் கொள்ள அதிகரித்தது. பிறவும் அன்ன. ஒரு சூத்திரத்திற்கும் அதனை அடுத்துவரும் சூத்திரத் திற்கும் இயைபு கூறுதலும், இயலடைவு, அதிகார அடைவு கூறுதலும் போல்வன இதன்வகையாம்,



3) தொகுத்துக்கூறல் என்பது : ஒரு சூத்திரத்துட் கூறிய வற்றை எண்ணித் தொகை கூறலும், பல சூத்திரங்களைக்கூறி இவை இன்னது கூறிற்று எனத் தொகுத்துரைத்தலுமாம்.

எ - டு : அவன் இவன் உவன் என வருஉம் பெயரும்
..........................................
ஆவயின் மூன்றொடு அப்பதினைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே (பெய-8)
இருதிணை மருங்கின் ஐம்பாலறிய
ஈற்றினின்றிசைக்கும் பதினோரெழுத்தும்
தோற்றந்தாமே வினையொடு வருமே (கிள-11)
அளவியல் வகையே அனைவகைப்படுமே (செய்-156)

என வரும். இவை இத்துணை என்னும் அளவு கூறலேயன்றி அங்ஙனந்தொகை கூறியது இப்பயனைக் கருதி என்னும் நுட்பம் தோன்றவைத்தல் இவ்வுத்தியாம். பயன் அவ்வச் சூத்திர உரை யுள் கூறப்பட்டது. ஆண்டுக் கண்டு கொள்க. பொருண்மை சுட்டல் ......... அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே (வேற்-2) எனச் சுட்டிக் கூறல் போல்வன இதன் வகையாம்.

(4) வகுத்து மெய்ந்நிறுத்தல் என்பது : கூறப்படும் பொருளை வரையறுத்து எண்ணி முதற்கண் உணர்த்துதலாம்.

எ - டு : வேற்றுமை தாமே ஏழென மொழிப (வேற்-1)
வண்ணந்தாமே நாலைந் தென்ப (செய்-204)

என்றாங்கு வரும். மெய்ந்நிறுத்தல் என்றதனான் முன்னர் வகுத்தவற்றைப் பிறிதொரு பயன் கருதிப் பின்னும் வகுத்தலும் கொள்ளப்படும். இயற்சீர் பத்தெனவும் ஆசிரிய உரிச்சீர் ஆறு எனவும் வகுத்துக் கூறியவற்றைப் பின்னர்

இயற்சீர் இறுதி முன் நேரவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப (செய்-18)

என இயலசைமயக்கத்தான் வந்த நான்கையே ஈண்டு இயற் சீர் என வகுத்தமை போல்வன.

(5) மொழிந்த பொருளொடொன்ற அவ்வயன் மொழியாத தனையும் முட்டின்று முடித்தல் என்பது எடுத்துக் கூறியதொரு இலக்கணப் பொருளொடு பொருந்துவதொன்றனை எடுத்துக் கூறாவிடத்து அதனை முட்டுப்பாடின்றி எடுத்துக் கூறி முடித்ததுக கொள்ள நிற்றலாம்

EFEO_GUEST_JLC_02-139 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எ - டு : தொடைவிகற்பங் கூறிய வழிப் பொழிப்பும், ஒரூஉவும் கூறி ஏனைய இணை கூழை முதலியவற்றைக் கொள்ள வைத்தல் போல்வனவாம்.

(6) வாராததனான் வந்தது முடித்தல் என்பது வகுத்தமைத்தவற்றுள் ஒருகூறு இதன்கண் வாராது என விலக்கியதைக் கொண்டு மறு கூறு வருமென ஓர்ந்து கூறப்பட்ட இலக்கண விதியை முடித்துக் காட்டுதலாம்.

எ - டு : பொதுப்பெயருள் இது இதன் கண் அமைந்து வரும் என்னுமிடத்துப் பன்மை சுட்டிய பெயர் ஒன்று பல ஒருவன் ஒருத்தி என்னும் நான்கின் பாலும் வரும் என்பதனைப்

பன்மை சுட்டிய எல்லாப்பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
அன்றிப் பாற்கும் ஓரன்னவ்வே (பெயர் -28)

என்று அமைத்தவழி பன்மைஇருதிணைக்கண்ணும் உள எனினும் வரவுப் பெயர் இருதிணைக்கண்ணும் விரவுங்கால் பல்லோர்க் குறித்த பெயர் உயர்த்திணைக்கே வரும் (பெய-11) எனவும் கள் என்னும் ஈற்றொடுவரின் அவை அஃறிணைக்கே ஆகும் எனவும் மேல் வரையறை செய்தமையின் அவை விரவிவாரா என முடிந்தது. எனவே அர், ஆர், ப என்னும் ஈறுகளையும் கள் என்னும் ஈற்றையும் உடையவற்றை நீக்கி ஈற்றிடைச் சொல் இன்றிவரும் அஃறிணை இயற்பெயர் மட்டுமே இந்நான்கன் கண்ணும் விரவிவரும் என முடித்தலாம்.

இதற்குப் பேராசிரியர் காட்டிய எடுத்துக்காட்டும் விளக்கமும் வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்னும் உத்திக்கேற்றதாக இருத்தலை ஓர்ந்து அறிக.

(7) வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பது இஃது இன்ன இலக்கணத்தது என விதந்து கூறப் பெறாதவை பிறிதோரிடத்தில் பிறிதொரு விளக்கங்கருதி வருங்கால் அவற்றை முடித்துக் காட்டுதலாம்.

செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர் (எழு-உயி-20)

என வந்தது கொண்டு வினையியலுள் வினையெச்சவாய் பாடுகளைக் கூறுமிடத்து இது கூறப்படாவிடினும் செய்பூ என்பதன் திரிபாகிய இதுவும் ஓர் வினையெச்ச வாய்ப்பாடு என் கொள்ளுமாறு முடித்தல் போல்வனவும் ஒடு என்னும் இடைச்



சொல் எண்ணுப்பொருளில் வரும் என விதந்து கூறாவிடினும் 'என்றும் எனவும் ஒடுவும் தோன்றி' (இடை-46) என்றதனான் அஃது எண்ணிடைச் சொல்லாக வரும் என உணர்த்தல் போல்வனவுமாம்.

வேற்றுமையியலுள் "இன் ஆன் ஏது ஈங்கென வரூஉம்" எனக் கூறியதல்லது அவை மாற்றுருபாக வரும் என விதந்து கூறாவிடினும் "ஓம்படைக்கிளவிக்கு ஐயும் ஆனும்" (வே-ம-14) எனவும் கரணத்தின் அமைந்து முடிந்தகாலை (கற்-5) எனவும் கூறினமையான் அவை ஏதுப்பொருளில் வரும் மாற்றுருபுகள் என முடித்துணர்த்தல் அதன் வகையாம்.

8) முந்து மொழிந்தன்தலை தடுமாற்றம் என்பது : முன்னர் வகுத்து மெய்ந்நிறுத்த முறைமையை ஒருபயன் கருதிச் சிறிது பிறழக் கூறுதல். இதனைத் தலைதடுமாற்றம் தந்துபுணர்ந் துரைத்தல் என்பர் இடைக்கால நூலோர்

எ - டு : கைக்கிளை முதலாப் பொருந்திணையிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"

என அகத்திணையியலுள் நிரல்படுத்தியவாறன்றிப் புறத்திணைகளைச் கூறுங்கால் அகனைந்திணையை முதலாக வைத்தும் அவற்றுள்ளும் குறிஞ்சிக்குப் புறனாகிய வெட்சியை முதற்கண் வைத்தும் கூறியமை போல்வனவாகும். அங்ஙனம் தலை தடுமாற்றமாக வைத்துக் கூறியதன் கருத்தும் பயனும் புறத்திணையியலுரையுள் கூறப்பட்டது. ஆண்டுக்கண்டு கொள்க. "இன்னேவற்றே அக்கே இக்கே" (புணரி-17) என நிறுத்த முறையாற் கூறாமல் அவற்றின் இயல்பு கூறும்வழித் தலைதடு மாற்றமாகக் கூறியதும் அது.

9) ஒப்பக்கூறல் என்பது : ஒன்றற்கு இலக்கணங்கூறுமிடத்து அதன் பகுதிகளுக்கும் அவ்இலக்கணம் பொருந்தும் வண்ணம் கூறுதலாம்.

எ - டு : மெய்யின் இயற்கை புள்ளியொடும் நிலையல் (எழுத்-15) என மெய்யெழுத்துக்கள் ஒலிப்புறுங்கால் சாரியை பெற்று நிற்குமிடத்துக் கொண்ட ஒரு மாத்திரை நீங்கி அரை மாத்திரை ஒலிபெறும் என்பதைக் குறிக்கும் புள்ளி என்னும் சொற்குறியீடுவரிவடிவிற்கும் ஏற்பக் கூறியதுபோல்வனவாகும். உயிர்க்கும் மெய்களின் ஒலித்திரிபுகள் கூறிய வழி வரிவடிவத் திரிபுகளையும் உடன் கொள்ள வைத்தமையும் அது.



EFEO_GUEST_JLC_02-140 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

இனி இன்னின் இகரமாவின் இறுதி முன்னர்க் கெடுதல் உரித்துமாகும் (புணரி-8) என்ற விதி ஆவின் எனப் பிரிப்பினும் பொருந்துமாறு கூறுதல் அதன் வகையாகும். இதனை இரட்டுற மொழிதலின் பாற்படுப்பார் சிலர்.

(10) ஒருதலை மொழிதல் என்பது : பிறிதோரியலின் கண் கூறவேண்டிய தொருவிதியை ஓரியைபு கருதி ஓரிடத்தே கூறியமைத்தலாம்.

எ - டு : ஒலியியல்பு கூறும் நூன் மரபினுள் அரையளபு குறுகல் மகரம் உடைத்தே'' என அளவு கூறி அதன் பிறப்பமைதி கூறும் விதியை "உட்பெறுபுள்ளி உருவாகும்மே'' எனக் கூறுதல் போல்வனவாகும் "அஇஉ அம்மூன்றும் சுட்டு'' எனநூன் மரபின் கண் குறியீடு கருதிக் கூறிய அதனையே சுட்டிடைச் சொல்லாக வருமெனப் புணரியல்பு கூறும் வழியெல்லாம் கொள்ள வைத்தமை அதன் வகையாகும்.

(11) தன்கோட் கூறல் என்பது : தான் எடுத்துக்கொண்ட மொழியிலக்கணக் கொள்கை இதுவென விளங்கக் கூறுதலாம்.

எ - டு : 'ஓரெழுத்துத் தனியே இரண்டு மாத்திரையின் மிக்கொலித்தல் இல்லை எனத் தமிழ் மரபினை உணர்த்துவார். "மூவளபிசைத்தல் ஓரெழுத்தின்றே'' எனவும் செய்யுளின் கண் இசைநிறைத்தல் வேண்டின் "அவ்வளபுடைய கூட்டி எழூஉதல்'' எனவும் கூறுதல்போல்வனவாம். 'உயிர் மெய்யல்லன மொழி முதலாகா' என்பதும் அது. "அப்பாலெட்டே மெய்ப்பாடென்ப'' அனைத்தே செய்யுளீட்டச் சொல்லே'' என்றாற் போல்வன அதன் வகையாம்.

இதற்குப் பேராசிரியர் கூறும் உரையும் விளக்கமும் எடுத்துக் காட்டும் நிரம்பாமை கண்டு கொள்க.

12) முறைபிறழாமை என்பது : தான் எடுத்துக்கொண்ட அதிகாரத்திற்கும் இயலுக்கும் உரியவற்றைப் பிறழாமற் கூறுதலும் இதனை இந்நிரலாகக் கூறுவல் என நிறுத்தியமுறை பிறழாமற் கூறுதலுமாம்.

எ - டு : நூன்மரபிற் கூறியவற்றைப் பிற இயல்களுள் கூறாமையும் பிற இயல்களுக்குரியவற்றை நூன்மரபிற் கூறாமை யும் கண்டுகொள்க. இவ்வாறே மூன்றதிகாரத்தும் இருபத்தேழு இயல்களும் அமைந்துள்ளமை கண்டுகொள்க.



தொல்காப்பிய இயல்களின் பகுப்பு நுட்பத்தை ஓராத உரை யாசிரியன்மார் தனிமெய்களின் ஒலிமாற்றங்களைக் கூறும் மெய்ம் மயக்க இலக்கணத்தை மொழியாக்கமாகக் கருதியும் 'அகரஇகரம் ஐகாரமாகும்' எனவருவனவற்றை ஒலிமரபு கூறுவதாகக்கருதியும் மயங்கினர். உரையசிரியரைப் பின்பற்றிய பவணந்தியார் மேலும் பல பிழைகளைச் செய்து போந்தார்.

'ஐ ஒடு கு இன் அது கண் என்னும் அவ்வாறு என்ப வேற்றுமையுருபே'' எனும் புணரியலுள் கூறியதன்நோக்கும் பயனும் வேறு "பெயர் ஐ ஒடு கு இன் அது கண் விளி என்னும் ஈற்ற'' என வேற்றுமையிலுள் கூறியதன்நோக்கமும் பயனும் வேறு என்பதை அவ்வச்சூத்திர உறையுள் கூறினாம்.

இவ்வாறு ஆசிரியர் இயல்வகுப்பிற்கு ஒற்பக்கூறுவனவற்றை ஓர்ந்துணராமல் உரையாசிரியன்மார் தத்தமக்குத்தோன்றியவா றெல்லாம் அமைதியும் விளக்கமும் கூறிச்சென்றனர். இளம்பூரணர் இவ்வுத்தியைக் கொள்ளாமல் இவ்விடத்து உடம்பொடுபுணர்த்தல்'' எனப்பாடம் ஓதி அதனை உத்தியாகக் கொண்டார். உடம்பொடு புணர்த்தும் கருத்தமைந்த உத்தியை ஆசிரியர் பின்னர்த் "தந்து புணர்ந்துரைத்தல்'' எனக் கூறுவார் இவ்வாறு உரை யாசிரியன்மார் பிறழக் கூறியுள்ளவற்றையெல்லாம் மாணாக்கர் தெளிவாராக

13) பிறனுடம்பட்டது தானுடம்படுதல் என்பது ஒருசார் இலக்கணவிதிகள் 'குறிப்பிட்ட ஒரு மொழிக்கே உரியனவல்ல ஒரோவழி அவை தமிழ்மொழிக்கும் ஏற்புடையனவே என உடன் பட்டுக்கூறுதலும், பிறிதோர் (வழிநூலாசிரியர்) ஆசிரியர் கூறிய தொரு விதியை அவ்வாறே ஏற்றுக்கொள்ளுதலுமாம்.

அஃதாவது நிறுத்தசொல்லின் மகர ஈறுகெட்டு நிற்க குறித்து வருகிளவியின் முதல்எழுத்து உயிராயவழி உடம்படுமெய் பெறாமல் வடமொழியாளர் கூறும் தீர்க்கசந்தியைப்போல நிலைமொழி ஈறுநீண்டுபுணர்தலும் ஆம் எனக்கொண்டு "அகர ஆகாரம் வரூஉங்காலை ஈற்றுமிசையகரம் நீடலும் உரித்தே'' (புள்ளி-16) எனவிதி கூறுதலும், ஒருசொல்லின் ஈற்றசையைச்சுட்டி அச்சொல் முழுதையும் உணர்த்தும் வடமொழிக்கோட்பாட்டினை அவ்வாறே "ஐ அம் பல் எனவரூஉம் இறுதி அல்பெயர் எண் ணும் ஆயியல் நிலையும்'' (புள்ளி-98) எனக்கூறுதலும் போல்வன இவ்வுத்தியாம்.

மூன்றுதலையிட்ட முப்பதிற்றெழுத்தின்
இரண்டுதலையிட்ட முதலாகிருபஃது (புணரியல்-1)

என்றாற் போல்வன அதன்வகையாம்,

14) இறந்தது காத்தல்என்பது ஓரியலுள் கூறிய தோரிலக்கணத்தைப் பிறிதோரியலின்கண் கூறநேர்ந்துழி முற் கூறியநெறிதவறாமற் காத்துரைத்தலாம்.

எ டு: ''ஐ ஒடுகு இன் அதுகண் என்னும் அவ்வாறென்ப வேற்றுமையுருபே'' எனக்கூறிய இலக்கணத்தைக் ''கூறிய முறையின் உருபுநிலை திரியாது ஈறுபெயர்க்கு ஆகும்'' எனக் காத்துரைத்தல் போல்வனவும்

பெயருந்தொழிலும் பிரிந்தொருங்கிசைப்ப
வேற்றுமையுருபு நிலைபெறுவழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண்ணும் (புணரி-30)

எனக்கூறிய இலக்கணத்தைப் ''பிறிது பிறிது ஏற்றலும் உருபு தொகவருதலும்'' (வேற்-ம-21) எனக்காத்தலும் அவை போல்வனவுமாம்.

இதற்கு இறந்தது விலக்கல் என்னும் கருத்துப்படப்பொருள் கூறுவார் பேராசிரியர்

15) எதிரது போற்றல் என்பது. இனிவரும் ஒருவிதிக் கேற்பதொரு இலக்கணத்தை முன்னதாகக்கூறி அதனைப் போற்றுதலாம்.

எ - டு: ஆறனுருபினும் நான்கனுருபினும்
கூறிய குற்றொற்றிரட்டல் இல்லை
ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழி முன்னான (தொகை. 19)
என இனிவருவதனை நோக்கிப் புணரியலுள்
ஆறன் உருபின்அகரக்கிளவி ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும் (புண-13) எனக்கூறுதலும் அவை போல்வனவும் ஆம்.

(16) மொழிவாம் என்பது: ஒருவிதி கூறுமிடத்து அது பற்றிய விளக்கம் ஆண்டு பெறப்படவையாது பின்னர்ப் பெறுமாறு கூறுதலாம்.

எ - டு: அரையளபு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடனருகும் தெரியுங்காலை (நூன் - 13)
எனச்சொல்லி அதற்குரிய இடம் பற்றி
செய்யுளிறுதிப் போலி மொழிவயின்
னகாரம் மகாரம் ஈரொற்றாகும் (மொழி - 19)
ணகாரை முன்னர் மகாரங்குறுகும் ( ,, - 19)



எனவும், வகாரம் இயையின் மகாரங்குறுகும் (புள்ளி - 35) எனவும் கூறுதல் போல்வனவாம்

அவைதாம், குற்றியலிகரம் ......எழுந்தோரன்ன (நூன் - 2) எனத் தோற்றுவாய் செய்து அவற்றின் இயல்புகளைப் பின்னர் மொழிமரபிற் கூறுதல் அதன் வகையாம்.

17) கூறிற்றென்றல் என்பது முற்கூறியதொரு இலக்கணத் தைப்பின்னர் வேறொன்றைக் கருதியுரைக்குமிடத்து இது பற்றி முன்னர் உரைக்கப்பட்டதெனக் கூறுதலாம்.

எ - டு: செய்யுளுறுப்புக்களைக் கூறி அவற்றை விளக்குமிடத்து
மாத்திரையளவும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந்தனவே என்மனார் புலவர் எனவும்
கைக்கிளை முதலா ஏழ் பெருந்திணையும்
முற்கிளந்தனவே முறைமையினான எனவும்
கூறுதல் போல்வனவாம். ''முதலெனப்படுவது ஆயிருவகைத்தே'' என்றாற் போல்வன அதன் வகையாம்.

18) தான் குறியிடுதல் என்பது: தொல்லோரிட்ட குறியீடுகள் இருப்பவும் ஒரோவழித் தானுமோர் குறியிட்டு வழங்கலாம்.

எ - டு: முற்றுவினையைத் தொழிலிறுசொல் எனவும் ஔகாரத்தை இறுதியில் உயிர், எனவும் நடுவணைந்திணையை அகனைந்திணை எனவும் வழங்குதல் போல்வனவாம். பெயரச்சம், வினையெச்சங்களை எஞ்சுபொருட் கிளவி எனவும் சார்பெழுத்துக் களை ஏனைஎழுத்தெனவும் வழங்குதல் அதன் வகையாம்.

19) ஒருதலையன்மை என்பது கூறப்பெறுவதோரிலக்கணம் இவ்வாறே வரும் எனவரையறுக்காமல் இவ்வாறும் வருமெனக் கூறுதலாம்.

எ - டு: இடைநின்றியலும் சாரியை இயற்கை
உடைமையும் இன்மையும் ஒருவழியொக்கும் (புணரி-30)
எனவும், எடுத்தமொழி இனஞ்செப்பலும் உரித்தே (கிள. 61)
எனவும் வருதல் போல்வனவாம்.

''ஒருமை சுட்டிய பெயர் நிலைக்கிளவி பன்மைக்காகும் இடனுமாருண்டே'' என்றாற்போல்வன அதன் வகையாம்,

EFEO_GUEST_JLC_02-142 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

20) முடிந்தது காட்டல் என்பது: தான் கூறுவதோரிலக் கணம் அவ்வாறமைதற்குக் காரணம் இது என விளக்காமல் முன்னோர் இவ்வாறு கூறினர் என உரைத்துச் செல்லுதல்.

எ - டு : நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே (நூன்-7)
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே (மரபு-72)

எனவரும்

முடிய வந்த அவ்வழக்குண்மையின்
கடிய லாகா கடனறிந்தோர்க்கே (மர-69) என்றாற்

போல்வன அதன் பாற்படும்.

21) ஆணைகூறல் என்பது ஓதப்பட்டன அல்லாதவற்றை யும் காலத்தாற்றோன்றி வருவனவற்றையும் யான் கூறிய இலக்கண முறைமையை ஓர்ந்து அவ்வாற்றான் அமைத்துக்கொள்க எனக் கூறுதலாம்.

எ - டு : கிளந்தவல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற்றியலான் உணர்ந்தனர் கொளலே
(வே-ம - 35)

எனவும்.

அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயலவாயினும்
வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்து வேறுபடினும் தெரிந்தனர் கொளலே (இடை-47)

எனவும்

சொல்வரைந்தறியப் பிரித்தனர் காட்டல் (எச்-67) எனவும் வருவனவாம்.

இழைத்த இலக்கணம் பிழைத்தபோல
வருவஉள எனினும் வந்தவற்றியலான்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே (செய்)

என்றாற் போல்வன அதன் வகையாம்.

22) பல்பொருட்கேற்பின் நல்லதுகோடல் என்பது ஒன்றைப் பற்றி இலக்கணங்கூறியவிடத்து அச்சொற்றொடர் பிறபிற பொருளைத்தருதற்கு ஏற்பவும் அமையுமாயின் முன்னும் பின்னும் உள்ள இலக்கணங்களை நோக்கி ஆண்டைக்கு நலம்பயக்கும் பொருளைக்கொள்ளுதலாம்.

எ - டு : பால்கெழுகிளவி நால்வர்க்கும் உரித்தே (பொரு-5)
என்றாற்போலவரும்.



23) தொகுத்தமொழியான் வகுத்தனர் கோடல் என்பது: பல்வேறு சொற்களை ஒருவாய்பாட்டடான் அடக்கிவகைசெய்து கூறுதலாம்.

எ - டு : பல்வேறாக வரும் பெயரெச்ச வினையெச்சச் சொற் களைச் செய்யும், செய்த எனவும் செய்து செய்பு செய்யூ முதலிவாகவும் கூறுதலும் ஐந்தாம் வேற்றுமை பொருள்நிலையை இதனின் இற்று இது எனவும் ஆறாம் வேற்றுமைப்பொருளை இதனது இது எனவும் கூறுதலாம்.

24) மறுதலை சிதைத்துத் தன்துணிபுரைத்தல் என்பது ஓரிலக்கணம் பற்றிய ஒருசாராரது கொள்கையை எடுத்துக்கூறி அதனை மறுத்துத் தனது தீர்ப்பினைத் தெளிவுறக்கூறுதலாம்.

வேற்றுறைதாமே ஏழெனமொழிப
விளிகொள்வதன்கண் விளியோடெட்டே எனக்கூறுதல்

போல்வனவாம்.

ஆகுபெயரிலக்கணத்தை இலக்கணைக் குறிப்பாம் எனக் கருதுவாரை மறுத்து ‘ வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும் ’ என்பதுமது.

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்.
நெட்டெழுத்திம்பர் ஒத்தகுற்றெழுத்தே ” என்றாற் போல்வன

அதன் பாற்படும்.

25) பிறன் கோட் கூறல் என்பது: கூறப்படும் இயற்றமிழ் இலக்கணத்திற்குச் சார்புடைப பிற நூலாசிரியன் கருத்துக்களை எடுத்துக் கூறுதலாம்.

எ - டு : உயிரும் புள்ளியும் ஓதப்பட்ட மாத்திரையினும் நீண்டிசைக்குமாயின் அஃது இசை நூலிலக்கணத்தான் அமையும் என்பதனை

அளபிறந்திசைத்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிவ இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர் (நூன் - 33)

எனவும் ‘ அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே ’
எனவும் எடுத்துக்காட்டிக் கூறுதலாம்.

26) அறியா துடம்படல் என்பது உயர்ந்தோர் மாட்டு நிகழ்ச்சி காலந்தொறும் நிகழ்வதாகலின் சொல்லாக்கமும் காலந்

தொறும் நிகழும். அவற்றையெல்லாம் அறிந்து கூறுதல் இயலாத தொன்று ஆகலான் அவையெல்லாம் கிளந்த முறையான் அமையும் என ஒருப்பட்டுரைத்தலாம்.

எ - டு : அன்னபிறவும் கிளந்தன அல்ல
பன்முறையானும் பரந்தனவருஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட் குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்பு தமக்கின்மையின் வழிநனி கடைப்பிடித்து
ஓம்படை ஆணையிற் கிளந்த வற்றியலான்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர் (உரியியல்-100)

எனவரும்.

27) பொருளிடையிடுதல் என்பது விதிக்கப்பட்ட இலக்கணம் இப்பொருளுடைய சொல்லைப் பற்றியது என எடுத்துக்காட்டிக் கூறுதலாம்.

எ - டு : பனையென்னளவும், காவென் நிறையும் (தொகை-27)
வளியென வருஉம் பூதக்கிளவி, ஒடுமாக்கிளவி
உதிமாவியற்றே எனவும் சாவ என்னும் செயவென்னெச்சம் எனவும் வரும். கண்ணும் தோளும் முலையும் பிறவும் என்றாற் போல்வன அதன் பாற்படும்.

28) எதிர்பொருளுரைத்தல் என்பது ஒருபொருளைக்கிளந்து அதன்பண்பியல்புகள் இவையென இலக்கணங்கூறுதலன்றி இனி எதிர்நோக்கி வருவதொன்று பறறிக்கருத்துணர்த்துதலாம்.

எ -டு : கடிசொல் லில்லைக் காலததுப் படினே (எச் - 56)

என்றாற்போல்வன.

காமஞ் சான்ற கடைக்கோட்காலை
ஏமஞ்சான்ற மக்களொடுதுவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன்பயனே (கற் - 51)

என்றாற்போல்வன அதன்பாற்படும்.

29) சொல்லின்எச்சம் சொல்லியாங்குணர்த்தல் என்பது : விதந்து கூறப்பெற்றதொரு பொருளஎஞ்சாமல் தழுவிக் கொள்ளுமாறு முற்றுப்பெற உணர்த்தலாம்.

எ - டு : எஞ்சியவெல்லாம் எஞ்சுதலிலவே (மொழி - 44)
எஞ்சியோர்க்கும் எஞ்சுதலிலவே (அகத் - 44)

என்றாற் போலவரும்.



இனி திணை, களவு, கற்பு முதலாய குறியீடுகளின் பொருளை விளக்காமல் அச்சொற்கள்தாமே அப்பொருளை விளக்கி நிற்குமாறு அமைத்துக்கூறுதல் அதன்பாற்படும். இதனைச் சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல் எனவும் கூறுப.

30) தந்துபுணர்ந்துரைத்தல் என்பது : உணர்த்தவேண்டிய தோரிலக்கணத்தை எடுத்தோத்தாற் கூறாமல் பிறிதொன்றன் இலக்கணங் கூறுமிடத்துத்தான் வழங்கும் சொல், சொற்றொடர் வாயிலாக உணர்த்திவிடுதலாம். இதனை ‘ உடம்பொடு புணர்த்தல் ’ எனவும் கூறுப. வியங்கோளீறு இவை என விதந்து கூறாமல்

‘ செப்பும்வினாவும் வழாஅல் ஓம்பல் ’
‘ வாழிய என்னும் செய்கென்கிளவி ’ என அல், இய, க முதலிய ஈறுகளை உடைய சொற்களைக்கூறிய முகத்தான் உணர்ந்து கொள்ளுமாறு வைத்தமை கண்டுகொள்க.

31) ஞாபகங்கூறல் என்பது ஒன்றற்குரிய விதியைப் பிறிதோரிடத்துக் கூறிப் பெறுமாறு வைத்தல். அஃதாவது னஃகான்ஒற்றே ஆடூஉவறிசொல், ளஃகான்ஒற்றே மகடூஉ வறிசொல் எனக்கூறி அவை வினைச்சொல்லின்கண் இறுதியாக நின்று பாலுணர்த்தும் என்னும் இலக்கணத்தை

இருதிணை மருங்கின் ஐம்பாலறிய
ஈற்றினின்றிசைக்கும் பதினோரெழுத்தும்
தோற்றந்தாமே வினையொடுவருமே எனக்கூறிப்பெறப்பட வைத்தலாம்.

32) உய்த்துக்கொண்டுணர்தல் என்பது : சொற்பல்காமல் சுருக்கமாகக் கூறியவழி அதன்விரிவெல்லாம் உணர்ந்து கொள்ளும் படியாகக் கூறுதல்.

எ - டு : நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீற்றும்
குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே (மொழி - 3)

என்றாற்போல வருதலாம். பின்னர்த்தொடர்மொழி என்றதனான் நெட்டெழுத்திம்பர் என்றது ஈரெழுத் தொருமொழியைஎன உய்த்துணருமாறு கூறியமை கண்டுகொள்க. இவ்வுத்தி பெரும் பான்மையும் பயின்று நிற்றல்கருதி இறுதிக்கண் வைத்தோதினார் என்க. இதனைப்பின்னூலார் “ உய்த்துணர வைப்பு ” என்பர்.

மெய்ப்படநாடிச் சொல்லியவல்ல பிறவவண்வரினும் சொல்லிய வகையாற் சுருங்கநாடி மனத்தின் எண்ணி மாசறத்தெரிந்து



EFEO_GUEST_JLC_02-144 16/06/2011 © École française d’Extrême-Orient, www.efeo.fr

கொண்டு இனத்திற்சேர்த்தி உணர்த்தல்வேண்டும் நுணித்தகு புலவர் கூறியநூலே என்பது = நுதலியதறிதல் முதலாகப் பொருள் வகையான் ஆராய்ந்து சொல்லிய நூற்புணர்ப்புக்களல்லாத பிற உத்திகள் நூற்பொருளை விளக்குமுகத்தான் வரினும் சொல்லப் பட்டமுறைமையின் அவற்றை மேற்கூறியவற்றுள் அடங்குமாறு ஆராய்ந்து உள்ளத்தான் எண்ணி மாசறத்தெரிந்து கொண்டு அதனதன் இனத்தொடு சேர்த்தி நுண்மை சான்ற புலவோர் கூறியநூலை உணர்த்துதல் வேண்டும் என்றவாறு.

இவ் ஆணை உத்தியைப் பற்றிக் கூறப்பட்டதெனினும் இதனை இந்நூல் முழுமைக்கும்உரிய புறனடையாகக் கொண்டு ஏனைய விதிகளின் பாங்காக வருவனவற்றையும் மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு இனத்திற்சேர்த்தி உணர்த்தல் வேண்டுமெனக் கொள்க.

மரபியல் உரை முற்றியது.

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை முற்றியது.

## பிழையும் திருத்தமும்

சூ. 475 இருநூறடிப் பேரெல்லை என்பதனை நானூறு 400 அடியெனத் திருத்திக் கொள்க. சூ. 612 நல்வி – நவ்வி எனவும் சூ. 626 அரசாக்கு – அரசர்க்கு எனவும் பக்—245 வரி—29 போலிவுடைமையாம் என்பதனைப் போலிவுரையாம் எனவும் திருத்திக் கொள்க. மேலும் எழுத்து மாறுபட்டுள்ள பிழைகளை முன்னும் பின்னும் உள்ள இயைபையும் சூத்திரச் சொற்களையும் நோக்கித் திருத்திக் கொள்க. தொடர் எண்களில் ஏற்பட்டுள்ள பிழைகளையும் அவ்வாறே திருத்திக் கொள்க. பிழை பொறுத்தருள வேண்டுகிறேன்.



# செய்யுளியல் நூற்பா முதற்குறிப்பு

அகரநிரல்


| சூத்திரம் (இயல்) | சூ. எ | ப. எ | சூத்திரம் | சூ. எ. | ப. எ. |
|---|---|---|---|---|---|
| அஃதொழித் தொன்றின் | 93 | 70 | அவையடக்கியலே | 113 | 90 |
| அகப்பாட்டுவண்ணம் | 223 | 172 | அளபெடை அசைநிலை | 17 | 16 |
| அகவலென்ப | 81 | 62 | அளபெடை தலைப் | 29 | 67 |
| அகன்று பொருள் | 209 | 166 | அளபெடை வண்ண | 218 | 171 |
| அகைப்பு வண்ணம் | 228 | 174 | அளபெழின் அவை | 97 | 73 |
| அங்கதந்தானே | 124 | 107 | அளவடி மிகுதி | 59 | 50 |
| அங்கதப்பாட்ட | 158 | 135 | அளவியல் வகை | 162 | 138 |
| அசை கூறுகும் | 48 | 39 | அளவும் சிந்தும் | 57 | 48 |
| அசைச்சீர்த்தாகும் | 73 | 57 | அறுசீரடியே | 64 | 53 |
| அசையும் சீரும் | 11 | 11 | ஆங்கனம் விரிப் | 51 | 44 |
| அடக்கியல் வாரம் | 144 | 117 | ஆசிரிய நடைத்தே | 108 | 87 |
| அடிதொறுந்தலை | 92 | 69 | ஆசிரியப் பாட்டின் | 156 | 133 |
| அடிநிமிர்பு கிளக்கின் | 181 | 149 | ஆசிரியம் வஞ்சி | 105 | 85 |
| அடியிகந்து | 182 | 150 | ஆசிரிய மருங்கினும் | 67 | 54 |
| அடியிகந்து வரு | 34 | 33 | ஆயிருதொடைக் | 94 | 70 |
| அடியின் சிறப்பே | 35 | 34 | இசைநிலை நிறைய | 27 | 29 |
| அடியுள்ளனவே | 33 | 33 | இடைச்சுரமருங் | 193 | 155 |
| அடைநிலைக்கிளவி | 135 | 113 | இடைநிலைப்பாட்டே | 134 | 113 |
| அதாஅன்றென்ப | 82 | 63 | இடைநிலைப்பாட்டே | 132 | 111 |
| அதுவே தானும் | 166 | 139 | இடையும் வரையார் | 69 | 55 |
| அதுவே தானும் | 177 | 147 | இது நனி பயக்கும் | 202 | 160 |
| அதுவே தானும்' | 80 | 149 | இயலசையீற்று | 16 | 15 |
| அதுவே,வண்ணகம் | 139 | 115 | இயலசை மயக் | 13 | 13 |
| அந்நிலை மருங்கின் | 106 | 36 | இயலசை முதலிர | 6 | 8 |
| அந்நிலை மருங்கின் | 31 | 31 | இயற்சீர் இறுதி | 19 | 20 |
| அம்போதரங்கம் | 151 | 126 | இயற்சீர்ப்பாற் | 28 | 30 |
| அவ்வம் மாக்களும் | 208 | 165 | இயற்சீர் வெள்ளடி | 62 | 52 |
| அவ்வியலல்லது | 86 | 66 | இயைபு வண்ணம் | 217 | 170 |
| அவற்றுள் ஒத்தாழிசை | 131 | 111 | இருசீரிடையிடின் | 99 | 74 |
| அவற்றுள் சூத்திரம் | 168 | 141 | இருவகை உகரமொடு | 4 | 5 |
| அவற்றுள் நூலென | 165 | 139 | இவ்விடத்திம் மொழி | 206 | 162 |
| அவற்றுள் பாஅவண்ணம் | 213 | 169 | இழுமென்மொழி | 237 | 179 |
| அவற்றுள் மாத்திரை | 2 | 3 | இறப்பே நிகழ்வே | 201 | 159 |
| அவைதாம் நூலின் | 164 | 138 | இறுவாய் ஒன்றல் | 96 | 72 |
| அவைதாம் பாஅ | 212 | 169 | இன்சீர் இயைய | 30 | 31 |

| சூத்திரம் | சூ. எ | ப. எ | சூத்திரம் | சூ. எ | ப. எ |
|---|---|---|---|---|---|
| இன்பமும் இடும் | 207 | 163 | ஒற்றளபெடுப்பினும் | 18 | 18 |
| ஈரசை கொண்டும் | 12 | 12 | ஒற்றெழுத்தியற்றே | 8 | 9 |
| ஈற்றயலடியே | 68 | 24 | ஒற்றொடுபுணர்ந்த | 241 | 182 |
| உய்த்துணர்வின்றி | 203 | 161 | ஒன்றே மற்றும் | 178 | 147 |
| உயிரில் எழுத்தும் | 44 | 37 | கட்டுரைவகையான் | 123 | 106 |
| உருட்டு வண்ணம் | 231 | 175 | கலித்தளை அடிவயின் | 25 | 28 |
| ஊரும் அயலும் | 190 | 154 | கலித்தளை மருங்கின் | 24 | 28 |
| எண் இடைஒழிதல் | 146 | 117 | கலிவெண்பாட்டே | 159 | 136 |
| எண்ணு வண்ணம் | 227 | 174 | காமப்புணர்ச்சி | 115 | 151 |
| எண்வகை இயல் | 204 | 161 | கிழவன் தன்னொடும் | 191 | 155 |
| எழுசீரடியே | 65 | 53 | கிளரியல் வகை | 183 | 150 |
| எழுசீரிறுதி | 76 | 58 | குட்டம் எருத்தடி | 116 | 92 |
| எழுத்தள வெஞ்சினும் | 43 | 37 | குற்றியலுகரமும் | 10 | 11 |
| எழுத்து முதலா | 78 | 59 | குறளடி முதலா | 56 | 48 |
| எழுத்தேகொச்சகம் | 162 | 169 | குறிலிணை உகரம் | 5 | 7 |
| எழுத்தொடுசொல் | 176 | 146 | குறிலே நெடிலே | 3 | 4 |
| எழுநிலத்தெழுந்த | 163 | 138 | குறுஞ்சீர் வண்ணம் | 220 | 171 |
| ஏந்தல்வண்ணம் | 230 | 175 | கூற்றும் மாற்றமும் | 155 | 132 |
| ஏழெழுத் தென்ப | 37 | 35 | கைக்கிளை தானே | 119 | 94 |
| ஏனைஒன்றே | 138 | 115 | கைக்கிளை முதலா | 184 | 151 |
| ஐவகையடியும் | 52 | 45 | கொச்சக ஒருபோகு | 148 | 120 |
| ஐவகை அடியும் | 20 | 40 | கொச்சகம் அராகம் | 121 | 105 |
| ஒண்டொடிமாதர் | 192 | 155 | சித்திர வண்ணம் | 221 | 171 |
| ஒத்தாழிசைக்கலி | 130 | 111 | சின்மென்மொழி | | |
| ஒத்தாழிசையும் | 115 | 91 | (வனப்பு) | 234 | 177 |
| ஒத்துமூன்றுகும் | 142 | 116 | சீர் கூனாதல் | 49 | 40 |
| ஒப்பொடு புணர்ந்த | 173 | 144 | சீர் நிலைதானே | 41 | 36 |
| ஒருசீரிடையிட் | 98 | 73 | சீரியை மருங்கின் | 55 | 47 |
| ஒருநெறிப்பட்டா | 200 | 158 | செம்பொருளாயின் | 125 | 107 |
| ஒருநெறியின்றி | 170 | 142 | செய்யுள்தாமே | 127 | 108 |
| ஒருபான்சிறுமை | 150 | 26 | செய்யுள் மருங்கின் | 242 | 183 |
| ஒருபொருள் நுதலிய | 167 | 140 | செய்யுள் மொழியான் | 235 | 178 |
| ஒருபொருள் நுதலிய | 153 | 128 | செவியுறைதானே | 112 | 90 |
| ஒருபோ கியற்கை | 147 | 120 | சேரிமொழியான் | 240 | 181 |
| ஒரூஉ வண்ணம் | 226 | 174 | சொல்லிய தொடை | 160 | 76 |
| ஒழிந்தோர் கிளவி | 194 | 156 | சொல்லொடும் பொருள் | 205 | 161 |
| ஒழுகுவண்ணம் | 225 | 173 | சொற்சீரடியும் | 122 | 106 |





| சூத்திரம் | சூ. எ | ப. எ | சூத்திரம் | சூ. எ | ப. எ |
|---|---|---|---|---|---|
| ஞகாரை முதலா | 239 | 180 | பரத்தைவாயி | 197 | 157 |
| ஞாயிறு திங்கள் | 199 | 157 | பரிபாடல்லே | 120 | 94 |
| தரவிய லொத்தும் | 137 | 114 | பரிபாடல்லே | 161 | 137 |
| தரவிற் சுருங்கி | 143 | 116 | பாட்டிடைக்கலந்த | 179 | 148 |
| தரவின்றாகி | 149 | 120 | பாட்டிடைவைத்த | 172 | 142 |
| தரவும் போக்கும் | 154 | 130 | பாட்டுரை நூலே | 79 | 59 |
| தரவே தானும் | 141 | 116 | பாணன் கூத்தன் | 189 | 153 |
| தரவே தானும் | 133 | 113 | பார்ப்பார் அறிவர் | 196 | 157 |
| தளைவகை ஒன்றா | 58 | 49 | பார்ப்பான் பாங்கன் | 188 | 153 |
| தன்சீர் எழுத்தின் | 46 | 39 | பாவிரிமருங்கின் | 107 | 87 |
| தன்சீர் வகையினும் | 54 | 46 | புகழொடும் பொரு | 128 | 108 |
| தன்பா அல்வழி | 21 | 26 | புறநிலை வாயுறை | 160 | 136 |
| தனிக்குறில் முத | 7 | 8 | புறப்பாட்டுவண் | 224 | 172 |
| தாஅ வண்ணம் | 214 | 170 | பொழிப்பும் ஒரூஉ | 90 | 67 |
| துள்ளலோசை | 83 | 63 | போக்கியல் வகை | 136 | 114 |
| தூக்கியல்வகை | 87 | 66 | மண்டிலம் குட்டம் | 117 | 92 |
| தூங்கலோசை | 84 | 64 | மரபேதானும் | 80 | 60 |
| தூங்கல் வண்ண | 229 | 175 | மருட்பாஏனை | 85 | 65 |
| தெரிந்தனர்விரி | 102 | 81 | மறைவெளிப்படு | 186 | 152 |
| தொடைநிலை | 103 | 82 | மனையோள் கிளவி | 195 | 156 |
| தொன்மைதானே | 236 | 179 | மாட்டும் எச்சமும் | 210 | 168 |
| நலிபுவண்ணம் | 222 | 172 | மாத்திரையளவு | 1 | 1 |
| நாலெ முத்தாதி | 36 | 34 | மாத்திரை முதலா | 104 | 82 |
| நாற்சீர்கொண்டது | 32 | 32 | முச்சீர் முரற்கை | 70 | 55 |
| நிரனிறுத்தமைத்த | 91 | 67 | முச்சீரானும் | 47 | 39 |
| நிரைமுதல்வெண் | 60 | 50 | முடுகியல் வரை | 66 | 54 |
| நிரைய வண் நிற்பின் | 75 | 57 | முடுகுவண்ணம் | 232 | 176 |
| நிறைமொழி மாந்தர் | 175 | 145 | முதற்றொடை | 145 | 117 |
| நுண்மையும் சுருக் | 174 | 144 | முற்றியலுகரமும் | 9 | 10 |
| நெடுஞ்சீர்வண்ண | 219 | 171 | முன்னிரையுறினும் | 14 | 14 |
| நெடுவெண்பாட்டு | 157 | 134 | மூவாறெழுத்தே | 40 | 36 |
| நெடுவெண்பாட்டே | 118 | 93 | மூவைந்தெழுத்தே | 39 | 35 |
| நேர்நிலைவஞ்சி | 42 | 36 | மூன்றுறுப்படக்கி | 171 | 142 |
| நேரவண்நிற்பின் | 15 | 15 | மெய்பெறு மரபின் | 101 | 76 |
| நேரினமணியை | 169 | 141 | மெய்பெறுமவையே | 187 | 153 |
| நேரிற்றியற்சீர் | 74 | 57 | மெல்லிசைவண் | 216 | 170 |
| பத்தெழுத்தென்ப | 38 | 35 | மொழிகரந்துமொழி | 126 | 128 |


EFEO_GUEST_JLC_02-146 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

| சூத்திரம் | சூ. எ | ப. எ | சூத்திரம் | சூ. எ | ப. எ |
|---|---|---|---|---|---|
| மொழியினும் பொரு | 95 | 71 | வாயில் உசாவே | 198 | 157 |
| மோனை எதுகை | 88 | 66 | வாயுறை வாழ்த்தே | 112 | 89 |
| வசையொடும்நசை | 129 | 110 | வாயுறை வாழ்த்தே | 111 | 88 |
| வஞ்சிச் சீரென | 20 | 20 | வாழ்த்தியல் வகை | 109 | 88 |
| வஞ்சித் தூக்கே | 71 | 56 | விரா அய்வரினும் | 53 | 45 |
| வஞ்சி மருங்கின் | 22 | 27 | விராய தளையும் | 61 | 51 |
| வஞ்சி மருங்கின் | 26 | 29 | விருந்தேதானும் | 238 | 179 |
| வஞ்சியபடியே | 45 | 39 | வெண்சீர்ஈற்றசை | 29 | 30 |
| வண்ணகந்தானே | 140 | 115 | வெண்டளை வீரவி | 63 | 52 |
| வண்ணந்தானே | 233 | 176 | வெண்பாஇயலி | 77 | 58 |
| வண்ணகந்தானே | 211 | 168 | வெண்பாவுரிச் | 23 | 28 |
| வல்லிசைவண் | 215 | 170 | வெண்பாட்டீற்றடி | 72 | 56 |
| வழிபடுதெய்வம் | 110 | 88 | | | |


## மரபியல் நூற்பா முதற்குறிப்பு

அகர நிரல்


| சூத்திரம் தொடர்எண் | சூ. எ | ப. எ | சூத்திரம் | சூ. எ | ப. எ |
|---|---|---|---|---|---|
| அந்தணாளர்க்கு | 627 | 213 | ஒட்டகங்குதிரை | 607 | 205 |
| ,, | 637 | 219 | ஒட்டகம் அவற்றோ | 574 | 191 |
| அப்பெயர்க்கிழமை | 611 | 206 | ஒத்த காட்சியின் | 665 | 252 |
| அவற்றுள், பார்ப்பும் | 560 | 186 | ஒத்த சூத்திரம் | 653 | 232 |
| அன்னராயினும் | 639 | 220 | ஒன்றறிவதுவே | 583 | 195 |
| ஆண்பாலெல்லா | 605 | 205 | கடமையும் மரையும் | 577 | 193 |
| ஆவும் எருமையும் | 576 | 192 | கடல்வாழ்சுறவும் | 596 | 201 |
| ஆற்றலொடு புணர்ந்த | 604 | 204 | கண்ணியும் தாரும் | 634 | 217 |
| இடையிரு வகையோர் | 631 | 215 | கலையென் காட்சி | 601 | 203 |
| இரலையும் கலையும் | 600 | 203 | கவரியும் கராமும் | 573 | 191 |
| இலையேதளிரே | 642 | 222 | காயே பழமே | 643 | 223 |
| உரையெடுத்ததன்முன் | 654 | 234 | குஞ்சரம் பெறுமே | 575 | 192 |
| ஊளரும் பெயரும் | 629 | 214 | குட்டியும் பறழும் | 566 | 188 |
| எதிர்மறுத்துணரின் | 664 | 250 | குரங்கின் ஏற்றினை | 623 | 210 |
| எருமையும் மரையும் | 572 | 191 | குரங்கும் முசுவும் | 578 | 193 |
| எருமையும் மரையும் | 595 | 201 | குரங்கும் முசுவும் | 625 | 209 |
| எருமையும் மரையும் | 617 | 208 | குழவியும் மகவும் | 579 | 193 |
| ஏற்புடைத்தென்ப | 593 | 201 | கோடுவாழ் குரங்கு | 569 | 190 |
| ஏறும் ஏற்றையும் | 558 | 185 | கோழிகூகை | 610 | 206 |





| சூத்திரம் | சூ. எ | ப. எ | சூத்திரம் | சூ. எ | ப. எ |
|---|---|---|---|---|---|
| சிதலும் எறும்பும் | 586 | 198 | புறக்காழனவே | 640 | 221 |
| சிதைவில என்ப | 661 | 246 | பெண்ணும் ஆணும் | 624 | 210 |
| சிதைவெனப்படுபவை | 663 | 247 | பெண்ணும் பிணாவும் | 616 | 208 |
| சொல்லப்பட்டன | 660 | 246 | பெற்றமும் எருமையும் | 597 | 202 |
| சொல்லியமரபின் | 582 | 194 | பேடையும், பெடையும் | 559 | 186 |
| சூத்திரத்துட்பொருள் | 658 | 242 | ,, | 609 | 206 |
| சேவற் பெயர்க் கொடை | 603 | 204 | மக்கள் தாமே | 589 | 199 |
| தலைமைக்குணச் | 630 | 215 | மகவும் பிள்ளையும் | 570 | 190 |
| தவழ்பவைதாமும் | 561 | 186 | மயிலும் எழாஅலும் | 599 | 202 |
| தொகுத்தல் வகுத்தல் | 652 | 229 | மரபு நிலைதிரிதல் | 645 | 224 |
| தோடே மடலே | 641 | 222 | மரபு நிலை திரியா | 648 | 226 |
| நந்தும் முரளும் | 585 | 198 | மரபு நிலை திரியின் | 646 | 225 |
| நரியும் அற்றே | 565 | 111 | மறுதலைக்கடாஅ | 659 | 243 |
| ,, | 621 | 209 | மாவும் புள்ளும் | 588 | 199 |
| நாயே பன்றி | 564 | 187 | மாற்றருஞ்சிறப்பின் | 557 | 185 |
| நிலம் நீர் தீவளி | 664 | 223 | முதல்வழி யாயினும் | 662 | 247 |
| நீர் வாழ் சாதியும் | 598 | 202 | மூங்கா வெருகெலி | 562 | 187 |
| நீர் வாழ் சாதியுள் | 618 | 209 | மூடுங் கடமையும் | 619 | 209 |
| நூலே கரகம் | 625 | 211 | மெய்தெரி வகையின் | 636 | 216 |
| நெல்லும் புல்லும் | 581 | 194 | மேற் கிளந்தெடுத்த | 655 | 235 |
| படையும் கொடியும் | 626 | 212 | மோத்தையும் தகரும் | 602 | 203 |
| பரிசில்பாடாண் | 628 | 213 | யாடும் குதிரையும் | 568 | 189 |
| பழிப்பில் சூத்திரம் | 656 | 239 | யானையும் குதிரையும் | 571 | 190 |
| பறழ் எனப்படினும் | 563 | 187 | வண்டுந் தும்பியும் | 587 | 198 |
| பன்றி புல்வாய் | 594 | 201 | வழக்கெனப்படுவது | 647 | 225 |
| ,, | 613 | 207 | வழியின்நெறி | 651 | 229 |
| பாட்டி என்பது | 620 | 209 | வழியெனப்படுவது | 650 | 229 |
| பிடிஎன்பெண்பெயர் | 606 | 205 | வார்கோட்டியானை | 592 | 201 |
| பிணவல் எனினும் | 614 | 207 | விட்டகல்வின்றி | 657 | 240 |
| பிள்ளைக்குழவி | 580 | 194 | வில்லும் வேலும் | 638 | 220 |
| பிள்ளைப்பெயரும் | 567 | 189 | வினையின் நீங்கிய | 649 | 227 |
| புல்லும் மரனும் | 584 | 197 | வேந்துவிடுதொழி | 636 | 219 |
| புல்வாய் நவ்வி | 612 | 207 | வேழக்குரித்தே | 590 | 200 |
| புல்வாய் புலிஉழை | 591 | 200 | வேளாண் மாந்தர் | 635 | 217 |
| புள்ளும் உரிய | 608 | 206 | வைசியன்பெறுமே | 632 | 216 |


EFEO_GUEST_JLC_02-147 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

EFEO_GUEST_JLC_02-148 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr



ச. பாலசுந்தரம்

இவர் தஞ்சாவூர் கரந்தையில் 1924இல் பிறந்தார். கரந்தைப் புலவர் கல்லூரியில் பயின்று வித்துவான் வகுப்பில் முதலாவதாகத் தேர்ந்து 1950 முதல் அக் கல்லூரியிலேயே பேராசிரியராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றி 1982 இல் ஓய்வு பெற்று இப்பொழுது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சங்க இலக்கிய அகராதித் திட்டத்தில் பணியாற்றி வருகிறார். கரந்தைத் தமிழ்ச்சங்கப் பணிகள் நூல் வெளியீடுகள் தமிழ்ப் பொழில் ஆகிய வற்றில் இவர்க்குக் குறிப்பிடத் தக்க பங்கு உண்டு.

தொல்காப்பியர் கழகத் தலைவராக இருந்து சிறந்த இலக்கியத் தொண்டாற்றியுள்ளார். கரந்தைக்கோவை முதலிய இலக்கியங்களும் புலவருள்ளம் முதலிய கவிதைநாடக நூல்களும் சார்பெழுத்தாய்வு முதலிய பல இலக்கணக் கட்டுரைகளும் நாடகத்தமிழ் முதலிய இலக்கியக் கட்டுரைகளும் சொல்லாய்வுக் கட்டுரைகளும் வரைந்துள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடான புதிய ராகங்கள் நூலுக்கு இசைப் பாடல்களும் இசைக் கருத்தரங்கக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். சரசுவதிமகால் நூலகத்திற்காகப் பல நூல்கள் பதிப்பித்துள்ளார். வானொலி நாடகங்கள் பலவற்றில் நடித்துள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட கவியரங்குகளிற் பங்கேற்றும் தலைமை தாங்கியும் கவிதைப் பணியாற்றியுள்ளார். சிறந்த இலக்கிய மன்றங்கள் பல இவர்க்குப் பாவலரேறு, கவிஞர்கோ, செஞ்சொற்கவிவலவன் தொல்காப்பியப் பேரறிஞர் முதலிய விருதுகள் அளித்துப் பாராட்டியுள்ளன. இவருடைய நூல்கள் சென்னை, மதுரை, அண்ணாமலை, பாரதிதாசன் பல்கலைக் கழகங்களில் இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்பிற்குப் பாடநூல்களாக அமைந்துள்ளன. இப்பொழுது தமிழியற் கோட்பாடுகளை அறிவியல் நோக்கில் ஆராய்ந்து வருகிறார்.

அ. கி. மூர்த்தி.

EFEO_GUEST_JLC_02-149 16/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr